

MithraVintha

# ஆரம்பம் புதிது

## 1

துளசி, புறப்படுவதற்கு முன் மிச்சமிருந்த அந்த அலமாரியைத் திறந்தாள். பாச்சை உருண்டை வாசம் மிச்சமிருந்தது. ஒரே ஒரு சாமி படம். அது அங்கேயே இருக்கட்டும் என்று விட்டு விட்டாள். இந்தப் படத்தை எடுத்துக் கொண்டு போனால் தான் தெய்வம் துணை வருமா என்ன?

மேல் தட்டில் இரண்டு மூன்று குங்குமப் பொட்டலங்கள் இருந்தன. குங்குமம் அவளுக்குரியது அல்ல என்று உலகம் சொல்லும். அவளது கணவன் செந்தில்நாதன் போய் ஆறு மாதம் ஆகிவிட்டது.

செந்தில்நாதனின் நினைவு அவளுள் ஒரு சிலிர்ப்பை ஏற்படுத்தியது. அவனோடு வாழ்ந்த போது சிரித்த நாட்கள் விட அழுத நாட்களே அதிகம். அவனது இறப்பு அவளுக்கு ஒரு விடுதலை போல்தான் அவளுக்கு இருந்தது.

ஆனால் அப்பா கிருஷ்ணமூர்த்தி வந்து அவளை 'வீட்டுக்கு வந்து விடு' என்று அழைத்த போது அவளுக்கு அது சரியாகப்படவில்லை. கல்யாணம் பண்ணிக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறி கணவனுடன் வாழச் சென்ற பிறகு புகுந்த வீடுதான் வீடு. பிறந்த வீடு என்பது விருந்தினர் விடுதி

MithraVintha

போலத்தான் வருடத்தில பத்துப் பதினைந்து நாட்கள் போகலாம். சந்தோஷமாக இருந்து விட்டு வரலாம். அந்தப் பத்துப் பதினைந்து நாட்கள் மட்டும் இருந்தால் தான் சந்தோஷம் நிலைத்திருக்கும். அதற்கு மேல் இருந்தால் சந்தோஷம் தேய ஆரம்பித்து விடும்.

உறவுகளிடையே மனக்கசப்பு கூடாதென்றுதான் அவள் பிறந்த வீட்டிற்குப் போகவில்லை. மேலும், அவள் கணவன் வேலை செய்த ஃபாக்டரியிலேயே அவளுக்கு வேலை வேறு கிடைத்தது. வேலை கையில் இருந்த தைரியத்தில் திருச்சிக்கு வரவில்லை என்று தைரியமாக மறுத்து விட்டாள்.

ஆனால் இந்த ஆறு மாத காலத்தில் அவள் பட்ட பாட்டை வெளியில் சொல்ல முடியாது. ஃபாக்டரியில் அவளுக்கு சூப்பர்வைசர் வேலை. ஒரு பெரிய லாரி கம்பெனிக்கு உதிரி பாகங்கள் தயாரித்துக் கொடுக்கும் ஃபாக்டரி அது.

ஃபாக்டரியில் தயாரான உதிரி பாகங்களை லாரி கம்பெனிக்கு அவள் எடுத்துப் போக வேண்டியிருந்தது. லாரியில் உதிரிபாகங்கள் போகும். அவள் ஃபாக்டரி காரில்தான் போவாள் என்றாலும் அந்த உதிரி பாகங்களை லாரி கம்பெனி ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றால் அந்த லாரி கம்பெனியில் இருக்கும் குவாலிட்டி இன்ஜினீயருக்கும், பர்ச்சேஸ் இன்ஜினீயருக்கும் லஞ்சம் தரவேண்டி இருந்தது. நல்ல விஸ்கி பாட்டில்கள் தரவேண்டியிருந்தது. ஆண்கள் செய்யும் வேலை அது என்று நினைக்காமல் துளசி அவற்றைக்கூட முகம் சுளிக்காமல் செய்தாள். ஆனால் குவாலிட்டி இன்ஜினீயரும், பர்ச்சேஸ் இன்ஜினீயரும் அவளையே லஞ்சமாகக் கேட்டதை அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

துளசி வளைந்து கொடுக்கவில்லை. அதனால் ஃபாக்டரியை விட்டு வெளியே போகாமல் உள்ளேயே வேலை பார்த்தாள். ஃபாக்டரியிலும் தொந்தரவுகள். செந்தில்நாதன் கூட வேலை செய்பவர்களிடத்தில் எல்லாம் கடன் வாங்கியிருந்தான்



என்று ஃபாக்டரியில் வேலை செய்த மற்றவர்கள் சொன்னார்கள். அவ்வப்போது இருநூறு முன்னூறு என்று கேட்டுக் கொண்டு வந்தார்கள்.

பணம் கொடுக்காவிட்டால் ஒன்றும் மோசம் போய்விடாது. அவள் வந்தால் போதும் என்று சிலர் அவளிடம் இளிக்கத் தொடங்கினார்கள். துளசி அதற்கும் மசியவில்லை.

செத்துப் போன செந்தில்நாதன் செத்த பின்பும் அவளை வாழவிடாமல் சாகடித்துக் கொண்டிருந்தான். இனிமேல் ஃபாக்டரியில் எப்படிக் காலம் தள்ள முடியும் என்று அவள் எண்ணிக் கொண்டிருந்த போது அவள்மேல் திருட்டுப் பட்டம் சுமத்தப்பட்டது. ஃபாக்டரி உற்பத்தி செய்யும் உதிரி பாகங்களை அவள் திருட்டுத்தனமாகக் கடத்திச் சென்று வெளியே விற்கிறாள் என்று சொல்லி நஷ்ட ஈடாக இருபதாயிரம் கொடு, முப்பதாயிரம் கொடு என்று ஃபாக்டரி நிர்வாகிகளில் ஒருவன் அவளைத் தொந்தரவு செய்தான்.

சஸ்பென்ஷன், லேபர் கோர்ட் என்று பயமுறுத்தினான். இதெல்லாம் இல்லாமல் இருக்க வேண்டுமென்றால் ஃபாக்டரி கெஸ்ட் ஹவுஸிற்கு அவள் வரவேண்டும் என்றான்.

துளசிக்கு ஆண்கள் மேல் ஆத்திரம் பொங்கியது. அத்தனை ஆண்களும் பெண்ணாசை கொண்டு அலைபவர்கள். கட்டிய மனைவி இருந்தாலும், இன்னொருத்தியின் உடல் சுகம் இருந்தே ஆக வேண்டும் என்று ஆலையும் காமப் பிசாசுகள்.

எந்த ஆணுக்கும் அவள் வளைந்து கொடுக்கப் போவதில்லை.

மனைவி இருக்கும் போது மற்றொருத்தியை நாடும் எந்த ஆணையும் அவள் மன்னிக்கப் போவதும் இல்லை.

வருவது வரட்டும் என்று தீர்மானித்தாள். வேலையை உதறினாள்.

MithraVintha

அப்பாவிற்குத் தன்மேல திருட்டுப் பட்டம் சுமத்தியதாகக் கடிதம் எழுதினானே தவிர வேலையை விட்டு விட்டது பற்றி எழுதவில்லை.

ஃபாக்டரி இருந்த அதே கே.ஜி.எஃப்பிலேயே அவள் தனியாக இருந்து சமாளிப்பது என்று தீர்மானித்தாள். கையில் குழந்தை காயத்ரி வேறு.

தான் வரைந்த ஓவியங்களை விற்க எடுத்துப் போனாள். சிரித்துத் திருப்பி அனுப்பினார்கள். எஸ்.டி.டி. பூத்தில் வேலை செய்தாள். இரவு நேரங்களில் ஆண்கள் குடித்து விட்டு வந்து கலாட்டா செய்தார்கள்.

செந்தில்நாதன் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடு என்று ஒரு நாலைந்து பேர் திரும்பத் திரும்ப அவளைத் தேடி வந்தார்கள்.

கே.ஜி.எஃப்பில் இனிமேல் இருக்க முடியாது என்ற நிலை வந்தபோதுதான் திருச்சிக்குப் புறப்பட்டுப் போவது என்று தீர்மானித்தாள்.

அதுவும் திடீரென எடுத்த முடிவு.

“அம்மா..”

காயத்ரியின் குரல் கேட்டதும் திரும்பினாள்.

அவளிருந்த வீட்டின் சொந்தக்காரரின் தோளில் சவாரி செய்து காயத்ரி வந்திருந்தது. அவள் கையில் ஒரு பட்டை சாக்லேட்.

“கௌம்பிட்டியாம்மா?” என்று கேட்டார் வீட்டுக்காரர்.

“ஆமாங்க...” என்று மிச்சமிருந்த புடவை ஒன்றைப் பையில் திணித்தாள். அறையோரம் சேர்க்கப்பட்டிருந்த மூட்டை முடிச்சுகளைப் பார்த்தாள். ஒன்றும் அதிகம் இல்லை. ஒரு ஆட்டோ கொள்ளளவு தான். “இனிமே இந்த ஊரில் என்னால வாழ முடியாதுங்க... அதான் அம்மா, அப்பா இருக்கிற திருச்சிக்கேப் போயிடலாம்னு முடிவு பண்ணிட்டேன்..”



“இந்தாம்மா...” என்று வீட்டுக்காரர் நீட்டிய பணத்தைத் தயக்கத்துடன் தொடாமல் பார்த்தாள். “இது உன்னோட பணம்தாம்மா. உனக்குச் சேர வேண்டியதுதான். ரெண்டாயிரத்து ஐநூறு. வாடகைக்குன்னு வந்தப்ப கொடுத்த அட்வான்ஸ் பணம்..”

வாங்கிக் கொண்டாள்.

“பணம் போதுமாம்மா?”

“உண்டியில போட்டு வச்சது ஒரு ஆயிரத்தைநூறு இருக்கு. நாலு பவுனுக்கு சங்கிலி இருக்கு. திருச்சி போய்ட்டா எனக்கு ஒண்ணும் பிரச்சினை இல்ல..” என்றாள்.

“பத்திரம்மா. பஸ் ஸ்டாண்ட் வரைக்கும் நான் வரேன்..”

பேருந்து நிலையத்தில் கதம்பமான வாசம். ஃப்ளோரசன்ட் வெளிச்சத்தில் பிய்த்து எறிந்த ஆரஞ்சு தோல்கள், நசுங்கிப் போன வாழைப்பழங்கள். சேற்றில் படிந்திருந்த டயர் தடங்கள். யாரோ எடுத்த வாந்தி. குத்துக்காலிட்டு உட்கார்ந்த மனிதர்கள் துப்பிய சிவப்பு 'புளிச்'.

திருச்சிக்குப் பஸ் தயாராக இருந்தது. துளசி காயத்ரியை ஜன்னலோரம் விட்டுப் பக்கத்தில் உட்கார்ந்தாள். அவள் கைவிரல்களைப் பிரித்துத் தன் கையோடு கோத்துக் கொண்டாள்.

“இந்தாம்மா டிக்கெட்..”

ஜன்னல் வழியே வீட்டுச் சொந்தக்காரர் நீட்டிய டிக்கெட்டுகளை வாங்கிக் கொண்டாள்.

“எவ்வளவுங்க?”

“ஒண்ணரை டிக்கெட்டுக்குக் கூட கணக்குப் பாக்கறவன் இல்லேம்மா நானு. பாப்பாவுக்கும் அரை டிக்கெட் எடுத்துட்டேன். இல்லன்னா அதை மடில வெச்சுக்கச் சொல்லுவாங்க. பக்கத்துல வேற யாராவது வந்து உக்காருவாங்க. ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும் ஒரு லெட்டர் போடும்மா..”

Mithra Vintha

பஸ் குலுக்கலுடன் டீசல் புகையைக் கறுப்பாகப் பின்தள்ளி விட்டுப் புறப்பட்டது. வீட்டுக்காரர் கையை ஆட்டி விட்டு விலகிப் போனார். அவளுடைய அப்பா வயதுக்காரர். அதனாலதான் அவருக்கு அவள் மேல் இவ்வளவு பரிவு போலும். கொஞ்சம் வயது குறைந்த ஆளாக இருந்திருந்தால் இந்த ஆளும் அவளுடையப் படுக்கையைப் பகிர்ந்து கொள்ளத் துடித்தாலும் துடித்திருக்கக் கூடும்.

காயத்ரி மெல்லத் தலையை அம்மாவின் தோளில் சாய்த்துக் கொண்டாள் பஸ்ஸின் குலுக்கலில் அவளுடைய இடது காது அதிர்வுகளோடு அவளுடைய தோளில் தாளமிட்டபோது துளசிக்குச் சிலிர்ப்பாய் இருந்தது.

திருச்சியில் வரவேற்பு எப்படி இருக்கப் போகிறது என்று தெரியவில்லை. அம்மா லலிதா, அப்பாவிற்கு இரண்டாம் தாரமாக வாழ்க்கைப்பட்டவள். ஆனால் துளசி, லலிதாவை ஒரு போதும் 'சித்தி' என்று விளித்ததேயில்லை.

லலிதா துளசியின் மேல் எப்படிப்பட்ட பாசம் வைத்திருக்கிறாள் என்பதே தெரியாது. ஒரு நேரம் ஒரே பாசமாய்ப் பொழிவாள். திடீரென் சிடுசிடுப்பாள். எரிமலைச் சிணுங்கலாய்த் தோன்றும் துளசிக்கு. எப்போது வெடிக்குமோ என்று பயமாகக் கூட இருக்கும்.

தங்கை கல்பனா, லலிதாவிற்குப் பிறந்தவள். தேள் ஜாதி. வெடுக், வெடுக் என்று பேசுபவள். துளசியைக் கண்டாலே பிடிக்காது. அவள் அழகாக இருப்பது ஒரு காரணமாக இருக்கலாம். அவள் நன்றாகப் படித்தது ஒரு காரணமாய் இருக்கலாம். அவள் ஓவியம், விளையாட்டு என்று பள்ளி நாட்களிலேயே ஈடுபட்டு, திறமை காட்டிப் பரிசுகள் பெற்றது ஒரு காரணமாக இருக்கலாம். கல்பனா இப்போது வீட்டில் இல்லை. கல்யாணமாகிக் கணவனுடன் போய் விட்டாள். அவள் வீட்டில் இருந்திருந்தால் அவளது குத்தல் பேச்சும், திட்டுமே போதும் துளசியை அந்த வீட்டில் இருந்து விரட்டியடிக்க.



அப்புறம் பாலாஜி. சின்ன வயதில் இருந்தே அவள் மேல் காழ்ப்புணர்ச்சி கொண்டவன். அவன் செய்த சிறு வயதுக் குறும்புகளைக் கண்டித்ததால் அறியாத வயதில் இருந்தே துளசி என்றால் ஆகாது. இப்போது வேலைக்குப் போக ஆரம்பித்து விட்டான். மெடிக்கல் ரெப்ரசென்டேடிவ்.

அவனுடைய வருமானத்தில்தான் குடும்பம் நடக்கிறது என்ற எண்ணம் வேறு அவனுக்கு இருப்பதாக அப்பா ஏற்கெனவே சொல்லியிருந்தார். இந்த சந்தர்ப்பத்தில் துளசியின் வரவை அவன் நிச்சயம் விரும்பமாட்டான்.

அப்பாவுக்கு மட்டும் துளசி என்றால் கொள்ளை ஆசை. அதனால் அவர் இருக்கும் வரை அந்த வீட்டில் அவளுக்கு எல்லா உரிமைகளும் இருக்கும்.

அந்த அப்பாவை நம்பித்தான் அவள் திருச்சிக்குப் போய் விடலாம் என்று முடிவெடுத்ததே. செந்தில்நாதன் இறந்த வுடனேயே அப்பா அவளை வீட்டுக்கு வரச்சொல்லித்தான் வற்புறுத்தினார்.

கல்பனா, பாலாஜி, லலிதா ஆகிய மூன்று பேரையும் நினைத்து மனதில் கலங்கி அப்போது அவருடன் செல்ல துளசி மறுத்து விட்டாள்.

இப்போது வேறு வழியில்லாமல் திருச்சிக்கே சென்று கொண்டிருந்தாள்.

அப்பாவிற்கு வேலையில்லை. அவர் லஞ்சம் வாங்கினார் என்று யாரோ ஒருவன் புகார் செய்து, அது நிரூபிக்கப்பட்டு அப்பா வேலையில் இருந்து நீக்கப்பட்டுவிட்டார்.

அப்பா லஞ்சம் வாங்கினாரா, இல்லையா என்பது துளசிக்குத் தெரியாது.

ஆனால் இப்போது ஏதோ ஒரு பிரைவேட் கம்பெனியில் கணக்கு எழுதிக் கொண்டிருக்கிறார். குறைந்த வருமானம். இந்த

MithraVintha

நேரத்தில் துளசி, காயத்ரியுடன் போய் இறங்கினாள் எப்படி இருக்கும் என்று தெரியவில்லை.

ஆனால் அவளது நிலை வான் மேகத்தின் நிலை போல் இருந்தது. காற்று வீசும் பக்கமெல்லாம் விருப்பம் இருக்கிறதோ இல்லையோ போயாக வேண்டிய சூழ்நிலை.

அதனால்தான் இந்தப் பிறந்த வீட்டுப் பயணம்.

அவளுக்காக என்று திருச்சியில் முட்புதரை வாழ்க்கை வைத்துக் காத்துக் கொண்டிருக்கிறதா. இல்லை பூங்கொத்துடன் அவளை வரவேற்கப் போகிறதா என்று அங்கு போய்ப் பார்த்தால்தான் தெரியும்.

துளசி காயத்ரியின் மீது ஒரு டவலை எடுத்துப் போர்த்தி விட்டாள். தானும் சாய்ந்து கண்களை மூடினாள்.

பேருந்து இடைவிடாத ரீங்காரத்துடன் திருச்சியை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

## 2

திருச்சிராப்பள்ளி.

சுருக்கமாய் திருச்சி.

ஊருக்குள் எங்கு நின்று அண்ணாந்தாலும் கண்ணுக்குள் கம்பீரமாய் காட்சி தரும் மலைக்கோட்டை பிள்ளையார் கோவில்.

காலை நேரம்.

ஊரை மூடியிருந்த லேசான பனிப்போர்வையை அலட்சியம் செய்து மக்கள் சுறுசுறுப்பாய் இயங்க ஆரம்பித்திருந்தனர்.



முதல் நாள் கற்பூரம் காட்டி பூட்டிய கடைகளை, சாவியால் மூன்று முறை தட்டி திறந்துக் கொண்டிருந்த சிறு வியாபாரிகள். பெரிய பாத்திரத்தில் நுரை பொங்க கொதித்துக் கொண்டிருந்த பாலை பெரிய ஜக்கில் மொண்டு உயர்த்திப் பிடித்து மறுபடி அதே பாத்திரத்தில் ஊற்றிய மலையாள நாயர்கள். நான்கு புறமும் கட்டைகளை ஊன்றி அதன்மேல் அமைக்கப்பட்டிருந்த மரப்பலகையில் பிளாஸ்டிக் ஷீட் விரித்து கவர்களில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த முந்தைய நாள் மலர்ச்சரங்களை தண்ணீர் தெளித்து 'தீட்டு' கழித்து. இன்றைய மலர்ச்சரங்களாக்கிக் கொண்டிருந்த பூக்காரிகள்.

சூரியன் மேகங்களுக்கிடையில் ஒளிந்து வரலாமா, வேண்டாமா என கண்ணாமூச்சி ஆடிக் கொண்டிருந்தன. பறவைகள் அன்றைய தின இரையைத் தேடுவதற்காக கூடுகளில் இருந்து வெளிவந்து. விர்ரென வட்டமடித்து வானில் ஏறி ஒரே வரிசையில் பறந்தன.

வீதிகள் எல்லாம் குளித்திருந்தன. ஒவ்வொரு வீட்டு வாசலும் பெருக்கப்பட்டிருந்தது. தண்ணீர் தெளிக்கப்பட்டிருந்தது. சின்னதும், பெரியதுமாய் கோலங்கள்.

சில வீடுகளில் இருந்து சன்னமாய் சஷ்டிக்கவசமும், சுப்ரபாதமும், ஓம் நவச்சிவாயமும் கதம்பமாய் ஒலித்துக் கொண்டிருந்தன.

லலிதா கோலத்தின் கடைசி மிச்சங்களைப் பொறுமையாகக் கோத்து இணைத்தாள். முடித்தவுடன் எழுந்து தள்ளி நின்று ஒரு முறை கோலத்தைப் பார்த்து ரசித்தாள்.

தெரு அமைதியாய் இருந்தது. அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு. ஆட்டோ ஒன்று அதில் நுழைந்தது. அதன் சத்தம் சிறிது சிறிதாகக் கூடிக்கடைசியில் தன் வீட்டு வாசலுக்கே வந்து நின்றவுடன் லலிதா கண்களில் கேள்விக்குறியோடு குனிந்து பார்த்தாள்.

MithraVintha

ஆட்டோவில் இருந்து துளசி இறங்கினாள். அவளது தோளில் தூக்கம் கலையாமல் காயத்ரி. துளசியையும், காயத்ரியையும் பார்த்த லலிதாவின் புருவங்கள் கோர்த்துக் கொண்டன.

"வா" என்றாள் துளசியைப் பார்த்து ஒற்றை வார்த்தையில்.

அவளது பார்வை ஆட்டோவில் வைக்கப்பட்டிருந்த பொருட்களையும் பார்சல்களையும் வருடி மீண்டது. கைநீட்டிக் குழந்தையை வாங்கிக் கொண்டாள். தண்ணீர் தெளித்ததினால் கையில் ஏறியிருந்த ஜில்லிப்பின் காரணத்தால் காயத்ரி விழித்துக் கொள்ள குழந்தையைப் பார்த்து மலர்ச்சியுடன் புன்னகைத்தாள்.

"ஏய்... செல்லக்குட்டி முழிச்சுக்கிட்டியா? எல்லாரையும் பாத்து நாளாச்சேன்னு பாத்துட்டுப் போலாம்னு வந்தியா கண்ணு? வா..வா.. உள்ள போலாம் வா.."

குழந்தையுடன் லலிதா உள்ளே போனாள்.

துளசி பர்ஸைத் திறந்து, பணத்தை எடுத்து ஆட்டோ டிரைவரிடம் கொடுத்தாள்.

"கொஞ்சம் இந்த சாமானையெல்லாம் எறக்கி வெச்சுடுங்களேன்.." என்றாள் டிரைவரிடம்.

வீட்டின் உள்ளே ஹாலில் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து நியூஸ் பேப்பரை இரண்டு கைகளுக்குமாக விரித்து வைத்திருந்த கிருஷ்ணமூர்த்தி பேப்பரைத் தழைத்தார். லலிதாவையும், அவள் கையிலிருந்த குழந்தையை பார்த்ததும், பரபரப்பாக எழுந்து கொண்டார்.

"துளசி வந்திருக்கா?" என்றார் லலிதாவிடம் ஆர்வமாய்.

பதில் எதிர்பாராமல், அவசரமாய் வாசலுக்கு வந்தார் கிருஷ்ணமூர்த்தி.

துளசியைப் பார்த்தவுடன், கிருஷ்ணமூர்த்தியின் முகம் முழுவதும் மலர்ந்தது.



"வாம்மா.. வா, வா.. ஒரு வார்த்தை சொல்லியிருந்தா நானே ஸ்டேஷனுக்கு வந்திருப்பேனேம்மா!"

துளசியின் கையில் இருந்த சூட்கேஸை உரிமையுடன் வாங்கிக் கொண்டார். இன்னொரு கையில், கீழே இருந்த மூட்டைகளில் ஒன்றைத் தூக்கிக் கொண்டார்.

அவர் பின்னாலேயே இரண்டு கைகளிலும், இரண்டு பொருட்களை தூக்கிக் கொண்டு துளசியும் ஹாலுக்குள் நுழைந்தாள்.

ஹால் நடுவில் இருந்த டீபாயின் மேல் பாலாஜி உட்கார்ந்து வெள்ளை ஷூக்களுக்கு லேஸ் கட்டிக் கொண்டிருந்தான். பக்கத்திலேயே டென்னிஸ் மட்டை. வெள்ளை ஷார்ட்ஸும், வெள்ளை டி-ஷர்ட்டும் உடம்பை இறுக்கிப் பிடித்திருந்தன. லேஸ் கட்டி முடித்தவுடன் எழுந்துக் கொண்டான். நின்றவுடன் அவன் இன்னும் உயரமானது போல் பிரமை ஏற்பட்டது துளசிக்கு. அவனைப் பார்த்து சினேகமாய் புன்னகைத்தாள்.

பாலாஜியிடமிருந்து துளசிக்கு பதில் புன்னகை கிடைக்கவில்லை.

"என்ன திடீர் விசிட்? நாங்கள்லாம் ஒழுங்கா இருக்கோமான்னு பார்த்துட்டுப் போக வந்தியா?"

துளசியின் முகத்தில் லேசான திடுக்கிடல்.

"பாலாஜி! எத்தனை நாள் கழித்து வந்திருக்கா.. 'வா'ன்னு ஒரு வார்த்தை சொல்லலைன்னாலும் பரவாயில்லை. இப்படி எடுத்தெறிஞ்சு பேசணுமாப்பா?"

கிருஷ்ணமூர்த்தியின் குரல் பரிதாபமாய் மிதந்து வந்தது.

ஆட்டோ டிரைவர் கடைசி செட் சாமான்களை உள்ளே கொண்டு வந்து வைத்தான்.

"அம்மா.. சாமான் எல்லாம் சரியா இருக்கான்னு ஒரு தடவை செக் பண்ணிடுங்கம்மா.. அப்புறம் இதக் காணோம், அதக் காணோம்னு எம்மேல சந்தேகப்படவேண்டாம்."

MithraVintha

துளசி திரும்பி, "எல்லாம் சரியா இருக்கு. தாங்க்ஸ்" என்றவுடன் டிரைவர் அகன்றான்.

பாலாஜி துளசியையும், வந்து இறங்கியிருந்த சாமான்களையும் மாறி மாறி பார்த்தான்.

"லீவே தரமாட்டாங்கன்னு சொல்லுவியேம்மா. இப்ப எத்தனை நாள் லீவு கெடைச்சது?" என்று கிருஷ்ணமூர்த்தி கேட்டார்.

"லீவுல வரலைப்பா" என்றாள் துளசி ஒரு சின்ன தயக்கத்துடன்.

"பின்னே?"

"அந்த ஃபாக்டரி வேலையை விட்டுட்டேம்பா... இனிமே திரும்பிப் போக வேண்டாம்..."

"அப்படியா... ரொம்ப சந்தோஷம்மா... ரொம்ப... ரொம்ப சந்தோஷம்."

கிருஷ்ணமூர்த்தியின் முகத்தில் மகிழ்ச்சி அப்பட்டமாய்த் தெரிந்தது!

"அப்படின்னா?" என்று ஒரு குரல் கேட்டது. பாலாஜியின் குரல்.

துளசி திரும்பினாள்.

வாசல் வரை சென்றிருந்த பாலாஜி முகத்தில் லேசான எரிச்சலுடன் துளசியின் பதிலுக்குக் காத்திருந்தான்.

துளசிக்கு ஒரு கணம் என்ன சொல்வதென்று புரியவில்லை.

"அப்படின்னா நானும் காயத்ரியும் இனிமே இங்கதான் இருக்கப் போறோம்னு அர்த்தம்."

பாலாஜி கிருஷ்ணமூர்த்தியைத் திரும்பி முறைத்தான். ஒன்றும் பேசாமல் வெளியேறினாள்.



வேண்டாத விருந்தாளியாய் அந்த வீட்டுப் படியை மிதித்திருக்கிறோம் என்பது துளசிக்குப் புரிந்தது. திக்கென்று இருந்தது.

## 3

காயத்ரி தன் சக வயது குழந்தை ஒன்றிடம் சிநேகம் பிடித்துக் கொண்டு பிரகாரத்தில் ஓடி பிடித்து விளையாடிக் கொண்டிருந்தது.

"அப்பா..."

காயத்ரி ஓடி விளையாடிக் கொண்டிருந்ததை ரசித்துக் கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தி, துளசியின் குரலில் கலைந்தார். பக்கத்தில் அழகுப் பெட்டகம் போல் உட்கார்ந்திருந்த துளசியைப் பார்த்தார்.

"சொல்லும்மா... ஏன் அந்த வேலையை விட்டுட்டு வந்துட்டே? என்னடா அப்பாவும் இப்படி கேக்கறாரேன்னு தப்பா நினைச்சுக்காதம்மா. நீ இங்கேயேதான் தங்கப் போறேன்னு தெரிஞ்ச உடனே சந்தோஷப்பட்ட முதல் ஆளு நான்தாம்மா... ஆனாலும், இத்தனை நாளும், நான் ஆம்பிளை துணையில்லாம தனியா இருக்க வேண்டாம். இருக்க வேண்டாம், இங்கேயே வந்துடுன்னு சொல்ற போதெல்லாம் 'வேண்டாம்பா, நான் உங்க எல்லாருக்கும் பாரமா இருக்க விரும்பல. அதில்லாம அவர் செய்ஞ்சுகிட்டிருந்த வேலையே எனக்குக் கிடைச்சுருக்கு. இங்கயே இருக்கேன்'னு தட்டிக் கழிச்சிட்டு இருந்தியே... இப்ப என்னம்மா திடீர்னு? வீட்ல வச்சு கேட்டா, நீ ஒழுங்கா பதில் சொல்ல மாட்டேன்னுதான் 'கோயிலுக்கு போலாம் வா' ன்னு உன்னை இங்க கூட்டிட்டு வந்தேன்... சொல்லு."



MithraVintha

துளசியிடமிருந்து நீண்ட பெருமூச்சொன்று வெளிப்பட்டது.

“துணையில்லாம ஒரு பொண்ணு தனியா இருக்க முடியாதுங்கிறது உண்மைதான்னு தோணுதுப்பா. கேக்க ஆளில்லைன்னு தெரிஞ்சா வீடு வாசல் வரைக்கும் எவனெவனோ வந்து நிக்கறான். வேலி இல்லாத பயிர் தானேன்னு மேய்ஞ்சு பார்க்க ஆசைப்படறாங்க கூட வேலை செய்ற ஆம்பளைங்க. அவங்க இஷ்டத்துக்கு நான் வளைஞ்சு கொடுக்கலைன்னு ஆனப்பறம் எம்மேல அநாவசியமா திருட்டுப் பழியைப் போட்டாங்க. அதுக்கும் மேலே எனக்கு அங்கே வேலை செய்யப் பிடிக்கல. அதான் வேலையை ரிஸைன் பண்ணிட்டு வந்துட்டேன். நான் அழகா பொறந்ததுதான் நான் செய்ஞ்ச பெரிய தப்புன்னு நினைக்கிறேன்...”

கிருஷ்ணமூர்த்தி மகளின் கையை ஆதரவாகப் பற்றினார்.

“இதுக்காக எம்மா மனசு வருத்தப்படறே? அழகு உனக்கு கொடுத்த பரிசு. அழகைக் கொடுத்த ஆண்டவன் உனக்கு அறிவையும் திறமையையும் கூட சேர்த்து கொடுத்திருக்கான். ஸ்கூல் காலேஜ் படிச்ச நாள்ல நீ வாங்கி குவிச்சி வச்சிருக்கிற கப்பும், மெடலும் உன் அறிவுக்கு கிடைச்ச அங்கீகாரம். கைவேலையும், ஓவியமும் உன் திறமைக்கு ஒரு சாம்பிள்மா...”

“எனக்கு அதெல்லாம் மறந்தே போச்சப்பா...”

“இல்லைமா... இனியே நீ மறக்க வேண்டியது தேவையில்லாத விஷயங்களைதான். உன்னோட திறமையை நல்லவிதமா பயன்படுத்திக்கணும்மா... உன் வாழ்க்கையின் நடுவுல நடந்த கசப்பான நிகழ்ச்சியையெல்லாம் ஒரு கெட்ட கனவா மறந்துடு. நல்ல விஷயங்கள் நல்ல புத்தகங்கள். நல்ல நண்பர்களை உன் வாழ்க்கைத் துணையா மாத்திக்க. உன்னோட ஓவியத் திறமையை பூட்டி வைக்காமல், புது மெருகு ஏத்தி எல்லாரும் ரசிக்கிற மாதிரி செய்மா...”

துளசி மௌனமாக இருந்தாள். அவள் பார்வை. கோவில் வாசலில் படிந்திருந்தது. கோயிலுக்குள் நுழைபவர்களும்.



வெளியேறுபவர்களும் புதிதாய் இன்று பிறந்தவர்கள் போல தோன்றியது. எத்தனை விதமான மனிதர்கள். வாழ்க்கையை இனிதாய் பகிர்ந்துக்கொண்டு காலத்தை கடந்து வந்த வயதான தம்பதியர்கள் புதிதாய் நேற்றோ, அதற்கு முன் தினமோ அல்லது பத்து நாட்களுக்கு முன்போ கல்யாணம் முடிந்து இனிதான் வாழ்க்கையை பகிர்ந்து கொள்ளப் போகும் புது தம்பதிகள். அவர்களை பார்த்ததும் துளசிக்கு தன்னுடைய கல்யாண தினம் நினைவில் இடறியது.

சராசரியான வயதுப் பெண்களைப் போலவே அவளும் பல கனவுகள் சுமந்து கழுத்தில் மாங்கல்யம் பெற்றுக் கொண்டாள். ஆனால் கனவுகள் தான் பலிக்கவில்லை. ஒரு நல்ல தோழனாய் இருப்பான் என்றெண்ணிய துணை, மனிதாய் இருக்கக் கூட முடியாதவனாய்...

துளசி தலையை உதறிக்கொண்டாள். வேண்டாம்... அந்த நினைவுகள் அறவே மனதிலிருந்து துடைத்து விடவேண்டும். கடந்த காலத்தில் வாழ்வதில் என்ன லாபம்? கசப்பான அனுபவங்களின் மோசமான ருசி நெஞ்சுக்குள் தேவையில்லாமல் ஊறிப் போகும்.

“என்னம்மா... நான் சொன்னதுல ஏதாவது தப்பா தோணுதா?”

“இல்லப்பா... சரியாத்தான் சொன்னீங்க. நீங்க சொன்ன மாதிரி நானும் நடந்துக்க முயற்சி பண்றேன். அதுசரிப்பா... பாலாஜி ஏன் ஒரு மாதிரி பேசறான்? அம்மாவும் சரியா பேசமாட்டேங்கறாங்க! நான் கேக்கறதுகெல்லாம் ஒரு வார்த்தை, இரண்டு வார்த்தைல பதில் சொல்றதோட சரி. ஆனா காயத்ரி கூட நல்லா பேசறாங்க. அவளை கொஞ்சறாங்க. அவளுக்கு வேணுங்கிறத செய்றாங்க. அவகூட விளையாடறாங்க...”

“ஏம்மா... உன் நினைவு தெரிஞ்சு, லலிதா நம்ம வீட்டுக்கு வந்ததுல இருந்து எந்த நாளு உன்னோட நல்லா அன்பா பேசியிருக்கா? நடந்துட்டிருக்கா...? எப்பவுமே நீ மூத்த தாரத்து

பொண்ணுங்கிற நினைப்பு அவ மனசுலேர்ந்து போகாதும்மா. அவ கட்டை வேகும்போது தான் அந்த நினைப்பும் அழியும். இப்போ கல்பனாவும் வந்திடுவா அடுத்த வாரம்.... வீடு அதகளம்தான்..."

"கல்பனா வரப்போறாளா? எப்பப்பா..."

"லெட்டர் போட்டிருந்தாம்மா.. அடுத்த வாரத்தில் ஒரு நாள்.. எப்போன்னு சரியா எழுதல. முழுகாம இருக்காளாம்.."

"என்னப்பா. இவ்வளவு சந்தோஷமான சமாச்சாரத்தை இவ்வளவு மெதுவா என்கிட்டே சொல்றீங்க?... அம்மாவும் ஒன்னும் சொல்லல. எத்தனை நாளா எதிர்பார்த்திட்டு இருந்த விஷயம் இது? கேக்கவே ரொம்ப சந்தோஷமா இருக்குப்பா... ஏய் குட்டிம்மா.. இங்க வாயேன்.."

சந்தோஷமான அவனின் குரலைக் கேட்டதும் காயத்ரி ஓடி வந்து ஆசையாய் அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

"என்னம்மா..?"

"கல்பனா சித்தி தெரியுமில்ல உனக்கு?"

"நீ கூட போட்டோவில காமிச்சியே.. அந்த சித்தி தானே..?"

"ஆமாம்மா. அந்த சித்தியோட தொப்பையில ஒரு சின்ன பாப்பா இருக்குதாம்."

"ஐய்ய்.. என்ன பாப்பாமா?"

"பாப்பா வெளியே வந்தப்புறம் தான் தெரியும் ராஜாத்தி.. உனக்கு என்ன பாப்பா வேணும்? தம்பியா, தங்கச்சியா?"

"தங்கச்சி பாப்பா தான் வேணும்."

"ஏண்டா?"

"தங்கச்சிப் பாப்பாவுக்கு என்னோட சின்னதாப் போன டிரெஸ்ஸையெல்லாம் கொடுக்கலாம். தங்கச்சிப் பாப்பாவுக்கு என்னோட விளையாட்டு சாமானையெல்லாம் கொடுப்பேன். அதோட விளையாடுவேன்மா.."



"அடி என் செல்லமே.."

துளசி குழந்தையின் கன்னங்களை வழித்து எடுத்து நெட்டி முறித்து திருஷ்டி கழித்தாள்.

"'தாயைப் போலப் பிள்ளை'ன்னு தெரியாமலா சொன்னாங்க... உன்ன மாதிரியே பேசுது... யோசிக்குது துளசி உன் குழந்தையும்."

கிருஷ்ணமூர்த்தி முகத்தில் பெருமிதம் பொங்கச் சொன்னார்.

"அம்மம்மா... அந்த பாப்பாவைப் போய் பார்க்கலாம்மா.." காயத்ரி குரலில் செல்ல சிணுங்கல்.

"பாப்பா வெளிய வரறத்துக்கு இன்னும் கொஞ்சம் நாள் இருக்குடா கண்ணு. அந்த கல்பனா சித்தி நம்ம வீட்டுக்கு வரப் போறாங்க.. முதல்ல அவங்களோட விளையாடு. கொஞ்ச நாள்ல சித்தியோட பாப்பாவோட விளையாடலாம். சரியா?"

காயத்ரி தன் தலையை ஒப்புதல் அளிக்கும் விதமாக இடதும், வலதுமாய் அசைத்தது.

"துளசி.."

"என்னப்பா?"

கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்தாள் துளசி.

"கிளம்பலாமா? வந்து ரொம்ப நேரமாகுது. லலிதா என்னமோ ஏதோன்னு நினைச்சுக் கவலைப்பட்டுக்கிட்டிருப்பா."

"அம்மா, வீட்டுக்குப் போலாம்மா. எனக்குப் பசிக்குது."

காயத்ரியின் கண்களில் தூக்கம் கலந்திருந்தது. துளசி எழுந்து கொண்டாள்.

**வீ**ட்டிற்கு நடந்துதான் வந்தார்கள். காயத்ரியைக் கிருஷ்ணமூர்த்தி தோளில் தூக்கிக் கொண்டு வருவதைப் பார்க்க துளசிக்குக் கஷ்டமாய் இருந்தது. காயத்ரியைத் தான் தூக்கிக்

MithraVintha

கொள்கிறேன் என்று சொன்னபோதும் அவர் வேண்டாம் என்று மறுத்து விட்டார்.

அப்பாவிற்குப் பாரம் சுமப்பது என்றால் அவ்வளவு பிரியம் போலும் என்று நினைத்துக் கொண்டாள். கோயிலுக்கு அவளை அழைத்து வந்து விசாரித்தபோதே தான் திருச்சியில் ஒரு வேலை தேடிக்கொள்ளப்போவதாகச் சொல்லலாம் என நினைத்தாள். அப்பாவின் இயலாமையை அது குத்திக் காட்டுகிற மாதிரி ஆகி விடுமோ என்று நினைத்துப் பேசாமல் இருந்து விட்டாள். முதலில் வேலை கிடைக்கட்டும். அப்புறம் அது பற்றிச் சொல்லிச் சமாளித்துக் கொள்ளலாம்.

தெருவில் திரும்பியபோது பெட்டிக்கடை வாசலில் பாலாஜி நின்றிருந்தான். "பாலாஜி" என்று அழைக்க துளசி வாயெடுத்த போது அவன் வாயில் ஒரு சிகரெட்டைப் பொருத்திக் கொண்டு பற்ற வைத்தான்.

துளசி திடுக்கிட்டுப் போனாள். அப்பா பார்த்து விடப் போகிறாரே என்று பதைத்தாள். அவர்கள் இருவரையும் முதலில் பாலாஜி பார்த்தான். துளசிக்கு நிம்மதியாக இருந்தது. அப்பாவைப் பார்த்து விட்டதால் அவன் சிகரெட்டைக் கீழே போட்டு மிதித்து அணைத்து விடுவான் என்று நினைத்தாள். அப்படி நடக்கவில்லை. மாறாக தைரியமாக சிகரெட் பிடித்தான்.

துளசி கலவரத்துடன் அப்பாவைப் பார்த்தாள். அப்பா பாலாஜியைப் பார்த்து விட்டார். அவ்வளவுதான். நடுச்சாலை என்று கூடப் பார்க்காமல் அவன் சட்டையைப் பற்றி அடிக்கப் போகிறார் என்று எதிர்பார்த்தாள். அப்பா அப்படிச் செய்யவில்லை. முகத்தைத் திருப்பிக் கொண்டார். துளசிக்கு ஆச்சரியமாக, அதிர்ச்சியாக இருந்தது.

ஒரு காலத்தில் ஒழுக்கம் தவறி நடந்தால் பெல்ட்டால் விளாசிய அப்பாவா இன்றைக்கு இப்படி இருக்கிறார்? மகனைப் பார்த்து, கண்டும் காணாதவர் போல் நடந்து கொள்கிறார்? ஏன் இப்படி? பாலாஜியிடம் பயமா? மகனிடமே பயமா?



மகனிடம் பயப்படும் அளவிற்கு ஏதாவது ரகசியம் அவரிடம் புதைந்து கிடக்கிறதா என்ன என்று எண்ணினாள் துளசி.

## 4

கிருஷ்ணமூர்த்தி கையை நீட்டி, ரிக்ஷாக்காரனின் தோளைத் தொட்டார்.

"அப்படியே நிறுத்திக்கப்பா..."

"க்ரீய்ச்' என்ற ஒலியுடன் ரிக்ஷா அந்த வீட்டின் முன்பு நின்றது.

கிருஷ்ணமூர்த்தி ரிக்ஷாவில் இருந்து இறங்கிக் கொண்டார். சீட்டில் வைத்திருந்த பூப்பொட்டலத்தை எடுத்துக் கொண்டார். சட்டைப் பையில் கையை விட்டு ரூபாயை எடுத்து ரிக்ஷாக்காரனிடம் கொடுத்தார்.

ரிக்ஷாக்காரன் வாங்கிக் கொண்டு, ரிக்ஷாவை திருப்பிக் கொண்டு போனான்.

கிருஷ்ணமூர்த்தி வீட்டு படியேறி கதவை தட்டுவதற்காக கதவில் கை வைத்தார். அவர் முகத்தில் லேசான கவலையின் சாயல்.

அவர் கை வைப்பதற்காகவே காத்திருந்த மாதிரி கதவு தானாகவே திறந்துக் கொண்டது. கிருஷ்ணமூர்த்தியின் முகத்தில் இப்போது பதட்டம் தெரிந்தது. உள்ளே நுழைந்தார். குரல் கொடுத்தார்.

"நந்தினி... நந்தினி..."

ஹால் தாண்டி, கிச்சனில் புகுந்தார். நந்தினியின் சுவடே தெரியவில்லை. கிச்சனில் இருந்து ரூமிற்குள் நுழைந்தார்.

Mithra Vintha

அங்கம் நந்தினி இல்லை. கிருஷ்ணமூர்த்தியின் முகத்தில் லேசான கலவரம். எங்க போயிருக்கக் கூடும் வீட்டை திறந்து போட்டு விட்டு?

"பேஏஏஏ..!"

வெகு திடீரென பின்னாலிருந்து கேட்ட குரலால் அலறி பயந்து திரும்பினார் கிருஷ்ணமூர்த்தி.

நந்தினி நின்றிருந்தாள். சிரிப்பை அடக்க முடியாமல் அடக்கிக் கொண்டு நின்றிருந்தாள். இடுப்பில் ஒரு கையும், சிரிப்பை அடக்கும் பாவனையில் வாயை மற்றொரு கையாலும் மூடிக் கொண்டிருந்த நந்தினியைப் பார்த்ததும், கிருஷ்ணமூர்த்தியின் முகத்தில் தெரிந்த கலவரமும், பயமும் விலகி, கோபம் தெரிந்தது.

"சிரிக்காதே நந்தினி... நான் நிஜமாகவே பதறிப் போயிட்டேன்..."

நந்தினி சட்டென சிரிப்பை அடக்கினாள். அவள் முகத்தில் லேசான குறும்பு இழையோடியமுறுவல்.

"நீங்க வருவீங்க, வருவீங்கன்னு எத்தனை நேரம் காத்திருட்டிருக்கிறது? அதான்... வாசல்ல நான் நிக்காம, உங்க கண்ல படாம இருந்தா, என்னை தேடுவீங்களான்னு பார்க்க கொஞ்சம் விளையாடினேன்... பயந்துட்டீங்களா?"

"இந்த மாதிரி விளையாட்டெல்லாம் விளையாட நான் என்ன வயசுப் பையனா?"

"ஆக நீங்களே உங்களை கிழவன்னு ஒத்துக்கறீங்க...?"

கிருஷ்ணமூர்த்தி பதில் எதுவும் சொல்லாமல் நகர்ந்து ஊஞ்சலில் போய் உட்கார்ந்தார். அவரின் பாரம் தாங்காமல் ஊஞ்சல் ஒரு முறை 'க்ரீய்ச்' என்று முனகியது. அவரின் மௌனத்தைப் பார்த்து நந்தினியின் முகத்தில் இருந்து குறும்பான முறுவல் மறைந்தது.



"மன்னிச்சிடுங்க... நான் ஏதோ விளையாட்டாய்... குழந்தை மாதிரி... வேணும்னு செய்யல..." நந்தினியின் குரல் மெலியதாய் பயத்துடன் -திக்கி திணறி கோர்வையில்லாத வார்த்தைகளை துப்பியது.

கிருஷ்ணமூர்த்தி சட்டென நிமிர்ந்தார். நந்தினியின் முகத்தைப் பார்த்தார். அவள் முகம் தப்பு செய்து விட்டு, தாயின் முன்னே தலை குனிந்து நின்றிருக்கும், வெகுளி குழந்தையின் முகத்தை நினைவுபடுத்தியது. மருண்ட மானின் கண்களை போல அவளின் கண் பாப்பாக்கள் அங்கும் இங்கும் அலைந்தன. கிருஷ்ணமூர்த்தியின் முகம் சட்டென இளகியது. கண்களின் பரிவும் பாசமும் பொங்கியது.

"நந்தினி..." மென்மையாய் அழைத்தார்.

நிமிர்ந்த நந்தினியின் கண்களின் ஓரத்தில் இரண்டு கண்ணீர் முத்துக்கள் திரண்டு, விழ தயாராய் நின்றிருந்தன.

"இங்கே வா..." என்றார். தன் அருகே ஊஞ்சலை தட்டிக் காண்பித்தார்.

நந்தினி அப்படியே நின்றிருந்தாள்.

"அட வாயேன் இப்படி பக்கத்திலே..." என்றார்.

நந்தினியிடம் அப்பொழுதும் அசைவில்லை.

"எனக்கு உம்மேல எந்த கோபமும் இல்ல. இப்ப நீ வந்து என் பக்கத்துல உட்காரலைன்னா தான் எனக்கு கோபம் வரும்..."

நந்தினி மெல்ல நகர்ந்து வந்து ஊஞ்சலில் அவர் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

"நான் ஒரு சந்தோஷமான சமாச்சாரம் சொல்லலாம்னு ஓடி வந்தா... நீ சின்னப் பெண்ணாட்டம் விளையாட்டு பண்ணிகிட்டு இருக்கே... சரி விடு... என்ன விஷயம்னு கேக்கமாட்டியா?"

நந்தினி நிமிர்ந்து கண்களாலேயே என்ன என்று வினவினாள்.

MithraVintha

"துளசி தெரியுமில்ல உனக்கு.... துளசி! ஊர்லேர்ந்து வந்திருக்கா."

"யாரு உங்க மூத்த பொண்ணா?" நந்தினியின் குரலில் ஆர்வம்.

"ஆமா.... ஆமா...." கிருஷ்ணமூர்த்தியின் குரலில் குழந்தையின் குதூகலம்.

"எப்ப வந்தாங்க? என்ன விசேஷம்?" கிருஷ்ண மூர்த்தியின் குதூகலம் நந்தினிக்கும் தொற்றிக் கொண்டது.

"இரண்டு நாளாச்சு. இரண்டு நாளும் பேத்தியோட கூத்தும், கும்மாளமும் தான். காயத்ரி என்ன பேச்சு பேசுதுங்கற... ரொம்ப சுட்டிகையா இருக்குது... அதான் இன்னிக்கு காலைல கூட நேரம் போறதே தெரியாம விளையாடிட்டு இருந்தேனா... நேரம் போனதே தெரியலை... துளசி வேற கிளம்பும்போதே 'எங்கப்பா, எதுக்குப்பா'ன்னு கேக்க ஆரம்பிச்சுட்டா... ஏதோ சொல்லி சமாளிச்சுட்டு வர்றதுக்குள்ளே உன்பாடு, என்பாடு ஆய்டுச்சி..."

"ம்ம்ம்... என்ன சொல்லி சமாளிச்சீங்க?"

"என்னத்த சொல்றது? ஆபீஸுக்கு ஞாயித்துக் கிழமையும் ஓவர் டைம் செய்யப் போறேன்னு சொன்னேன். துளசி ஒன்னும் பதில் பேசல... லலிதா தான் கழுத்தை நொடிச்சுகிட்டு உள்ளே போயிட்டா... எனக்கு லலிதாவை நினைத்துத்தான் கொஞ்சம் யோசனையா இருக்கு..."

"என்ன, லலிதாம்மா உங்க பொண்ணுகிட்டே என்னைப் பத்தி ஏதாவது சொல்லுவாங்களோன்னு யோசனையா இருக்கா?"

"ஆமா துளசி வேற இனிமே இங்கத்தான் இருக்கப்போறா..."

"என்ன திடீர்னு...?"



"அவளுக்கு அவ வேலை செய்ஞ்ச இடத்துல சரியா மரியாதையே இல்லன்னு சொன்னா. ஆம்பிளை துணையில்லாம தனியா இருக்கறதுனால அவனவனும் துளுத்துப் போய் அவகிட்ட வாலாட்டிப் பாக்கறானுங்களாம்... சரிதாம்மா வந்தவரைக்கும் நல்லது... இதையே தான் நான் இத்தனை நாளா சொல்லிட்டிருந்தேன் அவகிட்டே..."

"எதெது எப்பப்ப நடக்கணுமோ அதது அப்பப்ப தான் நடக்கும். நீங்க கவலைப்படாதீங்க..." என்றபடி எழுந்தாள் நந்தினி.

"என்ன எழுந்துட்ட...?"

"வந்ததுலர்ந்து பொண்ணு பத்தியே பேசிட்டிருந்ததுல பசி மறந்து போயிடுச்சா உங்களுக்கு? இருங்க, நான் போய் டிபன் எடுத்திட்டு வரேன்!"

"சரி, இந்த பூவை தலைல வச்சிக்கிட்டுப் போயேன். இல்லன்னா உன் முகத்துல என்னமோ குறைஞ்ச மாதிரி தோணுது எனக்கு..."

"ம்... தோணும், தோணும்..." என்று சிணுங்கிக் கொண்டே கிருஷ்ணமூர்த்தியின் அருகில் வந்து அவருக்கு முதுகு காட்டி ஊஞ்சலில் உட்கார்ந்தாள் நந்தினி.

கிருஷ்ணமூர்த்தி தான் வாங்கி வந்திருந்த பூவை பொட்டலத்தில் இருந்து பிரித்து ஒரு பெண்ணின் லாகவத்தோடு அதை நந்தினியின் தலையில் வைத்தார்.

கிருஷ்ணமூர்த்தி பூ வைத்தவுடன் எழுந்து கொண்ட நந்தினி, திரும்பி அவரைப் பார்த்து புன்னகைத்தாள். கிச்சனுக்குள் நுழைந்தாள்.

திரும்பி வரும்பொழுது அவள் கையில் ஒரு தட்டு. தட்டில் ஆவி பறக்கும் சூடான இட்லிகள். கூடவே தொட்டுக்கொள்ள கொத்துமல்லி துவையலும், தேங்காய் சட்னியும் மிளகாய்ப் பொடி எண்ணெயில் குழைத்தும் வைக்கப்பட்டிருந்தன.

MithraVintha

கிருஷ்ணமூர்த்தி கைகளை கழுவிக் கொண்டு, ஊஞ்சலில் ஆடியவாறே சாப்பிட்டார். அவர் சாப்பிட்டு முடித்ததும் நந்தினியும் சாப்பிட்டாள்.

இடத்தை சுத்தம் செய்து விட்டு வெற்றிலைப் பெட்டியை எடுத்து வந்தாள் நந்தினி. கூடவே டிரான்ஸிஸ்டரையும். ஊஞ்சலில் கிருஷ்ணமூர்த்தியின் அருகில் உட்கார்ந்தாள். டிரான்ஸிஸ்டரை ஆன் செய்து 'நேயர் விருப்பத்திற்கு' முள்ளை நகர்த்தினாள்.

டிரான்ஸிஸ்டரில் முள் நகர நகர குரல்கள் உயர்ந்தும், தேய்ந்தும், உறுமியும், கரகரத்தும் விலகி திடீரென வெகு துல்லியமாய் விளம்பர ஒலி கேட்டது.

நந்தினி டிரான்ஸிஸ்டரை தனக்கும், கிருஷ்ணமூர்த்திக்கும் நடுவில் ஊஞ்சலில் வைத்தாள். வெற்றிலைப் பெட்டியை திறந்து உள்ளிருந்து வெற்றிலைகளை எடுத்து சுண்ணாம்பு தடவ ஆரம்பித்தாள்.

"தினம் தினம் இதே பாட்டுதானே போடறான்... கேட்ட பாட்டையே திரும்ப திரும்ப கேக்க உனக்கு அலுப்பாயில்ல..."

"ஷ்ஷ்ஷ்..." என்றாள் நந்தினி.

"அட... நான் இப்ப நிறுத்தத்தான் போறேன். அதை..." என்றபடி டிரான்ஸிஸ்டரின் குமிழில் கை வைத்தார்.

"ப்ளீஸ் நிறுத்தாதீங்க..." என்று அவர் புறம் திரும்பி கெஞ்சினாள் நந்தினி.

கிருஷ்ணமூர்த்தி ஒரு கணம் அவள் முகத்தைப் பார்த்து பிரமித்துப் போனார். அவள் கெஞ்சியபோது அவள் கண்களும், கன்ன மேடுகளும், நாசியும், புருவங்களும் சேர்ந்துக் கொண்டு கெஞ்சினாற் போல தோன்றியது. முன் நெற்றியில் வந்து புரண்ட ஒன்றிரண்டு முடிகள் அவள் முகத்திற்கு கூடுதல் அழகைத் தந்தன. சின்ன நெற்றியில் எடுப்பாய் தெரிந்த வட்ட சிவப்பு பொட்டு. புருவங்கள் இரு பக்கத்திலும் வில் போல



வளைந்திருந்தன. பெரிய கரிய விழிகள். அவற்றை மையால் சிறைப்படுத்தியிருந்தாள். சீராக நேர்க்கோட்டில் சரேலென இறங்கிய அளவான மூக்கு. அதில் பளபளத்த ஒற்றை மூக்குத்தி. இயற்கையாகவே சிவப்பாய் அமைந்திருந்த சொப்பு வாய். மருவில்லாத, மாசற்ற கன்ன கதுப்புகள். பக்கத்திலேயே அளவாய் அமைந்த காதுகள். காதுகளில் ஊஞ்சலாடிக் கொண்டிருந்த ஜிமிக்கிகள். சின்ன முகவாய். நேராய் இறங்கிய வெண் கழுத்து.

நந்தினியை பார்க்க பார்க்க அவளை சீண்டி பார்க்க வேண்டும் போல் தோன்றியது கிருஷ்ணமூர்த்திக்கு. அவருடைய சீண்டலினால் சிணுங்கும் அவள் முகத்தை பார்க்க வேண்டும் போல் தோன்றியது.

ஏதோ ஒரு பாடலை ஒலிபரப்பிக் கொண்டிருந்த டிரான்ஸிஸ்டரை கையில் எடுத்தார். குமிழைத் திருக கை வைத்தார்.

"நிறுத்த வேணாம்னு சொன்னேன்ல..." என்றாள் நந்தினி மடித்த வெற்றிலையை நீட்டியபடி.

கிருஷ்ணமூர்த்தி வெற்றிலையை வாங்கி வாயில் போட்டுக் கொண்டார். எதுவும் பேசாமல் நந்தினியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். டிரான்ஸிஸ்டரில் பாடல் முடிந்து விளம்பரம் வந்தது.

"ஏன் நிறுத்த வேணாம்னு சொன்னே?" என்றார் திடீரென.

"ஷ்... கேளுங்களேன்..." அவளுடைய குரலில் ஏதோ ஒரு விதமான எதிர்பார்ப்பு இருந்தது. அவள் முகத்தில் தசைகள் ஒரு பரவச உணர்ச்சிக்கு தங்களை தயார்ப்படுத்திக் கொண்டன.

டிரான்ஸிஸ்டரில் அறிவிப்பாளர் விருப்பப் பாடலை கேட்ட நேயர்களின் பெயர்களை படித்துக் கொண்டிருந்தார்.

"..... ந்தை குலசேகரன், ஈஸ்வரி, சிரஞ்சீவி, ரஞ்சித், துவரங்குறிச்சி நாகையன், சாந்தா, மனோன்மணி, சத்யா, சங்கர்,

MithraVintha

மேகலா... தஞ்சாவூர் தேவநாதன்... விஜயா, சுரேஷ், ராஜா... 'திருச்சி நந்தினி கிருஷ்ணமூர்த்தி...' அரியலூர் பரமேஷ், சந்திரா, லட்சுமி... ஸ்ரீரங்கம் செல்வராஜ், தனபால், செந்தில், சௌம்யா..."

கேட்டுக் கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தி திடுக்கிட்டு நிமிர்ந்து நந்தினியைப் பார்த்தார்.

"என்ன நந்தினி இது?"

"எது?" என்றாள் நந்தினி அப்பாவியாய்.

"திருச்சி நந்தினி கிருஷ்ணமூர்த்தின்னு ரேடியோல சொல்றாங்க..."

"நான் அப்படித்தானே எழுதிப் போட்டேன். நேயர் விருப்பத்தில என் பேரை முழுசாக் கேக்கணும்னு ஆசையா இருந்திச்சி..." என்றாள் நந்தினி முகம் முழுக்க சந்தோஷத்துடன்.

"அதுக்காக இப்படியா? என்னம்மா இது... ஏதாவது விவகாரமா ஆய்டப்போவுது..."

"ஆமா... திருச்சி நந்தினி கிருஷ்ணமூர்த்தின்னா நீங்களும், நானுந்தானா! எத்தனையோ நந்தினி கிருஷ்ணமூர்த்தி திருச்சில இருக்கமாட்டாங்களா! ரேடியோல கூட உங்க பேரோட என் பேரைச் சேர்த்துக் கேட்டு சந்தோஷப் பட்டுக்கக் கூடாதா?"

"நான் எதுக்கு சொல்றேன்னாம்மா? இப்பத் தான் துளசி வந்திருக்கா, அவளுக்கு ஏதாவது தெரிய வந்துட்டா..."

"இருந்து இருந்து ஊர்ல இருந்து வந்த துளசி, இதைத்தான் கேட்டுத் தெரிஞ்சிக்கப் போறாளா? ரேடியோலதானே? ஒண்ணும் ஆய்டாது... பயப்படாதீங்க... இந்த சின்ன சந்தோஷம் கூட எனக்குக் கிடைக்கக்கூடாதா...?"

நந்தினியின் குரலில் ஏக்கம் கலந்து இருந்தது. கிருஷ்ணமூர்த்தி ஒரு முறை பெருமூச்சு விட்டார்.



"என்னவோ... செய்... ஒன் இஷ்டம்..."

நந்தினியின் முகம் சந்தோஷப் புன்னகையில் விரிந்தது பூவாய் மலர்ந்தது. கிருஷ்ணமூர்த்தியின் விரல்களை கையில் எடுத்து விரல்களுக்கு முத்தமிட்டாள்.

டிரான்ஸிஸ்டரில் நேயர்களின் பெயர்கள் முடிவடைந்து பாடல் தொடங்கியது.

'உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல... உன்னை எண்ணாத நெஞ்சும் நெஞ்சல்ல...'

நந்தினியின் முகம் அந்தப் பாடலைக் கேட்டதும், சொல்லவொண்ணா ஆனந்தத்தில் திளைத்தது. பரவச நிலை அடையப் பெற்ற நிலையில் இருந்தாள் நந்தினி. தன் ஜென்மம் ஈடேறிய மகிழ்ச்சி. வயிறார சாப்பாடு கிடைத்த பிச்சைக்காரனின் திருப்தி. சந்தோஷமாய் தான் கைகளில் ஏந்தியிருந்த கிருஷ்ணமூர்த்தியின் விரல்களுக்கு சொடக்கு எடுத்து விட்டாள்.

கிருஷ்ணமூர்த்தியும் நந்தினியும் பாடல்களின் பின்னணியில் தாயக்கட்டம் விளையாடினார்கள். கார்ட்ஸ் வைத்து ரம்மி விளையாடினார்கள்.

இருபத்தைந்து வருட இல்வாழ்க்கையை அனுபவித்த, பகிர்ந்துக் கொண்ட ஆதர்ச தம்பதிகள் போல தோன்றியது அவர்களைப் பார்க்கையில்.

கிருஷ்ணமூர்த்தி தும்மினாள் நந்தினி ஓடிச் சென்று வெந்நீர் வைத்துக் கொண்டு எடுத்து வந்தாள். வெந்நீரில் அமிர்தாஞ்சன் போட்டு இருவரும் ஒரே போர்வையின் கீழே ஆவி பிடித்தார்கள். கிருஷ்ணமூர்த்தி படுத்துக் கொள்ள நந்தினி மெல்ல அவர் கால்களை பிடித்து விட்டாள்.

பொழுது சாயும் நேரத்தில் நந்தினி சாமியறையில் விளக்கேற்றி சாம்பிராணி புகையை வீடெங்கும் பரவச் செய்தாள். கிருஷ்ணமூர்த்தி ஊஞ்சலில் ஆடியபடி நந்தினியின் நடவடிக்கையை ரசித்தார்.

MithraVintha

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை காலையிலும், அன்றைய தினத்திற்கான எதிர்பார்ப்பு மாலையில் வாழ்க்கையை அந்த ஒரு பகல் பொழுதுக்குள்ளாகவே முழுவதுமாய் வாழ்ந்து முடித்ததான திருப்தி, நந்தினி கிருஷ்ணமூர்த்தி இருவருக்கும்.

வீட்டிற்கு போக வேண்டிய நேரம் ஆனவுடன், கிருஷ்ணமூர்த்தி, சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்ப தயாரானார். அதைப் பார்த்ததும் நந்தினியின் முகத்தில் ஒரு சின்ன தனுக்குறல் உடனே சுதாரித்துக் கொண்டு, சட்டையின் பட்டன்களை தானே போட்டு விட்டாள் நந்தினி.

வாசலில் தயாராய் நின்றிருந்தது ரிக்ஷா. கிருஷ்ணமூர்த்தி மௌனமாய் கையசைத்து விட்டு ரிக்ஷாவில் ஏறிக்கொள்ள, ரிக்ஷா புறப்பட்டது.

பார்வையில் இருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டு நின்றிருந்த நந்தினியின் கன்னங்களில் கண்ணீர் வழிந்தது. அவள் முகம் ஏக்கத்தையும், மிக லேசான வருத்தத்தையும் ஒரு சேர பிரதிபலித்தது.

## 5

துளசி உட்கார்ந்திருந்தாள்.

உட்கார்ந்திருந்த இடத்தில் இருந்து முழு வீட்டின் விஸ்தாரத்தையும் அவளால் பார்க்க முடிந்தது.

வாசல், வாசலை ஒட்டிய சிறிய நடைபாதை, நடைபாதையை அடுத்து ஒரு பெரிய சதுரமாக ஹால் விரிந்திருக்க, ஹாலின் இடது ஓரத்தில் ஒரு டேபிள், டேபிள் மேலே போர்ட்டபிள் டி.வி. பக்கத்திலேயே டேபிள் ஃபேன். டேபிளை ஒட்டினாற்போல் ஒரு அறை. பாலாஜியின் அறை. முதலில் அப்பாவின் அறையாக இருந்து, இப்போது பாலாஜியின் அறையாக மாறிவிட்டது.



ஹாலின் வலதுபுறத்தில் இரண்டு நாற்காலிகள். எழுபதுகளில் புதிதாய் இருந்தது. இப்போது அவுட் டேட்டாகி விட்டிருந்தன. நாற்காலிகளின் முன்னே ஒரு சிறிய டீப்பாய். டீப்பாயின் கீழ் தட்டில் அன்றைய தினசரியும், வாரப் புத்தகங்கள் இரண்டும் ஒழுங்கில்லாமல் வைக்கப்பட்டிருந்தன. பக்கத்தில் சுவற்றோடு ஒரு ஷெல்ஃப். கீழ்தட்டில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நியூஸ் பேப்பர்களும், பத்திரிகைகளும். மேல் தட்டில் பாலாஜியின் புத்தகங்கள் சில ஒழுங்கற்ற நிலையில் வைக்கப்பட்டிருந்தன. நடுவில் இருந்த இரண்டு தட்டுகளிலும் கையில் கிடைப்பதெல்லாம் ஷோ-பீஸ்களாக வைக்கப் பட்டிருந்தன, அவற்றோடு பாலாஜியின் சிகரெட் பாக்கெட்டும்.

ஷெல்ஃப் முடிந்தவுடன் ஒரு அறை. அந்த அறை தான் இப்போது கல்பனா வரவிற்காக சாமான்கள் ஒழிக்கப்பட்டு, ஒட்டடை அடிக்கப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டிருந்தது. கல்பனாவிற்காக வேறு சில விஷயங்களும் ஜரூராக நடந்துக் கொண்டிருந்தன.

துளசியில் விரல்கள் வெகு வேகமாக, வெகு லாவகமாக செயல்பட்டன. பூரண உருண்டை உள்ளே வைக்கப்பட்டு மைதா மேல் மாவினால் மறுபடி உருண்டையாக்கப் பட்டிருந்த வைகளை ஒவ்வொன்றாக எடுத்து, இலையிலும் விரலிலும் எண்ணெய் தேய்த்துக் கொண்டு, தட்டி தட்டி பெரிதான வட்டமாக்கி பக்கத்தில் இருந்த பெரிய தட்டில் வரிசையாக வைத்துக் கொண்டே வர, லலிதா கிச்சனிலிருந்தபடியே ஒவ்வொரு வட்டமாக எடுத்து தோசைக் கல்லில் போட்டு எடுத்து மற்றொரு தட்டில் அடுக்க, சூடான போலிகளின் வாசனை நாக்கில் எச்சில் ஊற வைத்தது.

கல்பனாவிற்கு மிகவும் பிடிக்கும் என்று அடம்படித்து லலிதாவை சம்மதிக்க வைத்திருந்தாள் துளசி. அவளுடைய



MithraVintha

கைகள் வேலை செய்து கொண்டிருக்க வாய் டிரான்ஸிஸ்டரில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்த பாட்டை கூடவே பாடிக் கொண்டிருந்தது.

பக்கத்து வீட்டில் விளையாட போயிருந்த காயத்ரி உள்ளே ஓடி வந்தாள். துளசி செய்து கொண்டிருந்த போளிகளைப் பார்த்தவுடன் அவள் முகம் ஆச்சரியத்தில் விரிந்தது.

"ஐய்ய்ப்.. என்னம்மா இது...?"

"இதுக்குப் பேரு போளி கண்ணம்மா. நல்லா ஸ்வீட்டா இருக்கும் செல்லம்."

"எதுக்கும்மா இப்ப பண்ணிட்டிருக்க?"

"கல்பனா சித்தி வர்றாங்கல்ல கண்ணு. அவங்களுக்கு ரொம்ப பிடிக்கும்னு அம்மாவும், பாட்டியும் இதை பண்ணிட்டிருக்கோம்மா..."

"சித்திக்கு மட்டும் தானா...? எனக்குக் கிடையாதாம்மா...? பாட்டி எனக்கு இது வேணும் பாட்டி..."

அதற்குள் லலிதா ஒரு சிறிய தட்டில் ஒரு போளியைப் போட்டு அதன் மேல் கொஞ்சம் நெய் விட்டு நீட்டினாள்.

"உனக்கு தான் முதல்ல... சித்திக்கெல்லாம் நாளைக்குத் தான் சாப்பிடு..."

"ஹைய்யா... பாட்டின்னா பாட்டிதான்..."

காயத்ரி தட்டை வாங்கிக் கொண்டு, வாசலில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

பாலாஜி வீட்டிற்குள் நுழைந்தான். காலால் ஷூக்களைக் கழற்றினான்.

அவளைப் பார்த்ததும், துளசி அகலமாய் புன்னகைத்தாள்.

"போளி சாப்பிடேன் பாலாஜி..."



பாலாஜி நிமிர்ந்து அவளைப் பார்த்தான். ஏதோ சொல்ல வாயெடுத்தவன் எதுவும் பேசாமல் நேரே ஷெல்ஃப்பிற்கு சென்று அங்கிருந்து சிகரெட் பாக்கெட்டை எடுத்தான்.

"ஏண்டா, இப்பத்தான் வந்திருக்கே... வந்ததும் வராததுவுமா எதுக்குடா சிகரெட்? போளி ஒண்ணு சாப்பிடேன்... இல்லை வேண்டாம்னா கொஞ்சம் காபி குடி... அம்மா, நீயே சொல்லு அவன் கிட்டே..."

"கொஞ்சம் காஃபி கொடுக்கட்டுமா பாலாஜி?"

லலிதா கிச்சனிலிருந்த படியே கேட்டாள்.

உதட்டிலேயே தொங்கிய சிகரெட்டுடன் டேபிளின் டிராயரை திறந்தான் பாலாஜி. பேப்பர்களை கலைத்து எதையோ தேடினான். அடுத்த டிராயர். அதிலும் கலைத்து தேடினான். டி.வி.யின் பின்புறம் கை வைத்து தேடினான். தன்னுடைய ரூமிற்குள் சென்று தேடினான். வெளியே வந்த அவன் முகத்தில் லேசான எரிச்சல்.

" என்ன மேட்ச் பாக்ஸ்தானே தேடறே? நான் தான் எடுத்து கிச்சன் ஷெல்ஃப்ல போட்டுட்டேன்..."

துளசி அவனைப் பார்த்து நிதானமாய் சொன்னாள்.

பாலாஜி சட்டென நிமிர்ந்து பார்த்தான். அவன் கண்களில் கோபம் தெரிந்தது. சிகரெட்டை வாயிலிருந்து எடுக்காமல் கேட்டான்.

"எதுக்கு?"

"என்ன எதுக்கு? சிகரெட் பிடிக்கறது உடம்புக்கு நல்லதுல்ல. சொன்னா கேளு. காயத்ரி வேற இருக்கா. அவ சிகரெட் பார்த்தா. 'இது எதுக்குமா'ன்னு என்னை கேள்வி கேக்கறா. மத்யானம் பாரு, மேட்ச் பாக்ஸை ஷெல்ஃப்லேர்ந்து எடுத்து விளையாடிட்டிருக்கா. நான்தான் பிடுங்கி வைச்சேன். சிகரெட் பாக்கெட்டையும் அப்பவே தூக்கிப் போட்டிருப்பேன். ஆனா நீ சொன்னா கேட்டுப்பேன்னு தான் உன்கிட்டே சொல்லிட்டே

MithraVintha

தூக்கிப் போடலாம்னு வெச்சா. நீ வந்தவுடனே அதைத் தான் தேடறே."

பாலாஜி துளசியைப் பார்த்து, ஒற்றை விரலை ஆட்டி எச்சரித்தான். அவளை தாண்டி கிச்சனுக்குள் நுழைந்து, இடுக்கியால் தோசைக்கல்லை நகர்த்தி, குனிந்து எரியும் அடுப்பிலேயே சிகரெட்டை பற்ற வைத்துக் கொண்டான்.

"என்னடா இது கன்றாவி..."

லலிதா, சிகரெட் புகையின் வாசம் நாசியை தாக்கியவுடன், தாளமுடியாமல் இருமினாள்.

"அம்மா எவ்வளவு வருத்தப்படறாங்க, பார்த்ததே இல்லை? அம்மாவுக்காகவாவது இந்த பழக்கத்தை விட்டுத் தொலையேன் பாலாஜி..."

துளசியின் குரலில் கெஞ்சல் இருந்தது.

பாலாஜி சிகரெட்டை விரல்களில் எடுத்தான். புகையை வெளியே ஊதினான்.

"இதோ பார். உன் பழைய நாரதர் வேலையெல்லாம் மறுபடி ஆரம்பிக்காதே. கேட்டுட்டு தலையை குனிஞ்சிட்டு போறதுக்கு நான் ஒன்னும் பழைய பாலாஜி இல்ல..."

"இப்ப நான் என்ன சொல்லிட்டேன் பாலாஜி? அம்மா வருத்தப்படறாங்களேன்னு சொன்னேன். குழந்தை வேற அதைப் பத்தி கேக்குது. குழந்தை கண்ல படற மாதிரி இதை வெச்சுட்டுப் போறே..."

"இது என் வீடு. இத்தனை நாள் நான் என் இஷ்டப்படி எத எங்க வேணும்னாலும் வைச்சேன். வைப்பேன். நீயும் உன் குழந்தையும் நேத்து உள்ளே வந்துட்டு. இன்னிக்கு சட்டம் பேசினா அதுக்காக நான் மாறவும் மாட்டேன். பயப்படவும் மாட்டேன். இடத்தைக் கொடுத்தா, மடத்தைப் பிடுங்கறா மாதிரின்னு சொல்வாங்க சரியாதான் இருக்கு. குழந்தை இருக்கு,



குட்டி இருக்குனு எனக்கு அட்வைஸ் பண்ணாதே. நீ மறுபடியும் சொல்றேன். நான் பழைய பாலாஜி இல்ல..."

"துளசி விடு.... இந்தப் பேச்சே வேண்டாம். நாம சொன்னாலும் அவன் கேக்க மாட்டான் விடு..."

லலிதாவின் குரலில் அப்பட்டமான இயலாமை.

"நீ வேணும்னா, புது பாலாஜியா இருக்கலாம். ஆனா. நான் அன்னிக்கும் இன்னிக்கும், உன்மேல அக்கறை இருக்கிற அதே துளசி தான்!"

பாலாஜியின் முகத்தில் எள்ளல். கோணலாய் ஒரு சிரிப்பு.

"ஆமா, தெரியாமத்தான் கேக்கறேன். உனக்கு என்ன யோக்யதை இருக்குன்னு என்னைத் திருத்த வந்துட்டே நீ? புருஷன் செத்து வேலை கெடைச்சுதே. அங்க என்ன ஆச்சு? கம்பெனி சரக்குல கை வெச்சுட்டேன்னு தான் உன்னை வேலை விட்டு தூக்கிட்டாங்க? நான் ஏதோ வீட்ல சிகரெட் பிடிக்கறேனே தவிர அந்த மாதிரி அசிங்கம் எல்லாம் பண்ணல..."

கோபத்தில் பாலாஜியின் நரம்புகள் தெறித்தன.

உள்ளே நுழைந்த கிருஷ்ணமூர்த்தி பதைபதைத்தார்.

"வாசல் தாண்டி ரோடு வரைக்கும் கேக்குதுடா நீ சத்தம் போடறது. என்ன விஷயம், எது உண்மைன்னு தெரியாம பேசாத பாலாஜி... துளசியை பத்தி எனக்கு நல்லாத் தெரியும்..."

"வாங்க அரிச்சந்திர மூர்த்தி, வாங்க... எங்கடா பொண்ணுக்கு வக்காலத்து வாங்க உங்களை காணோமேன்னு நினைச்சுட்டிருந்தேன். வந்திட்டீங்க... நீங்க மட்டும் ரொம்ப நல்லர்னு நினைப்பா... நீங்க ஆபீஸ்ல லஞ்சம் வாங்கல... அதுக்காகத்தான உங்களை வேலையை விட்டு துரத்தி 'போய்யா உனக்கு பென்ஷன் கூடக் கெடையாது'ன்னு சொல்லல.... நீங்க பண்ணதெல்லாம் அசிங்கம் இல்ல... நான் சத்தம் போட்டு அது வாசல் வரை கேக்கறதுதான் அசிங்கம்...

Mithra Vintha

வீட்டுக்குள்ளேயே சிகரெட் பிடிக்கறதுதான் அசிங்கம்... அப்படிதானே?"

துளசி எழுந்து பாலாஜியின் கைகளைப் பற்றினாள்.

"போதும் பாலாஜி... அப்பாவை எதுவும் சொல்லாத... அவர் அப்படியே லஞ்சம் வாங்கினதாகவே இருக்கட்டும். அவர் ஒரு பைசா கூட தனக்குன்னு செலவு செய்யலையே..."

பாலாஜி கைகளை உதறினான்.

"அதனால லஞ்சம் வாங்கினது நியாயமாயிடுமா? கௌரவமான வேலை போய். இப்போ ஏதோ ஆபீஸ்ல பார்ட் டைமா கணக்கு எழுதிட்டிருக்காரே. அது நல்லாவா இருக்கு...? உனக்கு அவரும், அவருக்கு நீயும் என்ன மாத்தி மாத்தி வக்காலத்து வாங்கிட்டு பேசறீங்க!"

கிருஷ்ணமூர்த்தி அந்த இடத்தில் நிற்க முடியாமல் மறுபடி வாசல் நோக்கி நகர்ந்தார். காயத்ரி பாலாஜியின் குரலால் மிரண்டு போய் கிருஷ்ணமூர்த்தியின் பின்னால் ஒண்டிக் கொண்டு, கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

துளசியின் கண்களின் ஓரம் நீர்முத்துக்கள், 'நிற்கவா, விழுந்து விடவா' என்று கேட்டன.

"என்ன இருந்தாலும் அவர் நமக்கு அப்பா, பாலாஜி. இன்னொருத்தர் காயத்தை கிளறி கிளறி சந்தோஷப்படக்கூடாது. பாலாஜி..."

பாலாஜி அவளை தீர்க்கமாய் பார்த்தான்.

"என்ன இருந்தாலும்... இல்ல?"

அவன் குரலில் அழுத்தம் சேர்ந்திருந்தது.

லலிதா சூழ்நிலை இறுகுவதை உணர்ந்தாள். அடுப்பை அணைத்து விட்டு அவசரமாக வெளியே வந்தாள்.

"பாலாஜி நீ கௌம்பு... வெளியே ஏதாவது வேலை இருந்தா முடிச்சிட்டு வா."



பாலாஜி, லலிதாவை தாண்டி, துளசியிடம் வந்தான். அவள் முகத்திற்கு எதிரே சிகரெட்டை ஆட்டினான்.

"இது எங்கப்பன் தூட்டுல வாங்குனதில்ல. மெடிக்கல் ரெப்ரஸன்டேடிவ் உத்யோகம் தந்த காசுல வாங்கினது. ஆபீஸ்ல கணக்கு எழுதற மாதிரி சொகுசான வேலை இல்லை. தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, கும்பகோணம்னு இந்தக் கோடிக்கும் நாமக்கல், அரியலூர், கரூர், ஈரோடு, பெரம்பலூர்னு அந்தக் கோடிக்கும் அல்லாடிட்டு ஊர் ஊரா சுத்தறேன். வெயில்ல வேகறேன். மழைல நனையறேன்... ஒவ்வொரு டாக்டர் வீடா படி ஏறி ஏறி இறங்கறேன். அப்படி லோலோன்னு சுத்தி உழைச்சு சம்பாதிச்ச காசுல வாங்கன சிகரெட் இது! இஷ்டப்பட்ட நேரத்தில் பிடிப்பேன், இஷ்டப்பட்ட இடத்தில பிடிப்பேன், வைப்பேன். என்னை கேள்வி கேக்க உனக்கு உரிமையில்லை... ஒண்டிக்க எடம் கொடுத்திருக்காங்களா, ஓரமா உக்காந்து வாயைப் பொத்திட்டிரு. இன்னொரு தடவை என் வம்புக்கு வந்தே..."

பாலாஜி விரலை உயர்த்தி எச்சரித்து விட்டு வாசலில் இறங்கி காணாமல் போனான்.

துளசி விக்கித்து நின்றிருந்தாள். அவள் காதில் ஈயத்தை காய்ச்சி ஊற்றியது போல் இருந்தது. கொதித்துக் கொண்டிருந்த தண்ணீரை எடுத்து முகத்தில் ஊற்றியது போல் உணர்ந்தாள். பாலாஜியா இது. அவளால் நம்ப முடியவில்லை. வீட்டிற்கு வந்த அன்று பாலாஜி நன்றாக வளர்ந்த பெரிய மனிதன் போல் ஆகிவிட்டான் என்று அவள் நினைத்தபோது அவளின் ஆச்சர்யம் அவன் உடலளவைப் பற்றியதாய் இருந்தது. ஆனால், அவன் செய்கைகளும், அவன் பேச்சும் அவன் மனதளவிலும் எல்லை மீறிய வளர்ச்சியைப் பெற்றிருந்தான் என்பதை துளசி அன்றைய நிகழ்ச்சியின் மூலம் தெரிந்து கொண்ட போது அதிர்ச்சியாக இருந்தது. அதிர்ச்சியில் அவளுக்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை. மெல்ல சுதாரித்துக் கொண்டவள் திரும்பி லலிதாவைப் பார்த்தாள்.

Mithra Vintha

"அம்மா, அவன் என்னை சொன்னது கூடப் பரவாயில்லை. அப்பாவை அவன் எடுத்தெறிஞ்சுப் பேசறதை எப்படிம்மா உன்னால பாத்துக்கிட்டு சும்மா இருக்க முடியுது?"

"அவன் கேட்டானே. உங்கப்பாவாலேயே தலை நிமிர்ந்து பதில் சொல்ல முடியலையே, துளசி.. தலை கோணலா இருந்தா வால் ஏம்மா ஆடாது? இந்த லட்சணத்துல கல்யாணா வேற வரப்போறா.. இன்னும் அவ வந்து என்ன கூத்தெல்லாம் நடக்கப் போவுதோ!"

லலிதா பேசிக்கொண்டே, மீதி இருக்கும் போளிகளை அடுப்பில் போட்டு எடுக்க கிச்சனில் நுழைய, துளசி செய்வதறியாமல் நின்றாள்.

நேற்றுப் பிறந்த பாலாஜி, அப்பாவை இவ்வளவு தூரம் எதிர்த்துப் பேசுகிறான். அப்பாவும் அவனைக் கண்டிக்க முடியாமல் ஊமையாகி நிற்கிறார் என்றால் அப்பாவின் வாழ்க்கையில் ஏதோ ஒரு மர்மம் இருக்கிறது.

என்ன அது?

அப்படி எந்தத் தெரியக்கூடாத ரகசியமும் அப்பாவின் வாழ்க்கையில் இருந்துவிடக் கூடாதென்று துளசியின் மனம் இறைஞ்சியது.

## 6

முழுக்கை ஃபார்மல் ஷர்ட்டை, பான்ட்டில் டக் இன் செய்தபடி தன் ரூமில் இருந்து வெளிப்பட்ட பாலாஜி எதேச்சையாக நிமிர, அவன் முகம் இன்ஸ்டன்டாக கோபத்தில் சிவந்தது.

"ஏய்ய்..!"



பாலாஜியின் மெடிக்கல் ரெப்ரஸன்டேட்டிவ் லெதர் பேகை திறந்து வைத்து ஆராய்ந்துக் கொண்டிருந்த காயத்ரி, அவனுடைய அதட்டலில் மிரண்டு, பதறி எழுந்தாள். எழுந்த வேகத்தில் ஓடிச் சென்று கிச்சனில் இருந்த துளசியின் இடுப்பை இறுக்கமாய் கட்டிக் கொண்டாள்.

அதட்டல் குரலும், அதைத் தொடர்ந்து காயத்ரி ஓடிவந்து பயத்தில் தன்னை அணைத்துக் கொண்டவுடன், துளசிக்கு தொடிப்பொழுதில் ஹாலில் என்ன நடந்திருக்கும் என்பது புரிந்துப் போனது. குனிந்து காயத்ரியை அள்ளிக் கொண்டாள்.

"இந்த சின்ன கன்னுக்குட்டி என்ன வம்பு பண்ணிச்சு?

காயத்ரியை சமாதானப்படுத்தும் விதமாய் துளசி அவளை மெல்ல அணைத்துக் கொண்டாள்.

"அம்மா, நான் ஒண்ணுமே பண்ணலைம்மா. சும்மா மாமாவோட ஆபீஸ் பேகை திறந்து பார்த்துட்டு இருந்தேன். அவ்வளவுதான்! அதுக்குத்தான் மாமா இப்படி சத்தம் போடுது.." தன்னுடைய சொப்பு வாயை திறந்து மூடி, திறந்து மூடி அழகாய் காயத்ரி பேசியபோது துளசிக்கு சிரிப்பு வந்தது. கட்டுப்படுத்திக் கொண்டாள்.

"மாமா பேகை தொடக்கூடாதுன்னு அம்மா சொல்லியிருக்கேன்ல. அதுக்குள்ள மருந்து பாட்டில் எல்லாம் இருக்கு. மாமாவோட ஆபீஸ் பேப்பர்ஸ் எல்லாம் இருக்கு. ஏதாவது பாட்டில் உடைஞ்சு போனா, பேப்பர் காணாம போச்சுனா, மாமாவோட மிஸ் மாமாவை திட்டுவாங்கம்மா. தாத்தா பூஜை பண்ணிட்டு இருக்காரு பாரு. நீ வேணாப் போய் மணி அடியேன், பூஜைக்கு."

காயத்ரி துளசியிடம் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, கிச்சனில் இருந்து வெளிப்பட்டு, பாலாஜியை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே, உள் அறைக்குள் ஓடினாள்.

பாலாஜி தனக்கு முன்னால் பேகிலிருந்த அத்தனை பாட்டிலையும் பரப்பி வைத்திருந்தான். கையில் இருந்த ஸ்டாக்

MithraVintha

புக்கில் என்ட்ரி செய்துக் கொண்டே ஒவ்வொரு பாட்டிலாக உள்ளே வைத்தான்.

வாசலில் கார் ஒன்று ப்ரேக் அடித்து நிற்கும் சத்தம் கேட்டது. பாலாஜி நிமிர்ந்து பார்த்து, உள்புறம் திரும்பி குரல் கொடுத்தான்.

"அம்மா உன் செல்லப் பொண்ணு வந்தாச்சு..."

கிச்சனில் இருந்து துளசியும், குளித்துவிட்டு வந்திருந்த லலிதாவும் வாசலுக்கு விரைந்தனர். காரில் இருந்து மோகன் இறங்கினான்.

"வாங்க... மாப்பிள்ளை... வாங்க, வாங்க..." என்றாள் லலிதா.

"வாங்க எப்படியிருக்கீங்க?" என்றாள் துளசி மோகனைப் பார்த்து.

மோகன் அகலமாய் புன்னகைத்தான்.

"நல்லாயிருக்கேன்." என்றான். அவனுடைய உடை அவனும், கல்பனாவும் நல்ல நிலையில் இருப்பதை பறைசாற்றின. அவனுடைய நடத்தை கண்ணியத்தை பிரதிபலித்தன.

காரிலிருந்து கல்பனா இறங்கினாள். அவளுடைய காலில் அவளின் புடவை மாட்டி அவளை தடுமாற வைத்தது.

"பார்த்து... பார்த்து... ஜாக்கிரதை..." என்று மோகன் அவளின் கையை பற்றிக் கொண்டான்.

துளசிக்கு அவனுடைய செய்கை மகிழ்ச்சியை அளித்தது. கல்பனாவிற்கு அவளை புரிந்துக் கொண்டு, அவளை தங்கத் தட்டில் தாங்குகிற கணவன் கிடைத்திருக்கிறான் என்பது மன நிறைவை தந்தது.

கல்பனா மோகனின் கையை பிடித்துக் கொண்டு, வீட்டின் படியில் காலை வைத்தாள்.



துளசி கையை உயர்த்தி "ஒரே நிமிஷம் கல்பனா!" என்றாள். உள்ளே ஓடினாள். அவள் திரும்பி வந்தபோது அவள் கையில் ஆரத்தி கரைத்தத் தட்டு.

லலிதாவும் துளசியும் ஆளுக்கொரு பக்கம் ஆரத்தித் தட்டைப் பிடித்துக் கொண்டு கல்பனாவிற்கும், மோகனுக்குமாய் சேர்த்தே சுற்றினார்கள். காயத்ரிக்கு அவர்கள் இருவரும் தட்டைச் சுற்றுவது வேடிக்கையாகவும், விநோதமாகவும், புதிதாகவும் இருந்திருக்க வேண்டும்.

"அம்மா நானும், நானும் பாட்டி நானும் பாட்டி..."

லலிதா அவளை தன் பக்கம் இழுத்து, தட்டை பிடித்துக் கொள்ள செய்தாள். சுற்றி முடித்தவுடன் கல்பனாவின் நெற்றியில் திருஷ்டிப் பொட்டு வைத்தாள். அதைப் பார்த்தவுடன் காயத்ரியும் தன் பங்குக்கு தன் பிஞ்சு விரலால் கல்பனாவின் நெற்றியில் பொட்டு வைத்தாள். கல்பனா அதை ரசித்தமாதிரி தெரியவில்லை. அவளை லேசாய் நகர்த்திக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.

கல்பனாவை தொடர்ந்து மோகனும் உள்ளே வர, பூஜை அறையிலிருந்து கிருஷ்ணமூர்த்தி வெளியில் வந்தார்.

"வாங்க மாப்பிள்ளை... வாம்மா, கல்பனா... எப்படிம்மா இருக்கே...? ரெகுலரா செக்கப் போறியா?" என்றார்.

"ம்ம்ம்" கல்பனாவின் குரலில் அப்பா என்ற நெருக்கம் சற்றும் இல்லை. மூன்றாம் மனிதரிடம் பேசுவதைப் போல் அந்நியமாய் இருந்தது.

பாலாஜி சேரை கொண்டு வந்து மோகன் உட்காருவதற்கு வசதியாய் ஃபேனுக்கு நேராய் போட்டான்.

"உக்காருங்க!"

மோகன் கல்பனாவை அதில் உட்காரவைத்தான்.

"என்ன மாப்பிள்ளை நீங்க உக்காராம...? பாலாஜி அவருக்கு சேர் போடுப்பா..."

MithraVintha

கிருஷ்ணமூர்த்தி சொல்லிவிட்டு, தானே மற்றொரு சேரை தூக்கி வந்தார்.

மோகன் உட்கார்ந்தான். அவனையே பார்த்துக் கொண்டு நின்றிருந்த காயத்ரியை ஒற்றை விரலால் 'வா' என்று சைகை காட்டினான். காயத்ரி சற்று தயக்கத்துடன் அவனருகில் வந்தாள்.

"நான் யார்னு தெரியுமா?" என்றான் மோகன் அவளின் கையைப் பற்றிக் கொண்டு.

"ம்ம்... தெரியும்" என்றாள் காயத்ரி பேச்செழும்பாமல்.

"தெரியுமா! யார்னு சொல்லு பார்க்கலாம்?"

"கல்பனா சித்தப்பா!"

"அடடே! எப்படி தெரிஞ்சது உனக்கு?"

"எங்கம்மா சொல்லியிருக்காங்க. போட்டோவுல பார்த்திருக்கேன்..."

"அப்படியா!" என்றான் மோகன். பையை திறந்து ஒரு சாக்லேட் பட்டையை எடுத்து நீட்டினான்.

காயத்ரி அதைக் கண்கள் விரிய வாங்கிக் கொண்டாள்.

எல்லாவற்றையும் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தார் கிருஷ்ணமூர்த்தி.

"உங்க பிஸினெஸ்லாம் எப்படிப் போயிட்டிருக்கு, மாப்பிள்ளை?"

"பிரமாதமாப் போயிட்டிருக்கு மாமா... அமெரிக்காலேர்ந்து என் ஃப்ரெண்ட் ஒருத்தன் வேற என்னை கூப்புட்டுக் கிட்டேயிருக்கான்..."

பாலாஜி இடைமறித்தான்.

"அப்போ அமெரிக்கா போகப் போறீங்களா? அவனுடைய குரலில் ஆர்வம் கொப்பளித்தது.



அதற்குள் துளசி சமையல் அறையிலிருந்து ஒரு ட்ரேயுடன் வெளிப்பட்டாள். இரண்டு தட்டுகளில் போளியும் கொஞ்சம் காரசேவும் வைக்கப்பட்டிருந்தன. கல்பனாவிடம் ட்ரேயை நீட்டினாள்.

"எனக்கு இப்போ வேணாம்..." என்றாள் கல்பனா இறுக்கத்துடன்.

"ஏன் கல்பனா? உனக்கு போளி ரொம்ப பிடிக்குமே? கொஞ்சம் சாப்பிடேன்." கெஞ்சுகிற குரலில் துளசி தட்டை அவளிடம் நீட்டியபடி சொன்னாள்.

"இப்போ வேண்டாம்னு சொன்னேனே... காதில விழலியா?" என்றாள் கல்பனா முகத்திலடித்தாற்போல்.

"அவளுக்கு எது சாப்பிட்டாலும் வயித்தை பிரட்டிக்கிட்டு வருது. அதான் வேணாம்னு சொல்றா. அப்புறம் சாப்பிடுவா, தப்பா நெனைக்காதீங்க..." என்றான் மோகன் சமாதானப்படுத்தும் குரலில்.

"சரி, நீங்க சாப்பிடுங்க..." என்றாள் துளசி, மோகனிடம் தட்டை நீட்டினாள்.

மோகன் தட்டை வாங்கிக் கொண்டான். பாலாஜியின் பக்கம் திரும்பினான்.

"என்ன கேட்டீங்க பாலாஜி? அமெரிக்கா போகப் போறேனான்னு தானே? அமெரிக்காவை விட இந்தக் குழந்தை எனக்கு முக்கியம். கல்பனாவுக்கு குழந்தை பிறந்து ஒன்னு இரண்டு வருஷம் ஆகட்டும்... அப்புறம்தான் அமெரிக்காவும், ஆப்ரிக்காவும்..."

அவன் கல்பனாவை அன்பொழுகப் பார்த்தபடி சொன்னான்.

துளசி மறுபடி ட்ரேயில் இரண்டு டபரா டம்ளருடன் வந்தாள்.

மோகன் இரண்டு டம்ளரையும் எட்டிப் பார்த்தான்.

MithraVintha

துளசி சிரித்துக் கொண்டே "இது காஃபி. உங்களுக்கு இது ஹார்லிக்ஸ் கல்பனாவுக்கு... ஒ.கேதானே?" என்றாள்.

மோகன் சின்ன புன்னகையுடன் "டபுள் ஓ. கே" என்றான். காஃபியை வாங்கி கீழே வைத்துவிட்டு, ஹார்லிக்ஸ் டம்ளரை எடுத்துக் கொண்டான். ஹார்லிக்ஸை டபராவில் ஊற்றி ஆற்றினான். சரியான சூட்டுப் பதத்தில் கல்பனாவிடம் கொடுத்தான்.

கல்பனா தன் கணவனைப் பற்றிய பெருமிதம் பொங்க துளசியை அடிக்கண்ணால் பார்த்துக் கொண்டே ஹார்லிக்ஸை உறிஞ்சினாள். மோகன் காஃபியை குடித்துவிட்டு, எழுந்தான்.

"அப்ப நான் கிளம்பறேன்..."

"என்ன மாப்பிள்ளை, வந்ததும் வராததுமாப் புறப்படறீங்க..?"

"என்ன செய்யறது? கவர்மெண்ட் உத்யோகமா இருந்தா லீவு போடலாம். ஆனா சொந்த பிஸினெஸ் ஆச்சே. நான் இல்லாம அங்கே சக்கரம் சுத்தாது... வரட்டுமா கல்பனா... பார்த்துக்கம்மா. ஒழுங்கா வேளா வேளைக்குச் சாப்பிடு. என்ன?" என்றவன் காயத்ரிக்கு கையசைத்தான்.

"அங்கிள் கிளம்பறேன். டாட்டா சொல்லு..."

"டாட்டா" என்றாள் காயத்ரி.

"ஒரு வாய் சாப்ட்டு போகலாமே, மாப்பிள்ளை..."

லலிதா கிச்சனில் நின்றபடி கேட்டாள்.

"இல்லை, பரவாயில்லை... இன்னொரு நாள் பார்க்கலாம்... நேரமில்லை... புறப்படறேன்."

மோகனை பின் தொடர்ந்து எல்லாரும் வாசல் வரை வந்து ழியனுப்ப, காரில் ஏறிக் கொண்டான். கார் பார்வையிலிருந்து றையும் வரை கல்பனா கை அசைத்தாள்.



லலிதா கல்பனாவின் கையை பற்றிக்கொண்டு, "மாப்பிள்ளை உன்கிட்டே ரொம்பப் பிரியமா இருக்கார் இல்லை, கல்பனா?"

"பிரியமா? உயிரைக் கேட்டாலும் கொடுத்திடுவாரு..." என்று நிறுத்தி விட்டு துளசியை அடிக்கண்ணால் பார்த்தாள். பார்த்தவள் மறுபடி லலிதாவை நோக்கி திரும்பினாள். "நல்லவங்களுக்கு எல்லாமே நல்லாத்தாம்மா கெடைக்கும்!" என்றவள் துளசியை சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள். "இந்தாம்மா அழகு ராணி... ஒன் வயித்தெரிச்சல் ஜாஸ்தியாகி என் மேல கண்ணு கிண்ணு போட்டுராத..."

துளசி தனக்குள் புன்னகைத்து அங்கிருந்து விலகினாள்.

கல்பனா வந்து சேர்ந்து விட்டாள். இன்றைக்கில்லா விட்டாலும், நாளைக்கு அவள் தன்னை 'தண்டச்சோறு' சாப்பிடுவதாகச் சொன்னாலும் சொல்லுவாள்.

அந்த ஒரு வார்த்தையைக் கேட்குமுன்னர் தான் ஒரு வேலையைத் தேடிக் கொள்ள வேண்டும் என்று நினைத்தாள் துளசி.

வேலையை எங்கே சென்று தேடுவது?

அப்படி என்ன பெரிய படிப்பு படித்துவிட்டாள்.

அட! பெரிய படிப்போ, சிறிய படிப்போ, தான் படித்த பள்ளி என்று ஒன்று இருக்கிறதே. அங்கே போய்ப் பார்த்தால் என்ன?

## 7

**வா**னத்தில் சூரியன் மேற்கில் இறங்கியபடி, மற்றொரு மாலைக்கு தயாராகிக் கொண்டிருந்தான்.

MithraVintha

பரந்து விரிந்த ஆலமர கிளைகள் எங்கும் கூடுகள் கட்டிக் கொண்ட நூற்றுக்கணக்கான பறவைகளின் கூட்டமையும் நேர 'கீச், கீச்' சை கேட்பது போல, பள்ளிக்கூடம் இரைச்சலாய் இருந்தது.

பிள்ளைகள் மைதானம் எங்கும் விளையாடிக் கொண்டிருந்தனர். நொண்டி, பாண்டி, கண்ணாமூச்சி என்று குழுகுழுவாய் ஓடி ஓடி ஆட்டம் போட்டனர். கொஞ்சம் பெரிய பிள்ளைகள் வகுப்பறையில் ஆசிரியரின் நிர்பந்தத்தால் உட்கார்ந்து பாடத்தில் கவனம் செலுத்துவது போல் தங்களை காண்பித்துக் கொண்டாலும், அவர்களின் கவனம் நிச்சயம் மைதானத்தில் இருந்து வரும் ஒலியில் தான் என்பது அவர்களுக்கே தெரிந்திருக்கும். அவர்களுடைய வகுப்பு ஆசிரியருக்கும் தெரிந்திருக்கும்.

பள்ளிக்கூடத்தையும், குழந்தைகளையும் பார்த்தவுடன் துளசிக்கு அவள் மாணவியாய் துள்ளி திரிந்த காலம் நினைவிற்கு வந்தது. மறுபடியும் மாணவியாய் மாற மனம் விரும்பியது. பயங்களற்று, கவலைகள் ஏதுமற்று, பொறுப்புகளற்று மகிழ்ச்சியாய் திரிந்த பள்ளிப் பருவம் மனதில் தேனில் ஊறிய பலாச்சுளையாய் தித்தித்தது.

இந்தப் பள்ளியில் தானே அவள் படித்தாள்? அங்கு அவள் கற்றுக் கொண்ட வாழ்வியல் பாடங்கள் தான் எத்தனை யெத்தனை? பட்டுத் தெரிந்து கொண்ட அனுபவப் பாடங்கள் தான் எத்தனையெத்தனை?

துளசிக்கு தான் அழகாய் பிறந்திருக்கோம் என்பது தெரியும். தான் ஒரு பெண் என்பது போல அதுவும் ஒரு எண்ணமாய், சிந்தனையாய் இயல்பாய் இருந்தது. ஆனால், சக தோழிகளிடம் அது பாராட்டுதல்களை பெற்றுக் கொடுத்த விஷயமாய் போனது. புதிதாய் தோழிகளானவர்களிடத்தில் ஆச்சர்யத்தை உண்டுபண்ணியது. பிடிக்காத சக மாணவிகளிடத்தில் பொறாமைத் தீயை உருவாக்கியது. சமவயது ஒத்த



ஆண்பிள்ளைகளிடத்தில் மற்றும் முகந்தெரியாத ஆண்களிடத்திலும் பேசப்பட்ட விஷயமாகி, தைரியம் பெற்ற ஆண்கள் அவளுக்கு காதல் கடிதம் கொடுக்கும் அளவிற்கு கொண்டு போனது.

துளசி எவ்வளவுக் கெவ்வளவு அழகோ, அவ்வளவுக் கவ்வளவு புத்திசாலி, திறமைசாலியும் கூட. கலந்துக் கொண்ட பேச்சுப் போட்டிகளிலும், கட்டுரைப் போட்டிகளிலும், ஓவியப் போட்டிகளிலும் அவள் பெற்ற கோப்பைகளையும், பரிசுப் புத்தகங்களையும் விட அவளுக்கு வந்து சேர்ந்த காதல் கடிதங்களின் எண்ணிக்கை அதிகமாகிப் போனது அவளுக்கு நேர்ந்த முதல் சோகம்.

அந்த காதல் கடிதங்கள் எப்படியெல்லாம் அவள் வாழ்க்கையை புரட்டிப் போட்டிருக்கின்றன? சிறுவயதிலேயே எந்த விதமான சகவாச தோஷத்தாலும் கெட்டுப் போய்விடக் கூடாது உடன் பிறந்தவன் என்ற நிஜமான அக்கறையில் துளசி அவ்வப்போது கண்டித்து கண்காணித்துக் கொண்டிருந்த பாலாஜிக்கு அந்த கடிதங்கள் ஒரு துருப்பு சீட்டாயின. அவற்றையெல்லாம் அம்மாவிடம் காண்பித்து அவளைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் சொல்லி, அவளைப் பற்றிய ஒரு தப்பான அபிப்ராயம் அம்மாவுக்கு வருவதற்கு வேறு காரணம் தேவையாய் இருக்கவில்லை. தன்னை விடவும் எல்லா விதத்திலும் ஒரு படி மேலேயே இருந்த துளசியை, மட்டம் தட்டி சிறுமைப்படுத்த கல்பனாவிற்கு அந்த கடிதங்கள் ஆணிவேர் போல ஆதாரங்களாயின. தாழ்வு மனப்பான்மையால் மறுகிக்கொண்டிருந்த கல்பனா, அந்தக் கடிதங்களை, அதனால் துளசி பட்ட அவலங்களை கண்டு மகிழ்ச்சியுற்றவள், அதன் பிறகு நிமிர்ந்த தலை, துளசியை பொருட்படுத்தாத ஆணவத்திற்கு மாறிப் போனாள்.

ஆனால், அத்தனை அவலங்களிலும், சிறுமையிலும், அவளை உண்மையாய் உள்ளபடி நம்பியவர்கள் துளசியின் அப்பா கிருஷ்ணமூர்த்தியும், இந்த பள்ளியின் ஹெட்மாஸ்டர்



MithraVintha

தமிழரசனும் தான். அவர்கள் இருவரும் தான் இதுவரை அவள் ஆடிப்போகமல் இருக்க உறுதுணையாய் இருப்பவர்கள்.

தன்மீது யாரோ மோதிய வேகத்தில் நினைவுகளில் இருந்து நிஜத்திற்கு மீண்டாள் துளசி. அவளை விளையாட்டு மும்முரத்தில் மோதிய பெண் மாணவி லேசான தயக்கத்துடன் அவளைப் பார்த்து நின்றிருந்தாள்.

"ரொம்ப ஸாரி ஆன்ட்டி!" என்றாள் நிஜமான வருத்தத்துடன்.

"பரவாயில்லம்மா. போ... விளையாடு!" என்றாள் துளசி சிநேகப் புன்னகையுடன்.

துளசியின் புன்னகையைப் பார்த்தவுடன். புன்னகைத்து தோழிகளிடத்தில் கலந்தாள் அவளை மோதிய மாணவி. துளசி புன்னகை மாறாமல் ஹெட்மாஸ்டர் தமிழரசனின் அறையை நோக்கி நடந்தாள். அறையின் கதவு வரை வந்தவள். உள்ளே பேச்சுக் குரல் கேட்டு தயக்கத்துடன் நின்றாள்.

"... நாலுவரி நோட்டு முந்நூத்து ஐம்பது. டிராயிங் நோட்டு ஐநூறு. இப்ப அவசரமாத் தேவைப்படறது இதான் சார். செல்வம் கிட்ட வாங்கிட்டு வரச் சொல்லி அனுப்பிடவா சார்?"

உள்ளேயிருந்து கேட்ட பெண் குரல் மெலியதாய். வசீகரத்துடன் இருந்தது. சற்று நேர இடைவெளிக்குப் பின்னர், ஹெட்மாஸ்டர் தமிழரசனின் குரல் கேட்டது.

"சரிம்மா... செல்வம் கிட்ட சொல்லிடு. கூடவே. நாலைஞ்சு தினுசு நல்ல சாக்லேட்டா வாங்கிட்டு வரச் சொல்லும்மா. சிலேட்டுப் பலகை கூட கொஞ்சம் ஆர்டர் பண்ணு. விஜயதசமி வருது இல்லையா? புதுசா சேர்ற பசங்களுக்கு நாம கொடுக்கலாம்."

"அப்படியே வாங்கச் சொல்றேன். சார்" என்றது குரல்.

சற்றே யோசித்து விட்டு. துளசி ஹெட்மாஸ்டரின் அறைக் கதவை மெல்ல தட்டினாள். மிக லேசாய். திறந்திருந்த கதவு வழியாய் எட்டிப் பார்த்தாள்.



"உள்ளே வரலாமா சார்?"

திறந்திருந்த கதவு தட்டப்பட்டதும். தொடர்ந்து அனுமதி கேட்கப்பட்டதும் ஹெட்மாஸ்டர் தமிழரசன். கண்மூடி யோசித்துக் கொண்டிருந்தவர். கண் திறந்தார். அவருடைய டேபிளுக்கு எதிர்பக்கம் அமர்ந்து துளசிக்கு முதுகுக் காட்டிக் கொண்டிருந்த அந்தப் பெண்ணும் திரும்பினாள்.

"அடடே துளசியா! வாம்மா... வா... வா. உள்ளே வா..."

ஹெட்மாஸ்டர் தமிழரசனின் சுருக்கம் நிறைந்த முகத்தில் நிஜமான அன்பு. சந்தோஷம். கடந்த பதின்மூன்று வருடங்களில் அவர் ரொம்பவும் வயதானவராக மாறி விட்டது போல் இருந்தது துளசிக்கு. வெளிர்நிற அரைக்கைச் சட்டையும். கரை வைத்த சின்ன அங்கவஸ்திர துண்டும். தும்பைப் பூப் போன்ற வெள்ளை எட்டு முழ வேஷ்டியும் மாறவில்லை. காலையில் பள்ளிக்கு வரும்போது நெற்றியில் பூசிக் கொண்டு வரும் விநாயகர் கோயில் திருநீறு மாலை பள்ளியை விட்டு வீட்டுக்குக் கிளம்பும் வரை அழியாது. இப்பொழுது நெற்றியில் திருநீறு இருந்தது. செவ்வகக் கண்ணாடியை மீறி உள்ளே தெரிகிற கண்களில் கருணை வழியும். பாசம் பொங்கும். பள்ளிக்கு படிக்க வருகிற ஒரு மாணவ. மாணவியரும் தன்னுடைய குழந்தைகள் தாம் என்று எண்ணுகிற பரந்த மனசுக்காரர்.

"வாம்மா... உள்ளே வா... உட்காரு."

துளசி உள்ளே நுழைந்தாள். உட்கார்ந்திருந்த பெண்ணை பார்த்து சிநேகமாய் புன்னகைத்தாள். அங்கிருந்த நாற்காலி ஒன்றில் சற்றே தயக்கத்துடன் உட்கார்ந்தாள்.

"வணக்கம் சார்! எப்படியிருக்கீங்க?"

"நான் நல்லாயிருக்கேன்மா. அப்பாவை இரண்டு நாள் முன்னால கடைத்தெருவுல பார்த்தேன். நீ வந்திருக்கிறதா சொன்னாரு. சந்தோஷம்மா... ஆமா உன் குழந்தைப் பேரு என்ன?"

"காயத்ரி சார்..."

MithraVintha

"ரொம்ப நல்ல பேரும்மா. வெரிகுட். எத்தனை வயசாகுது குழந்தைக்கு?"

"இந்த விஜயதசமியில நம்ம ஸ்கூல்ல அவளை சேர்க்கலாம்னு..."

துளசி முடிக்கவில்லை. ஹெட்மாஸ்டர் தமிழரசன் ஆர்ப்பாட்டமாக ஒரு முறை சிரித்தார்.

"வெரிகுட், வெரிகுட். இந்த வாத்தியார் கிட்டத்தானே கொண்டு வந்து சேக்கப்போறே? ஒன் குழந்தைக்கென்ன... தாய் எட்டடின்னா, குட்டி பதினாறடியாத்தான் இருக்கும். நந்தினி..."

ஹெட்மாஸ்டர் 'நந்தினி' என்றவுடன், துளசியையே அத்தனை நேரமும் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பெண் திரும்பி ஹெட்மாஸ்டரைப் பார்த்தாள்.

"ஸார்..."

"இது யாருன்னே சொல்லலியே... என் ஸ்டுடண்ட் துளசின்னு பேரு... ரொம்ப பிரைட் ஸ்டூடன்ட். படிக்கிற நாள்ல ஒரு ப்ரைஸைக்கூட விட்டு வெச்சது இல்ல. துளசியால இந்த ஸ்கூலுக்கே ஒரு பெருமை..." என்றவர் துளசியிடம் திரும்பி. "துளசி... இது நந்தினிம்மா... நம்ம ஸ்கூல்ல ஒரு ஸ்டேஷனரி கடை ஆரம்பிச்சிருக்கோம். நோட்டு, பலகை, புஸ்தகம், பென்சில், பேனா எல்லாம் கொழந்தைகளுக்கு சரியான விலையில கிடைக்கற மாதிரி. அந்தக் கடையை நந்தினி தான் பார்த்துக்கிட்டிருக்கு.. நல்ல கொணம்.... அடக்கமான பொண்ணும்மா..."

துளசி நந்தினியைப் பார்த்து கைகூப்ப, பதிலுக்கு நந்தினியும் புன்னகையுடன் கை கூப்பினாள்.

நந்தினியின் குரலில் ஒரு வசீகரம் இருந்தது போல, அவளுடைய முகம் கூட ஈர்ப்பு சக்தி உடையதாக இருந்தது. குறிப்பாக அவள் கண்கள். அவளுடைய கண்களை ஒரு முறை நேருக்கு நேராய் பார்த்தால் அந்தக் கண்களின் காந்தச் சக்தி



பார்ப்பவரை அப்படியே இழுத்து தன்பால் வைத்துக் கொண்டது. நந்தினியின் மேல் விழுந்த பார்வையை மீட்க இயலாமல் தவித்தாள் துளசி. என்னவோ அவளிடம் வித்யாசமாயிருந்தது. கண்களின் வசீகரத்தையும் மீறி ஒரு தாயின் கருணையை பார்த்தாள் துளசி. பார்ப்பவர் எவரையும் குழந்தைப் போல பாவித்து பார்வையாலேயே அன்பை வாரி வழங்கி ஆறுதல் சொல்லும் முற்றும் உணர்ந்த ஞானியின் கண்களை ஒத்திருந்தது நந்தினியின் கண்கள்.

நந்தினி கை நீட்டி, துளசியின் கையைப் பற்றினாள். இரு கைகளுக்குள் வைத்து மெல்ல அழுத்தினாள். அழுத்தத்தில் அன்பு இருந்தது. துளசிக்கு அவள் செய்கை புதிதாக, புதிராக இருந்தாலும் கையை அவளிடமிருந்து விலக்கிக் கொள்ள தோன்றவில்லை. புதிதாக பார்ப்பவரிடத்திலும் இந்த அன்பு எப்படி சாத்தியமாயிற்று இவளுக்கு? துளசிக்கு நந்தினியின் மீது மதிப்பு கூடியது. அவளை மிகவும் பிடித்தும் போனது.

"எங்க ஹெட்மாஸ்டர் சார்கிட்டயே பேர் வாங்கணும்னா நீ ரொம்பக் கெட்டிக்காரியாத் தான் இருக்கணும்..." என்றாள் நந்தினி வார்த்தைகளுக்கே வலிக்குமோ போல்.

"ஆமாமா... நீ சர்ட்டிஃபிகேட் கொடுக்கலையேன்னுதான் துளசி ஏங்கிப் போயிருக்கு பாரு..ஸ்டேஷனரி ஸ்டாக் ஃபைலை எடுத்துக் கொடுக்கச் சொன்னேனே அதை எடும்மா..." என்றார் ஹெட்மாஸ்டர் சிரிப்பாய்.

நந்தினி துளசியின் கையை விடுவித்து விட்டு அதே அறையில் இருக்கும் மர பீரோ நோக்கி சென்றாள். அவளது நீண்ட பின்னல் பெண்டுலம் போல் ஆடியது.

"சொல்லும்மா....." என்றார் ஹெட்மாஸ்டர் தமிழரசன் துளசியைப் பார்த்து.

துளசி சட்டென்று ஹெட்மாஸ்டர் தமிழரசனைப் பார்த்துத் திரும்பினாள்.

MithraVintha

"குழந்தையை ஸ்கூல்ல சேர்க்கணும்னு கேக்கவா இவ்வளவு தூரம் வந்தே! நீ பாட்டுக்கு குழந்தையை கூட்டிக்கிட்டு ரைட்ராயலா விஜயதசமி அன்னிக்கு ஸ்கூலுக்கு வந்திருந்தேன்னா, நான் அட்மிஷன் தந்துட்டுப் போறேன்..."

துளசி சற்றே தயங்கினாள்.

துளசியின் தயக்கத்தை ஹெட்மாஸ்டர் தமிழரசன் பார்த்தார்.

"என்னம்மா சொல்லு... என்ன விஷயம்னு எங்கிட்ட சொல்லு. எதுக்கும்மா இவ்வளவு யோசனை பண்றே? இன்னும் வேற யாருக்காவது அட்மிஷனா? இல்ல வேற ஏதாவதா?"

ஸ்டேஷனரி ஃபைலை எடுத்து வந்த நந்தினி துளசியைப் பார்த்தாள். அவள் கண்களில் துளசி என்ன சொல்லப் போகிறாள் என்பதைக் கேட்கும் ஆர்வம்.

துளசி சட்டென தலையை குனிந்தாள்.

"இந்த ஸ்கூல்ல எனக்கு... எனக்கு ஒரு டீச்சர் வேலை கெடைக்குமா சார்?" அவளுக்கே கேட்காத குரலில் துளசி பெருத்த பிரயத்தனத்துடன் சொன்னாள்.

ஹெட்மாஸ்டர் தமிழரசன் துளசியை சற்றுப் பரிவுடன் பார்த்தார். கடகடவென்று 'அட பைத்தியமே' என்ற பாவனையில் சிரித்தார்.

"இதைக் கேக்கவாம்மா இவ்வளவு யோசனை பண்ணே? உன்னை மாதிரி டீச்சரெல்லாம் கெடைச்சா இந்த ஸ்கூலோட பேரு எங்கேயோ போய்டாதா? நாளு நட்சத்திரமெல்லாம் கூடப் பார்க்க வேணாம். நாளைக்கே வந்து சேர்ந்துடு... மொத்த சின்ன கிளாஸெல்லாம் எடு... அப்புறம் போகப் போக பெரிய கிளாஸெல்லாம் எடுக்கலாம். என்ன?"

துளசி அவரை நிமிர்ந்து பார்த்தாள். கண்களில் நீர் பனிக்க, அவரைப் பார்த்து கை கூப்பினாள்.

"ரொம்ப தாங்க்ஸ் ஸார்..."



"இதுக்கெல்லாம் போய் எதுக்கும்மா தாங்க்ஸ்..? என்னால் முடிஞ்சது... நான் செய்யறேன்..."

துளசி முகத்தில் புன்னகை. புன்னகை நந்தினியை தொற்றிக் கொண்டது.

அந்தப் பள்ளியில் வேலைக்குச் சேர்ந்தால் துளசியின் வாழ்க்கையே தடம் புரண்டுப் போய்விடும் என்பது அப்போதே துளசிக்குத் தெரிந்திருந்தால் அவள் அந்தப் பள்ளியில் வேலைக்கே சேர்ந்திருக்க மாட்டாள்.

## 8

துளசி வாசலில் செருப்பைக் கழற்றிவிட்டு உள்ளே நுழைந்தாள். வீடு யாரும் இல்லாததால் மிகவும் அமைதியாய் இருந்தது.

கிருஷ்ணமூர்த்தி சாய்வு நாற்காலியில் சாய்ந்து, இருகைகளையும் தலைக்குப் பின்னால் கோர்த்துக் கொண்டு, கண் மூடியிருந்தார். அவர் தூங்கவில்லை என்பது அவரின் அசைவுகளில் இருந்து தெரிந்தது. கொஞ்சம் தள்ளி லலிதா ஒரு காலை மடக்கி, மற்றொரு காலை நீட்டி உட்கார்ந்து, ராத்திரி டிஃபனுக்கு சப்பாத்திகளை இட்டுக் கொண்டிருந்தாள்.

துளசி கைப்பையை மேஜை மீது வைத்தாள். வாட்சையும் கழற்றி வைத்தாள். காயத்ரி பக்கத்தில் தான் எங்காவது விளையாடப் போயிருக்கும். கல்பனா எங்கே?

துளசி ஒன்றும் கேட்காமல் நேராய் பாத்ருமிற்குள் நுழைந்தாள். கையையும், காலையும் சுத்தம் செய்துக் கொண்டு, முகத்தையும் சோப்பு போட்டு கழுவிக் கொண்டாள்.

MithraVintha

கொஞ்சம் காஃபி குடித்தால் நன்றாயிருக்கும் போல் இருந்தது துளசிக்கு. கிச்சனுக்குள் நுழைந்தாள். பாத்திரத்தில் இருந்து கொஞ்சம் பாலை சிறிய பாத்திரத்தில் ஊற்றி அடுப்பின் மீது வைத்தாள். அடுப்பை பற்ற வைப்பதற்கு முன்பு ஹால் பக்கம் திரும்பினாள்.

"அப்பா. தலைவலியா? சீக்கிரம் வந்துட்டீங்க? உங்களுக்கும் சேர்த்து காஃபி கலக்கட்டுமா?" என்றாள் கிச்சனுக்குள் இருந்தபடியே.

"வேண்டாம் துளசி, அவருக்கு இப்பதான் கலந்துக் கொடுத்தேன் நீ. உனக்கு மட்டும் கலந்துக்க..." என்றாள் லலிதா.

பாலை காய்ச்சி காஃபி கலந்துக் கொண்டு, உறிஞ்சியபடி ஹாலுக்கு வந்தாள். லலிதா பக்கத்தில் அமர்ந்தாள்.

"நகரும்மா... நான் செய்யறேன்..."

"வேண்டாம்... இப்பதான் வெளியில போய்ட்டு வந்திருக்கே.... உனக்கும் அலுப்பாயிருக்கும்... நானே முடிச்சுடறேன். இன்னும் கொஞ்சம் தானே!"

"ஒரு அலுப்பும் இல்லை.... குடும்மா...." என்று துளசி வலுக்கட்டாயமாக லலிதாவிடம் இருந்து சப்பாத்திக் குழவியை வாங்கிக் கொண்டாள். கல்லை தன் பக்கம் நகர்த்திக் கொண்டாள்.

"கல்பனா எங்கம்மா காணோம்?" என்றாள் மெதுவாக.

"ஏதோ புதுப்படமாம். பக்கத்து வீட்ல காஸெட்ல போடறாங்க. இவ அல்பம் மாதிரி போய் பார்க்கணும்னு பக்கத்து வீட்டுக்குத் தான் போயிருக்கா. கூடவே 'நானும் நானும்'னு காயத்ரியும் போயிருக்கு..."

லலிதா மாவை பிய்த்து பிய்த்து சிறு உருண்டைகளாக்கிக் கொண்டே பேசினாள்.

"ஆமா... நீ எங்கே போய்ட்டு வரே துளசி?"





துளசி சற்று தயக்கத்துடன் மௌனம் சாதித்தாள்.

"நான்... நான் வேலைல சேர்ந்திருக்கேம்மா..."

லலிதா உருட்டுவதை நிறுத்தி விட்டு துளசிய நிமிர்ந்து பார்த்தாள். கிருஷ்ணமூர்த்தி கண்களை திறந்து நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"எங்க?" என்றாள் லலிதா. மறுபடியும் உருட்டத் தொடங்கினாள்.

துளசி மிச்சமிருந்த காஃபியை வாயில் சரித்துக் கொண்டாள். ஒரு உருண்டையை எடுத்து மேல் மாவில் புரட்டி, கல்லில் வைத்தாள். ஒரே சீராக எல்லா பக்கங்களிலும் இடத் தொடங்கினாள்.

"நான் முன்ன படிச்ச ஸ்கூல்ல டீச்சரா சேர்ந்திருக்கேன்."

"உன்னை யாராவது வேலைக்குப் போகச் சொன்னாங்களா இந்த வீட்ல?"

"இல்லம்மா. யாரும் எதுவும் சொல்லல. ஆனா, வேலை செய்யாம சும்மா இருக்க எனக்குப் பிடிக்கலேம்மா. நானும் காயத்ரியும் இந்த வீட்டுக்குப் பாரமா இருக்கோமோன்னு தோணிச்சிம்மா. நான் வாங்கற சொற்ப சம்பளம் ஏதோ ஒரு விதத்திலாவது வீட்டுக்கு ஒத்தாசையா இருக்கும்னு தான்..."

லலிதா, துளசியை ஒரு முறை ஆழமாகப் பார்த்தாள்.

"ஹூம்... நான் சொல்றதுக்கு என்ன இருக்கு? ஏழை சொல்லு என்னிக்குமே அம்பலம் ஏறாது... தோளுக்கு மேல வளந்துட்டா தோழன்பாங்க... இந்த வீட்ல அவன் எஜமானனா இருக்கான். எஜமானனா இருந்தவர் வாய் இருந்தும் ஊமையாப் போயிட்டார். ஒன்னை வேலைக்குப் போகவேணாம்னு நான் சொன்னாலும் நீ கேட்கப்போறதில்லை. என் சொல்லுக்கு நயா பைசா மதிப்பு இல்ல..."

லலிதாவின் பெருமூச்சு துளசிக்கு சங்கடத்தை தந்தது.

MithraVintha

"ஏம்மா இப்படியெல்லாம் பேசறே? என்னிக்கு நான் உன் பேச்சை எதிர்த்து பேசியிருக்கேன். என் படிப்பு, கல்யாணம் எல்லாமே நீ சொன்னபடி தாம்மா நடந்தது... அம்மா ப்ளீஸ்மா... நான் இந்த வீட்ல மனச சங்கடப்படாம இருக்கணும்னா இந்த வேலைக்கு நான் போயே ஆகணும்மா... இதுக்கு நீ ஒத்துக்கிட்டுதாம்மா ஆகணும்..."

"அம்மா துளசி, வேலைக்குப் போறேன்னு சொல்றே, சரி... ஆனா நீ படிச்ச ஸ்கூலுக்கு டீச்சர் வேலைக்கு போறேன்ங்கிறியே..." என்று இடைமறித்தார். இதுவரை பேசாமல் கேட்டுக் கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தி.

"ஏன்ப்பா... நல்ல ஸ்கூல் தானேப்பா?"

"அதில்லம்மா... அந்த ஸ்கூல்லதான் உனக்கு கூடப் படிச்ச பசங்கல்லாம் லவ் லெட்டர் கொடுத்தானுங்க...? உன் படிப்பைப் பாதில நிறுத்தி... வேற ஸ்கூலுக்குப் போயி... கல்யாணம், அது, இதுன்னு என்னென்னவோ அவசர அவசரமா நடந்துடிச்சேம்மா... எல்லாத்துக்கும் காரணம் அந்த பள்ளிக்கூடம்தானே... திருப்பியும், அங்கயே போய் வேலைக்கு சேர்ரேங்கறியே... வேணாம்மா... நீ கட்டாயம் வேலைக்குப் போய்த்தான் ஆகணும்னா வேற ஏதாவது ஒரு நல்ல ஆபீஸ்ல சொல்லி நானே உனக்கு ஒரு வேலை வாங்கித்தரம்மா..."

"தேவையில்லப்பா... ஹெட்மாஸ்டர் தமிழரசனைப் பத்தி உங்களுக்கு தெரியாதா? தங்கமானவர். என்னோட வாழ்க்கை இப்படி ஆனதுக்கு நான் படிச்ச ஸ்கூலை எதுக்குப்பா குத்தம் சொல்லணும்...?

"ஏன் துளசி, அப்பா தான் ஏதாவது ஒரு ஆபீஸ்ல வேலை வாங்கி தரேன்னு சொல்றாரே. அதை விட்டுட்டு ஏன் இந்த டீச்சர் வேலையெல்லாம்? நாள் பூரா நாற்காலியில் ஃபேனுக்குக் கீழே உட்கார்ந்து உடம்பு கோணாம வேலை செய்யறத விட்டுட்டு காலையிலர்ந்து சாயங்காலம் வரைக்கும் 'வறட்வறட்'டுனு தொண்டை தண்ணி வத்தி தவளை மாதிரி கத்தணும், பசங்களை விடாம மேய்க்கணும்... எதுக்கும்மா இந்த தலையெழுத்து?"



"அப்படியெல்லாம் நான் நினைக்கலம்மா... எனக்குக் கொழந்தைங்களோட இருக்கறது புடிச்சிருக்கும்மா... எனக்கு ஆபீஸ் வேலைங்கறதை விட இந்த டீச்சர் வேலை ஏதோ ஒரு சந்தோஷமா ஒண்ணுதாம்மா... உயிரில்லாத ஃபைலை பார்த்து அக்கவுண்ட்ஸ் எழுதி கணக்கை நேர் பண்றதை விட, உயிர் ஜீவனோட இருக்கிற பூம்பிஞ்சு குழந்தைகளை கண்காணிச்சு, அவங்களுக்கு ஒரு நல்ல ஆசிரியையா வாழ்க்கையை சரியானபடி அமைச்சுக்க நல்ல வழி காட்டி நேர்படுத்தறதுல ஒரு சுகம் இருக்கு, நிம்மதி இருக்கு, திருப்தி இருக்குன்னு நாம் நினைக்கிறேம்மா... என்னோட லைஃப் இத்தனை நாள் உபயோகமில்லாததா உணர்ந்துகிட்டுருக்கேன். அட்லீஸ்ட், இந்த டீச்சர் வேலை என்னோட உணர்வையும் திருப்தி படுத்தும்னு நம்பறேம்மா. ப்ளீஸ், இதை மட்டும் பெரிசு பண்ணாம, என் இஷ்டத்துக்கு விட்டுடுங்கம்மா..."

கிருஷ்ணமூர்த்தி துளசியை ஒரு முறை இயலாமல் பார்த்தார். ஏதோ சொல்ல வாயெடுத்தவர் பின் எதுவும் சொல்லாமல் லலிதாவை ஓரக்கண்ணால் பார்த்தார்.

அவரையே பார்த்துக் கொண்டிருந்த லலிதா, துளசி அறியாமல் ஒரு முறை கழுத்தை நொடித்தாள். அதற்கு மேல் அங்கு இருக்க பிடிக்காமல் கிருஷ்ணமூர்த்தி எழுந்து வெளியே போனார்.

துளசி மேற்கொண்டு எதுவும் பேசாமல் மிச்சம் இருக்கும் சப்பாத்திகளை வேகமாக இடத் துவங்க, லலிதா இட்டிருந்தவைகளை எடுத்துக் கொண்டு கிச்சனுக்குள் போனாள்.

எல்லோர் நன்மையையும் உத்தேசித்தே கிருஷ்ணமூர்த்தி, துளசியை அவள் படித்த பள்ளியில் வேலைக்குச் சேர வேண்டாம் என்று சொல்கிறார் என்பதை பேதைப் பெண் துளசி அப்போது அறிந்து கொள்ளவில்லை. அதை மட்டும் அவள் அறிந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்.

MithraVintha

# 9

**வீ**ட்டின் கொல்லைப்பக்கத்தில் கிணற்றடியில் துளசி உட்கார்ந்திருந்தாள். லலிதா காயத்ரியின் உடம்பு முழுக்க எண்ணெய் தடவி விட்டு உருவிவிட்டுக் கொண்டு இருந்தாள். காயத்ரியின் தலையிலும் எண்ணெய் தேய்க்கப்பட்டிருந்தது. எண்ணெய் தேய்த்து முடித்தவுடன் வரப்போகும் சீயக்காய் அபாயத்தை நினைத்து காயத்ரி செல்லமாய் சிணுங்கிக் கொண்டிருந்தாள்.

துளசிக்கு காலை நேரம் என்பது மிகவும் பிடித்தமான ஒன்று. அன்றைய தினம் மிக ரம்மியமாய் விடிந்திருந்தது. காலை நேரத்தின் புதிய காற்றின் குளிர்ச்சி நுரையீரல் எங்கும் பரவியது. முதல் நாள் இரவோடு இரவாக சத்தம் போடாமல் பூத்திருந்த ரோஜா, நித்தியமல்லி, பவளமல்லி, இன்னும் பெயர் தெரியா பூக்களின் வாசம் காற்றில் கலந்து இருந்ததால் நுரையீரலிலும் பூவின் வாசம் வீசியது.

முதல் நாளின் சுவடே இல்லாமல் ஒவ்வொரு நாளும் புதிதாய் விடிவது போல் தான் வாழ்க்கையும். விடியல் என்பது நேற்றைய தவறுகளை திருத்திக் கொண்டு, இன்றைய நடவடிக்கைகளில் இன்னும் மெருகேற்றி, நாளைய கனவுகளையும், எதிர்பார்ப்புகளையும் ஒருங்கிணைத்துக் கொள்ள இயற்கை நமக்கு தினமும் தந்துக் கொண்டிருக்கும் பொன்னான வாய்ப்பு. இல்லை சந்தர்ப்பம்.

வாய்ப்பு எல்லார்க்கும் சரிசமமாகத் தான் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அதைப் பயன்படுத்திக் கொள்வதில் தான் மனிதனுக்கு மனிதன் எவ்வளவு வேறு படுகிறான்? அது,



அந்த வாய்ப்பு, எழுத்தாளனுக்கு கதையாகவும், கவிஞனுக்கு கவிதையாகவும், ஓவியனுக்கு ஓவியமாகவும், கலைஞனுக்கு பாடலாகவும், ஆடலாகவும், இசையாகவும் மாறிப்போகிறது. உழைப்பில் நம்பிக்கையுள்ள ஊக்கமுடையவனுக்கு சாதனையாகவும், பணத்தையே துரத்திக் கொண்டிருப்பவனுக்கு கரன்சியாகவும், சோம்பேறிக்கு விதி சபித்த இன்னொரு பயனற்ற நாளாகவும், முற்றும் துறந்து, தன்நிலை அறிந்தவர்க்கு இறைத்தன்மையை உணர எடுத்துவைக்கப்பட்ட மற்றும் ஒரு படியாகவும் வாயப்பு அமைகிறது.

வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தாவிட்டால் வாழ்க்கையே தேடுதலாகிவிடும். மேல்தட்டு மக்கள் பணத்திற்கும் அப்பால் தேடிக் கொண்டிருக்க, சராசரி மனிதன் தினப்படி கஞ்சிக்கே வாழ்க்கையை தொலைத்து விடுகிறான். நவநாகரீக பெண்கள் டிஸ்கொத்தே, கிளப், ஃபேஷன், ஃப்யூஷன் என்று சுற்றிக் கொண்டிருக்க , அபலைப் பெண்கள் உப்பு, புளி என தினப்படி தேவைக்கே அன்றாடங்காய்ச்சியாக வாழுகின்ற அவலங்கள்.

புதிதாய் திருமணமானவர்களுக்கு வாழ்க்கை இன்பத் தேடல். வயதான தம்பதிகளுக்கு பெற்ற மகனையோ, மகளையோ அண்டி வாழ்ந்தாக வேண்டிய வாழ்க்கை துன்பக் கடல். மக்களின் நாடியை பிடித்து, அதற்கேற்ப பணம் பண்ணும், பதவி வெறி பிடித்த அரசியல்வாதிகள் - அவர்களின் பலவீனத்தையே பணமாக்கும், பெருகிவிட்ட தாதாக்கள்.

"துளசீசீ..."

சட்டென்று திரும்பினாள் துளசி. அப்போது தான் அவளுக்கு இத்தனை நேரமும் தான் சிந்தனை வயப்பட்டிருந்தது புரிந்தது. லலிதா தான் கூப்பிட்டிருந்தாள். துளசிக்கு வெட்கத்தில் சிரிப்பு வந்தது.

"என்னம்மா, பாட்டி எத்தனை நேரமா கூப்பிட்டுட்டே இருக்காங்க... என்னம்மா யோசனை?" என்றாள் காயத்ரி பெரிய மனித தோரணையுடன்.

MithraVintha

"என்னம்மா? எதுக்கு கூப்பிட்டீங்க?"

"உன்னை கூப்பிட்ட நேரத்துல நானே அந்த வேலையை செஞ்சிருக்கலாம் போலிருக்கு..." என்று சலித்துக் கொண்ட லலிதா, "கல்பனா குளிச்சிட்டிருக்கா இப்ப வந்திடுவா.. கொஞ்சம் கரியை பத்தவச்சு சாம்பிராணிக்கு ஏற்பாடு செய்யேன்..."

சீயக்காய் தலையுடன் ஒரு கண்ணை திறந்து துளசியைப் பார்த்து வாய் பொத்தி சிரித்த காயத்ரியைப் பார்த்து செல்லமாய் ஒற்றை விரலைக் காட்டி எச்சரித்து சிரித்த படி உள்ளே போனாள் துளசி. பாட்டியிடம் அம்மா திட்டு வாங்குகிறாளே என்று அவளுக்கு சிரிப்பு.

திரும்பி வரும்போது துளசி கையில் ஒரு தூபக்கால். அதில் கரிபோடப்பட்டு மண்ணெண்ணெய் விட்டு தீ மூட்டியிருந்தாள். துளசி மற்றொரு கையில் ஒரு பனை ஓலை விசிறி. விசிறியால் விசிறிக் கொண்டே வர, நெருப்பு இப்படியும், அப்படியுமாய் ஆடியது.

"... டீச்சரே இப்படி சொப்பனம் கண்டுட்டு இருந்தா, புள்ளைங்க கதி என்னாவறது? நீயெல்லாம் டீச்சராப் போய் புள்ளைங்களுக்கு என்னத்த சொல்லிக் கொடுக்கப் போறியோ, போ...!" லலிதா, காயத்ரியின் தலையை தேய்த்துக் கொண்டே அங்கலாய்த்துக் கொண்டிருந்தாள்.

விடாமல் விசிறியதில் கரி நன்றாக நெருப்பு பிடித்துக் கொள்ள, துளசி தூபக்காலை ஓரமாக வைத்துவிட்டு, சாம்பிராணியை பொடி செய்தாள்.

"அம்மா..."

கனத்த குரல் கேட்டு லலிதாவும், துளசியும் நிமிர்ந்தார்கள்.

கரியின் நிறத்தில், மரம் ஏறும் ஒருவன் தலையில் முண்டாசுடன், இடுப்பில் செருகிய அரிவாளுடன், கையில் இளநீர்க் கொத்துடன் நின்றிருந்தான்.

"என்னய்யா?" என்றாள் லலிதா.



"எளநி கொண்டு வந்திருக்கேம்மா..."

"யார் கேட்டாங்க?"

"ஐயாதான்மா. சின்னம்மாவுக்குக் கொடுக்கணும்னு தண்ணிக்காயா பார்த்து பறிச்சி எடுத்துட்டு வரச் சொன்னாரு..."

"சரி... சரி... அப்படி வெச்சிட்டுப் போ..."

மரம் ஏறுபவன் இளநீர்க் கொத்தை சுவற்றோரமாக வைத்தான்.

"புள்ளை பொறந்தவுடனே எனக்கு ஒரு வேட்டி, சட்டை மறந்துடாதீங்கம்மாவ்..." என்றான் சற்றே இழுத்தாற் போல.

"அட அதுக்கு இன்னும் நாள் இருக்குப்பா...! அப்புறமா வா..." என்றாள் லலிதா அவளிடம்.

அவன் தலையை சொறிந்துக் கொண்டே அங்கிருந்து விலகினான்.

"ஆலமரத்தை சுத்திட்டு அடிவயித்த தொட்டுப் பார்த்தாளாம்... எளநியை கொண்டு வந்து கொடுத்தவுடனே, வேட்டி சட்டைக்கு அடி போடறானுங்க... ம்ஹூம்..." லலிதாவின் வாயில் மரம் ஏறுபவன் மாட்டிக் கொண்டான்.

வீட்டின் உள்ளேயிருந்து, பாலாஜி இடுப்பில் லுங்கியுடனும், தோளில் ஒரு துண்டுடனும், வாயில் நுரை பொங்க தேய்த்த பிரஷ்ஷுடனும் கிணற்றடிக்கு வந்தான்.

வந்தவன், இளநீரைப் பார்த்தான். ஒரு பக்கம் ஆவி மேலேற கொதித்துக் கொண்டிருக்கும் வெந்நீர் ஸ்டவ்வைப் பார்த்தான். லலிதா குழந்தை காயத்ரியைக் குளிப்பாட்டுவதைப் பார்த்தான். துளசி சாம்பிராணியை தூளாக்கி, தூபக்காலுக்கு போட தயார் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தான்.

நடந்து, மூடியிருந்த பாத்ரூம் கதவை நெருங்கித் தள்ளினான். கதவு உள்பக்கம் தாழிடப்பட்டிருந்தது. கதவை தடதடவெனத் தட்டினான்.

MithraVintha

"உள்ளே யாரு? யாருன்னு கேட்டேன்..." அவன் குரல் பொறுமையை தொலைத்திருந்தது.

"நான்தாண்டா... என்ன சத்தம் போடறே... தலைக்குக் குளிச்சிட்டிருக்கேன். முடிச்சிட்டேன்.. இரு வரேன்..." என்றாள் கல்பனா உள்ளிருந்துக் கொண்டு.

"கல்பனா இப்ப வந்திடுவா பாலாஜி..." என்றாள் லலிதா பதறிப் போய்.

"இது என்ன வீடா இல்ல சத்திரமா? இப்படி சந்தைல கூறு கட்டி உக்காந்திருக்கிற மாதிரி அங்கங்க உக்காந்து எடத்தை அடைச்சுக்கிட்டிருந்தா, நான் எப்ப குளிக்கறது? எப்ப வேலைக்குப் போய் ஒழியறது? வீட்டை விட்டுட்டு பேசாம ஒரு லாட்ஜுக்குப் போய் ரூம் எடுத்துட வேண்டியதுதான்..."

பாலாஜி சத்தம் போட்டு பேசியதில், துளசி திகைத்துப் போனாள். குழந்தையின் தலையை துண்டால் துவட்டிக் கொண்டிருந்த லலிதா விக்கித்துப் போய் பாலாஜியைப் பார்த்தாள்.

பாலாஜி அவர்கள் இருவரையும் கவனிக்காமல், மறுபடியும் ஒருமுறை கதவைத் தட்டக் கையை ஓங்கும் நேரம், பாத்ரூம் கதவு கீய்ங்க் என்ற முனகலுடன் திறந்தது.

ஈரம் சொட்டும் தலைமுடியுடன் பாத்ரூமில் இருந்து கல்பனா வெளியே வந்தாள். அவள் முகத்தில் நரகலை மிதித்தது போல ஒரு பாவனை.

"சேச்சே... பாத்ரூமா இது? பாயை விரிச்சிப் போட்ட மாதிரி பாசி. எங்க காலை வச்சாலும் வழுக்குது. வீட்ல இரண்டு பொம்பளைங்க இருக்கீங்கன்னு பேரு.. இந்த ஓட்டை பாத்ருமை வச்சிக்கிட்டு நொள்ளைப் பேச்சு வேற... எங்க வீட்ல பாத்ரூம் இப்படியா இருக்கும்? கண்ணாடி மாதிரி கீழே பார்த்தா பாத்தவங்க முகம் தெரியும். ஒரு கொழாயைத் தொறந்தா வென்னீரு.. இன்னொரு கொழாயைத் தொறந்தா..."



"ம்ம்ம்.. பன்னீரு..!" கல்பனாவை மேலே பேசவிடாமல் இடைமறித்து பாலாஜி நக்கலாய் சொன்னான். "ஓட்டை பாத்ரூம்தான் இங்கன்னு தெரியும் தானே? அப்புறம் ஏன் இங்க வரணுமாம்?"

"ஆமா... நான்தான் சீராட்றதுக்கு ஆள் இல்லையேன்னு ஏங்கிப் போய் இங்க வந்தேன். அம்மா தான் லெட்டர் மேல லெட்டராகப் போட்டு என்னை வச்சித் தாங்கறேன்னு வரச் சொன்னாங்க..."

திரும்பி லலிதாவின் பக்கம் கையை நீட்டியவள், மேலே தொடர்ந்தாள்.

"இப்பப்பாரு.... மொதப் பேத்திகிட்ட கொஞ்சிக் குலாவறதுக்கே பாவம், அவங்களுக்கு நேரம் சரியா இருக்கு. அம்மா.. இப்ப நீ வந்து இந்த சத்திரத்தில என் எடம் எதுன்னு காட்டப் போறியா இல்லியா? நான் உடம்புல புடவையைச் சுத்திக்கணும்."

பாலாஜி பாத்ருமில் நுழைந்து 'படார்' என்று கதவை அறைந்து சாத்திக் கொண்டான்.

"இப்படியே ஈரத்தொப்பலா இன்னுங் கொஞ்ச நேரம் இருந்தா நான் குளிர் ஜுரம் வந்து செத்தேப் போயிடுவேன்..." கல்பனாவின் வாய் ஓயவில்லை.

லலிதா, துவட்டிக் கொண்டிருந்த துண்டை, அப்படியே காயத்ரியின் தலையிலேயே விட்டு விட்டு கல்பனாவை அழைத்துக் கொண்டு உள்ளே போனாள்.

"அம்மா... குளிருதும்மா.. அம்மா... குளிருது..."

காயத்ரியின் பற்கள் தந்தியடித்தன. துளசி குழந்தையை நெருங்கி துண்டை எடுத்து அவளுடைய உடம்பில் சுத்தினாள்.

"உள்ளே வந்து நீயே ஏதாவது ஒரு டிரெஸ்ஸை எடுத்துப் போட்டுக்க கண்ணு" என்றாள். கிணற்றடியில் வைத்திருந்த தூபக்காலையும், சாம்பிராணியையும் எடுத்துக் கொண்டு,



Mithra Vintha

நெருப்பை ஃபூ ஃபூ என்று ஊதிக் கொண்டே வீட்டுக்குள் போனான்.

காயத்ரி கட்டிவிடப்பட்ட துண்டுடன் துளசி போவதையே பார்த்துக் கொண்டு நின்றாள். அந்தக் குழந்தை உள்ளத்தில் அந்த நேரத்தில் என்ன சிந்தனை ஓடியதோ, அதைப் படைத்த ஆண்டவனுக்குத்தான் தெரியும்!

## 10

பள்ளிக்கூடம் காலை நேரப் பரபரப்பில் இருந்தது.

'பளிச்'சென்று சீருடை அணிந்துக் கொண்டு மாணவர்களும், மாணவிகளும் பள்ளிக்கூடத்தை நோக்கி வந்துக் கொண்டிருந்தார்கள். இரண்டாம், மூன்றாம் வகுப்பு மாணவ மாணவிகள் மைதானத்தில் ஓடியாடிக் கொண்டிருக்க, கொஞ்சம் பெரிய வகுப்பான ஐந்தாம், ஆறாம் வகுப்பு பிள்ளைகள் ஒன்றையொன்று சீண்டிக்கொண்டும், கைப்பிடித்த படி ஆடிக் கொண்டும், பேச்சும், சிரிப்புமாய் மைதானம் எங்கும் நிறைந்திருந்தார்கள். சில வகுப்பறை வாசல்கள் கொஞ்சம் பெரிய வகுப்பு பிள்ளைகள் முன்தினம் நடத்திய பாடங்களில் உள்ள சந்தேகங்களைப் பற்றி விவாதித்துக் கொண்டும், அன்றைய வகுப்புத் தேர்வுக்கான பாடத்தின் பக்கங்களை அவசரமாப் புரட்டிக் கொண்டுமிருந்தனர்.

பள்ளிக்கூட ஆயா, ஹெட்மாஸ்டர் தமிழரசனின் அறையை கூட்டி பெருக்கி, சுத்தம் செய்து, ரூமில் இருந்த பானையை நன்றாக கழுவி தண்ணீர் பிடித்து வைத்தாள். ப்யூன், ஹெட்மாஸ்டர் பார்க்க வேண்டிய ஃபைல்களையும், கடிதங்களையும் அவர் டேபிளின் மேல் கொண்டு போய் வைத்தான்.





ஸ்டாஃப் ரூமில் ஆசிரியைகள் அன்றைய தினத்திற்கு தங்களை தயார் படுத்திக் கொண்டிருந்தனர். சிலர் நடதத வேண்டிய பாடத்திற்கான குறிப்புகளை தங்களுடைய புத்தகத்தில் குறித்துக் கொண்டிருந்தனர். ஒரு ஆசிரியை மாணவர்களின் கட்டுரை நோட்டுக்களை படித்து பார்த்து கையெழுத்து போட்டுக் கொண்டிருக்க, மற்றொரு ஆசிரியை முன் தினம் நடந்த சிறு தேர்வு விடைத்தாள்களை திருத்திக் கொண்டிருந்தாள்.

பள்ளிக் கூடத்தின் கேட்டுக்கு பக்கத்திலேயே சின்னதாய் இடம் ஒதுக்கப்பட்டு, ஸ்டேஷனரி கடை வைக்கப்பட்டிருந்தது. பள்ளிக்கூடம் திறந்த நேரத்திலேயே அதுவும் திறந்திருந்தது.

சின்னதாய் இருந்தாலும் கடை, கச்சிதமாய் இருந்தது. சுவற்றில், வரிசை வரிசையாய் மரப்பலகைகளால் சட்டம் அடிக்கப்பட்டு, நடுநடுவே அறை அறையாய் தடுக்கப் பட்டிருந்தது. ஒவ்வொரு அறையிலும் கட்டுரை நோட்டுகளும், கணக்கு, அறிவியல் நோட்டுகளும், தமிழ் எழுதிப் பழக இரண்டு வரி நோட்டுகளும், இங்கிலீஷ் எழுதிப் பழக நாலுவரி நோட்டுகளும் மற்றும் சாதாரண நோட்டுகளும் ரகம் வாரியாக பிரிக்கப்பட்டு மிக நேர்த்தியாக அடுக்கப்பட்டிருந்தன. வகுப்பு வாரியாக தமிழ், ஆங்கிலம், கணக்கு, அறிவியல், சரித்திர, பூகோள புத்தகங்களும் அடுக்கப்பட்டிருக்க, பக்கத்திலேயே சின்ன சின்ன கள்ளிப் பெட்டிகளில் சாக்பீஸுகளும், சிலேட்டுக் குச்சிகளும், பென்சில்கள், பேனாக்கள், ரப்பர்கள், சிலேட்டு பலகைகள், கொஞ்சம் ஜியாமெட்ரிக் பாக்ஸுகள்... ஏதாவது குறைகிறதா என்ன? இந்திய தமிழ்நாடு மேப்புகள் பெரிய பெரிய சார்ட்டுகளில் தொங்கிக் கொண்டிருந்தன. கூடவே, கான்வாஸால் ஆன சுருட்டக் கூடிய பிளாக் - போர்டு ஒன்றிரண்டும்.

MithraVintha

கடையின் உள்ளே நந்தினி இருந்தாள். வாசலைப் பார்த்த வண்ணம் நின்று என்னவோ எழுதிக் கொண்டிருந்தாள். துளசியின் வயது தான் இருக்கும் நந்தினிக்கும்.

நந்தினியின் முகம் துடைத்து வைத்த கண்ணாடி பாத்திரம் போல் சுத்தமாய் இருந்தது. நீண்ட கூந்தலை படிய வாரி பின்னி, தலை நிறைய மணம் வீசுகிற மல்லிகைப் பூவை வைத்திருந்தாள். சின்ன நெற்றியில் பளிச்சென்று தெரிகிறாற்போல வட்டமான சிவப்பு பொட்டு. இயற்கையாகவே அமைந்திருந்த வில் போன்ற புருவங்கள். அகலமான விழிகளை மையால் கரையிட்டு இன்னும் பெரிதாக்கி இருந்தாள். அளவாய் செதுக்கப்பட்டிருந்த மூக்கு. அதில் சின்ன புள்ளி அளவிற்கு ஒரு மூக்குத்தி. மூக்கின் கீழே சின்ன இடைவெளியில் இரண்டு ஆரஞ்சு சுளைகளை ஒட்ட வைத்தாற் போல் சிறிய கச்சிதமான உதடுகள். பன்னீர் ரோஜா நிறத்தில் வசீகரித்தன. செழிப்பான கன்ன மேடுகள். தளிரான காதுகளில் சின்ன ஜிமிக்கிகள். அதிலிருந்து காதின் பின்னே வரை போகும் மெலிய மாட்டல்கள். நந்தினி முகத்தை அசைக்கும் போதெல்லாம் இப்படியும் அப்படியுமாய் அசைந்த ஜிமிக்கிகள் அவளுடைய முகத்திற்கு கூடுதல் அழகை தந்தன. சங்கு கழுத்து. அதில் மெல்லியதாய் ஒரு செயின். அவள் நடக்கும் போது அவளுடைய நீண்ட பின்னல் பெண்டுலம் போல் அவளின் பின்பக்கங்களை தொட்டு தொட்டு மீண்டது.

எப்பொழுதும் பட்டுப்புடவை. பட்டுப்புடவை என்றால் முழு நீள சரிகையோடு முகத்தில் அடிக்கும் வண்ணத்தில் ஆடம்பர புடவைகள் இல்லை. நந்தினியின் புடவைகள் சில சின்னச் சின்ன புட்டாவுடன் இருக்கும். சில சின்னச் சின்னக் கட்டங்கள் கொண்ட அழகான பாந்தமான புடவைகள். கண்ணை உறுத்தாத சிகப்பு, மஞ்சள், பச்சை, நீலம் நிறங்களில் அழகான புடவைகள்.

அவளுடைய எளிமையோடு அவளுக்கு தேவதைத் தன்மையை கொடுத்து இருந்தது.

அவள் நிமிர்ந்த போது, துளசி தெரிந்தாள். அப்போதுதான் பள்ளிக்குள் நுழைந்துக் கொண்டிருந்தாள். அவள் புடவையில்





ஒரு பக்கமாய் சேறு அப்பியிருந்ததைப் பார்த்தவுடன் நந்தினியின் முகம் சுருங்கி, புருவம் உயர்ந்தது.

துளசி கடையை கடக்கும் நேரம் துளசியை கூப்பிட்டாள்.

"துளசி..."

துளசி திரும்பிப் பார்த்து நட்பாகச் சிரித்தாள்.

"குட்மார்னிங்!"

"குட்மார்னிங் இருக்கட்டும். இங்க வா!"

நந்தினியின் குரல் உரிமையுடன் இருந்தது. உரிமையுடன் இருந்ததால் ஒருமையில் கூப்பிட்ட போதும் வித்தியாசமாய் தெரியவில்லை துளசிக்கு.

துளசி நந்தினியின் கடையை நெருங்கினாள்.

நந்தினி துளசியின் புடவையில் இருந்த சேற்றுக் கறையை சுட்டிக் காட்டினாள்.

"என்ன இது?"

துளசி சிரித்தாள்.

"சேறு!"

"அது தெரியுது!"

"ரோட்ல வரும்போது வண்டிக்காரன் அடிச்சிட்டு போயிட்டான்."

"அதுவும் தெரியுது! இதோடயா க்ளாஸுக்குப் போறே?"

"ஏன்... போனா என்ன?"

"சரியான அசட்டுப் பைத்தியம். கடைக்குள்ள வா."

"எதுக்கு?"

"உள்ள வாயேன், சொல்றேன்."

துளசி கடைக்குள் நுழைந்தவுடன் நந்தினி அவள் கையைப் பிடித்து ஒரு மறைப்பிற்கு அழைத்துப் போனாள். மறைப்பின் பின்னாலிருந்து அவர்கள் குரல்கள் கேட்டன.

MithraVintha

"ஏய்... என்ன இது? ஐயோ... எதுக்குக் கழட்டுறே?"

"சும்மா இரு. இப்படி சேத்தோட ஒரு புடவையைக் கட்டிட்டுப் போய் க்ளாஸ் எடுத்தா பசங்க எல்லாம் சிரிக்க மாட்டாங்க...?"

துளசியும், நந்தினியும் சற்று நேரத்தில் மறைப்பின் பின்னிருந்து வெளிப்பட்டார்கள். வெளிப்பட்டபோது, நந்தினியின் புடவை துளசியின் உடம்பில் நேர்த்தியாக கட்டப்பட்டிருந்தது. துளசியின் புடவை நந்தினியின் உடலை தழுவியிருந்தது.

துளசி சுற்று முற்றும் பார்த்து விட்டு, வெட்கத்துடன் தன் உடலில் இருக்கும் பட்டுப் புடவையை நீவி, நீவி விட்டுக் கொண்டாள்.

"உன்கிட்டே ஒண்ணு கேக்கணும்னு அடிக்கடி தோணும்..." என்றாள் துளசி மெல்லிய தயக்கமான குரலில்.

"அதை இப்ப கேக்கறது?" என்றாள் நந்தினி முகத்தில் குறும்பு இழையோட.

"ஆமா... நீ ஏன் எப்பவுமே பட்டுப் புடவையையே கட்டிக்கறே?" அவள் குரலில் படபடப்பு. அவளது விரல்களை புடவையை சரி செய்துக் கொண்டிருந்தன.

நந்தினி அவளையேப் பார்த்தாள். துளசிக்கு தான் ஏதாவது தப்பாக கேட்டுவிட்டோமோ என்ற சந்தேகம் வந்தது. நந்தினியின் முகத்தை தயக்கத்துடனும், ஒரு வித பயத்துடனும் ஏறிட்டுப் பார்த்தாள்.

"என்னைப் பார்த்து சொல்லு. நீ சொன்னது ஒண்ணுமே புரியலை... நான் ஒண்ணும் தப்பா எடுத்துக்க மாட்டேன். நிதானமாவே கேளு..."

"நீ ஏன் எப்பவும் பட்டுப் புடவையே கட்டிக்கறே?"

நந்தினி சிரித்தாள்.





"இதானா? எங்க வீட்டுக்காரருக்கு நான் பளிச்னு இருந்தாத்தான் பிடிக்கும்..."

"இப்ப சேத்துக் கறையோட இருக்கற ஒரு புடவையை சுத்திட்டு நிக்கறியே... இந்த கோலத்தில ஒன் வீட்டுக்காரர் ஒன்னைப் பார்த்தா திட்ட மாட்டாரா?"

"ஊம்ஹூம்."

"ஏன்?"

"அவர் பக்கத்துல இல்லியே..."

"ஏன் அவரும் திருச்சி தானே?" நந்தினி முகத்தில் லேசான திடுக்கிடல்.

"ஆமா... இல்ல... இல்ல..."

"என்ன ஆமாவா? இல்லையா?" துளசியின் முகத்தில் சிரிப்பு.

நந்தினி சமாளித்துக் கொண்டாள்.

"அவரும் திருச்சிக்காரர் தான்... ஆனா இப்ப இங்க இல்ல..."

"எங்க இருக்காரு?"

"வெளிநாட்டுல இருக்காரு..."

"ம்ம்?"

"துபாய் இல்ல? துபாய்... அங்க வேலை பார்த்திட்டிருக்காரு..."

"அடிக்கடி வருவாரா?"

நந்தினி என்ன பதில் சொல்வது என்று புரியாமல் மையமாய் தலை ஆட்டினாள்.

அப்பொழுது 'கணகண'வென்று பள்ளி தொடங்குவதற்கான மணி அடித்தது. சட்டென்று நந்தினியின் முகத்தில் ஒரு விடுதலையுணர்வு.

MithraVintha

“ஐயையோ... நேரமாச்சி. க்ளாஸுக்குப் போ. டீச்சரே லேட்டாப் போகலாமா, ம்?” என்றாள் நந்தினி பரபரப்பாக, துளசியின் முகத்தில் கை வைத்து செல்லமாய் தள்ளி விட்டாள். துளசி சிரித்தபடியே வெளியே வந்து க்ளாஸுக்கு போனாள்.

நந்தினி அவள் போவதையே பார்த்துக் கொண்டு, நிம்மதியுணர்வுடன் பெருமூச்சு விட்டாள்.

இன்னும் சிறிது நேரம் துளசியுடன் பேசியிருந்தால் எங்கே தன்னை அறியாமலேயே தன் வாயிலிருந்து உண்மை வெளிப்பட்டிருக்குமோ என்ற பயம் அவளுடைய நெஞ்சில் நிழலாடி அவளை ஒரு முறை சிலிர்க்க வைத்தது.

துளசி போய் விட்டாளா என்று ஒரு முறை பார்த்து உறுதி செய்து கொண்டாள். தன்னை வேறு யாரும் கவனித்துக் கொண்டு இருக்க வில்லையே என்றும் பார்த்து உறுதி செய்து கொண்டாள்.

பின் முணுமுணுப்பாக, ‘அடியம்மா துளசி. என் வீட்டுக்காரர் துபாய்லயும் இல்ல, சிபாய்லயும் இல்ல. இதே ஊர்லதான் இருக்காரு. அதுவும் உன் வீட்ல. ஒனக்கு அப்பாவா! அவர் பேரு கிருஷ்ணமூர்த்தி. என் பேரு நந்தினி கிருஷ்ணமூர்த்தி. திருச்சி நந்தினி கிருஷ்ணமூர்த்தி’ என்று சொன்னாள். வெட்கத்துடன் கூடிய சிரிப்பு வந்தது.

கலகலவெனச் சிரித்தாள்.

## 11

“மனசை தேத்தி நீ இதிலிருந்து மீண்டு வரணும் அசோக்! மீண்டு வந்து அவங்களை பழிக்குப் பழி வாங்கணும்! நீயே மனசொடிஞ்சுப் போயிட்டா. உன் தங்கைக்கு யார் ஆறுதல் சொல்வாங்க?”



“என் அம்மாவைக் கொன்னவங்களை தேடிக் கண்டு பிடிச்சு என் கையாலேயே அவங்க கழுத்தை நெறிச்சு கொல்லுவேன். இது சத்தியம்!”

ஏதோ ஒரு சேனலில் தன்னை நெஞ்சோடு அணைத்து ஆறுதல் சொன்ன நாயகியிடம் நாயகன் உறுமலுடன் சூளுரைத்துக் கொண்டிருந்தான்.

லலிதாவின் மடியில் தலைவைத்து ஒருக்களித்துப் படுத்துக் கொண்டு திரையில் நாயகன், நாயகியின் அசைவுகளை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் கல்பனா.

லலிதாவின் இன்னொரு பக்க மடியில் காயத்ரி. படம் பார்க்கும் ஆசையும், அரைத் தூக்கமுமாய் அவள் கண்கள் திறந்து திறந்து மூடின. லலிதாவின் கை, அவளின் முதுகை லேசாய் தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தது.

கல்பனாவின் வாய் கொள்ளாமல் வெற்றிலை. இரவுச் சாப்பாடு ஆனவுடன் தினமும் கல்பனா வாய்கொள்ளாமல் வெற்றிலை போட்டுக் கொள்ளாவிட்டால், அவ்வளவுதான். வீட்டில் பிரளயம் தான். பூகம்பம் தான். கொஞ்ச நேரத்திற்கு முன்பு தான் புயலடித்து, மழை பெய்து ஓய்ந்திருந்தது.

எப்பொழுதும் இரவு சாப்பாட்டை முடித்துக் கொண்டு வெற்றிலைப் போட்டுக் கொள்ளும் கல்பனா, அன்று பகலில் சாப்பிட்டவுடனே வெற்றிலைப் போட்டுக் கொண்டு விட ஆரம்பமானது வினை. வெற்றிலை தீர்ந்துப் போனதை லலிதா கவனிக்க தவறிவிட்டாள். வாங்கி வைக்கவில்லை. சாப்பாடு முடிந்தவுடன், வெற்றிலையைத் தேடி காணாமல், கல்பனா திறந்த வாய், துளசி அவசரமாய் வெளியே வாசலுக்கு ஓடி, கடையில் இருந்து வாங்கி வரும் வரை ஓயவில்லை.

ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோரையும் திட்டி தீர்த்து முடித்தாள் கல்பனா. கணவனோடு இருந்திருந்தால் இப்படி தாங்குவானாக்கும், அப்படி பார்த்துக் கொள்வானாக்கும், எதற்கும் வழியில்லாமல் இங்கே வந்து விழுந்தது போல கிடக்க,

MithraVintha

லலிதா லெட்டர் மேல் லெட்டர் போட்டு அழைத்தது தான் காரணம் என்று அம்மாவிற்கு ஒரு பூஜை குளிக்கக்கூட விடாமல் பாத்ரூம் கதவை தட்டினான் என்று பாலாஜிக்கு பூஜை ஊரிலிருந்து 'புள்ளைதாய்ச்சி'யாக வந்திருக்கும் தன்னை விட்டு விட்டு மூத்த பெண் துளசியை தாங்கு தாங்கென்று தாங்குகிறார் என்று கிருஷ்ணமூர்த்திக்கும் ஒரு பூஜை. தனக்கு சேரவேண்டிய பரிவையும், பாசத்தையும், கவனிப்பையும் 'இந்தக் குட்டிப் பிசாசு' தட்டிப் பறித்தது என்று குழந்தை காயத்ரிக்கும் ஒரு பூஜை. வீட்டில் இருக்க முடியாமல், ஊர் சுற்றி அலைவதற்காக, வசதியாக டீச்சர் வேலையை தேடிக் கொண்டுவிட்டாள் துளசி என்று அவளுக்கும் பூஜை.

கிருஷ்ணமூர்த்தி சத்தம் தாங்காமல், மாடிக்கு போனார் சாய்வு நாற்காலியை எடுத்துக் கொண்டு.

பாலாஜி, கல்பனா வாய் திறந்தபோதே, அறைக்குள் சென்று கதவை அறைந்து சாத்திக் கொண்டான்.

பயந்து போய் தன்னோடு ஒட்டிக் கொண்டிருந்த காயத்ரியை தட்டிக் கொடுத்து மெல்ல விலக்கி, லலிதாவிடம் படுக்க வைத்தாள் துளசி. டி.வி.யை திருகி சேனல் மாற்றிக் கொண்டிருந்த கல்பனா உடனே குழந்தைப் போல காயத்ரியிடம் போட்டு போடுவதைப் போல லலிதாவின் இன்னொரு பக்க மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டாள்.

அவள் படுத்திருந்த விதமும், வாயை மென்ற விதமும், துளசிக்கு, மைதான புல்லை மேய்ந்து விட்டு, ஒய்வாகப் படுத்துக் கொண்டு அசை போடும் பசுமாட்டை நினைவுபடுத்தியது. நினைத்துக் கொண்டதை சொல்லவில்லை.

துளசி கிச்சனுக்குள் புகுந்தாள்.

ஒழிக்கப்பட்டிருந்த சமையல் பாத்திரங்கள் கழுவும் தொட்டி நிறைய கிடந்தன. பரபரவென அடுப்பையும் மேடையையும் சுத்தம் செய்த துளசி, பாத்திரங்களை தேய்த்து கழுவி, மேடையிலேயே அழகாய் கவிழ்த்து அடுக்கினாள்.





வேலையை முடித்து விட்டு வெளியே வந்தவள், பாயை போட்டு, தூங்கிப் போயிருந்த காயத்ரியை தூக்கிப் படுக்க வைத்தாள். கல்பனாவும் தூங்கிப் போயிருக்க, ஓசைப்படாமல், டி.வி.யை அணைத்தாள்.

லலிதாவிற்கும், கல்பனாவிற்கும் சேர்த்து பெரிய பாயை விரித்து இரண்டு தலையணைகளையும் கொண்டு வந்து போட்டாள். லலிதா மிகவும் மென்மையாக கல்பனாவை எழுப்பி பாயில் படுக்க வைத்து, தானும் படுத்துக் கொண்டாள்.

துளசி நிம்மதி பெருமூச்சுடன் விளக்கணைத்து விட்டு, ரூமில் நுழைந்தாள். ரூமில் நுழைந்தவுடன் கதவை சாத்தி, லைட்டைப் போட்டாள். வெளிச்சம் பரவியவுடன், அவள் வரவிற்காக டேபிள் மேல் காத்திருந்த பள்ளி மாணவர்களின் நோட்டுகள் அவளை பார்த்து சிரித்தன.

துளசிக்கு மிகவும் அலுப்பாய் இருந்தது. தூக்கம் கண் இமைகளை இழுத்து இழுத்து மூடியது. தலைய உதறி தூக்கத்தை வலுக்கட்டாயமாக துரத்தினாள் சேரை இழுத்துப் போட்டு உட்கார்ந்து பேனாவை திறந்து கொண்டு முதல் நோட்டை எடுத்தாள். திருத்த ஆரம்பித்தாள்.

**க**தவு திறக்கும் சத்தம் கேட்டு திரும்பினால் கிருஷ்ணமூர்த்தி கையில் டீக்கோப்பையுடன் நின்றிருந்தார். துளசி நிமிர்ந்து அவற்றில் இருந்த கடிகாரத்தில் மணி பார்த்தாள். மணி ஒன்னை நெருங்கிக் கொண்டிருந்தது.

மைகாட்! கிட்டதட்ட ஒன்றரை மணி நேரம் ஆகிவிட்டது அவள் திருத்த ஆரம்பித்து என்பதை அவளால் நம்ப முடியவில்லை.

"நீ செய்யறது கொஞ்சம் கூட நல்லால்லேம்மா, துளசி!" என்றார் கிருஷ்ணமூர்த்தி. டீக்கோப்பையை அவளிடம் நீட்டினார்.

"அப்பா...?" துளசியின் முகத்தில் மெல்லிய வேதனை. பார்வையில் கேள்வி.

MithraVintha

"பின்ன என்னம்மா? டீச்சர் வேலைக்கெல்லாம் போக வேணாம்னு நான் சொன்னேனே... கேட்டியா? இப்பப் பாரு... டெய்லி இவ்ளோ நோட்டு... இதெல்லாம் கண் முழிச்சித் திருத்திக்கிட்டிருந்தா உடம்பு என்னத்துக்காவும்... காலைல எழுந்து லலிதாவுக்கு கூடமாட ஒத்தாசை செய்ஞ்சு, காயத்ரியையும் கவனிச்சிட்டு, உன் வேலையையும் முடிச்சுகிட்டு ஸ்கூலுக்கு கிளம்பறே... பகல் பூராவும் பசங்களோட கத்திக் கத்தி தொண்டைத் தண்ணி வத்தறது போதாதுன்னு வீட்டுக்கு வந்தா, ராத்திரி சாப்பாடு நேரம் முடிஞ்சு, பாத்திரம் பண்டம் ஒழிச்சு, கிச்சனை சுத்தம் செய்திட்டு, அப்பவாவது தூங்கறியா... உடனே உட்கார்ந்து நோட்டு புக்கெல்லாம்..."

"அப்பா..." துளசி கனிவான குரலில் இடைமறிக்க, கிருஷ்ணமூர்த்தி பேசுவதை நிறுத்திவிட்டு துளசியைப் பார்த்தார்.

"முடிச்சிட்டீங்களா... இன்னும் ஏதாவது இருக்கா?" என்றாள் புன்முறுவலுடன்.

"அட போம்மா.... சொன்னாலும் புரியமாட்டேங்குது. தானாவும் தெரிய மாட்டேங்குது."

"அப்பா, நீங்க என் மேல இருக்கற பாசத்துலயும், அக்கறையிலும், நான் கஷ்டப்படறதா நினைச்சுக்கறீங்க... நெஜமாச் சொல்லணும்னா இப்பதாம்பா நான் ரொம்ப சந்தோஷமாயிருக்கேன்... என்னைச் சுத்தி சின்னச் சின்னக் கொழந்தைங்க... அவங்களோட பேச்சும், பாட்டும், கூத்தும், சிரிப்பும்... எதுலயுமே பொய் இல்லப்பா. அதனால எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. மனசுக்கு ரொம்ப திருப்தியாயிருக்கு. அதான் பொழுது விடிஞ்சா, எப்படா ஸ்கூலுக்குப் போவோம்னு ஏங்கிகிட்டே, வேலை எல்லாம் கஷ்டமேயில்லாம செய்ஞ்சு முடிச்சுட்டு ஓடிடறேன்."

"சரி, சரி... உன்கிட்ட பேசி ஜெயிக்க என்னால முடியாதும்மா. டீயை குடிச்சிட்டு, சீக்கிரம் வேலைய முடிச்சுட்டு வந்து படுத்துக்கம்மா."





"சரிப்பா... ஆங்... அப்பா.... உங்ககிட்ட ஒரு விஷயம் சொல்ல மறந்துட்டேன்பா... ஸ்கூல்ல எனக்கு ஒரு நல்ல ஃப்ரண்ட் கெடைச்சிருக்கா..."

"எந்த கிளாஸ் டீச்சர்மா?" என்றார் கிருஷ்ணமூர்த்தி ஆவலாய்.

"டீச்சர் இல்லைப்பா. ஸ்டேஷனரி ஷாப் இன்சார்ஜா நந்தினின்னு ஒருத்தி இருக்கா... அவதான்."

கிருஷ்ணமூர்த்தியின் முகத்தில் லேசான திடுக்கிடல்.

"டீயைக் குடிம்மா. ஆறிடப்போவுது."

துளசி டீயை ஒரு வாய் உறிஞ்சினாள்.

"நந்தினிக்கு வெள்ளை மனசுப்பா... கொழந்தை மாதிரி. மனசுல ஒண்ணு வெச்சுக்கத் தெரியாது. பட்டு, பட்டுன்னு பேசிடுவா..."

கிருஷ்ணமூர்த்தி அவள் பேசிக் கொண்டிருப்பதை கவனிக்காமல், மேஜை மேல் இருக்கும் நோட்டில் ஒன்றை எடுத்துப் புரட்டினார். துளசி அவர் கவனிக்காததை புரிந்து கொள்ளாமல், அவர் கையை தொட்டு, தன் பக்கம் திருப்பினாள்.

"ஒரு விஷயம் கேட்டீங்கன்னா ஆச்சரியமா இருக்கும்பா... நந்தினியோட புருஷன் துபாய்ல இருக்காராம். ஆனா அவருக்கு இப்படி இருந்தாத் தான் பிடிக்கும்னு தினம் பட்டுப் புடவை கட்டிட்டி வருவா... பளிச்னு இருப்பா... பார்த்தாலே யாருக்கும் பிடிச்சுப் போயிடும். துபாய்ல இருக்கிற புருஷனுக்காக திருச்சில அலங்காரம்.... ரொம்ப வேடிக்கையா இல்ல?"

கிருஷ்ணமூர்த்தியின் முகத்தில் ஒருவித தவிப்பு. மனத் தடுமாற்றத்தில் தொண்டையில் குரல் சிக்கிக் கொண்டாற் போல ஒரு பாவனை அவரின் செயலில்.

"ஒன் ஃப்ரண்டை விடும்மா... எவ்வளவு நேரம் அவளைப் பத்தியே பேசுவே? டீ எப்படி?"

MithraVintha

“ஃபர்ஸ்ட் கிளாஸ்பா. எப்பப்பா கத்துக்கிட்டீங்க இவ்வளவு நல்லா டீ போட?”

“பிடிச்சிருக்கா? அப்ப டெய்லி போட்டுத் தரேன்.”

“ஐயையோ.. எனக்காக நீங்க எதுக்குப்பா..?”

“இந்த வீட்ல உனக்கு ஆதரவா யாரும் இல்லன்னு ஒனக்குத் தோணிடக் கூடாதும்மா... அதான்!”

சொல்லும்போதே கிருஷ்ணமூர்த்தியின் குரல் கமறியது. துளசி ஒன்றும் சொல்லாமல் மௌனமாய் இருந்தாள். கிருஷ்ணமூர்த்தி ஆதரவாக துளசியின் தலையை வருடினார்.

“கல்பனா வளர்ந்துட்டாளே ஒழிய, அவ மனசால இன்னும் அறியாப் பொண்ணுதாம்மா.... சின்னப் பொண்ணு மாதிரி நடந்துக்கிறா... அவ ஏதாவது எக்குத் தப்பாப் பேசினா அதை நீ பெரிசா எடுத்துக்காதேம்மா...”

“கல்பனாவை எனக்குத் தெரியாதாப்பா... தினம் ஏதாவது ஒண்ணை குத்தம் சொல்லிட்டே தான் இருப்பா... விடுங்கப்பா... அதை நான் பெரிசா எடுத்துக்கறதே இல்லை. காயத்ரி மாதிரி அவளையும் நான், என் பொண்ணாத்தான் பார்க்கறேன்...”

“உன் மனசு யாருக்கு வரும்மா? ஆனா, இந்த வீட்ல உன்னை யாரும் சரியா புரிஞ்சிக்கவே இல்லை. உன்னை நெனைச்சாத் தான் எனக்கு ரொம்ப கவலையா இருக்கும்மா...”

“அப்பா...!” என்றாள் துளசி செல்ல கோபமாய். “என்னை பத்தி என்ன கவலை உங்களுக்கு? நான் நல்லாத்தான் இருக்கேன், சந்தோஷமாத் தான் இருக்கேன். கவலைப்படாம நிம்மதியா போய் தூங்குங்க... ரொம்ப நேரமாயிடுச்சி... காலைல எழுந்து ஆபீஸ் போகவேண்டாமா நீங்க?”

கிருஷ்ணமூர்த்தி பெருமூச்சுடன், டீக்கோப்பையை எடுத்துக் கொண்டு அகன்றார். கதவை திறந்து மறுபடியும் சார்த்தும் முன் துளசியைப் பார்த்தார்.



“சீக்கிரம் வேலையை முடிச்சிட்டு நீயும் படும்மா...”

“சரிப்பா...”

துளசி அவர் கதவை மூடும் வரை பார்த்துக் கொண்டிருந்து விட்டு ஒரு புன்முறுவலுடன் மறுபடி நோட்டை திருத்த ஆரம்பித்தாள்.

## 12

**ஹா**லின் மத்தியில், சாப்பிட்டு முடிக்கப்பட்ட நுனி வாழை இலை அலங்கோலமாக மிச்சம் வைக்கப்பட்ட உணவுப் பொருட்களுடன் அசிங்கமாய் இருந்தது. அத்தனை அகல இலையை சுற்றிலும், கடிக்கப்பட்ட கால்வடை, கறிவேப்பிலை, தக்காளி மிச்சங்கள் மற்றும் எறியப்பட்டிருந்த வாழைப்பழத் தோல்.

இலைக்குச் சற்றுத் தள்ளி கல்பனா கால் நீட்டி உட்கார்ந்திருந்தாள். ஒரு தட்டில் கவுளி வெற்றிலை, நெய்சீவல், வாசனை சுண்ணாம்பு டப்பி.

கல்பனா சீவலை அள்ளி வாயில் போட்டு, வெற்றிலையில் சுண்ணாம்பு தடவி வாயில் போட்டுக் குதப்பி மடியில் தயாராக வைத்திருந்த முகம் பார்க்கும் கண்ணாடியை எடுத்து முகத்திற்கு நேராய் பிடித்து, நாக்கை நீட்டிச் சிவந்திருக்கிறதா என்று பார்த்தாள்.

கண்ணாடியில் லலிதா, இடுப்பில் காயத்ரியுடன் உள்ளே வருவது தெரிந்தது.

காயத்ரியின் கையில் ஒரு பிளாஸ்டிக் ஊதல். காயத்ரி அதை ‘பீ. பீ. என்று ஊதிக் கொண்டிருந்தாள்.

MithraVintha

லலிதாவைப் பார்த்தவுடன் கல்பனாவின் முகத்தில் ஒரு சிடுசிடுப்பு தெரிந்தது. ஊதலின் சத்தம் பொறுக்காமல் காதை மூடிக் கொண்டாள்.

"ஏய் குட்டிப் பிசாசே... சத்தத்திலே காதே செவிடாய்டும் போல இருக்கு. இப்ப அதை ஊதறத நிறுத்தப் போறியா இல்ல புடுங்கி தூர எறிஞ்சிடவா?"

காயத்ரி ஊதலை வாயில் இருந்து எடுத்து முதுகுக்குப் பின்னால் மறைத்துக் கொண்டாள். கல்பனாவை பார்த்த பார்வையில் லேசான பயம் தெரிந்தது.

"எங்கம்மா போய் ஒழிஞ்சே?"

"ஏன்டி? கொழந்தை ஸ்கூல் யூனிபார்ம் கவுனுக்கு அளவு குடுத்திட்டு வர டெய்லர் கடை வரைக்கும் போய்ட்டுன்னு வரேன்னு சொல்லிட்டுத்தானே போனேன்?"

"ஆமா... கொழந்தை கவுனுக்கு அளவு குடுக்கணும்... கொழந்தை ஜட்டியைத் தோய்க்கணும்... குழந்தை மூத்திரத்தைத் தொடைக்கணும்.... ஏன் நான் ஒருத்தி இருக்கறதே ஒங்கண்ணுக்குத் தெரியலையா?"

லலிதா காயத்ரியை இடுப்பில் இருந்து இறக்கி விட்டாள். காயத்ரி கல்பனாவுக்குப் பயந்து மறுபடியும் வாசலை நோக்கி ஓடினாள்.

"இப்ப என்ன ஆய்டிச்சின்னு இப்படி சலிச்சிக்கறே, கல்பனா?"

"நான் பாட்டுக்கு தனியா கொட்டு, கொட்டுன்னு உக்காந்து சாப்ட்டுட்டு இருக்கேன்... ஒரு அவசரத்துக்கு ஒரு வாய் தண்ணி எடுத்துத் தர்ரதுக்குக் கூட இந்த வீட்ல நாதியில்ல... தொண்டை அடைச்சி விக்கல், சிக்கல் வந்தா அப்படியே விக்கி விக்கி சாக வேண்டியதுதான்."

கோபமாக பேசிக் கொண்டே வந்த கல்பனா, திடீரென்று கண்களைக் கசக்கினாள்.





"இருக்கியா, செத்தியான்னு கேக்கறதுக்குக் கூட ஆளில்லாத வீட்ல வந்து மாட்டிக்கிட்டிருக்கேன்... விடிஞ்சி எழுந்தா தூங்கப் போற வரைக்கும் செவுரோட பேசிக்கிட்டிருக்க வேண்டியது தான். நீ கொழந்தை, கொழந்தைன்னு கொழந்தையோட சுத்தப் போய்டறே... அந்த அழகு மகாராணி வேலைக்குப் போய் கோடி கோடியா சம்பாதிக்கக் கொண்டு வந்து கொட்றா பாரு! அதான், அவ கொழந்தையை இந்த தாங்கு தாங்கறே... இந்தச் சுடுகாட்ல நான் போறதுக்கு என்ன போக்கிடம் இருக்கு? கோயிலு... கோயிலு... எப்பப் பார்த்தாலும் கோயிலு... ஒரு டிராமா இருக்கா? ஒரு பீச்சு இருக்கா? கேவலம் ஒரு சினிமாவுக்குக் கூட வக்கத்துப் போய் இருக்கேன்..."

சொல்லிக் கொண்டே, கல்பனா தன் பக்கத்தில் நாலாய மடிக்கப்பட்ட தமிழ் செய்தித்தாளை தூக்கி லலிதாவின் முகத்திற்கு நேரே எறிந்தாள். லலிதாவின் முகத்தில் மோதி கீழே விழுந்த பேப்பரை குனிந்து லலிதா எடுத்தாள்.

"பாரு..... விளம்பரம் பக்கத்துல ஒரு நோட்டீஸ் செருகியிருக்க பாரு... இன்னைக்குத்தான் கடைசியாம்... இந்த சினிமா, ரிலீஸான மொத நாளு, ரெண்டு பால்கனி டிக்கெட் வாங்கிட்டு வந்து என் புருஷன் கெஞ்சினாரு... போலாம் கல்பனா... போலாம் கல்பனான்னு... நான்தான் முட்டாளு... எங்கம்மா வீடுதான் எனக்குப் பெரிசுன்னு சொல்லி இங்க வந்து விழுந்தேன்..."

லலிதா பேப்பரில் தேடி அந்த சினிமா நோட்டீஸை வெளியே எடுத்தாள். படித்துவிட்டு, நிமிர்ந்து கல்பனாவைப் பார்த்தாள்.

"சினிமா தானே? சாய்ங்காலம் போயேன்..." என்றாள் புன்முறுவலுடன்.

கல்பனாவிற்கு அழுகை சட்டென்று நின்றது.

"நீ கூட்டிட்டுப் போறியா?" என்றாள் வெடுக்கென்று.



MithraVintha

"நானா?"

"ஏன், மத்தவங்களுக்குச் செய்ய வேண்டிய வேலை இன்னும் மிச்சம் மீதி ஏதாவது இருக்கா?" என்றாள் குரலில் கோபத்துடன்.

"இல்லைடி..." என்றாள் லலிதா சமாதானப்படுத்தும் குரலில். கல்பனாவின் அருகில் வந்து மண்டியிட்டு அவள் முகவாயை பிடித்து தன் பக்கம் திருப்பினாள்.

"பாலாஜி யாரோ நாலு ஃப்ரெண்ட்ஸோட வரேன்னு சொல்லியிருக்காண்டி... டிபன் ரெடி பண்ணி வச்சிருக்கச் சொன்னான்... துளசி இப்ப ஸ்கூல்ல இருந்து வந்துடுவா... அவளை அனுப்பறேன். அவ டிக்கெட் எடுத்துக் குடுத்து கூட இருந்து படம் பார்த்து கூட்டிட்டு வருவா... என்ன சொல்றே?"

"நான் என்ன சொல்றது? பிச்சைக்காரிக்கு பழைய சோறுதான். புதுச் சோறு போட்டு, சூடா சாம்பார் ஊத்தி, பொரியல் போடுன்னா கேக்க முடியும்? ம்க்ம்..."

கல்பனா நொடித்துக் கொண்டு, நாக்கை நீட்டி இரு கண்களாலும் பார்த்தபோது, வாசலில் நிழலாடியது. துளசி செருப்புகளைக் கழற்றிக் கொண்டிருந்தாள்.

கல்பனா பேசியதைக் கேட்டு அதிர்ச்சியில் நின்றிருந்த லலிதா பக்கம் திரும்பினாள்.

"வரா உன் அருமைப் பொண்ணு..." என்றபடி உள்ளே போனாள்.

துளசியைப் பார்த்ததும் லலிதா, அவளிடம் விபரத்தைச் சொன்னாள்.

"என்ன படம்மா?" என்றாள் துளசி கைப்பையை மேஜையில் வைத்தபடி.

லலிதா அந்த நோட்டீஸை துளசியிடம் நீட்டினாள். வாங்கிப் படித்த துளசி நிமிர்ந்து லலிதாவைப் பார்த்தாள்.



"இந்தப் படமா?" என்றாள் சந்தேகத்துடன்.

"அந்தப் படமே தான்... அதுக்கென்ன இப்போ? கூட்டிட்டுப் போக முடியுமா, முடியாதா?" என்றாள் கல்பனா அறை வாசலில் வந்து நின்றுக் கொண்டு.

"அதில்ல கல்பனா... அந்த தியேட்டர் கொஞ்சம் தூரத்தில் இருக்கு... நல்ல தியேட்டரும் இல்ல. சின்ன தியேட்டர் வேற காத்தே வராது. மூச்சடைக்கும். கூலிக்கார ஜனங்கதான் வந்து படம் பார்க்கும். அதுக்குத் தான் யோசனை பண்றேன்."

"பார்த்தியாம்மா இவ சொல்றத... என்னை கூட்டிட்டுப் போக இஷ்டம் இல்லைன்னு நேரிடையாச் சொல்றதை விட்டுட்டு அது சரியில்ல, ரொம்ப தூரம், சின்ன தியேட்டர்ன்னு ஆயிரம் நொட்டாங்கு நொள்ளாங்கு சொல்லிட்டிருக்கா... அதுக்குத்தான் உன்னை கூட்டிட்டுப் போகச் சொன்னேன்."

மறுபடி கல்பனாவின் கண்களில் இன்ஸ்டன்டாக கண்ணீர் எட்டிப் பார்த்தது.

"என் இஷ்டத்துக்கு ஒரு சினிமா பார்க்கக் கூட எனக்குக் கொடுத்து வைக்கல... ச்சே!"

"ஏன் இப்படியெல்லாம் பேசற கல்பனா? நான் எதுக்கு இப்படி சொல்றேன்னா..."

"போதும் உன்னோட விளக்கமும், அட்வைஸும், நீ தினமும் சீவி சிங்காரிச்சிட்டு வெளியே போயிட்டு வர்றியே, நான் ஏதாவது கேட்டிருக்கனா இல்ல ஏதாவது வாய் திறந்து சொல்லியிருக்கனா... பெரிசா வந்துட்டா புத்தி சொல்ல... எனக்கு சினிமாவும் வேணாம், ஒரு எழவும் வேணாம். இந்த வீட்லயே உக்காந்து உக்காந்து எனக்கு பைத்தியம் பிடிக்கட்டும்..."

"துளசி, உன்னால கூட்டிட்டு போக முடியுமா, முடியாதா? அதை சொல்லு!" என்றாள் லலிதா புரிந்துக் கொள்ளாமல், பொறுமையில்லாமல்.

MithraVintha

"சரிம்மா. கூட்டிட்டுப் போறேன்!"

துளசி, வாட்சையும் கழற்றி விட்டு, பாத்ரூமிற்குள் நுழைந்தாள்.

அந்த சினிமாத் தியேட்டர் வளாகத்தில் நடக்கப் போவது மட்டும் என்ன என்று முன்கூட்டியே துளசிக்குத் தெரிந்திருந்தால், அந்தத் தியேட்டர் இருக்கும் திசையின் பக்கம் திரும்பிக்கூடப் பார்த்திருக்க மாட்டாள் அவள்.

அப்படிப்பட்ட தொரு பயங்கரம் சினிமாதியேட்டர் வளாகத்தில் அவர்களது வருகைக்காகக் காத்திருந்தது.

## 13

**தி**ரை அரங்கம்.

திருச்சியிலிருந்து கிராப்பட்டி செல்லும் பாதையில் அது இருந்தது திருச்சியின் ஒதுக்குப்புறம்.

இன்றைய நவீன குளிர்பதன வசதிகள் செய்யப்பட்ட திரையரங்கம் போன்றும் இல்லாமல், கிராமங்களில் இருக்கும் 'டூரிங் டாக்கீஸு'களோடும் சேராமல் நடுவாந்திரமான ஒரு திரையரங்கம்.

தியேட்டரின் வெளியே பரந்த இடத்தில் மாலைக்காட்சிக்காகக் காத்திருந்த 'கசகச' மனிதர்களும், அவர்களின் 'சல சல' பேச்சுக்களும் சூழ்நிலையை ஆக்கிரமித்திருந்தன.

இளைஞர்கள் தங்கள் ஊர்ப் பெண்களின் நடை, உடைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். நடுத்தர வயதுப் பெண்கள் மாமியார்களிடம் படும் பாட்டை புலம்பிக் கொண்டிருந்தார்கள். வயதான கிழவர்கள் அந்தக் கால





அஞ்சலிதேவிகளின் அழகையும், இந்தக்கால எலும்புக்கூட்டு நடிகைகளின் அழகையும் ஒப்பிட்டு அலசிக் கொண்டிருந்தார் கள். திரையரங்குப் பேச்சுகளில் சமூக நலனா அலசப்பட்டு விடும்?

காலை முதல் பொழுது சாயும் வரை நாற்று நட்டும், தறிநெய்தும், கல் தூக்கும் சித்தாளாய் வேலை செய்தும் களைத்துப் போன லட்சோபலட்சம் தினக்கூலி மக்களுக்கு இருக்கும் ஒரே பொழுதுபோக்கு சினிமாதான். நாளாவட்டத்தில் சிகரெட் பிடிப்பது, தண்ணியடிப்பது போல, பொழுது போக்காக இருந்த சினிமா பழக்கம், போதையாகி விடுவதால், 'நாள் முச்சூடும் வேலை செய்ஞ்சு என்னத்த கண்டோம், படத்தையாவது பார்த்து சந்தோஷப்பட்டுக்கலாம்' என்று அவர்களின் பழக்கத்திற்கு நியாயமும் கற்பிக்கப்படுகிறது.

இளவட்டங்கள் நான்கைந்து நண்பர்களாய் சேர்ந்து வந்திருந்தனர். பெண்களின் மத்தியில் தங்களின் வீரதீர பராக்கிரமங்களை பறைசாற்றிக் கொள்ள அவர்கள் செய்துக் கொண்டிருந்த சேஷ்டைகளைப் பார்க்க வேடிக்கையாக இருந்து நடுத்தர வயது ஆண்கள் தங்களின் குடும்ப நல்வாழ்க்கைக்கான வழி தேடாமல் நாட்டு நடப்புகளை கவலையோடு அலசிக் கொண்டிருந்தார்கள்.

இளவட்டங்களுடன சரிக்குசமமாய் மல்லுக்கு நிற்பது போல் தாவணி போட்ட கன்னிகள் ஓரக்கண்ணால் இளசுகளை நோட்டம் விடுவதும், ஜாடை மாடையாய் பேசிக் கொள்வதுமாய், எதற்கெடுத்தாலும் 'கெக்கே பிக்கே' என்று சிரிப்பதுமாய் இருந்தார்கள். இதையெல்லாம் தாண்டிய வயதுப் பெண்கள் சூழ்நிலை மறந்து சத்தம் போட்டு தத்தம் அந்தரங்களை வஜ்ஜையின்றி பேசிக் கொண்டிருந்தனர்.

முறுக்கு, பஜ்ஜி இன்னும் என்னென்னவோ எல்லாவற்றையும் ஒரு மூங்கில் தட்டில் வைத்துக் கொண்டு எல்லாக் கும்பலின் நடுநடுவே போய் வந்து சுற்றிக் கொண்டிருந்தான் ஒருவன்.

MithraVintha

பெண்களுக்கும் ஆண்களுக்கும் தனித்தனியா டிக்கெட் கொடுக்கும் கவுண்டர்கள். சேருக்கு பத்து ரூபாய், பெஞ்சுக்கு ஐந்து ரூபாய் என்று சின்ன சின்ன எழுத்துக்களில் கவுண்டர் முகப்பில் எழுதப்பட்டிருந்தது.

கவுண்டருக்கு சற்றுத் தள்ளி கல்பனா பார்க்க ஆசைப்பட்ட படத்தின் போஸ்டர் பெரிய மூங்கில் தட்டியில் ஒட்டப்பட்டு இருந்தது. இதில் ஒரு மூலையில் இன்றே கடைசி என்று சின்ன பிட் நோட்டீஸ். போஸ்டரில் நாயகனும், நாயகியும் அணைத்துக் கொண்டு காமிராவைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தார்கள். பக்கத்திலேயே இன்னொரு மூங்கில் தட்டியில் மறுநாள் முதல் திரையிடப்போகும் படத்தின் போஸ்டர் ஒட்டியிருந்தது.

ரொம்ப நீளமில்லாமல் ஒரு சுவர். அதன் ஒரு கோடியில் பெண்களுக்கான டிக்கெட் கவுண்டர். கவுண்டரை நோக்கிப் போகும் பாதையில் பெண்கள் வரிசையாக நின்றிருந்தனர். சுவர் வந்த இடங்களில் பாதை குறுகலாக இருந்தது. குறுகலான வழி முடிந்ததும் க்யூ நீண்டது.

சுவர் வழிக்குள் நுழையும் இடத்திற்குச் சற்று தள்ளி துளசி வரிசையில் நின்று இருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் காயத்ரி நின்று கொண்டு. தன்னை சுற்றி நடப்பதையெல்லாம் 'ஆ'வென்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

துளசி நின்றுக் கொண்டிருந்த வரிசைக்குச் சற்றுத் தள்ளி சிமெண்டால் சின்ன மேடை மாதிரி கட்டப்பட்டிருந்தது. அதில் கல்பனா உட்கார்ந்திருந்தாள். பக்கத்திலேயே ஒரு ப்ளாஸ்க். ப்ளாஸ்க்கின் மூடியில் ப்ளாஸ்க்கிலிருந்து காம்ப்ளானை ஊற்றிக் குடித்தபடி சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

முறுக்கு, பஜ்ஜி விற்றுக் கொண்டிருந்தவன் பெண்கள் வரிசைக்கு வந்து நின்று ஒவ்வொருவரையும் விசாரிக்க ஆரம்பித்தான். அப்போது நின்றிருக்கும் வரிசையில் ஒருத்தி இடையிலேயே நுழையப் பார்த்தாள்.



துளசியின் முன்னால் நின்றிருந்தவள் க்யூவில் நுழைபவளைப் பார்த்துக் கத்தினாள்.

"யாருடி அது? உள்ளே நுழையறது.... என்ன எங்களையெல்லாம் பார்த்தா கேனையாட்டமா தெரியுதா? நாலு மணிலேர்ந்து வேகு வேகுன்னு வெயில்ல நின்னுட்டிருக்கோம். இந்தம்மா இங்கிலீஷ் தொரசானி.... மகாராணி...வந்துட்டாங்க... சொய்யுன்னு நேரா.. ஏய், இழுத்துப் போடுங்கடி அவளை..."

உள்ளே நுழைந்தவளை இரண்டு பெண்கள் தள்ளி விட அவள் திட்டிக் கொண்டே பின்னால் போனாள்.

காயத்ரி துளசியின் கையைப் பிடித்து அவளை அழைத்தாள். துளசி கீழே குனிந்து குழந்தையைப் பார்த்தாள்.

"என்னம்மா?"

காயத்ரி வாய் திறவாமல், பாத்ரூம் போகவேண்டும் என்பதை ஒற்றை விரல் உயர்த்தி சைகையிலேயே காட்டினாள்.

"கொஞ்சம் பொறுத்துக்கம்மா..."

"ரொம்ப அவசரமா வருதும்மா."

துளசி தன்னுடைய இடத்திலிருந்து திரும்பி கல்பனாவைப் பார்த்தாள். கல்பனாவிற்கு இது மூன்று மாதம் தான். வயிறுக்கூட மேடு தட்ட இன்னும் ஆரம்பிக்கவில்லை. ஆனாலும் இன்னும் சில விநாடிகளிலேயே பிரசவித்து விடுவாள் போல இடுப்பைப் பிடித்துக் கொண்டு, முகத்தைச் சுளித்தபடி உட்கார்ந்திருந்தாள்.

துளசி தனக்கு முன்னால் நின்றிருந்தவளைத் தோளில் தொட்டு அழைத்தாள். அந்தப் பெண்மணி துளசியைத் திரும்பிப் பார்த்து பார்வையாலே என்ன என்பது போல் கேட்டாள்.

"கொழந்தைக்கு அவசரமா பாத்ரூம் போகணுமாம்.. நான் கூட்டிட்டுப் போய்ட்டு இப்ப வந்துடறேன்.. கொஞ்சம் எடத்தைப் பார்த்துக்கறீங்களா?"

MithraVintha

அந்தப் பெண்மணி முகத்தில் சட்டென ஒரு இளகல். குனிந்து காயத்ரியைப் பார்த்து. அவள் கன்னத்தை வருடி உதட்டில் வைத்து 'ப்ச்' என்ற சத்தம் எழ ஒரு முத்தம் கொடுத்தாள்.

"ஒண்ணுக்குத்தானேம்மா? கூட்டிட்டுப் போய்வாம்மா.. ஒன் எடம் எங்கயும் போய்டாது.. பத்திரமா இருக்கும்."

துளசி வரிசையிலிருந்து விலகி காயத்ரியைக் கூட்டிக் கொண்டு போனாள். துளசி வரிசையிலிருந்து போவதைப் பார்த்துவிட்டு கல்பனா அவசரமாக எழுந்தாள்.

"துளசி..." என்று அழைத்தாள்.

துளசி கல்பனாவைத் திரும்பிப் பார்த்து சைகையிலேயே காயத்ரியை பாத்ரூமிற்கு அழைத்துப் போவதாய் சொன்னாள்.,

"சீக்கிரம் வந்துடு..." என்று சொல்லிவிட்டு. கல்பனா மறுபடி உட்கார்ந்து கொண்டாள்.

துளசி காயத்ரியை அழைத்துக் கொண்டு சற்று தூரத்தில் இருந்த ஒரு சின்ன திருப்பத்தில் திரும்புவதை பார்த்துக் கொண்டிருந்துவிட்டு. அவர்கள் பார்வையில் இருந்து மறைந்தவுடன் வரிசை இருக்கும் பக்கம் பார்வையை திருப்பினாள் கல்பனா.

வரிசையில் பரபரப்பு டிக்கெட் கவுண்டர் திறக்கப்பட்டதால் உண்டான பரபரப்பு.

"டிக்கெட் குடுக்க ஆரம்பிச்சிட்டாங்க..." என்றாள் வரிசையில் நின்று இருந்த பெண்மணி ஒருத்தி குரலில் சந்தோஷ பரபரப்புடன்.

வரிசை, கொஞ்சம் ஏனோதானோவென்று நின்றிருந்த பெண்கள் ஒழுங்காக நகர, நேராகியது. கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறத் தொடங்கியது.

வரிசை நகர்வதைக் கண்டதும், கல்பனாவைப் பரபரப்பு தொற்றிக்கொண்டது. வரிசையைப் பார்த்தாள். திரும்பி சென்ற திசையைப் பார்த்தாள்.



வரிசை மேலும் முன்னேறியது.

கல்பனாவின் பார்வை போஸ்டர் மேல் குத்திட்டது. 'இன்றே கடைசி' என்ற எழுத்துக்கள் மட்டும் பூதாகரமாய் உருவெடுத்தாற் போல் தெரிந்தன. திரும்பி துளசி சென்ற திசையைப் பார்த்தாள்.

துளசியும், காயத்ரியும் வருவதற்கான அறிகுறியே இல்லை.

"துளசி.. ஏ துளசீசீ..." என்று கல்பனா பொறுமையில்லாமல் கத்தினாள்.

துளசி வரவில்லை.

கல்பனா மறுபடி திரும்பி வரிசையைப் பார்த்தாள். அது வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தது. கல்பனா சட்டென்று எழுந்து துளசி வரிசையில் நின்று கொண்டிருந்த இடத்தில் வந்து நுழைந்தாள். அவள் நுழைந்தவுடன் பின்னால் இருந்து குரல்கள் எழுந்தன.

"ஏய்.. எவடி அவ... உள்ள நுழையறது... ஒரு தடவை சொன்னா புரியாது? போடி வெளியில... ஒவ்வொருத்தியா வர்றாளுங்க..."

"ஏய்.. வெளில போடி..."

"எங்கக்கா நின்னுக்கிட்டிருந்த எடந்தாங்க இது... சரியான சமயத்தில் டிக்கெட் வாங்காம போய்த் தொலஞ்சிட்டா... க்யூ வேற வேகமாக நகருது..." என்றாள் கல்பனா இடத்தின் உரிமையை நிலை நாட்டும் விதமாக.

"அக்களாவது, நொக்காளாவது.... வெளியே இழுத்து வுடுங்கடி அவள..." என்றாள் முதலில் கத்திய பெண்மணி.

பின்னால் வரிசை சற்றே கலைந்தது. இரண்டு மூன்று பெண்களாய் வரிசையில் இருந்து விலகி முன்னால் பாய்ந்தார்கள். கல்பனாவின் கையை வந்து பிடித்தார்கள்.

"வேண்டாங்க, வேண்டாங்க.... ஐயோ வேண்டாங்க.... அக்கா நீங்க சொல்லுங்கக்கா.... எங்கக்கா கொழந்தையைக்

MithraVintha

கூட்டிட்டுப் பாத்ரும் போவும்போது உங்ககிட்ட சொல்விட்டுத்தானே போனாங்க..." கல்பனா முன்னால் நின்றிருந்த பெண்ணிடம் கெஞ்சலாய் பதட்டத்துடன் சொன்னாள்.

"ஏய்... அவகிட்ட என்னடி பேச்சு.. இழுத்து வெளியே தள்ளுங்கடி..." முதலில் பேசியவள் மறுபடியும் சத்தமாகச் சொன்னாள்.

அதே நேரத்தில், துளசி காயத்ரியுடன் திருப்பத்தில் திரும்பினாள். வரிசை கலைந்து கும்பலாக பெண்கள் நின்றிருப்பதைப் பார்த்தாள்.

சட்டென திரும்பி கல்பனா உட்கார்ந்திருந்த இடத்தைப் பார்த்தாள். அது வெறுமையாக இருப்பதை கண்டவுடன் திடுக்கிட்டாள்.

வெகு திடீரென கல்பனாவின் குரல் கூட்டத்தின் மத்தியில் இருந்து வெகு தீனமாய் கேட்டது.

"துளசீசீசீ..."

துளசி காயத்ரியின் கையை உதறிவிட்டுக் கூட்டத்தை நோக்கி பாய்ச்சலாக ஓடினாள். அதற்குள் கூட்டத்தின் மத்தியில் இருந்து கல்பனா வெளியே தள்ளப்பட்டு, அந்த வேகத்திலேயே நிலை தடுமாறி அவள் ஒரு பக்கமும், அவள் கையில் இருந்த ப்ளாஸ்க் ஒரு பக்கமுமாய் விழ, ப்ளாஸ்க் மூடி திறந்து அதில் இருந்த காம்ப்ளான் சிதறி வழிந்தது.

விழுந்த கல்பனாவின் முகத்தில் உச்சபட்ச வலியின் வதனை.

"அம்மா ஆஆஆஆ..."

துளசி அதிர்ச்சியுடன் கல்பனா நோக்கிப் பாய்ந்தாள்.



# 14

ஆஸ்பத்திரி பினாயில், டெட்டால் நெடியுடன் சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருந்தது. காற்றில் டிங்ஞ்சரின் வாசம் மற்றும் மருந்துகளின் வாசமும் கலந்து பரவியிருந்தது.

வெள்ளை சேலையணிந்த தாதிகள் 'எல்லாம் எங்களுக்கு பழகிப் போனதுதான்' என்ற பாவனையில் இயந்திர கதியில் இயங்கிக் கொண்டிருந்தார்கள். அதிசயமாய் ஒன்றிரண்டு வெள்ளை ஸ்கர்ட் அணிந்திருந்த ட்யூட்டி நர்ஸுகள்.

வகைக் கொன்றாய் வியாதியுடன் முகத்தில் வேதனை படர்ந்த, நம்பிக்கை கொண்ட, எதிர்பார்ப்புகள் உடைய மனித முகங்கள். அவர்களின் சந்தேகக் கேள்விகளுக்கு சலிப்புடன் பதில் சொல்லிக் கொண்டிருந்தனர் ஆஸ்பத்திரி ஊழியர்கள்.

ஒரு ஓரமாய் ஒரு சின்ன கான்டீன். தண்ணீர் பாட்டில், டீ, காபி, பால், இட்லி, வடை, தோசை, பொங்கல், தக்காளிசாதம், எலுமிச்சை சாதம், தயிர்சாதம், சிப்ஸ், பிஸ்கட், சாக்லெட் இன்ன பிற வகையறாக்களுடன், ஆஸ்பத்திரி கான்டீனின் அத்தனை லட்சணங்களுக்கும் உரிய பொருத்தமான கான்டீனாய் இருந்தது. அங்கேயும் எதை எதையோ வாங்கிக் கொண்டு மக்கள்.

அந்த ஆஸ்பத்திரியின் ஓர் அறையில் கல்பனா கட்டிலில் படுத்திருந்தாள். அவளது கையில் ட்ரிப்ஸ் சொட்டு சொட்டாக இறங்கிக் கொண்டிருந்தது.

கல்பனாவின் கண்கள் மூடியிருந்தன. அவளது முகம் வேதனையின் காரணமாகப் பல்வேறு சுருக்கங்களுடன் தெரிந்தது.

MithraVintha

அறையில் ஓர் ஓரத்தில் துளசி பதை பதைத்து நின்றிருந்தாள்.

கடவுளே... கடவுளே... கல்பனாவிற்கு எதுவும் ஆகிவிடக்கூடாது கடவுளே... கடவுளே... அங்கப்பிரட்சணம் பண்ணுகிறேன்... அடிஅடியாய் எடுத்து வைத்து ஆயிரத்தெட்டு முறை உன் சன்னிதி சுற்றி வருகிறேன்... அவளுக்கு ஒன்றும் நேராமல் நீதான் காப்பாற்ற வேண்டும்...

துளசியின் மனதில் ஆயிரம் பிரார்த்தனைகள், ஆயிரம் வேண்டுகோள்கள் உலவிக் கொண்டிருந்தன. முகம் பயத்தில் இருண்டிருந்தது.

குழந்தை காயத்ரி இன்னொரு மூலையில் ஒன்றும் புரியாதவளாய் உட்கார்ந்திருந்தாள். சூழ்நிலை சரியில்லை என்று அவளுக்குப் புரிந்தது. சித்திக்கு உடம்பு சரியில்லை என்றும் தெரிந்தது. அம்மாவின் முகத்தில் தெரிந்த கலவரம், பயம் ஆகியவற்றை அடிக்கொரு தடவை பார்த்துப் பார்த்து அவள் முகத்திலும் கவலைப் பூக்கள். எந்த நேரம் அழுகை வெடித்துக் கொண்டு புறப்படுமோ என்ற பாவனையுடன் அந்த பிஞ்சு முகம் காணப்பட்டது.

கல்பனாவின் தலை மாட்டில் லலிதா நின்றிருந்தாள். புடவைத் தலைப்பில் முடிந்து வந்திருந்த வயலூர் முருகன் கோவிலின் விபூதியை எடுத்து கல்பனாவின் நெற்றியில் அவள் பூசும் போது அறைக்குள் டாக்டர் பெண்மணி நுழைந்தாள்.

கவலையோடு இருந்த முகங்களைப் பார்த்தாள்.

டாக்டர் முகத்தில் இறுக்கம் இருந்தது.

லலிதாவையும், துளசியையும் பார்த்தாள்.

"முதல்ல இந்த ரூமை விட்டு வெளியே போங்க. இந்தச் சின்னக் கொழந்தையையும் கூட்டிட்டுப் போங்க. சின்னக் குழந்தைகளை எல்லாம் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டு வரதே தப்பு. அதுல பேஷன்டோட ரூம்லயே உக்கார



வச்சிருக்கீங்களே... உங்களுக்கெல்லாம் எவ்வளவு சொன்னாலும் தெரியாதா? சின்னக் கொழந்தைங்களை ஏதாவது கிருமி தாக்கி இன்ஃபெக்ட் ஆயிட்டா அப்புறம் அதுக்கு வேற ஆஸ்பத்திரிக்கும், வீட்டுக்குமா அலையணும்... சுமாரான... எடத்தைக் காலி பண்ணுங்க..." என்று கண்டிப்பான அதே சமயம் மெதுவான குரலில் கூறினாள், டாக்டர் பெண்மணி.

"டாக்டர் என் பெண்ணுக்கு...?" என்று பரிதாபமாக இழுத்தாள் லலிதா.

"வெளிய போங்க. அங்க வந்து சொல்றேன்..."

டாக்டரின் குரலில் இருந்த கடுமை அவர்களை அறையை விட்டு வெளியேற்றியது. லலிதா வெளியில் வந்து கதவை லேசாகத் திறந்து கொண்டு உள்ளே எட்டிப் பார்த்தாள்.

டாக்டரம்மாள் கல்பனாவின் ரத்த அழுத்தத்தைச் சோதித்து விட்டுக் கருவியை விலக்கி வைத்தாள். கல்பனாவின் கண் இமைகளை விலக்கிப் பார்த்தாள். ஒரு பெருமூச்சுடன் அறைக்கு வெளியே வந்து சேர்ந்தாள்.

"என்னால சொல்லவும் முடியலை... சொல்லாம இருக்கவும் முடியலை..." என்று லலிதாவைப் பார்த்துச் சொல்லத் தொடங்கினார் டாக்டரம்மாள். "கீழே விழுந்த அதிர்ச்சியில் உங்க பெண்ணோட கரு கலைஞ்சி போச்சி... ஐ'ம் ஸாரி... வெரி வெரி ஸாரி... ரொம்ப, ரொம்ப ஜாக்கிரதையா, கவனமா இருந்திருக்க வேண்டிய நேரம் இது... இப்ப போய் சினிமாத் தியேட்டர் அது... இதுன்னு... அதுவும் ஊருக்கு ஒதுக்குப் புறமா இருக்கிற தியேட்டர். லோ கிளாஸ் ஜனங்க எல்லாம் வந்து முட்டி மோதிக்கிட்டு படம் பாக்கற தியேட்டர்... அந்த எடத்துக்குப் போகாம இருந்திருந்தாத்தான் என்ன? நீங்கல்லாம் படிச்சவங்களா இருந்து என்ன பிரயோஜனம்? டுபேட்... டுபேட்..."

சொல்லிவிட்டு டாக்டர் பெண்மணி அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

Mithra Vintha

துளசியைத் துயரமும், அதிர்ச்சியும் ஒரு சேரத் தாக்கின.

அப்படியே உறைந்து போய் நின்றாள் அவள். அவளது கைகள் இடுப்பில் இருந்த காயத்ரியை இறுக்கமாகப் பற்றியது. எங்கே இடுப்புக் குழந்தை கை நழுவிப் போய்விடுமோ என்ற பயம் அந்த இறுக்கமான பிடியில் தெரிந்தது.

லலிதா டாக்டர் சொன்னதைக் கேட்டு, புடவைத் தலைப்பால் முகத்தைப் பொத்திக் கொண்டு அழுதாள்.

அறை உள்ளே இருந்த கல்பனாவின் கண்கள் மூடியிருந்தாலும் அவள் தூங்கவில்லை. டாக்டர் சொன்னது அவளது காதுகளிலும் விழுந்தது.

அவள் கண்களில் இருந்து கண்ணீர் நிற்காமல் வழியத் தொடங்கியது.

## 15

**வீ**ட்டின் சூழல் இறுக்கமாயிருந்தது.

உள் அறையில் கட்டிலில் கல்பனா படுத்திருந்தாள். மெல்ல விம்மிக் கொண்டிருந்தாள்.

லலிதா கட்டிலில் உட்கார்ந்து, தன் மடியில் கல்பனாவைப் போட்டுக் கொண்டு அவள் முதுகை வருடி விட்டுக் கொண்டிருந்தாள்.

குழந்தை காயத்ரி அறையின் ஒரு மூலையில் உட்கார்ந்துக் கொண்டு நடப்பதையெல்லாம் மௌனமாக பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கிருஷ்ணமூர்த்தி கையில் ஒரு பனை ஓலை விசிறியை வைத்துக் கொண்டு அறைக்கும் ஹாலுக்குமாய் போய் போய் வந்துக் கொண்டிருந்தார். அவர் முகம் அதீத கோபத்தில் 'ஜில்'வென தக்காளிப் பழ நிறத்திற்கு மாறியிருந்தது.



துளசி சமையலறையில் கல்பனாவிற்காக ஹார்லிக்ஸ் கரைத்துக் கொண்டிருந்தாள்.

விசிறியால் விசிறிக் கொண்டே ஹாலில் நடப்பதும், உள்ளே வந்து கட்டிலில் படுத்திருக்கும் கல்பனாவையும், முகம் முழுக்க அழுது அழுது சிவந்து போன லலிதாவையும் பார்த்து விட்டு போவதுமாய் இருந்தார். குட்டிப் போட்ட பூனை மாதிரி நிலைகொள்ளாமல் ரூமிற்கும் ஹாலுக்குமாய் நடந்து கொண்டிருந்தார். நடந்தவற்றை நினைத்து நினைத்து கொஞ்சம் கொஞ்சமாக அவர் முகம் கோபத்தில் இறுகிக் கொண்டே வந்தது. விசிறிக் கொண்டே ரூமிற்குள் வந்தவர் விசிறுவதை நிறுத்திவிட்டு, கட்டிலுக்கு அருகே வந்தார். அவர் முகத்தில் எள்ளைப் போட்டாலும் வெடிக்கும் போல இருந்தது.

"அப்படி என்ன சினிமா வேண்டி இருக்குது? இல்லை, தெரியாமத்தான் கேக்கறேன்... அப்படி என்ன பாழாப் போன அந்த எழவு சினிமா வேண்டி இருக்குதுன்னு கேக்கறேன்?" அவர் குரல் கொஞ்சம் கொஞ்சமாய் உயர்ந்தது. அவர் தன் கையில் இருந்த விசிறியை கல்பனாவின் முகத்திற்கு எதிரே ஆட்டி, சாமி வந்தவனை போல ஆட்டி ஆட்டி பேசினார்.

"இந்த நேரத்தில் எவ்வளவு ஜாக்கிரதையா இருக்கணும்னு உனக்குத் தெரியாதா?"

கல்பனாவின் உடல் விம்மல்களால் குலுங்கியது.

"ஏண்டி, இரண்டு புள்ள பெத்திருக்கியே, உனக்குமாத் தெரியாது? அவ கேட்டாளாம், இவ அனுப்பி வெச்சாளாம்..." என்று லலிதாவின் மீதும் பாய்ந்தார்.

துளசி கிச்சனிலிருந்து இரண்டு டம்ளர்களில் ஹார்லிக்ஸை ஆற்றியபடி உள்ளே நுழைந்தாள்.

லலிதா பதில் எதுவும் சொல்லாமல், உள்ளே வந்த துளசியை ஒருமுறை வெறுப்புடன் பார்த்தாள். பின் கல்பனாவைக்

MithraVintha

கருணையுடன் பார்த்துத் தட்டிக் கொடுத்தாள். நிமிர்ந்து கிருஷ்ணமூர்த்தியை பார்த்தாள்.

"ஆமா சொன்னேன். அனுப்பி வெச்சேன்!" என்று ஆவேசமாய் சொன்னவள் குரல் சட்டென அழுகையில் கம்மியது.

"புள்ளதாச்சிப் பொண்ணு சினிமாப் போகணும்னு ஆசைப்பட்டதைப் போய்ப் பெரிசா எடுத்துக்கிட்டு கேக்க வந்துட்டீங்களே... பொழுது போகாம வாசலையும், வீட்டுச் சுவத்தையும் பார்த்துக்கிட்டு உட்கார்ந்திருக்காளேன்னு நான் தான் அவ கேட்டவுடனே போய்ட்டு வரச் சொன்னேன்..."

சட்டென திரும்பி ஹார்லிக்ஸ் ஆற்றிக் கொண்டிருந்த துளசியைப் பார்த்தாள்.

"ஒரே வயித்தில ஒட்டிக்கிட்டுப் பொறக்கலேன்னாலும் தங்கச்சியாச்சே... பொறுப்பாய் பார்த்துப்பான்னு நம்பித்தான் துளசியைக் கூட அனுப்பி வெச்சேன்.... இவ இப்படி பொறுப்பில்லாம நடந்துப்பான்னு நான் நினைக்கலடியம்மா..."

துளசி ஹார்லிக்ஸ் ஆற்றுவதை நிறுத்திவிட்டு லலிதாவைப் பரிதாபமாய் பார்த்தாள்.

"அம்மா... என்னை என்ன வேணும்னாலும் திட்டும்மா... ஆனா பொறுப்பில்லாதவன்னு மட்டும் சொல்லாதேம்மா... கல்பனாவை ஒரு ஓரத்துல உக்கார வச்சிட்டு நானும் கொழந்தையும் தாம்மா க்யூவில நின்னுட்டிருந்தோம். காயத்ரி பாத்ரும் போகணும்னு சொன்னதாலதான் க்யூவுல நின்னுட்டிருந்தோம். காயத்ரி பாத்ரும் போகணும்னு சொன்னதாலதான் க்யூவை விட்டு வெளியே வந்தேன்."

குப்புறப்படுத்திருந்த கல்பனா சடார் என்று புரண்டு எழுந்து லலிதாவின் தோளைப் பற்றி உலுக்கினாள்.

"ஏம்மா? குத்துக்கல்லாட்டம் சும்மாதானே உக்காந்திருந்தேன் நான். பாத்ருமிற்கு நான் கூட்டிட்டுப் போயிருக்க மாட்டேனா? என்னை நம்பி அவ கொழந்தையை அனுப்பக்கூடாதா? இப்ப என்ன ஆச்சி பாரு? ஒரு நாளா, ரெண்டு நாளா? ஆறு வருஷம்! ஆறு வருஷமாக் காத்துக்கிட்டிருந்தோம். கும்புட்டு, கும்புட்டு, ஏங்கி, ஏங்கி, உண்டான கர்ப்பம்... இப்படி முட்டையை ஒடைச்சி ஊத்தின மாதிரி கலைஞ்சி போச்சே... ஐயோ... ஐயோ... என் புருஷனுக்கு நான் என்ன பதிலைச் சொல்லுவேன்? அவர் மூஞ்சியில நான் எப்படி முழிப்பேன்?"



கல்பனா முகத்தில் அறைந்து கொண்டு அழுதாள்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த காயத்ரி, தன் அம்மாவைத் தான் எல்லோரும் திட்டுகிறார்கள் என்று புரிந்துக் கொண்டாற் போல், பெருங்குரலெடுத்து அழத் தொடங்கினாள்.

கிருஷ்ணமூர்த்தி பதறிப் போய் துளசியைப் பார்த்தார். அவளுக்கு குழந்தையின் அழுகையே காதில் விழுந்த மாதிரி தெரியவில்லை. கல்பனா பேசியதைக் கேட்டு அதிர்ச்சியில் உறைந்து போய் நின்றிருந்தாள். கிருஷ்ணமூர்த்தி காயத்ரியைப் பார்த்தாள். திரும்பி கல்பனாவை ஈனமான ஒரு பார்வை பார்த்தார். விடுவிடுவென்று கோபமாக கல்பனாவை நோக்கி வந்தவர் ஒன்றும் சொல்லாமல் சட்டென்று நின்று விசிறியை எறிந்து விட்டு குழந்தையை நோக்கிச் சென்றார். அவளை அள்ளி தோளில் தூக்கிக் கொண்டு அந்த இடத்தை விட்டு அகன்றார்.

துளசி அதிர்ச்சியை ஜீரணித்து கொஞ்சம் பயந்து தாழ்ந்த குரலில் தொண்டை அடைத்த மாதிரி பேசினாள்.

"அம்மா..... கல்பனா சொல்றதை கேட்க மனசுக்கு கஷ்டமாயிருக்குமா. தியேட்டரோ சுமாரான தியேட்டர்... அதுல பாத்ரும் எந்த லட்சணத்துல எப்படி இருக்குமோ ஏதா இருக்குமோ.... வழுக்கி கிழுக்கி விட்டுடிச்சின்னா என்ன பண்றதுன்னுதான்..."

துளசி முடிக்கவில்லை.



MithraVintha

"ஆஹாஹா! ரொம்ப அக்கறை..." என்று இரு கைகளையும் விரித்து ஆட்டியபடி ஆங்காரமாய் சொன்னாள் கல்பனா.

"எம் கிட்டக் கூட குழந்தையை விட நம்பிக்கை இல்லாதவளை நம்பி நீ அனுப்புனே. சினிமா போகணும்னு சொன்னபோதே 'வேண்டாம். அது சரியில்லை. இது சரியில்லை'ன்னு தட்டிக் கழிக்கப் பார்த்தவ தானே. இவ வயித்தெரிச்சல்மா வயித்தெரிச்சல்! இவளுக்கு என் மேல வயித்தெரிச்சல். இப்படி தாங்கு தாங்குன்னு தாங்கற புருஷன் இவளுக்கு மட்டும் கிடைச்சிருக்கானேன்னு வயித்தெரிச்சல். அவரு நல்லா சம்பாதிக்க, நாங்க ரெண்டு பேரும் நல்லபடியா வாழறேங்கற வயித்தெரிச்சல்.

இவ வயித்தெரிச்சல் தான் என் வயித்தில வளந்துட்டு வந்ததையும் நெருப்பு மாதிரி எரிச்சிடுச்சுமா... எரிச்சிடுச்சு... ஐயோ... ஐயோ..."

கல்பனா வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அலறி அழ, துளசி கண்களையும், காதுகளையும் இறுக மூடிக் கொண்டு, அழுதபடி வெளியே ஓடினாள்.

## 16

சமையலறையில் வாழையிலைகளின் கீழே பேப்பர் வைத்து, இலைகளில் இட்லிகளை வைத்துப் பொட்டலம் கட்டிக் கொண்டிருந்தாள் லலிதா. பக்கத்திலேயே துளசியும் புளியோதரையை பொட்டலமாகக் கட்டிக் கொண்டிருந்தாள்.

வாசலில் கல்பனாவின் கணவன் மோகனின் கூப்பிடும் குரல் கேட்டது, இரைச்சலாய்.

"கல்பனா... கல்பனா..."



பொட்டலம் கட்டி முடித்த லலிதா பரபரப்பாக ஹாலுக்குப் போனாள்.

ஹாலில் கல்பனாவின் பெட்டி தயாராய் இருந்தது. கல்பனாவும் நன்றாக உடுத்திக் கொண்டு பயணத்திற்கு தயாராக இருந்தாள்.

கிருஷ்ணமூர்த்தி காயத்ரியை தன் மேல் உட்கார வைத்துக் கொண்டு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தவர், மோகனின் குரல் கேட்டதும் எழுந்துக் கொண்டார்.

மோகனின் குரலில் ஒரு வித கடுமையாய் இருந்ததால், அனைவரும் வாசலுக்கு விரைந்தனர்.

மோகன் வீட்டின் வாசற்படியில் நின்றிருந்தான். பின்னால் டாக்ஸி ஒன்று நின்றிருந்தது.

கிருஷ்ணமூர்த்தி பரபரப்பாக படி இறங்கி, மோகன் கையைப் பிடித்து கொண்டு, அவனைப் பார்த்துப் புன்னகைத்தார்.

"வாங்க மாப்பிள்ளை... உள்ளே வாங்க..."

"இப்ப நான் உள்ள வந்து என்ன ஆவப் போவுது? கல்பனா ரெடியா?" என்றான் கோபமாக.

கிருஷ்ணமூர்த்தி அவன் கோபம் கண்டு துணுக்குற்றார்.

"மாப்பிள்ளை.... உள்ளே வாங்க...." என்றார் சின்ன பதட்டத்துடன்.

"மாப்பிள்ளை, உள்ளே வாங்க டிபன் ரெடியா இருக்கு. சாப்டுட்டு உடனே கெளம்பலாம்...." என்றாள் லலிதாவும் முகத்தில் புன்னகையுடன்.

மோகன் வரமுடியாது என்பது போல மறுப்பாய் தலையசைத்தான்.

"கல்பனாவை அனுப்பி வையுங்க. நான் அவளை கூட்டிட்டுப் போகத்தான் வந்தேன். டிபனெல்லாம் சாப்பிட வரல..."

MithraVintha

மோகனின் பிடிவாதத்தைக் கண்டு லலிதா, பக்கத்தில் இருந்த கல்பனாவிடம் கெஞ்சினாள்.

"கல்பனா... மொதல்ல மாப்பிள்ளையை உள்ளே வரச் சொல்லும்மா..."

கல்பனா சற்று பிகு பண்ணி விட்டு, மோகனை அழைத்தாள்.

"உள்ளே தான் வாங்களேன்... வாசல்ல நின்னுட்டிருந்தா, அக்கம் பக்கம்லாம் வேடிக்கைப் பார்க்குது..."

இத்தனை நேரம் கிருஷ்ணமூர்த்தியும், லலிதாவும் வருந்தி வருந்தி அழைத்தபோது உள்ளே வர மறுத்த மோகன், கல்பனாவின் வார்த்தைக்கு மதிப்பளித்து உள்ளே வர, கல்பனாவிற்கு பெருமை பிடிபடவில்லை. அங்கிருந்தே திரும்பி, வீட்டின் உள்ளே கிச்சனில் இருந்துக் கொண்டே வெளியே வாசலில் நடப்பதை யெல்லாம் கவனித்துக் கொண்டே, கட்டிய சாப்பாடுப் பொட்டலங்களை ஒரு கவரினுள் வைத்துக் கொண்டிருந்த துளசியை நோக்கி ஒரு பார்வையை வீசினாள். அந்தப் பார்வையில், 'பார் என் புருஷன் எப்படி எனக்கு அடங்கியிருக்கிறான்' என்ற செய்தியை தனக்கு கல்பனா தெரிவிக்க விரும்புவதை புரிந்து கொண்ட துளசியின் இதழ்களில் ஒரு சிறிய இளமுறுவல்.

மோகன் உள்ளே வந்து விறைப்பாக நாற்காலியில் அமர்ந்தான்.

துளசி காயத்ரியைத் தூக்கிக் கொண்டு ஒரு ஓரமாய் நின்றாள்.

"உங்களுக்கு எங்க மேலல்லாம் கோபம்னு புரியுது... ஆனா..." என்று மெள்ள பேச்சை ஆரம்பித்தார் கிருஷ்ணமூர்த்தி.

மோகன் கோபத்துடன் இரண்டு கைகளையும் அறைந்து கும்பிட்டான்.



"இல்ல, ரொம்ப சந்தோஷம் எனக்கு?" என்றான். சற்றுநேரம் ஒன்றும் பேசாமல் மௌனமாய் இருந்தான். அவன் மௌனம் எல்லோரையும் பயத்தில் கட்டிப் போட்டது.

" எப்படி கோபம் வராம இருக்கும்? எங்க ஊர்ல இல்லாத ஆஸ்பத்திரியா இல்லை டாக்டரா? என்னவோ உங்க கூடல்லாம் இருக்கணும்னு இவ அடம் பிடிச்சான்னு தானே இங்க கொண்டு வந்து விட்டேன்... ஒரு குழந்தைக்காக கல்யாணம் ஆனதுலேர்ந்து எத்தனை வருஷமா நாங்க ஏங்கிட்டிருக்கோம்னு உங்களுக்குத் தெரியுந்தானே?"

"தப்புதான் மாப்பிள்ளை, தப்பு தான்..." என்றாள் லலிதா. திரும்பி துளசியை ஓரப் பார்வையால் பார்த்தாள்.

"எல்லாருமே பொறுப்பா நடந்துப்பாங்கன்னு நம்பி நான் விட்டது தப்புதான்..."

துளசியின் முகம் வேதனையில் வாடியது.

"குழந்தை வேணும்னு நீங்க ஏங்கின மாதிரி தான் ஒரு பேரனோ பேத்தியோ வேணும்னு நானும் ஏங்கிட்டிருந்தேன்... என்னமோ நடக்கக் கூடாதது நடந்து போச்சி... இன்னொரு தடவை இப்படி நடக்காது..." என்றாள் லலிதா.

"இன்னொரு தடவை இப்படி நடக்காது... ஏன்னா, வயித்துல குழந்தையோட இன்னொரு தடவை நான் இங்கவந்து நிக்க மாட்டேன்..." என்றாள் கல்பனா வெடுக்கென்று.

"கல்பனா அப்படியெல்லாம் பேசாதம்மா...." என்றார் கிருஷ்ணமூர்த்தி அடிபட்ட குரலில்.

லலிதாவின் கண்களில் கண்ணீர் தளும்பியது.

"டாக்ஸியை ரொம்ப நேரம் வெயிட்டிங்கில் போட முடியாது கல்பனா....." என்றான் மோகன். எழுந்து தயாராய் வைக்கப்பட்டிருந்த கல்பனாவின் பொருட்களை எடுத்துக் கொண்டான்.

MithraVintha

லலிதா கண்ணீரை துடைத்துக் கொண்டு, சாப்பாடு கவரை எடுத்து கல்பனாவிடம் கொடுத்தாள்.

"இட்லி தனியா, சாதம் தனியா ரெண்டு ரெண்டு பொட்டலம் வச்சிருக்கேன்... மாப்பிள்ளைக்குப் பிடிக்குமேன்னு வடு மாங்கா ஒரு சின்ன பாட்டில்ல வச்சிடுக்கேன்..."

கல்பனா அதிருப்தியாய் முகஞ்சுளித்து, விருப்பம் இல்லாதது போல் அந்தப் பையை வாங்கிக் கொண்டாள்.

மிச்சமிருந்த ஒரு பயணப் பையை கிருஷ்ணமூர்த்தி தூக்கிக் கொண்டார்.

மோகன் துளசியின் பக்கம் திரும்பிப் பார்த்து, நட்பும் இல்லாமல் விரோதமும் இல்லாமல் பொதுவான முக அசைப்போடு விடைபெற்றுக் கொண்டான்.

"வரோம்... டாட்டா காயத்ரி பாப்பா..."

துளசி ஆமோதிப்பாக தலை அசைத்தாள்.

"வரேம்ப்பா... வரேம்மா... பாலாஜி வந்ததும் சொல்லிடு..."

கல்பனாவைப் பார்த்து குழந்தை காயத்ரி கை ஆட்டினாள். ஆனால் கல்பனா அதை கவனிக்காதவள் போல் துளசியையும் உதாசீனம் செய்து விட்டு வாசல் படி இறங்கினாள்.

கல்பனாவும், மோகனும் டாக்ஸியில் ஏறி, டாக்ஸி தெரு முனை திரும்பும் வரையிலும் பார்த்துக் கொண்டு ன்றிருந்தார்கள் லலிதாவும், கிருஷ்ணமூர்த்தியும்.



# 17

**வீ**டு இரவின் ஆட்சியில் அமைதியாய் இருந்தது.

உள் அறையில் இருந்து லேசான வெளிச்சம் ஹால் வரை கசிந்துக் கொண்டிருந்தது.

அறையில் துளசி மேஜையின் முன் உட்கார்ந்திருந்தாள். மேஜை விளக்கு எரிந்துக் கொண்டிருந்தது. மேஜையின் மேல் திருத்தப்பட வேண்டிய நோட்டுப் புத்தகங்கள்.

துளசியின் கண்கள் எதிரில் இருந்த சுவரை வெறித்துக் கொண்டு இருந்தன. அவளது கவனம் முழுவதும் கடந்த இரண்டு தினங்களில் நடந்து முடிந்த வீட்டு சம்பவங்களையே அசைப் போட்டுக் கொண்டிருந்தது.

கல்பனா தியேட்டரில் தள்ளப்பட்டு கீழே விழுந்ததும், கரு கலைந்து போய்விட்டது என டாக்டர் அறிவித்ததும், மோகன் வந்து கல்பனாவை கோபத்துடன் அழைத்து சென்றதும், லலிதா சொல்லி சொல்லி துளசியை குத்திக் காட்டிக் கொண்டிருப்பதுமாய் அவள் நினைவுகள் நிகழ்ச்சிகளை மறுபடி மறுபடி ரீவைண்ட் செய்து பார்த்துக் கொண்டிருந்தன. அவளால் அந்த நிகழ்வுகளை மறக்க முடியவில்லை.

அறைக்குள் தேநீர்க் கோப்பையை எடுத்துக் கொண்டு நுழைந்தார் கிருஷ்ணமூர்த்தி.

துளசி நிமிர்ந்து பார்த்தாள். அவள் நிமிர்ந்ததும், அவளைப் பார்த்து புன்னகைத்தார் கிருஷ்ணமூர்த்தி.

"டீம்மா..."

கோப்பையை மேஜை மேல் வைத்துவிட்டு ஒன்றிரண்டு நோட்டுப் புத்தகங்களை எடுத்துப் புரட்டினார். அவர் முகத்தில் குழப்ப ரேகை.

MithraVintha

"என்னம்மா இது. இன்னும் ஒரு நோட்டு கூட கரெக்ட் பண்ணலை?"

கேட்டுக் கொண்டே நிமிர்ந்து துளசியின் முகத்தைப் பார்த்தவர், அவள் கண்கள் கலங்கியிருப்பதைப் பார்த்தார்.

"என்னம்மமா?" என்றார் கனிவுடன்.

"கல்பனாவோட கர்ப்பம் கலைஞ்சதுக்கு நான் தான் காரணம்னு அம்மா நெனைக்கிறாங்கப்பா... ஆனா எம்பேர்ல தப்பே இல்லப்பா... நான் க்யூவுல சொல்லிட்டுப் போயிருந்தேன்... கல்பனா எழுந்து வராம இருந்திருந்தா நானே டிக்கெட் வாங்கி குடுத்திருப்பேன்பா."

"உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதாம்மா?"

"அம்மாவோட பேச்சையும், பார்வையையும் என்னால தாங்க முடியலப்பா. என்னை பார்க்கும் போதெல்லாம் அம்மாவுக்கு ஆத்திரம் பொத்துக்கிட்டு வருதுப்பா..."

"எல்லாம் சரியாப் போயிடும்மா..."

"பாலாஜிக்கும் நான் இங்க இருக்கறது பிடிக்கலைப்பா..."

"அவனுக்கு முரட்டு சுபாவம், வேறொண்ணுமில்லமா..."

"இல்லப்பா. இது சத்திரமா, வீடான்னு அடிக்கடி கேக்கறான்... இது என் வீடு. நீ சும்மா ஒண்டிக்க வந்தவன்னு அப்பப்ப குத்திக் காட்டறான்... என்னால ரெண்டு பேருமா சேர்ந்து உங்களையும் அவமானப்படுத்தறாங்கப்பா..."

கிருஷ்ணமூர்த்தியின் மனதில் லேசாய் நெருடல். துளசியை நேருக்கு நேர் பார்ப்பதை தவிர்த்தார்.

"இல்லம்மா..... உன்னால எனக்கு எந்த அவமானமும் இல்லம்மா... சொல்லப் போனா, எம்மேல இருக்கிற கோபத்தைத் தான் உங்கம்மாவும், பாலாஜியும் உன் மேல கொட்டறாங்க..."

"உங்க பேர்ல அவங்க ரெண்டு பேருக்கும் என்னப்பா கோபம் இருக்க முடியும்? இந்த மாதிரி ஒரு நல்ல மனுஷர்



புருஷனா, அப்பாவா கெடைக்க அவங்க கொடுத்து வச்சிருக்கணும்ப்பா..."

"என்ன இருந்தாலும், வேலையைத் தொலைச்சிட்டு வந்து நிக்கறேன் இல்ல?" என்றார் கிருஷ்ணமூர்த்தி சமாளிப்பாய்.

"அப்பா, நான் ஒண்ணு கேட்டா தப்பா நெனைச்சுக்க மாட்டீங்களே?"

துளசி இப்படி கேட்டதும் கிருஷ்ணமூர்த்தி முகத்தில் ஒரு சின்ன பதட்டம். தன் விஷயம் துளசிக்குத் தெரிந்துவிட்டதோ என்ற கவலை அவர் முகத்தில் புலப்பட்டது.

"கேளும்மா..." என்றார் அவருக்கே கேட்காத குரலில்.

"சின்னதா ஒரு தனி போர்ஷன் பார்த்துக்கிட்டு போயிட்டுமாப்பா?"

கிருஷ்ணமூர்த்தி திடுக்கிட்டார்.

"ஏம்மா...?"

"நான் இருக்கிறது பாலாஜிக்கும் உறுத்தலா இருக்கு... அம்மாவை பார்க்க எனக்கும் சங்கடமா இருக்கு..."

"என்னம்மா நீ இப்படியெல்லாம் பேசறே? அப்படியெல்லாம் உன்னைத் தனியா அனுப்ப முடியாதும்மா..." என்றார் கவலையுடன்.

"நீங்களும் என்கூட வந்துருங்களேன்பா... இங்கயே பக்கத்துலயே ஒரு சின்ன போர்ஷனாப் பார்த்துக்கிட்டு நாம போயிடுவோம்..."

"ரொம்ப தப்பாயிடும்மா. உங்கம்மாவுக்கு உம்மேல ஆசைதாம்மா... கல்பனாவோட கர்ப்பம் கலைஞ்சதும், கொஞ்சம் தடுமாறிப் போயிட்டா... அவ புருஷன் வேற வந்து கோபத்துல கத்திட்டுப் போனானா, அதை நெனைச்சு அந்தக் குழப்பத்துல ஏதாவது கோபமாப் பேசியிருப்பா..."

MithraVintha

"இல்லப்பா... இப்பல்லாம் அம்மாவுக்கு என்னைப் பிடிக்கறதே இல்லை.. நான் தனியாப் போயிட்டாலாவது.."

"அட... சும்மாயிரும்மா... தனியாப் போறேன், தனியாப் போறேன், தனியாப்போறேன்னு சொல்லிக்கிட்டு..." என்றார் உரிமை கலந்த அதட்டலோடு. அவள் தலையை வருடி ஆதரவாய் எல்லாம் கொஞ்ச நாள்ல சரியாப் போயிடும்மா..." எனக்காக கொஞ்சம் பொறுத்துக்கம்மா.. தயவு செய்ஞ்சு இனிமே தனி வீடுங்கற பேச்சே எடுக்கக்கூடாது, ம்ம்?" என்றார்.

துளசி அவரை எதிர்த்து எதுவும் சொல்ல முடியாமல் தலை குனிந்தாள்.

"இரு.. இந்த டீ ஆறிப் போச்சு.. சூடாப் போட்டு இன்னொரு கப் எடுத்திட்டு வரேன்.."

டீக்கோப்பையை எடுத்துக் கொண்டு கிருஷ்ணமூர்த்தி விலக, துளசி அவர் பாசத்தில் நெகிழ்ந்து போனாள்.

## 18

விஜயதசமி.

பள்ளிக் கூடம் விழாக் கோலம் பூண்டிருந்தது.

வராண்டா எங்கும் வண்ண வண்ணத் தோரணங்கள்.

மைதானம் எங்கும் பெரிய பெரிய கோலங்கள். கோலங்கள் கண்ணை கவரும் வண்ணங்களில் நெஞ்சை பறித்தன. கோலங்களை சுற்றி மாணவ மாணவிகளின் கூட்டம். ஆசிரியைகளும், பள்ளி ஊழியர்களும் திருநாளின் பரபரப்போடு அவரவர் வேலையில் ஆழ்ந்திருந்தனர்.

வகுப்பு அறைகளில் கதவுகள் எல்லாம் சந்தனம் தெளிக்கப்பட்டு அழகாய் பளிச்சென்று இருந்தன.



ஸ்டேஷனரி கடையும் தோரண காகிதங்கள் எங்கும் அலங்கரிக்க புதுப்பொலிவோடு இருந்தது. அலமாரிகள் பூக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பூக்களால் ஆன தோரணங்கள் அலமாரிகளை சட்டம் போல சுற்றப்பட்டிருந்தன. சுவற்றில் மாட்டப்பட்டு இருந்த சரஸ்வதியின் படத்திற்கு பூ வைத்துக் கொண்டிருந்தாள் நந்தினி. பூ வைத்து விட்டு திரும்பியவளின் பார்வையில் பட்டார்கள் பள்ளிக்குள் நுழைந்த துளசியும், அவள் கையைப் பற்றியிருந்த காயத்ரியும்.

காயத்ரி புதிதாய் சீருடை உடுத்தி, பள்ளியில் சேருவதற்காக அழைத்து வரப்படுகிறாள் என்பது அவளது முக உணர்ச்சியில் நன்றாக தெரிந்தது. புதிதான ஒரு இடத்திற்கு வந்து விட்ட பிரமிப்பும், திகைப்பும் அவள் விழிகளில். வாய் பிளக்காத குறையாய் ஒவ்வொன்றையும் விழிகள் விரித்து ஆச்சரியமாய் பார்த்தாள் காயத்ரி. பரந்த மைதானம். அதில் நிறைந்த கோலங்கள். சுற்றி வளைத்திருந்த பள்ளி மாணவர்கள். வண்ண காகித தோரணங்கள் எல்லாம் அவளுக்கு புதியதாய் இருந்தது போல ஒரு பார்வை. புதியதை கண்டு மிரண்ட பார்வை அல்ல. எல்லாவற்றையும் ஒரு சேர கண்ணில் தக்க வைத்துக் கொள்ள துடிக்கும் பார்வை. அவளின் பிஞ்சு நடைக்கேற்ப அவளின் தோளில் மாட்டியிருந்த வாட்டர் பாட்டில் முன்னும் பின்னும் ஆடியது.

அவர்களைப் பார்த்ததும் நந்தினியின் முகம் மலர்ந்தது.

"வா,வா, வா... குட்டிப் பாப்பா எங்கே வந்திருக்கு?"

"நான் ஒண்ணும் குட்டிப் பாப்பா இல்ல... இன்னிக்கு ஸ்கூல்ல சேரப் போறேன்..."

நந்தினி காயத்ரியின் பதிலில் திகைத்து, உடனே மலர்ந்து சிரித்தாள்.

"அடி சக்கை..."

துளசி காயத்ரியின் தலையை அன்பாக வருடினாள். நந்தினியைப் பார்த்து புன்னகைத்தாள்.

MithraVintha

"விஜயதசமியாயிருக்கே... ஸ்கூல்ல போட்டுரலாம்னு அழைச்சிட்டு வந்தேன்..." என்றாள்.

"ஒரு நிமிஷம்..." என்றாள் நந்தினி.

திரும்பி தன் கடையின் உள்ளே பரபரவென்று இயங்கினாள். ஆரம்ப வகுப்பு குழந்தைகள் பயன்படுத்தக் கூடிய ஸ்லேட், பல்ப்பம், அணில் ஆடு புத்தகம், ஏபிஸி புத்தகம், ரைம்ஸ் புத்தகம், ஒரு நோட் புக் எல்லாவற்றையும் எடுத்து கவுன்டரின் மேல் வைத்தாள். காயத்ரியை தூக்கிக் கொண்டாள். கன்னத்தில் அழுத்தமாக ஒரு முத்தம் கொடுத்தாள்.

"என்னோட பட்டுக்குட்டிக்கு என்னவெல்லாம் எடுத்து வெச்சிருக்கேன் பார்த்தியா? எனக்கு ஒரு முத்தம் கொடுத்தா எல்லாம் உனக்குத் தான்!"

காயத்ரி 'பச்சக்' என்று நந்தினிக்கு முத்தம் தந்தாள்.

நந்தினி அழகாக ஒரு பை எடுத்து அதில் காயத்ரிக்காக எடுத்து வைத்த எல்லா பொருட்களையும் வைத்து காயத்ரியின் கையில் தந்தாள்.

துளசி தன்னிடமிருந்த பர்ஸைத் திறந்தாள்.

"எவ்வளவு ஆச்சு, நந்தினி?"

"கொடேன் ஒரு லட்சம்!"

"ஏய்!"

"பின்னே என்ன? இது எங்க வீட்டுக் குழந்தை! இதுக்குக் கொடுத்த ஸ்லேட்டுக்கும், பல்பத்துக்கும் காசு வாங்கற அளவுக்கு நான் அல்பம்னு நெனைச்சியா?"

"நந்தினி. என்ன இருந்தாலும், இதுக்கெல்லாம் நீ கணக்கு கொடுத்தே ஆகணும்!"

நந்தினி காயத்ரியின் முகத்தை தன் பக்கம் திருப்பினாள்.



"இன்னொரு வார்த்தை பேசினாங்கன்னா உங்கம்மா கூட 'கா' விட்டுடுவேன்னு சொல்லு கண்ணு!" என்றவள் துளசியை திரும்பி பார்த்து முறைத்தாள்.

"வெளையாட்டா சொல்லலை... நெஜமாத்தான் சொல்றேன். நம்ம ரெண்டு பேருக்குள்ள கணக்கெல்லாம் பார்த்தியோ, அப்புறம் நீ யாரோ, நான் யாரோ தான்! ஆமா... சொல்லிட்டேன்!"

துளசி நெகிழ்ச்சியோடு புன்னகைத்து பர்ஸை மூடினாள்.

நந்தினி காயத்ரியை இறக்கி விட, அவளை கைப்பிடித்து ஹெட் மாஸ்டர் தமிழரசன் அறை நோக்கி நடந்தாள்.

ஹெட்மாஸ்டர் தமிழரசனின் அறை.

துளசி மூடப்பட்டிருந்த அறைக் கதவை மெல்லத் தட்டினாள். தட்டி விட்டு, கதவு திறந்து காயத்ரியை அழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.

மேஜையின் மேல் பரப்பி வைத்துக் கொண்டிருந்த ரிஜிஸ்தரில் பக்கங்களைப் புரட்டி ஏதோ குறிப்பெடுத்துக் கொண்டிருந்த ஹெட்மாஸ்டர் தமிழரசன் நிமிர்ந்து பார்த்தார். அவர்களைப் பார்த்தவுடன் முகம் மலர்ந்தார்.

"வாம்மா..."

"நான் சொன்னேனே சார். என் பொண்ணு காயத்ரி. அவளை இன்னிக்கு ஸ்கூல்ல சேர்க்கலாம்னு அழைச்சிட்டு வந்திருக்கேன்..."

"வெரி குட்! இங்க வாம்மா" என்றார் காயத்ரியைப் பார்த்து.

காயத்ரி துளசியின் கையை விட்டு விட்டு ஹெட்மாஸ்டர் தமிழரசன் பக்கத்தில் போய் நின்றாள்.

"உம் பேரு என்னம்மா?"

"எங்கம்மா இப்பதான உங்ககிட்ட சொன்னாங்க - காயத்ரின்னு... எஸ்.காயத்ரி!"

MithraVintha

துளசியின் முகத்தில் குழந்தை வெடுக்கென்று பேசிவிட்டதே என்று சின்ன பதைப்பு. அவசரமாய் ஹெட்மாஸ்டர் தமிழரசனின் பக்கம் திரும்பினாள்.

ஹெட்மாஸ்டர் தமிழரசன் முகத்தில் சந்தோஷ திகைப்பு.

"உங்கம்மாவும் இந்த ஸ்கூல்ல தான் படிச்சாங்க, தெரியுமா?"

தெரியும் என்பது போல் தலையாட்டினாள் காயத்ரி.

"உங்கம்மா மாதிரி நீயும் நல்லாப் படிக்கணும்... நெறைய்ய ப்ரைஸ் எல்லாம் வாங்கணும்... என்ன?"

"நான் எங்கம்மா விடவும் நல்லாப் படிப்பேன்..." என்றாள். கைகளை அகல விரித்து "நெறைய்ய மார்க் வாங்குவேன்..." என்றாள்.

ஹெட்மாஸ்டர் அந்த பதிலில் மகிழ்ந்து மேஜை டிராயர் திறந்து ஒரு சாக்லேட்டை எடுத்து நீட்டினார்.

"ஒண்ணு தானா?"

கை நீட்டி சாக்லேட்டை வாங்காமலே கேட்டாள் காயத்ரி.

ஹெட்மாஸ்டர் தமிழரசன் புன்னகைத்தார்.

"உனக்கு எவ்வளவு வேணும்?"

"எனக்கு ஒண்ணு போதும்.... ஆனா என் ஃப்ரெண்ட்ஸுக்கெல்லாம் கொடுக்கணுமே!"

"ஏய், உனக்கு யாரு ஃப்ரெண்ட்?"

துளசி செல்ல அதட்டலாய் கேட்டாள்.

"என் கூடப் படிக்கறவங்கள்ளாம் என் ஃப்ரெண்ட்ஸ் தானம்மா...?"

ஹெட்மாஸ்டர் தமிழரசன் காயத்ரியின் பதிலைக் கேட்டு வாய் விட்டு சிரித்தார்.

"ஊஹூம்... நீ தோத்துட்ட துளசி... பேசாம அது கேக்கறத கொடுத்திட வேண்டியது தான்!"



கை நிறைய சாக்லேட்டுகளை மேஜை டிராயரில் இருந்து அள்ளி காயத்ரியிடம் கொடுத்தார்.

காயத்ரி அவரை நெருங்கி தன் ஸ்கூல் பையை திறந்துக் காட்டினாள்.

காயத்ரி திறந்து காட்ட, ஹெட்மாஸ்டர் தமிழரசன் பையினுள்ளே சாக்லேட்டுகளை போடுவதை சந்தோஷ முகத்துடன் பார்த்தாள் துளசி.

## 19

அன்று ஞாயிற்றுக் கிழமை.

விடுமுறை தினம் என்றாலே உடம்புக்குள் ஒரு மெத்தனம் புகுந்து விடுகிறது. அன்றைக்கும் மற்ற தினங்களைப் போல சீக்கிரம் எழுந்து பரபரவென்று எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டு முழு நீண்ட நாளும் ஒய்வாக இருக்கலாம் ஆனால் யாரும் அப்படி இருக்க விரும்புவதில்லை.

சூரியன் தன் படுக்கையை விட்டு எழுந்து நம் முகத்தில் லேசான சூட்டை செலுத்திய பின்பும் படுக்கையை விட்டு எழவே மனசில்லாமல் எழுந்து முழுப் பேப்பரை படிக்கும் வரையில் பல் துலக்கி, மிச்சம் மீதி பகுதிகளை காஃபியை துளித்துளியாய் பருகியபடிபடித்து முடித்து, வாசலில் இறங்கி அக்கம் பக்கம் வேடிக்கை பார்த்து, குளிக்காமலேயே டிபன் சாப்பிட்டு, சின்னதாய் மறுபடி ஒரு குட்டித் தூக்கம் போட்டு எழுந்து குளித்து வயிறு முட்ட சாப்பாடு சாப்பிட்டவுடன் மறுபடி முடிந்தால் இன்னொரு தூக்கமும் துங்கி எழுந்த பின், அந்த நாளின் பொழுது வீணாய் போய்விடக் கூடாது என்பதற்காக ஏதாவது செய்ய வேண்டுமே என்பதற்காக செய்ய நினைக்கும் போது அன்றைய தினம் முடிவிற்கு வந்திருக்கும்.

MithraVintha

துளசிக்கும் மிகவும் சோம்பலாக இருந்தது. அவளுக்கென்றே காத்திருப்பது போல் தலைக்கு மேல் ஏகப்பட்ட வேலைகள்.

வாரம் முழுவதும் முடியாமல் தள்ளிப் போடப்பட்டிருந்த துவைக்கும் வேலை தான் அவளுக்கு மலைப்பாய் இருந்தது. நான்கு புடவைகள், அதனுடைய மாட்சிங் பிளவுஸ்கள், இன்ஸ்கர்ட்டுகள் எல்லாம் சேர்ந்து ஒரு முழு பக்கெட்டில் காலை முதல் சோப்பு நீரில் ஊறிக்கொண்டிருந்தன.

காலையில் சாப்பிட்டு முடித்த டிபன் பாத்திரங்கள் கிச்சன் ஸிங்கில் காத்திருந்தன.

முதல் நாள் இரவு நண்பர்களுடன் சினிமா செகண்ட் ஷோ பார்த்துவிட்டு லேட்டாய் வந்த பாலாஜி மணி பத்தாகியும் எழுந்திரிக்காமல் தூங்கிக் கொண்டிருந்தான். லலிதா, பக்கத்து வீட்டு அம்மாள் 'துணைக்கு வாயேன்' என்று கூப்பிட அவளோடு ஆஸ்பத்திரி வரை போயிருந்தாள். அதனால் பாலாஜி எழுந்தால் அவனுக்கு டிபன் செய்து தர வேண்டிய வேலையும் சேர்ந்திருந்தது.

எல்லாம் போதாது என்று குழந்தைகளின் வகுப்பு கட்டுரை நோட்டுகள் வேறு மேஜையில் அவளுக்காக உட்கார்ந்திருந்தன.

கிருஷ்ணமூர்த்தி குழந்தை காயத்ரியுடன் ஹாலில் உட்கார்ந்திருந்தார். காயத்ரியின் கையைப் பிடித்து, அவளுக்கு ஏபிஸி எழுத கற்றுக் கொடுத்து கொண்டு இருந்தார். அவளோ அவரின் கையை தள்ளி தள்ளி விட்டுக் கொண்டு, தானே எழுத முயற்சிப்பதைப் பார்த்த அவரின் முகத்தில் பேத்தியை பற்றிய சந்தோஷ பெருமிதம். காயத்ரி ஸ்கூலுக்கு போக ஆரம்பித்த நாளில் இருந்து தாத்தாவின் ஓய்வு நேரத்தில், தாத்தாவுக்கும் பேத்திக்கும் இது தான் வேலை.

தாத்தாவையும், பேத்தியையும் பார்த்து ரசித்துக் கொண்டிருந்த துளசிக்கு அவருக்கு ஆபீஸுக்கு கிளம்பிப் போக நேரமாகி விட்டது என்பது நினைவுக்கு வந்தது.



"அப்பா... என்ன ஆபீஸுக்கு கிளம்பலையா? நேரமாய்டுச்சு..."

"அட ஆமாம்மா... போகணும் ஆனா இந்த பொண்ணு பண்ற கூத்தை பார்க்க பார்க்க எல்லாமே மறந்து போயிடுது. கொஞ்ச நேரத்தில் குளிச்சிட்டு கிளம்பறேன்." என்றார் கிருஷ்ணமூர்த்தி. தனியார் அலுவலகத்தில் வேலை செய்வதால் ஞாயிற்றுக்கிழமையும் ஆபீஸ் வேலை என்பதை துளசி ஏற்றுக் கொண்டிருக்கிறாள் என்பது கிருஷ்ணமூர்த்திக்குத் தெரியும். ஞாயிறுக்கு. ஞாயிறு ஆபீஸ் போகாமல், நந்தினியைத்தான் பார்க்கப் போகிறார் அவர் என்பது துளசிக்குத் தெரிந்தால் என்ன ஆகும் என கலக்கத்துடன் நினைத்தார் கிருஷ்ணமூர்த்தி.

அந்தக் கலக்கம் அவரை குளியல் அறைக்குச் செல்ல விடாமல் கட்டிப் போட்டது.

சிரித்துக் கொண்டே துளசி கிச்சனில் நுழைந்தாள். கிடுகிடுவென எல்லா பாத்திரங்களையும் தேய்த்துப் போட்டாள்.

மறுபடி ஹாலுக்கு வந்தபோதும் கிருஷ்ணமூர்த்தி காயத்ரியுடன் இன்னும் விளையாடிக் கொண்டிருந்தார்.

"அப்பா... கிளம்பலையா இன்னும்?" என்றாள்.

"நீ இவ கூட கொஞ்சம் உக்காரும்மா... நான் குளிச்சிட்டு வரேன்..."

"இல்லப்பா... எனக்கு துவைக்கிற வேலை வேற இருக்கு... நீங்க குளிக்கப் போங்க... நான் துணி துவைச்சுகிட்டே அவளை அப்பப்ப கவனிச்சுக்கிறேன்" என்றாள். காயத்ரியிடம் குனிந்தாள்.

"நீ அம்மா கூட பின்னாடி வர்றியா... நீ பார்த்துக்கிட்டே இருப்பியாம்... அம்மா சீக்கிரம் துவைச்சுப் போட்டு வருவேனாம்... என்ன வர்றியா?" என்றாள் குழந்தையிடம்.

"அம்மா..... ம்மா.... நான் இங்கயே விளையாடிட்டு இருக்கேன்மா..." என்றாள் துளசியின் முகவாயைப் பிடித்து கெஞ்சினாள்.

"அம்மாவோட பின்னால வர்லையா?"

"ம்ஹூம்... நான் இங்கயே இருக்கேன்மா..." என்றாள் மறுபடியும் கெஞ்சலாய்.

"சரி. ஆனா எந்த வம்பும் பண்ணாம குட் கேர்ளா விளையாடிட்டு இருக்கணும் என்ன?"

"ம்... சரிம்மா..."

துளசி காயத்ரியின் கன்னத்தில் அழுத்தமாய் ஒரு முத்தமிட்டு கொல்லைப் புறத்திற்கு போனாள்.

கிருஷ்ணமூர்த்தியும் துண்டு எடுத்துக் கொண்டு குளியலறையில் நுழைந்தான்.

துளசி கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்து இரண்டு வாளிகளில் நிரப்பினாள். நனைத்து வைத்திருந்த துணிகளை துவைக்க ஆரம்பித்தாள்.

கிருஷ்ணமூர்த்தி குளித்து முடித்து. ஈரத் தலையை துண்டால் துவட்டிக் கொண்டே வீட்டினுள் நுழைந்த மறு விநாடி. பதட்டத்தில் அலறினார்.

"துளசீசீசீ..."

துணி துவைத்துக் கொண்டிருந்த துளசி, அந்த அலறல் கேட்டவுடன், பதறி அடித்து உள்ளே ஓடி வந்தாள். அவள் கண்ட காட்சி அவளுடைய இதயத் துடிப்பை ஒரு கணம் நிறுத்தியது. காலுக்கு கீழே பூமி நழுவி விட்டாற் போல தோன்றியது.

ஹாலில் காயத்ரி மயங்கி சரிந்திருந்தாள். அவள் வாயில் நுரைப் பூக்கள் பூத்திருந்தன. அவள் பக்கத்தில் பாலாஜியின் மெடிக்கல் ரெப்ரஸன்டேட்டிவ் பேக் வாய் பிளந்திருக்க, ஒரு சின்ன பாட்டில். மருந்து பாட்டில் கீழே உருண்டிருந்தது. பாட்டிலின் மூடி திறந்திருந்தது. சில மாத்திரைகள் தரையில் அங்கொன்றும் இங்கு ஒன்றுமாய் சிதறியிருந்தன.



கிருஷ்ணமூர்த்தி காயத்ரியின் அருகில் மண்டியிட்டு, அவளை தன் மடியில் சாய்த்துக் கொண்டிருந்தார்.

"ஐயையோ... என்னப்பா ஆச்சி என் குழந்தைக்கு?" அலறினாள் துளசி, அவள் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

ஓடி வந்து குழந்தையை அள்ளிக் கொண்டாள். படபடவென அதன் கன்னத்தில் தட்டினாள். காயத்ரி கண் திறக்கவேயில்லை.

கிருஷ்ணமூர்த்தி ஓடிப் போய் தண்ணீர் எடுத்து வந்தார். கையில் கொஞ்சம் சரித்து குழந்தையின் முகத்தில் அடித்தார். அப்பொழுதும் கண் திறக்கவில்லை காயத்ரி.

"ஐயையோ... அப்பா... எனக்கு ரொம்ப பயமாயிருக்குப்பா... குழந்தை கண்ணையே திறக்கமாட்டேங்கறாளே..."

துளசியின் அழுகை விம்மல்களாக வெடித்தது.

வெகு திடீரென பாலாஜியின் அறைக் கதவு திறந்தது.

"என்ன ஆச்சு? ஏன் இப்படி சத்தம் போடறீங்க?" என்று எரிச்சலாய் தூக்கக் கலக்கத்துடன் வந்த பாலாஜி நிலையை பார்த்தவுடன் சட்டென தெளிந்தான்.

வேகமாக காயத்ரியின் அருகே வந்தான். கீழே உருண்டிருந்த மருந்து பாட்டிலை எடுத்துப் பார்த்தான்.

"கொஞ்சம் பவர்புல் மாத்திரை இது. ஆனாலும் பயப்படறதுக்கு ஒண்ணும் இல்ல. உடனே ஸ்டமக் வாஷ் பண்ணணும்..." என்றான் உணர்ச்சிகளற்ற குரலில்.

துளசி திரும்பி கிருஷ்ணமூர்த்தியை ஏறிட்டுப் பார்த்தாள். அவள் முகத்தில் கவலையின் ரேகை. கண்களில் இருந்து அருவி கொட்டுவது நின்றபாடில்லை.

"கிளம்புமா... டாக்டர்கிட்டே போகலாம்... ஒண்ணும் ஆகாது நம்ம காயத்ரிக்கு.... குழந்தையை தூக்கிட்டு கிளம்பு...

Mithra Vintha

பயப்படாதே..." என்றார் கிருஷ்ணமூர்த்தி. அவசரமாக சட்டையை மாட்டிக் கொண்டார்.

துளசி, கவலையும்பயமும் கலந்து அலைக்கழிக்க பெருகும் கண்ணீரோடு காயத்ரியை தூக்கிக் கொண்டு வாசலில் இறங்கினாள்.

## 20

சுவரில் துளசி சாய்ந்து உட்கார்ந்திருந்தாள்.

காயத்ரி அவள் மடியில் தலை வைத்துப் படுத்திருந்தாள். சற்று முன் நடந்த கூத்தின் விளைவாக, காயத்ரியின் முகமும் உடம்பும் சோர்ந்து வாடியிருந்தன.

துளசியின் முகத்தில் சொல்லி விவரிக்க இயலாத விடுதலையுணர்வு பரவி கிடந்தது. அவளுடைய கை அவளையறியாமல் காயத்ரியின் முதுகை வருடிக் கொண்டு இருந்தது. சற்று நேரத்தில் படாத பாடு படுத்தி தனது மனதை இம்சை பண்ணிவிட்ட காயத்ரியின் மீது கோபம் வந்தாலும், குழந்தை அறியாமல் செய்த தவறு தானே என்று புத்திக்குப் புரிந்ததால், அவளுடைய கோபம், பொங்கிய பால், அடுப்பு அணைக்கப்பட்டதும் அடங்கியது போல் தணிந்து போயிருந்தது.

குழந்தைக்கு விபரீதமாக ஒன்றும் நடந்து விடவில்லை என்று மனதை ஆற்றுப்படுத்திக் கொண்டிருந்தவளுக்கு, கிச்சனில் வேலை செய்த படி லலிதா, அவளுக்கு செய்துக் கொண்டிருந்த 'லலிதா சகஸ்ரநாம அர்ச்சனைகள்' எதுவும் காதில் விழவில்லை.

"..... ஒண்ணும் சரியில்லை! இன்னும் என்னன்ன நடக்கணுமோ இந்த வீட்ல? நாம கொஞ்சம் அப்படி இப்படின்னு எங்கயாவது போயிடக் கூடாது. இந்த வீட்ல... எல்லாம் தலைகீழ ஆயிடும்... அவ்வளவு பொறுப்பு எல்லாருக்கும்!!"



'ணங் ணங்' கென்று பாத்திரங்கள் வைக்கப்பட்டதில் அவளின் கோபம் புரிந்தது. எரிந்துக் கொண்டிருந்த அடுப்பை விடவும், அவளின் வாயிலிருந்து வெளிப்பட்ட சொற்கள் அதிக அனலை வீசின.

"இவ பெத்து வளத்ததையே இவளால ஒழுங்கா பாத்துக்க முடியலை... இவள நாம்பி நான் பெத்ததை அனுப்பி வெச்சேன் பாரு... அது என் தப்பு தான். 'வரப் போவுது. வரப் போவுது'ன்னு எதிர்பார்த்தத துடைச்சிப் போட்டு 'போயிட்டு வாம்மா'ன்னு அனுப்பி வெச்சாச்சு... வந்து வளர்ந்திட்டு இருக்கறத இதோ, எமன் வாயில் இருந்து மீட்டு வந்தாயிடுச்சு... என்ன கருமமோ இந்த வயசுல நான் எல்லாத்தையும் பார்க்கணும்னு எந் தலையில எழுதிப்புட்டான் அவன்..... கட்டிக்கிட்டவனும் சரியில்லை, புள்ளையும் சொன்ன சொல் கேக்க மாட்டேங்கிறான், பொண்ணுங்களோ... ஹம்மா ... கேக்கவே வேண்டாம்... இன்னும் நான் என்னென்ன அனுபவிக்கணுமோ... அனுபவிச்சுத்தானே ஆகணும்... ம்ம்ம்..."

லலிதா கிச்சனில் இருந்து வெளியேறி, பேசிக்கொண்டே வாசலில் போய் நின்றாள்.

துளசி நிமிர்ந்து சாய்வு நாற்காலியில் சாய்ந்து அத்தனையும் கேட்டுக் கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தியை பார்த்தாள்.

கிருஷ்ணமூர்த்தி துளசியின் பார்வையை சந்திக்க முடியாமல் கண்களை மூடிக்கொண்டார். அவர் கண்களில் ஓரங்களில் கண்ணீர் முத்துக்கள் எட்டிப் பார்த்தன.

பாலாஜியின் அறைக் கதவு திறந்து, பாலாஜி வெளியே வந்தான். வெளியில் கிளம்ப ஆயத்தமாய் 'நீட்'டாய் டிரெஸ் செய்திருந்தான். ஹாலில் இருந்த மேஜையை அணுகி, அதன் டிராயரில் எதையோ தேடி, தன் பான்ட் பின் பாக்கெட்டில் செருகினான்.

MithraVintha

"பாலாஜி..."

மிகவும் மென்மையாக அவனை அழைத்தாள் துளசி.

பாலாஜி திரும்பினான்.

"பாலாஜி... நான் ஒண்ணு சொன்னா தப்பா நெனைச்சிக்க மாட்டியே?"

துளசியின் குரல், போரில் தோற்றுப் போன அரசன், எதிரி அரசனிடம் சமாதானம் பேசும் நிலையில் இருந்தது.

பாலாஜி பார்வையிலேயே 'என்ன' என்பது போல வினவினான்.

"இனிமே உன் ஆபீஸ் பேக், குழந்தை கையில் கிடைக்கற மாதிரியெல்லாம் வச்சிட்டு போகாதே பாலாஜி..."

பாலாஜியின் முகம் சட்டென சிவந்து போனது.

"தப்பை எம்பேர்ல திருப்பப் பார்க்கறியா? மருந்து மாத்திரையெல்லாம் வச்சுக்க நான் தனி வீடு பார்த்துக்கணுமா? உனக்கு குழந்தையைப் பாத்துக்க துப்பு இல்லைன்னா அதுக்கு நான் என்ன செய்வேன்? இது எனக்கு சோறு போடற தொழிலு! இதைத் தூக்கி நான் வெளில போட முடியாது!"

கிருஷ்ணமூர்த்தி சட்டென நாற்காலியில் இருந்து எழுந்து கொண்டார்.

"பாலாஜி... துளசி தப்பா எதுவும் சொல்லலையேப்பா... எதுக்கு இப்படி கோபப் படறே?"

"அப்பா இது நம்ம வீடு. திடுதிப்புன்னு இவ குழந்தையோட வந்து நின்னா! நாம அட்ஜஸ்ட் பண்ணிகிட்டு எடம் கொடுத்தாச்சு. இன்னும் என்ன தான் எதிர்பார்க்கற இவ? இவ குழந்தைக்காக நான் தொழிலை மாத்திக்க முடியுமாப்பா?" கொஞ்சமும் கோபம் குறையாமல் கேட்டான் பாலாஜி.

துளசியின் முகத்தில் மெல்லிய வேதனை.



லலிதா கையில் ஒரு ஐஸ்க்ரீம் கப்புடன் வாசலிலிருந்து உள்ளே பரபரப்பாக நுழைந்தாள். காயத்ரியைப் பார்த்து கண்களைப் பெரிதாக்கி அவள் எதிரே ஐஸ்க்ரீம் கப்பை நீட்டி காண்பித்தாள்.

"குட்டிம்மா... ஓடியா... ஓடியா... ஓடியா... பாட்டி உனக்கு என்ன வாங்கிட்டு வந்திருக்கேன். பாரு - ஐஸ்க்ரீம்! உனக்கு பிடிச்ச பிங்க் கலர் கப் ஐஸ்க்ரீம்!"

காயத்ரி ஆர்வமாகி சட்டென துளசியின் மடியிலிருந்து எழுந்தாள். லலிதா குழந்தையை அள்ளிக் கொண்டு கொஞ்சியபடி விலகிப் போனாள்.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த பாலாஜியின் முகத்தில் வெறுப்பு.

"இப்படித்தான், அன்னிக்கு இவளை, துளசியைக் கொஞ்சிட்டிருந்தீங்க. இன்னிக்கு? இவ பொண்ணைக் கொஞ்சறீங்க... நாளைக்கு இவ பேத்தியை கொஞ்சினாலும் ஆச்சர்யப்படறதுக்கில்ல... ஆனா என்னால அதெல்லாம் முடியாது! இவளையும், இவ பொண்ணையும் உங்கள மாதிரி தங்க தாம்பாளத்தில வச்சி தாங்க முடியாது!" - சொல்லி விட்டு பாலாஜி விருட்டென வெளியேறினான்.

துளசி கண்களை இறுக மூடி பாலாஜி பேசி விட்டு போனதை அப்படியே உள் வாங்கினாள். அவள் கண்களின் ஓரங்களில் இருந்து கண்ணீர் முத்துக்கள் உதிர்ந்தன. உதட்டை கடித்து அழுகையை அடக்கினாள். கைகளால் இரண்டு பக்க நெற்றியை இறுகப் பிடித்துக் கொண்டாள். பின் சட்டென்று கண் திறந்து, கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்தாள்.

"இப்பவாவது புரியுதாப்பா - நான் ஏன் தனியாப் போகணும்னு சொல்றேன்னு?"

கிருஷ்ணமூர்த்தி அவளைப் பார்த்து லேசாய் புன்னகைத்தார்.

MithraVintha

“அவனுக்கு வாழ்க்கை இன்னும் புரியலைம்மா... இப்படித்தான் எல்லாத்தையும் எடுத்தெறிஞ்சு பேசிட்டுப் போயிடுறான். வாழ்க்கையில் அடிபட்டு பக்குவப்பட்டா வார்த்தைகள் பிறரை காயப்படுத்தாது. இதெல்லாம் நீ மனசுல வச்சுக்காதம்மா. இது அவன் வீடு மட்டுமில்லம்மா, உன் வீடும் தாம்மா!”

வெகு அமைதியான குரலில் கிருஷ்ணமூர்த்தி சொன்னதை கேட்டு துளசி தத்தளித்தாள்.

“இப்படி ஏதாவது சொல்லி சொல்லியே என் வாயை அடைச்சிருங்க!”

கிருஷ்ணமூர்த்தி மேற்கொண்டு ஒன்றும் சொல்லாமல் அங்கிருந்து விலகினார்.

தன் உணர்ச்சிகளை கட்டுப்படுத்திக் கொள்ள இயலாமல், துளசி வெடித்து அழுதாள்.

## 21

சைக்கிளில் கிருஷ்ணமூர்த்தி தெருவின் திருப்பத்தில் திரும்பியபோதே வீட்டு வாசலில் நந்தினி நின்றிருப்பது தெரிந்தது.

கிருஷ்ணமூர்த்தி எதிர்பார்த்தது தான். சைக்கிளை இன்னும் வேகமாய் மிதித்தார். என்னவோ பள்ளிக்கு அனுப்பிய பிள்ளை வர தாமதமானது போல தான் வருவதற்கு சற்று நேரமாகிவிட்டாலும் ‘என்னவோ ஏதோ’ என்ற பதட்டத்துடன் தான் நந்தினி வாசலில் காத்திருப்பாள் என்பது அவருக்குத் தெரியும். அப்படி காத்திருக்காவிட்டால் தான் ஆச்சர்யம்!



கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்ததும், முகத்தில் நிம்மதியுணர்வு பரவ, சகஜ நிலைக்கு திரும்பி, சட்டென வீட்டிற்குள் நுழைந்தாள் நந்தினி.

வீட்டை நெருங்கியதும் வேகத்தைக் குறைத்து, கிருஷ்ணமூர்த்தி சைக்கிளில் இருந்து இறங்கினார். கவனித்ததும் கவனியாதது போல் திரும்பி தெருவை நோட்டமிட்டார். தெருவில் அந்த நேரத்தில் ஒரு ஈ, காக்கைக் கூட இல்லை. சட்டென சைக்கிளை தூக்கிக் கொண்டு திறந்திருந்த கதவின் வழியே வீட்டினுள் நுழைந்தார்.

கதவுக்கு பக்கத்திலேயே, இவர் உள்ளே வருவதற்காக காத்திருந்த நந்தினி, கிருஷ்ணமூர்த்தி நுழைந்ததும், கதவை மூடி தாளிட்டாள்.

கிருஷ்ணமூர்த்தி சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தினார். மருண்ட மான்குட்டி மாதிரி நின்றிருந்த நந்தினியைப் பார்த்தார். கனிவுடன் புன்னகைத்தார். அவள் அருகில் வந்தார்.

“என்ன நந்தினி? என்னைப் பார்த்ததும் உள்ளே ஓடி வந்துட்டே?”

“ஆமா... இன்னும் வரலியே, இன்னும் வரலியேன்னு மனசு கெடந்து அடிச்சிக்கிட்டிருந்தது. வீட்டுக்குள்ளே எத்தனை நேரம் குட்டிப் போட்ட பூனை கணக்கா நடந்திட்டு இருக்கிறது? இருப்பே கொள்ளல! அதான்... வாசல்ல வந்து நின்னு நீங்க வர்றீங்களான்னு பார்த்துக்கிட்டிருந்தேன். உங்களைப் பார்த்ததும் சட்டுனு உள்ளே வந்துட்டேன்... போற, வரவங்க எல்லாம் நம்ம ரெண்டு பேரையும் சேர்த்துப் பார்த்தா, நல்லா இருக்காதுன்னு நீங்க தானே சொல்லுவீங்க...”

குனிந்த தலை நிமிராமல் மூச்சு விடாமல் நந்தினி கேட்டு முடித்தாள். நிமிர்ந்து கிருஷ்ணமூர்த்தியை பார்த்தாள்.

MithraVintha

கிருஷ்ணமூர்த்தி அவள் சொன்னது சரிதான் என்பது போல ஆமோதிப்பாய் புன்னகைத்தார். வாங்கி வந்திருந்த மல்லிகைப் பூவை அவளிடம் நீட்டினார்.

நந்தினி அதை வாங்கிக் கொண்டு, மூக்கில் வைத்து வாசம் பிடித்தாள். அந்த வாசம் நுரையீரல் முழுவதும் பரவுவதை கண்மூடி ரசித்தாள். கண்களை திறந்தாள்.

"ஏன் இவ்ளோ லேட்டு? நான் என்னவோ, ஏதோன்னு பதறிப் போயிட்டேன் தெரியுமா? என்ன புதுசா சைக்கிளையெல்லாம் எடுத்துகிட்டு..?"

"கொஞ்சம் மூச்சு விட்டுத்தான் பேசேன்... ஏன் இப்படி எக்ஸ்பிரஸ் மாதிரி ஓடறே?" என்று சிரித்தார்.

"ப்ச்... அம்மா என்னை கிண்டல் பண்ணாதீங்க..! சரி. நிதானமா கேக்கறேன். ஏன் இவ்ளோ லேட்டு?"

"அட அந்த கூத்தை ஏன் கேக்கற..? வீட்ல ஒரு பெரிய ரகளை... காயத்ரி இல்ல... காயத்ரி..."

"உங்க பேத்தி..?" என்றாள் குறும்பாய் முறுவலித்தபடி.

"என்னைக் கிழவன்னு சொல்றே? அப்படித்தானே? இருந்துட்டுப் போவுது போயேன்... என்ன இப்ப? எதனால நேரமாச்சின்னு தெரியணுமா வேணாமா ஒனக்கு?"

"சொல்லுங்க... சொல்லுங்க..."

"பாலாஜியோட மருந்துப் பையைத் தெறந்து ஒரு நாலஞ்சி மாத்திரையை முழுங்கிரிச்சி..."

"ஐயையோ..."

"வாயில நொரை தள்ளிரிச்சி... பதறியடிச்சி டாக்டர் கிட்ட தூக்கிட்டுப் போனோம் நானும் துளசியும். நம்ம கனகவேலு டாக்டர் தான். நல்ல வேளை. ஒண்ணும் ஆகலை... சரியாய்டிச்சி... கொழந்தை இப்ப சிரிச்சி விளையாடிக்கிட்டிருக்கு... இப்பத்தான் வீட்ல விட்டுட்டுப் பொறப்பட்டு ஓடி வர்ரேன்..."



கிருஷ்ணமூர்த்தி ஊஞ்சலில் உட்கார்ந்து லேசாய் ஆடினார்.

"சைக்கிள் இல்ல ஓடி வந்தது?" நந்தினி கொஞ்சம் கூட சிரிக்காமல் முகத்தை அப்பாவியாய் வைத்துக் கொண்டு கேட்டாள். ஊஞ்சலுக்கு அருகில் வந்தாள்.

கிருஷ்ணமூர்த்தி அவளை அடிக்க வருவதைப் போல் செல்லமாய் கையை ஓங்கினார்.

"அம்ஹ... இந்த எடக்குக்கு ஒண்ணும் கொறைச்சலே இல்ல. அங்க என்னடான்னா நடந்த கூத்து போதாதுன்னு வீட்ல ஒரே புகைச்சல்... துளிசி, பாலாஜி கிட்ட மருந்து பையை குழந்தை கைல கெடைக்கற மாதிரி வைக்காதேன்னு ஒரு வார்த்தை சொன்னா... அவ்வளவுதான்... பாலாஜி அவளைப் பிலுபிலுன்னு பிடிச்சி உலுக்கி எடுத்துட்டான்.... சமாதானப்படுத்திட்டு வர்ரதுக்குள்ள போதும் போதும்னு ஆய்ரிச்சி... ஏற்கனவே ரொம்ப நேரமாயிடுச்சேன்னு சைக்கிள்ல வந்தா. நீ என்னடான்னா கிண்டல் பண்றே... பசிக்குதும்மா..."

"ஐயையோ... நான் ஒரு மடச்சி... கை கழுவிட்டு வாங்க... சாப்பிடலாம்..."

நந்தினி கிச்சனுக்கு ஓடினாள். திரும்பி வந்தபோது அவள் கையில் இருந்த தட்டில் இரண்டு ஆப்பமும், அதன் மேல் தேங்காய்ப்பாலும் ஊற்றப்பட்டிருந்தது.

கிருஷ்ணமூர்த்திக்கு கை கழுவி விட்டு ஒரு துண்டால் கையைத் துடைத்துக் கொண்டே வந்து ஊஞ்சலில் உட்கார்ந்தார்.

"ஆப்பமும், தேங்காய்ப்பாலுமா? வெரிகுட்... வெரிகுட்..."

கிருஷ்ணமூர்த்தி ஆப்பத்தையும் தேங்காய்ப்பாலையும் மிகவும் ருசித்து சாப்பிட்டார். தட்டில் இருந்த ஆப்பம் தீர்ந்தவுடன், அவர் மறுக்க, மறுக்க நந்தினி இன்னும் இரண்டு ஆப்பத்தை வைத்து, அதன் மேல் தேங்காய்ப்பாலை ஊற்றினாள். கிருஷ்ணமூர்த்தி திருப்தியாக சாப்பிட்டு கை கழுவிக் கொண்டு துண்டால் துடைத்துக் கொண்டார். சின்னதாய் ஒரு ஏப்பம் விட்டார்.

Mithra Vintha

"நீ சாப்பிடல..?" என்றார் நந்தினியைப் பார்த்து.

"நான் அப்புறமா சாப்பிட்டுக்கறேன்.."

"எப்புறமா? ஒழுங்கா சாப்பிடு முதல்ல...." என்று சொன்னவர், சொன்னதோடு நிற்காமல் சமையலறைக்கு சென்று தட்டில் இரண்டு ஆப்பத்தையும் போட்டு, தேங்காய்ப்பாலையும் மேலே ஊற்றி எடுத்து வந்து நந்தினியின் கையில் கொடுத்தார்.

"ஐயோ... என்னங்கதீங்க? நானே போட்டு சாப்பிட்டுக்க மாட்டேனா?" என்றாள் நந்தினி சிணுங்கியபடி.

"இப்ப பேசாம சாப்டுறியா இல்ல நானே ஊட்டி விடட்டுமா?"

"ம்ம்ம்.... ஆசை தோசை அப்பளம் வடை.... என்ன இன்னிக்கு இளமை ஊஞ்சலாடுதோ ஐயாவுக்கு? சைக்கிள்ல வர்றீங்க, ஊட்டுறேங்கறீங்க? ம்ஹூம் என்னவோ சரியில்லை.." என்று கிண்டலாய் சிரித்தாள். சாப்பிட்டு கை கழுவி, வெற்றிலை சீவல் பெட்டியை எடுத்துக் கொண்டு வந்து, ஊஞ்சலில் கிருஷ்ணமூர்த்தியின் அருகில் உட்கார்ந்துக் கொண்டாள் நந்தினி.

பெட்டியை திறந்து கொஞ்சமாய் நெய் சீவலை அள்ளி கிருஷ்ணமூர்த்தி கையில் தந்தாள். இரண்டு வெற்றிலையை எடுத்துக் கொண்டு, காம்பு கிள்ளி, புடவையில் நன்றாக துடைத்து, சரியாய் சுண்ணாம்பு தடவி, நான்காய், எட்டாய் மடித்துக் கொடுத்தாள்.

அவளைப் பார்த்துப் புன்னகைத்து வெற்றிலையை வாங்கிக் கொண்டார் கிருஷ்ணமூர்த்தி. தலையை அண்ணாந்து வாயில் போட்டுக் கொண்டார்.

"நான் ஒன்னு கேப்பேன்... தப்பா எடுத்துக்க மாட்டீங்களே...." வெற்றிலையில் சுண்ணாம்பு தடவியபடி நந்தினி கேட்டாள்.

"என்ன?"



"அரியலூர்ல இருந்தப்ப எம்மேல எரிஞ்சி எரிஞ்சி விழுவீங்க... என் கையால பச்சத் தண்ணி கூட வாங்கிக் குடிக்க மாட்டீங்க... இப்ப மட்டும் எப்படி..?"

'இப்ப மட்டும்.... எப்படி' விட்டு விட்டு பயந்த பாவனையுடன் நந்தினியின் வாயிலிருந்து உதிர்ந்தன.

கிருஷ்ணமூர்த்தி அவளை ஓரிரு விநாடிகள் ஆழமாக உற்றுப் பார்த்து விட்டுப் பின் மெல்ல சிரித்தார்.

"ரயில்ல போறோம்... பக்கத்துல ஒக்கார எடம் கேட்டு யாராவது வந்து நின்னா முதல்ல எவ்வளவு கோபம் வருது... அப்புறம் பக்கத்தில உக்கார எடம் கொடுத்து கொஞ்ச நேரம் பழகிட்டா, பக்கத்தில உக்காந்த ஆளு எறங்க வேண்டிய ஊர் வந்தாச்சுன்னு தெரிஞ்சா மனசு எவ்வளவு கஷ்டப்படுது... அது மாதிரித் தான் இதுவும்..."

கிருஷ்ணமூர்த்தி பேசுவதை கண்களில் நெகிழ்ச்சியுடன் கேட்டுக் கொண்டிருந்தாள் நந்தினி.

"... பழகற வரைக்கும் நீ யாரோ, நான் யாரோ... ஒன்னைப் பத்தித் தெரிஞ்சதுக்கப்புறம் நான் மாறிட்டேன்... இல்லன்னா அரியலூர்லேர்ந்து திருச்சிக்கே உப்பு மூட்டை தூக்கற மாதிரி உன்னை தூக்கிட்டு வந்து வெச்சிருப்பேனா?"

"உங்க வீட்ல யாரும் எதுவும் சொல்றதில்லையா?" என்றாள் நந்தினி தொண்டை அடைக்க.

கிருஷ்ணமூர்த்தி நந்தினியை நிமிர்ந்து பார்த்தார்.

"பார்க்கப் போனா லலிதாவுக்குத் தான் தலைல இடி விழுந்த மாதிரி இருக்கணும்.... அவளுக்குப் பெரிய மனசு... விட்டுக் குடுத்துட்டா... அவ்வளவா பெரிசு படுத்தறதில்ல. ஆனா இந்தப் பாலாஜி அப்பப்பக் குத்திக் காட்டுவான்... எனக்கு அவங்களைப் பத்தில்லாம் அவ்வளவாக கவலையில்ல.... துளசியைப் பத்திதான் கவலை... அவளுக்குத் தெரிஞ்சா அவ்வளவு தான்... அப்படியே ஒடிஞ்சி போய்டுவா."

Mithra Vintha

கிருஷ்ணமூர்த்தியின் குரல் தழுதழுத்தது.

நந்தினி அவருடைய இடது கையை ஆறுதலாகப் பற்றிக் கொண்டாள்.

"ஞாயித்துக் கெழமை, ஞாயித்துக்கெழமை முழுநாளும் எனக்காகன்னு இங்கே வந்துடறீங்களே... என்ன, ஏது, எங்க போறீங்கன்னு துளசி கேக்கவே மாட்டாளா?"

"தெனம் ஆபீஸுக்கு இரண்டு மூனு மணி நேரம் கணக்கு எழுதப் போறேன்ல? அது துளசிக்குத் தெரியும். ஞாயித்துக் கிழமை முழுநாளும், லெட்ஜர் பிரிச்சு எழுதறது, டாலி செய்யறது, ஸ்டாக் எடுக்கறதுன்னு வேலை இருக்கும்மான்னு சொல்லி சமாளிச்சிட்டிருக்கேன். அது சரி... என்ன வந்ததுலேர்ந்து இந்த மாதிரியே கேள்வி கேட்டுக்கிட்டு...?"

நிமிர்ந்து நந்தினியை பார்த்தார். அவரின் பார்வை நந்தினியின் தலை முதல் கால் வரை படர்ந்தது.

"ஏய்... என்ன இது? தலையில பூவைக் காணோம்?"

"ம்கும்... உங்களுக்குப் பிடிக்குமேன்னு பட்டுப்புடவை கட்டியிருக்கறது கண்ணுக்குத் தெரியல... ஜிமிக்கி வளையல்னு அலங்காரம் பண்ணிட்டிருக்கறது கண்ணுக்குத் தெரியலை... பூ வக்காதது மட்டும் கண்ணுக்குத் தெரியுதாக்கும்!"

நந்தினி குரலில் கொஞ்சலான கோபம்.

"வந்ததும் பசின்னீங்க.... சாப்பிடக் கொடுக்கணும்னு தோணுமா, பூ வச்சிக்கத் தோணுமா? உங்க கையால வச்சிக்கணும்னு தான் காத்திட்டிருக்கேன்!"

நந்தினி எழுந்து சென்று கை கழுவி விட்டு வருகையில் பூ பொட்டலத்துடன் வந்தாள். ஊஞ்சலுக்குக் கீழே கிருஷ்ணமூர்த்திக்கு முதுகு காட்டி மண்டியிட்டு அமர்ந்தாள். கிருஷ்ணமூர்த்தி தான் தாராளமாக வாங்கி வந்த பூவை அவளுக்குச் சூட்டினார்.



"உன்னை இப்படிப் பார்த்தா தான் கண்ணு நெறைஞ்சிருக்கு..."

நந்தினி நெகிழ்ச்சியுடன் புன்னகைத்தாள்.

கிருஷ்ணமூர்த்தி தன்னருகில் ஊஞ்சலில் உட்காரச் சொல்லி, நந்தினிக்கு சைகை செய்தார்.

"கொஞ்சம் இருங்க..."

வெற்றிலைப் பெட்டியை ஒரு கையிலும், டிரான்ஸிஸ்டரை ஒரு கையிலுமாக எடுத்துக் கொண்டு நந்தினி அவர் அருகில் வந்து அமர்ந்தாள்.

"இது எதுக்கு?" என்றார் டிரான்ஸிஸ்டரைக் காட்டி.

"ஒண்ணும் தெரியாத மாதிரி கேப்பீங்களே!"

நந்தினி டிரான்ஸிஸ்டரை ஆன் செய்தாள். அவன் விரும்பி கேட்கும் நேயர் விருப்பம் மிகச் சரியாக ஆரம்பமானது. அவள் டிரான்ஸிஸ்டரை ஆன் செய்தவுடன்.

அறிவிப்பு முடிந்தவுடன் பாடல் ஒலிக்கத் தொடங்கியது. பின்னணியில் பாடல் ஒலிக்க, நந்தினியும், கிருஷ்ணமூர்த்தியும் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருந்தனர். நேரமாகி விட்டதை உணர்ந்து கிருஷ்ணமூர்த்தி கிளம்புவதாக சொல்ல, நந்தினி கண்ணில் தந்தளித்த கண்ணீருடன் தலையசைத்து விடை கொடுத்தாள்.

ஏனோ தெரியவில்லை, நந்தினியின் உள்ளத்தில் ஒரு மாதிரி கலக்கமாய் இருந்தது. கிருஷ்ணமூர்த்தி பயப்படுவது போல் அவளுக்கும் அவருக்கும் இடையே உள்ள உறவு துளசிக்குத் தெரிந்து விட்டால்..?

அதன் பின் இந்த உறவு தொடருமா?

துளசி தன் மேல் காட்டி வரும் அன்பு அதன் பின் நிலைக்குமா?

MithraVintha

நந்தினிக்கும், கிருஷ்ணமூர்த்திக்கும் இடையே உள்ள உறவை துளசி தெரிந்து கொள்ள, விதி ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தத்தான் போகிறது என்பதை அறியாமல் நந்தினி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

## 22

சுள்ளென்று வெயில் அடித்தது.

நவம்பர் மாத மழை நாட்களுக்கு இடையே கிடைக்கும் இடைவெளியை தவற விடாமல் பயன்படுத்திக் கொள்வதில் சூரியன் மிக முனைப்பாக இருந்தான். பூமியை நோக்கி நேர்க்கோட்டில் பயணித்த அவனுடைய கதிர்கள் ஒரு இண்டு இடுக்கு விடாமல் எல்லாவற்றின் மீதும் உஷ்ணத்தை உமிழ்ந்தன.

வெயிலோ, மழையோ, பனியோ, குளிரோ, பாதிப்பது மனிதர்களைத்தான் பட்டாம்பூச்சியென கவலையற்று பறந்து திரியும் குழந்தைகளுக்கு வெயிலும் உறைப்பதில்லை, மழையும் பொருட்டில்லை, பனியோ குளிரோ கவலையில்லை.

மதிய உணவு வேளையில், பள்ளி மைதானம் எங்கும் பரவியிருந்தனர் குழந்தைகள். நந்தவனத்தில் பூத்திருந்த மலர்கள் போல் குழந்தைகள் ஆங்காங்கே கொத்து கொத்தாய்.

மைதானத்தில் சில மாணவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். இன்னும் சிலர் விளையாட போகும் ஆவலில் அவசரமாய் அள்ளிப் போட்டுக் கொண்டிருந்தனர், டிபன் பாக்ஸில் இருந்தவற்றை. மரங்களின் கீழே குழுகுழுவாய் பிரிந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த மாணவிகள் சப்பிடும்போது சிரித்த மாணவிகள். மரங்களின் கிளைகளில் இருக்கும் காக்கைகளுக்கும், அவற்றின் எச்சங்களுக்கும் பயந்து ஒரு கையால் ஒருக்களித்த மாதிரி திறந்து வைக்கப்பட்டிருந்த டிபன் பாக்ஸுகள். மறுகையால் லாவகமாய் உள்ளே இருந்த சாப்பாட்டை எடுத்து வாயில் போட்டு அரைத்த மாணவிகள் கூடவே பள்ளி வம்பையும் ஊறுகாயாக தொட்டுக் கொண்டனர்.



நந்தினி கடையிலிருந்து வெளியே வந்தாள். கை கழுவ பைப் இருக்கும் பகுதிக்கு நடந்தவள், சற்று தூரத்தில் காயத்ரி தன் வகுப்பு பிள்ளைகளுடன் சாப்பிட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். கை கழுவி விட்டு காயத்ரியை நோக்கி நடந்தாள்.

"ஏய் குட்டி... என்ன இன்னிக்கு புதுசா ப்ரெண்ட்ஸோட சாப்பிடறே?"

"சும்மாதான்.... இவங்களோட சேர்ந்து சாப்பிடணும்னு ஆசையா இருந்திச்சி அதான்..."

காயத்ரி தன் வகுப்பு பிள்ளைகளை எல்லாம் கைகாட்டி பேசியது நந்தினிக்கு சிரிப்பை வரவழைத்தது. தர்பாரில் ராஜ பிரதானிகளுடன் உட்கார்ந்திருந்த ராஜாவைப் போல் இருந்தது அவளுடைய பேச்சு.

"சரி சாப்பிடு... அம்மா சாப்டாங்களா...?"

"இல்ல... அம்மா சாப்பிடாம உக்கார்ந்திருக்காங்க... அவங்க சாப்பிட எதுவும் எடுத்துட்டு வரலை..." என்றாள் காயத்ரி வருத்தம் இழையோடிய குரலில்.

"அப்படியா... அம்மாவை நான் சாப்பிட வைக்கறேன்... நீ ஒழுங்கா சாப்பிடு..." என்று அவளை சமாதானப்படுத்தும் குரலில் சொன்ன நந்தினி யோசனையாய் டீச்சர்களின் ஓய்வறைக்குச் சென்றாள்.

துளசி மேசையில் தலை கவிழ்ந்து உட்கார்ந்திருந்தாள். நந்தினி ஓசைப்படுத்தாமல், தன் கடைக்கு திரும்பி சென்றாள். கடையை விட்டு மறுபடி வெளியே வந்தபோது அவள் கையில் டிபன்பாக்ஸ் இருந்தது. நேராய் துளசியிடம் வந்தாள்.

"துளசி..."



Mithra Vintha

திடுக்கிட்டு விழித்த துளசியின் முகத்திற்கு நேராய் டிபன் பாக்ஸை திறந்து நீட்டியிருந்தாள் நந்தினி.

துளசி சட்டென தன்னை சுற்றி பார்வையை சுழற்றினாள். இரண்டொரு ஆசிரியைகள் மட்டும் தத்தம் வேலைகளை கவனித்துக் கொண்டிருந்தனர்.

"என்ன நந்தினி இது?"

"ம்ம்... தெரியலை? தேங்காய் சாதம்! நானே பண்ணினது."

என்றாள் குறும்பாய் உதட்டை ஒரு முறை சுழித்து அழகு காட்டினாள்.

"அது தெரியுது... ஆனா எதுக்கு என்கிட்ட நீட்டறே?" நந்தினி பதில் எதுவும் பேசாமல் துளசியின் அருகில் இருந்த சேரில் அமர்ந்து கொண்டாள். டிபன் பாக்ஸின் மேல் அடுக்கை எடுத்து துளசியிடம் நீட்டினாள். கீழ் அடுக்கிலும் தேங்காய் சாதம் இருந்தது.

"என்ன நந்தினி... கேக்கறேன்ல? எதுக்கு என் கிட்ட நீட்டறே?"

"நான் பண்ணின தேங்காய் சாதத்தை வாசனை பிடிக்க! அட, டிபன் பாக்ஸை எதுக்கு நீட்டுவாங்க? சாப்பிடறதுக்குத் தான்... போய் கையைக் கழுவிக்கிட்டு வா..."

"எனக்கு சாப்டணும்னு தோணல, நந்தினி..." என்றாள் பலவீனமாய் மறுக்கும் குரலில்.

"அப்ப சரி... நானும் சாப்டல..." என்றாள் சட்டென்று நீட்டிய அடுக்கை கீழ் அடுக்கின் மேல் வைத்து டிபன் பாக்ஸை மூடப் போனாள்.

"என்ன நந்தினி நீ... குழந்தை மாதிரி பிடிவாதம் பிடிக்கிற...?"

"யாரு... நானு... குழந்தை மாதிரி... பிடிவாதம் பிடிக்கறேன்...?" ஏற்ற இறக்கங்களுடன் நந்தினி பேசியதைக் கேட்ட துளசியின்



"எனக்கு கொடுத்திட்டு நீ என்ன செய்வே?"

"நீ சாப்பிடறதை வேடிக்கை பார்ப்பேன்..." என்றாள் நந்தினி வெடுக்கென்று. அடுத்த நிமிடமே முகத்தில் கனிவை சேர்த்தாள். "என்ன துளசி நீ... சேர்ந்து சாப்பிடலாம்வா..." என்றவள் மறுபடி டிபன் பாக்ஸை எடுத்து நீட்டினாள்.

துளசி தயக்கத்துடன் நந்தினியின் முகத்தையும், அவள் கையில் இருந்த டிபன் பாக்ஸையும் மாறி மாறி பார்த்தாள்.

"என்ன துளசி... வ்வ்வ்வ்வா...!" என்றாள் நந்தினி கொஞ்சலாய்.

"இருக்கிறதுல எனக்கு இவ்வளவு கொடுத்துட்டா, அப்புறம் உன் பசி எப்படி அடங்கும், நந்தினி?"

"அட! வாழ்க்கைல சில விஷயங்களை பங்கு போட்டுக்கறதுலயும் ஒரு சந்தோஷம் இருக்கு, துளசி..."

துளசி சட்டென நிமிர்ந்து நந்தினியைப் பார்த்தாள்.

"இப்ப நீ கை கழுவிட்டு வரல்லே, நானே உன் வாயிலே ஊட்டி விட்டுருவேன்...!"

நந்தினியின் செல்ல சிணுங்கலில் துளசி நெகிழ்ந்து போனாள்.

துளசி அறையில் ஓரத்தில் இருந்த வாஷ்பேசினில் கை கழுவி விட்டு வந்து டிபன் பாக்ஸை வாங்கிக் கொண்டாள்.

"நீ சாப்பிடலன்னு உன் பொண்ணு, கவலைப்படறா... நீ என்னடான்னா சாப்பிட இத்தனை பிகு பண்றே. ஏன் உனக்கு எதுவும் சாப்பாடு எடுத்துக்காம வந்துட்ட...?"

"மனசே சரியில்ல நந்தினி..."

"காயத்ரி தெரியாத்தனமா மா... போயிட்டியா துளசி?"

Mithra Vintha
PUBLIC LIBRARY

துளசி முகத்தில் சட்டென ஒரு திகைப்பு.

"ஒனக்கு எப்படித் தெரியும் நந்தினி?"

நந்தினி முகத்தில் சின்ன திடுக்கிடல். தான் வாய் தவறி சொல்லிவிட்டதை உணர்ந்து சின்னதாக தடுமாறி, உடனே சுதாரித்தாள்.

"நம்ப கனகவேலு டாக்டர் தானே? எனக்கு நல்லாத் தெரியுமே அவரை. நேத்து தற்செயலா கோயில்ல பார்த்தேன்... அவரு சொன்னாரு.... இப்ப காயத்ரியை பார்த்தவுடனே, சரியாய்டுச்சுன்னு புரிஞ்சுகிட்டேன்." என்றாள் நந்தினி சமாளிப்பாய்.

"கொஞ்ச நேரம் எனக்கு கை, கால்லாம் லொட லொடன்னு ஆடிப் போச்சி... மூச்சே நின்னு போய்டும் போல இருந்தது. கொழந்தை கண்ணைத் தொறந்து என்னைப் பார்த்து சிரிச்சப்புறம்தான் போன மூச்சே வந்தது..."

துளசி நந்தினியிடம் கை, கால்களை எல்லாம் அசைத்து அசைத்துப் பேச, நந்தினி துளசியையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

நந்தினி தன்னையே பார்ப்பதைப் பார்த்து விட்டு துளசி பேச்சை நிறுத்தினாள்.

"ஏய்.... என்ன இது? சாப்பிடாம எம் மூஞ்சியையே பார்த்துக்கிட்டு உக்காந்திருக்கே..."

"நீ நேத்து பட்ட அவதி உம் மூஞ்சில தெரியுது. துளசி வாடிப் போன மல்லிச்சரமாட்டம் இருக்கே.... அதான் பார்த்தேன்..."

துளசி நந்தினியைப் பார்த்தாள். நந்தினியின் பார்வையில் துளசியை குறித்த பரிவு, பளிச்சென்று தெரிந்தது.

"நான் ஒண்ணு கேக்கட்டுமா?" என்றாள் துளசி.

"கேளேன்..."



"இந்த ஸ்கூல்ல நான் வந்து சேர்ரதுக்கு முன்னால என்னை விட ஒனக்கு நல்லாத் தெரிஞ்சவங்க எவ்வளவோ பேர் இருப்பாங்க..

"ம்.ம். அதுக்கென்ன இப்போ?" நந்தினி தலையாட்டிய போது அவளுடைய ஜிமிக்கிகளும் ஊஞ்சலாடின.

"எம் மேல மட்டும் ஒனக்கு ஏன் இவ்வளவு பிரியம்... பாசம்... எல்லாம்?"

துளசியின் கண்கள் கலங்கின.

நந்தினிக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை. துளசி கிருஷ்ணமூர்த்தியின் மகள் என்பதால் அவள் மேல் கூடுதல் ஒட்டுதல் என்று உண்மையை சொல்ல முடியாது. எதுவும் சொல்லத் தோன்றாமல் தடுமாறிப் போய் துளசியை சற்று நேரம் கனிவுடன் பார்த்தாள் நந்தினி. பின் துளசியின் கன்னத்தை மெல்லத் தட்டினாள்.

"பைத்தியம்.... பைத்தியம்.... இதுக்கெல்லாம் ஒரு காரணத்தை தேட முடியுமா? கன்னுக்குட்டி பால் குடிக்கறதைப் பார்த்தா புடிச்சிப் போவுதே ஏன்?"

துளசியின் முகத்தில் தாய்மையின் பூரிப்பு உணர்வு.

"வெளியே பெய்யற மழையை ஜன்னல் வழியா பார்த்துட்டே இருக்கப் புடிக்குதே... ஏன்?"

துளசியின் முகத்தில் மழைச் சாரல் தூறியது போல ஒரு சிலிர்ப்பு.

"போற வழில குடுகுடுப்பாண்டியைப் பார்த்துட்டா சட்டுனு மனசுல ஒரு பயம் வருதே. ஏன்?"

துளசி கை நீட்டி நந்தினியின் கையைப் பற்றிக் கொண்டாள்.

"அது என்னவோ... ஒரு சிலரைப் பாத்தா பளிச்னு புடிச்சிப் போகும். சிலரைப் பார்த்தா காரணம் இல்லாமயே தள்ளி நிக்கத் தோணும்... எனக்கு ஒன்னைப் புடிச்சிப் போச்சி... அப்புறம் தான் இதுவும்..."

Mithra Vintha

நந்தினியின் கண்களும் கலங்கின.

"இவ்வளவு பாசத்தை என்னால திருப்பிக் காட்ட முடியுமான்னு பயமா இருக்கு நந்தினி..."

"உன்னை யாரு காட்டச் சொன்னது? நீ நீயா இரு.. நான் நானா இருக்கேன்.."

"ஏய் நந்தினி.. எங்க வீட்டுக்கு ஒரு நாள் வாயேன்.. கூப்பிட்டுக்கிட்டே இருக்கேன் இல்ல.. எங்க அம்மா, அப்பா ஒன்னைப் பாத்தா ரொம்ப சந்தோஷப் படுவாங்க.."

நந்தினியின் கண்களில் சட்டென கலவரம் தெரிந்தது. சட்டென்று சமாளித்து சிரித்தாள்.

"வரேன்.. வரேன்.. ஒங்க வீடு எங்க போய்டப் போவுது.. நான் எங்க போய்டப் போறேன்.."

பள்ளிக் கூட மணி வகுப்பு ஆரம்பிப்பதற்கான அறிகுறியாக அடிக்கப் பட்டது. அந்த திடீர் சத்தத்தில் உலுக்கப்பட்ட நந்தினியும் துளசியும் திகைத்துப் பின் சேர்ந்து சிரித்தார்கள். டிபன் பாக்ஸுகளை மூடி, பரபரப்புடன் எழுந்து கொண்டார்கள்.

## 23

**வா**னம் இருட்டுப் போர்வையை இழுத்துப் போர்த்தியிருந்தது.

துளசியின் பார்வை வானத்தில் லயித்திருந்தது. ப்ளாட்பார வாசியின் போர்வை பொத்தல்கள் போல அங்கங்கே கண் சிமிட்டி மின்னிய நட்சத்திரங்கள். போர்த்திக் கொண்டு படுக்கையில் கால் மாட்டி, கால் மாட்டி பெரிதாகி விட்ட பெரிதாகி விட்ட பொத்தல் போல பௌர்ணமியை நெருங்கிக்



கொண்டிருந்த அரை வட்ட நிலா. நிலாவின் ஒளியில் நட்சத்திரங்களின் பிரகாசம் சற்று மங்கித்தான் போயிருந்தது.

தெரு வெகு சீக்கிரமே அடங்கி விட்டிருந்தது. பேச்சுக் குரலோ, சிரிக்கும் சத்தமோ, குழந்தையின் அழுகுரலோ எதுவும் கேட்கவில்லை துளசிக்கு. மொத்த ஊரே சொல்லி வைத்தாற் தூங்கப் போய்விட்டது போல ஆழ்ந்த நிசப்தம்.

நிசப்த பின்னணியில் வானப் போர்வையின் நட்சத்திரப் பொத்தல்களையும் நிலா ஓட்டையையும் ரசித்துக் கொண்டிருந்த ஒற்றை ஆளாய் மொட்டை மாடியில் உட்கார்ந்திருந்தாள் துளசி.

மாடியின் பொராபட் சுவர்கள் சேரும் இடத்தில், இரண்டு பக்க சுவர்களை இணைக்கும் விதமாக, குறுக்காக பலகைப் போட்டது போல கான்க்ரீட்டால் ஸ்லாப் ஒன்று கட்டப்பட்டிருந்தது. ஒரு பெரிய ஓவர் ஹெட் டேங்கை அதில் உட்கார வைக்கும் அளவு நீளமான, அகலமான ஸ்லாப்.

தொட்டி உட்கார்ந்த இடம் போக ஸ்லாப்பின் இரு பக்கமும் இடம் கொஞ்சம் மிச்சமிருந்தது. தெரு பார்க்க இருந்த பக்கத்து ஸ்லாப்பில் உட்கார்ந்து டேங்கில் முதுகு சாய்ந்திருந்தாள் துளசி. டேங்கின் உள்ளே தண்ணீர் இருந்ததால் துளசி உட்கார்ந்திருந்த ஸ்லாப்பும், அவள் முதுகு சாய்ந்திருந்த டேங்கின் பக்கவாட்டு சுவரும் சில்லென்று இருந்தது.

துளசிக்கு இப்படி உட்கார்ந்து வானத்தையும் தெருவையும் வேடிக்கை பார்ப்பது என்பது மிகவும் பிடித்தமான விஷயம். துளசி பார்வையைத் தாழ்த்தி தெருவைப் பார்த்தாள்.

எதிர்சாரியில் மளிகைக் கடை வைத்திருந்த 'உப்பு புளி' நாடார் கடை கட்டும் மும்முரத்தில் இருந்தார். மளிகைக் கடைக்கு இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் அரிசி மண்டிக் கடையும், எண்ணெய் மொத்த வியாபாரக் கடையும் இருந்தன. கடை வைத்திருந்த மூன்றுபேரும் நாடார்கள் என்பதால் தெருவாசிகள் வரிசைக்கிரமமாக அரிசி நாடார், உப்பு புளி நாடார், ஆயில் நாடார் என்று பெயர் வைத்திருந்தனர்.

Mithra Vintha

'உப்பு புளி' நாடார் கல்லாவிற்கு கற்பூரம் காட்டி கடைக்கு வெளியே வந்து கடைக்கும் காட்டினார். கடைக்கு வெளியே கற்பூரத்தை கீழே போட்டு விட்டு, வானத்தை ஒரு முறை அண்ணாந்து கை கூப்பினார்.

தெருவைப் பார்த்துக் கொண்டிருந்த துளசிக்கு, உப்பரிகையில் நின்று கொண்டு அரண்மனையை கடந்து செல்லும் குடிமகன் செலுத்தும் வணக்கத்தை ஏற்றுக் கொள்ளும், மகாராணி போல தன்னை நினைத்துக் கொள்ள தோன்றியது. வானத்தைப் பார்த்து கை கூப்பியிருந்த நாடார், மகாராணியிடம் முறையிடும் குடிமகனை நினைவு படுத்தினார்.

இப்படி ஒரு எண்ணம் தோன்றியவுடன், துளசிக்கு தன்னையறியாமல் சிரிப்பு வந்தது. சூழ்நிலை மறந்து, தன்னை மறந்து வாய் திறந்து 'கலகல' வென சிரித்தாள்.

"என்னம்மா துளசி, மொட்டை மாடியில இருட்டுல உக்காந்துகிட்டு தனியா சிரிச்சுப்பிட்டிருக்கே? எங்கயாவது தவறிப் போய் விழுந்துடப் போறே! போம்மா... பனி பெய்யுது... சளி புடிச்சுக்கும். வீட்டுக்குள்ள இறங்கிப் போ..." என்றார் நிஜமான கரிசனத்துடன். 'உப்பு புளி' நாடார்.

துளசி சட்டென்று தன்னை கட்டுப்படுத்திக் கொண்டாள்.

"சரி நாடார்..." என்றாள் சிரிப்பினூடே. அப்பொழுதுதான் துளசிக்கு திருத்தப்படவேண்டிய நோட் புத்தகங்கள் நிறைய இருப்பது நினைவிற்கு வந்தது. காலை கீழே போட்டு ஸ்லாப்பில் இருந்து மொட்டை மாடியின் தரையில் குதித்தாள். மாடிப்படி இறங்கி வீட்டினுள் நுழைந்தாள்.

ஹாலில் காயத்ரி லலிதாவை கட்டிக் கொண்டு அவள் மேல் கால் போட்டுக் கொண்டு சின்ன சிரிப்போடு தூங்கிப் போயிருக்க, கிருஷ்ணமூர்த்தி ஈஸிசேரில் கண்மூடி தூங்கிக் கொண்டிருந்தார். பாலாஜியின் ரூம் மூடியிருந்தது.

துளசி ஓசையெழுப்பாமல் பூனைப் பாதம் வைத்து மெல்ல ரூம் கதவை திறந்து, உள்ளே நுழைந்தவுடன் கதவை மூடினாள்.



இருட்டில் சுவர் தேய்த்து ஸ்விட்ச் போர்டை தடவி, விளக்கைப் போட்டாள்.

மேஜையின் மீது திருத்தப் பட வேண்டிய நோட் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. மேஜையை நெருங்கியதும் அவள் விழிகள் வியப்பால் விரிந்தன.

நோட்டுப் புத்தகங்களுக்கிடையே, மடித்து வைக்கப்பட்ட ஒரு செய்தித் தாள் செருகி வைக்கப்பட்டிருந்தது.

துளசியின் பார்வையைக் கவரும் வண்ணம், அதில் பிரசுரமாகியிருந்தது ஒரு செய்தி மார்க்கர் பேனாவால் சதுரமாக எல்லைக் கட்டப்பட்டிருந்தது.

துளசி அந்த செய்தித்தாளை நோட்டுப் புத்தகங்களுக்கிடையில் இருந்து உருவி இழுத்தாள். கட்டம் கட்டப்பட்டிருந்த செய்தியை மெல்லிய குரலில் வாய் விட்டு படித்தாள்.

நீங்கள் பெண் ஓவியரா?
சென்னையில் இருக்கும்
ரவிவர்மா அகாடமி இந்தியப்
பெண்களுக்கான ஒரு ஓவியக்
கண்காட்சியை நடத்தத்
திட்டமிருக்கிறது.
இந்தியாவின் பல்வேறு பகுதிகளில்
இருக்கும் பெண் ஓவியர்களிடமிருந்து
சிறந்த படைப்புகள்
வரவேற்கப்படுகின்றன.
எங்களுக்கு வந்து சேரும்
படைப்புகளில் இருந்து மிகச்
சிறந்த இருபது ஓவியங்கள்

MithraVintha

தேர்வு செய்யப்பட்டு இந்தச்
சிறப்புக் கண்காட்சியில் பொது
மக்களின் பார்வைக்கு வைக்கப்படும்.
தேர்வு பெறும் ஓவியங்களுக்குப்
பரிசும், சான்றிதழும் வழங்கப்படும்!

**ஓவியங்களுக்கான பொதுவான கரு:-**

**இந்தியப் பெண்!**

துளசி படித்துக் கொண்டிருந்த போதே பக்கத்தில் நிழலாடியது. நிமிர்ந்துப் பார்த்தாள்.

கிருஷ்ணமூர்த்தியின் பார்வையில் அன்பு பெருக நின்றிருந்தார்.

"நான் தாம்மா உன் கண்ல படணும்னு இதை இங்க வச்சேன்... இந்த எக்ஸிபிஷன்ல நீ வரையப் போற படமும் இருக்கணுங்கறது என்னோட ஆசைம்மா..."

"நான்... நான் வரைஞ்சு ரொம்ப நாள் ஆச்சேப்பா..." என்றாள் துளசி தயக்கத்துடன்.

"ஏம்மா நிறுத்திட்டே? நீ தான் நல்லா வரைவியே?"

"நிறுத்தணும்னு நெனைக்கலப்பா... ஆனா..."

"தப்பும்மா..... உன்கிட்ட இருக்கற கலையை உதாசீனப்படுத்தறது தப்பு! சரஸ்வதி எல்லோர் கிட்டயும் சந்தோஷப்பட்டு வந்துடறதில்லம்மா..... வேலைக்குப் போறதுக்கும், சமையல் பண்ணிட்டு பாத்திரம் தேய்ச்சு போடறதுக்கும் ஆயிரம் பேர் இருக்கலாம்... ஆனால் அதுல எத்தனை பேருக்குப் பாட்டுப் பாடத் தெரியும்? எத்தனை பேருக்குக் கவிதை எழுதத் தெரியும்? எத்தனை பேருக்கும் நாட்டியம் ஆடத் தெரியும்? இல்லை.... எத்தனை பேருக்குப் படம் வரையத் தெரியும்? அதெல்லாம் எல்லாருக்கும்



வந்துடாதும்மா... நீ இந்தப் போட்டில கலந்துக்கணும்மா... இருபது படைப்புல சிறந்தப் படைப்பா உன்னோடது இருக்கணும்மா..."

"என்னால முடியுமாப்பா?"

"இப்படை தோற்கின் எப்படை வெல்லும்? உன்னால முடியலைன்னா யாராலயும் முடியாதும்மா. அவங்க தான் மூணு மாசம் நேரம் கொடுத்திருக்காங்களே ஒனக்கிருக்கற இந்தத் திறமை வெளியில யாருக்கும் தெரியாம இந்தத் திருச்சிக்குள்ளேயே அமுங்கி அழிஞ்சிப் போறதால யாருக்கு என்ன லாபம் சொல்லு.... நீ கண்டிப்பா இந்தப் போட்டியில கலந்துக்கணும்மா... நீ மனசு வச்சா நிச்சயம் ஜெயிக்கலாம்! ஜெயிக்கணும்ம்ம்மா!" கிருஷ்ணமூர்த்தி உறுதியுடன் பேசப் பேச துளசியின் முகத்தில் நம்பிக்கையும் உற்சாகமும் பொங்கின. போட்டியில் கலந்து கொள்வது என துளசியின் மனம் தீர்மானித்தது.

## 24

துளசி ஸ்டூல் மீது நின்றிருந்தாள்.

பரணில் வைத்திருந்த தன்னுடைய பழைய ட்ரங்க் பெட்டியை ஸ்டூலில் இருந்து சற்றே எம்பி, இழுத்து எடுத்தாள். எடுத்த வேகத்தில் அதனுடைய பாரம் தாங்காமல் விழ இருந்தவள் சுதாரித்து மெதுவாக பெட்டியுடன் கீழே இறங்கினாள்.

பெட்டியை தூசி தட்டினாள்.

திறந்தாள்.

உள்ளே -

அவள் போட்டிகளில் பங்கேற்று பரிசாய் பெற்றிருந்த கோப்பைகள் எல்லாம் நிறம் மங்கி பளபளப்பின்றி இருந்தன.

MithraVintha

கோப்பைகளை கண்டவுடன் துளசியின் இதழோரத்தில் மெல்லிய புன்முறுவல் ஒன்று பூத்தது.

அப்போது தான் பிரசவித்த தன் குழந்தையை தாய் தடவிக் கொடுப்பது போல கோப்பையை மேல் விரல்களோட்டி அவற்றை வருடினாள் துளசி.

நசுங்கிய கோப்பை ஒன்று, அழுக்காகி, களிம்பேறிப் போன கோப்பை ஒன்று, இங்க் ஊற்றிக் கறையான கோப்பை ஒன்று, இங்க் ஊறிப் போன கோப்பையை பார்த்தவுடன், அந்தக் கோப்பையை பரிசாய் வென்று வீட்டிற்கு வந்தபோது நடந்தவை நினைவலைகளாய் மேலெழுந்து வந்தன.

கையில் கோப்பையுடன் துளசி வீட்டில் நுழைந்தபோது, கல்பனா தன்னுடைய பேனாவில் இங்க்கை நிரப்பிக் கொண்டிருந்தாள். சத்தம் கேட்டு நிமிர்ந்தவளின் முகம் கோப்பையை பார்த்தவுடன் சுருங்கியது. சட்டென கல்பனாவின் முகத்தில் கோபமும் எரிச்சலும் மண்டியது.

"என்னத்தான் மாயமோ, என்னத்தான் மந்திரமோ... இல்ல, என்ன சொக்குப் பொடி தந்திரமோ... ஆன்னா ஊன்னா கப்பை தூக்கி தூக்கி இவ கைல குடுத்துடறாங்க... என்னவோ வாங்கிக்க வேற ஆளே இல்லாத மாதிரி. ஆமா துளசி, இது என்ன நீ நிஜமாகவே ஜெயிச்ச வாங்கிட்டு வந்த கப்பா, இல்லை... வந்திருந்த ஜட்ஜை பார்த்து இளிச்சு வாங்கிட்டு வந்த கப்பா...? இல்லை, தெரியாமத்தான் கேக்கறேன், சொல்லேன்..."

கல்பனாவைப் பற்றி துளசிக்கு தெரியும் என்பதால், அவள் பேச்சை பெரிது படுத்தாமல், கோப்பையை மேஜை மீது வைத்து விட்டு சிரித்துக் கொண்டே முகம் கை கால் கழுவ சென்றவள் திரும்பி வந்த பொழுது விக்கித்துப் போனாள்.

மேஜை மேல் இருந்த கோப்பையில் இங்க் பாட்டிலை மொத்தமாய் ஊற்றிக் கவிழ்த்திருந்தாள் கல்பனா. துளசியைப் பார்த்தவுடன் உதட்டை சுழித்து பழிப்பு காட்டி விட்டு வீட்டிலிருந்து வாசலுக்கு ஓடிப் போய் விட்டாள்.



இங்க் கறை ஊறிப் போன கோப்பையை பார்த்து பார்த்து இரவு முழுக்க தான் அழுதுக் கொண்டிருந்தது துளசிக்கு பசுமையாய் நினைவில் பதிந்திருந்தது.

பக்குவம் வராத பருவத்தில் எதற்கெல்லாம் அழுதிருக்கிறோமே என்று சிரித்தபடி கோப்பைகளை வெளியே எடுத்து வைத்தாள், ஒவ்வொன்றாக.

பக்கத்து வீட்டு குழந்தைகளுடன் விளையாட சென்றிருந்த காயத்ரி வீட்டிற்குள் ஓடி வந்தாள். வரிசையாக வைக்கப்பட்டிருந்த கோப்பைகளைப் பார்த்தவுடன் அவள் கண்கள் வியப்பால் விரிந்தன. துளசியிடம் ஓடி வந்தாள்.

துளசி காயத்ரியை தன் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டாள். காயத்ரி பெட்டிக்குள் ஆர்வமாக எட்டிப் பார்த்தாள். உள்ளே சுருட்டி வைக்கப்பட்டு இருந்த சார்ட்டுகளை பார்த்தாள்.

"அதெல்லாம் என்னம்மா?" என்றாள் வியப்பு மாறாமல்.

"படம்டா கண்ணு..." என்றாள் துளசி, காயத்ரியின் தலைமுடியை கோதிவிட்டபடி.

"என்ன படம்? சாமி படமா?"

"இல்லடா... அம்மா வரைஞ்ச படம்டா கண்ணு..."

"இத்தனையுமா?" என்றாள் விழிகளை இன்னும் அகலமாக்கி.

"ஆமா..."

"அம்மா... அம்மா... நான் பார்க்கட்டுமா?" காயத்ரியின் குரலில் புது வெள்ளத்தின் உற்சாகம்.

"இரு... இரு... அம்மா ஒண்ணு ஒண்ணா எடுத்து காமிக்கறன்..."

துளசி பெட்டிக்குள் கை விட்டு முதல் சுருளை எடுத்தாள். கட்டியிருந்த நூலின் முடிச்சு அவிழ்த்தாள். மெல்ல திறந்து சுருக்கங்கள் நீவி விரித்துக் காட்டினாள்.

MithraVintha

அது ஒரு டிராயிங் சார்ட். சார்ட்டில் இளம் பெண்ணொருத்தி தலையில் ஒரு குடமும், இடுப்பில் ஒரு குடமும் சுமந்து சிரித்தபடி நின்றிருந்தாள். பின்னணியில் பச்சை பசேலென்ற மரங்கள், பிரம்மாண்டமாய் அணிவகுத்து நின்றிருந்தன.

காயத்ரி ஆச்சரியத்தில் திறந்த வாய் மூடவில்லை.

"அம்மா.... ரொம்ப அழகா இருக்கும்மா...! நீயாம்மா வரைஞ்சே?"

"ஆமா செல்லம்..."

அடுத்த சுருளை பிரித்து நீவினாள். சுற்றிலும் மரங்களடர்ந்த காட்டின் மத்தியில் கலகலத்து ஓடும் சிற்றோடை. அடுத்தது கோயில் ஒன்றின் முகப்பு தோற்றம். அதன் கோபுரமும், கோபுரம் தீண்டியிருந்த வான் மேகமும் தத்ருபமாய் இருந்தன. அடுத்ததில், வனத்தில் குட்டியை அரவணைத்துக் கொண்டு நின்றிருந்த பெண் யானை. அடுத்ததில், வண்ணங்களாய் உருப்பெற்றிருந்த பஞ்சவர்ணக்கிளிகள் ஜோடி ஜோடியாய்.

காயத்ரி ஆர்வம் தீராமல் எல்லாவற்றையும் பிரித்துக் காட்டச் சொல்லி ரசித்துக் கொண்டிருந்தாள். துளசிக்கு காயத்ரியின் ஆர்வம் மிகுந்த சந்தோஷத்தை அள்ளி தந்தது.

படங்களை எல்லாம் பார்த்து முடித்தவுடன் காயத்ரி ஒரு பரிசுக் கோப்பையை எடுத்து துளசியிடம் நீட்டினாள்.

"அம்மா, நான் இதை வெளையாட எடுத்துக்கட்டுமா?"

துளசி கோப்பையைப் பார்த்தாள். குழந்தையைப் பார்த்தாள். மெல்லப் புன்னகைத்தாள்.

"எடுத்துக்கடா... ஆனா, பத்திரம்... இதெல்லாம் அம்மா ப்ரைஸ் வாங்கினது. நீ இதைவிட நெறைய்ய ப்ரைஸ் வாங்கறேன்னு ஹெட் மாஸ்டர் கிட்ட சொல்லியிருக்கியே!"

காயத்ரி ஒரு நாண சிரிப்புடன் தலையசைத்து, அந்தக் கோப்பையை எடுத்துக் கொண்டு வெளியே ஓடினாள்.



துளசி தான் பிரித்து வைத்திருந்த படங்களை மறுபடி ஒவ்வொன்றாக சுருட்டி வைத்தாள். ஒவ்வொன்றையும் பாசத்துடன் தடவிப் பார்த்து சுருட்டி வைத்தாள். பெட்டியின் அடியில் இருந்து வரையப்படாத கான்வாஸையும் பென்சிலையும் எடுத்த பொழுது 'கிணிகிணி' என்று பூஜை மணி ஒலித்தது.

துளசி சட்டென திரும்பிப் பார்த்தாள்.

ஈரத்தலையில் கட்டியிருந்த டவலோடு சுவாமி படங்களின் எதிரில் நின்று லலிதா, கற்பூரம் காட்டிக் கொண்டிருந்தாள்.

கற்பூர ஒளி லலிதாவின் முகத்தில் தங்க நிற வெளிச்சமாக நடனமாடியது. ஒளியின் பின்னணியோடு தெரிந்த அந்த முகத்தைப் பார்த்ததும் துளசியின் முகத்தில் ஒரு திருப்தியும், ஆர்வமும் மின்னின.

லலிதாவுக்கு சற்று அருகில் எதிரில் வந்து நின்று அவள் முகத்தை ரசித்துப் பார்த்தாள்.

துளசி பார்ப்பதை உணர்ந்து லலிதா சட்டென திரும்பிப் பார்த்தாள்.

"எதுக்கு எம் மூஞ்சியை வேடிக்கை பாத்துட்டு நிக்கறே?" லலிதா முகம் சீரியஸாய் இருந்தது.

"அதெப்படிம்மா..... வயசாக வயசாக உனக்கு அழகு கூடிட்டே போவுது?"

"இந்த வெளையாட்டுப் பேச்சுக்கு ஒண்ணும் கொறைச்சல் இல்ல..." என்றாள் எரிச்சலாய்.

"வெளையாட்டு இல்லம்மமா. நெஜமாத்தான் சொல்றேன். எனக்காக ஒரு சின்ன ஹெல்ப் பண்ணுவியாம்மா?"

லலிதா துளசியை கேள்விக்குறி முகத்துடன் பார்த்தாள்.

"அம்மா... கொஞ்ச நேரம் அப்படியே நின்னு போஸ் கொடுத்தா நான் ஒரு ஸ்கெட்ச் எடுத்துக்கறேம்மா..."

MithraVintha

"ஒனக்கு படம் வரைய போயும் போயும் இந்த மூஞ்சிதானா கெடைச்சது?"

"ஏம்மா இப்படில்லாம் பேசறே? ஒனக்கென்னம்மா கொறைச்சல்? என்னை மாதிரியாம்மா நீ?" என்றாள் கண்கள் சுருங்க.

அவர்கள் இருந்த அறைக்குள் கிருஷ்ணமூர்த்தி குழந்தை காயத்ரியை உப்பு மூட்டையாகத் தூக்கிக் கொண்டு வருவதைப் பார்த்தாள் துளசி.

"பாருங்கப்பா... ஒரு படம் வரைஞ்சிக்கறேன்னு அம்மாவை போஸ் கொடுக்கச் சொன்னதுக்கு, சலிச்சிக்கிட்டு அம்மா தட்டிக் கழிக்கறாங்க. அம்மாவுக்கு என்ன கொறைச்சல்ப்பா?" என்றாள் கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்து.

"ஒனக்குப் படம் வரையணும்.... அவ்வளவு தானே? இவரையே வரைஞ்சிக்கோ...." என்றாள் லலிதா கிருஷ்ணமூர்த்தி பக்கம் கையை நீட்டி வெடுக்கென்று.

"என்னம்மா நீ? ஆர்ட் எக்ஸ்பீஷன்ல கலந்துக்கறதுக்குப் படம் வரையப் போறேம்மா.... இந்தியப் பெண்ணுங்கிற தலைப்புல... அந்தத் தலைப்புக்கு ஒம் முகம்தாம்மா நல்லாப் பொருந்தி வரும்..."

"ஆமா.... இந்தியப் பெண்ணுதான். நான் பாட்டுக்கு சிவனேன்னு வாயை மூடிட்டு உட்கார்ந்திருக்கேன் ஒரு மூலைல. நீ சும்மா இருக்காம என்னை வரைஞ்சி எக்ஸ்பீஷன்ல தொங்க விடு... போறவரவனெல்லாம் பார்த்துட்டு காறி துப்பிட்டுப் போகட்டும்.... போதும் நான் வாழ லட்சணம், இதுல படமா வேற தொங்கணுமா?"

லலிதாவின் பேச்சில் மிளகாயின் காரம். அதற்கு மேல் அங்கு நிற்காமல் நகர்ந்தாள். விருட்டென்று வெளியேறினாள்.

"என்கிட்ட மட்டும் அம்மா ஏம்ப்பா எப்பவுமே எரிச்சலாப் பேசறாங்க? காயத்ரிகிட்ட காட்டற அன்பைக் கூட என்கிட்ட



காட்டறதில்லப்பா..." துளசியின் குரலில் கடலளவு கவலை வெளிப்பட்டது.

லலிதா மூலம் விஷயம் எதுவும் வெளிப்படாத ஆறுதலில் கிருஷ்ணமூர்த்தி எச்சிலைக் கூட்டி விழுங்கினார். துளசியை நெருங்கி ஆதரவாக அவள் தலையை வருடினார்.

"அவ பேர்ல தப்பு இல்லம்மா. எம் பேர்ல தாம்மா தப்பு!"

ஆச்சரியத்துடன் துளசி நிமிர்ந்து கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்தாள்.

கிருஷ்ணமூர்த்தி சுதாரித்துக் கொண்டார்.

"ஒரு நாள் ஜோசியக்காரன் ஒருத்தனை வீட்டுக்கு கூட்டிட்டு வந்தேம்மா அந்த தப்பை செய்யாம இருந்திருந்தா இந்த பிரச்சினை வந்திருக்காது. உன் ஜாதகத்தைப் பார்த்திட்டு அவன் நல்லதா எதுவும் சொல்லலைம்மா... நீ இருக்கிற எடத்துல குழப்பம் இருக்கும், உன்னால பிரச்சனை இருக்கும், அது இதுன்னு சொல்லிட்டு வாய்க்கு வந்ததை எல்லாம் உளறிக் கொட்டி காசை வாங்கிட்டுப் போய்ட்டான். அது லலிதா மனசுல பளிச்னு எறங்கிடுச்சு போல... போதும் போதாதுக்கு நான் உன்னை ரொம்ப சப்போர்ட் பண்றேன்னு நெனைப்பு அவளுக்கு..."

துளசி அவரைக் கேள்விக் குறியுடன் நிமிர்ந்து பார்த்தாள்.

"இதையெல்லாம் நீ மனசுல வச்சுக்காதேம்மா... எல்லாம் தானா, சரி ஆய்டும்..."

"இந்தியப் பெண்ணுங்கற தலைப்புக்கு அம்மா முகம் ரொம்ப நல்லாப் பொருந்தும்னு நெனைச்சேம்ப்பா..."

"ஒருத்தரை நம்பி இல்லம்மா இந்த உலகம். உங்கம்மாவை விட்டா வேற இந்தியப் பெண்ணே கெடையாதா? உன் மனசுக்குப் பிடிச்ச இன்னொரு முகத்தை வரைஞ்சிட்டுப் போயேன்..."



MithraVintha

கிருஷ்ணமூர்த்தி பேசிக் கொண்டே அறையை விட்டு வெளியேறினார்.

துளசியின் கண்களின் இப்போது ஒரு புதிய உற்சாகமும், நம்பிக்கையும் ஊற்றெடுத்தது. உதடுகளில் திருப்தியானதொரு புன்னகை.

துளசியின் நினைவலையில் உடனடியாக புரண்டு வந்த முகம், நந்தினியின் முகம். நந்தினியின் சிரித்த முகம், கெஞ்சல் முகம், கோப முகம், கெஞ்சல் முகம் என துளசியின் கற்பனை, சினிமா ப்ரேம் விரிவது போல விரிந்தது. நந்தினி தான் 'இந்தியப் பெண்'ணுக்கு ஏற்ற முகம் என்று அவள் மனம் உற்சாகத்துடன் ஒப்புதல் தந்தது.

## 25

"கொக்கரக்கோ..."

இருள் பிரியாத விடியற்காலை நேரம்.

தன் வேலையை ஒழுங்காக செய்து விட்ட திருப்தியில், குடிசையின் கூரை மேல் நின்றிருந்த அந்த பருத்த பெரிய சேவல் இறக்கைகளை விரித்து உதறி, மினி கிளைடர் போல செங்குத்தாய் கீழே இறங்கியது. இறங்கியவுடன் முதல் வேலையாக விரித்திருந்த இறக்கைகளை அலகால் சொறிந்துக் கொண்டு, சீட்டுக் கட்டை சேர்த்து வைப்பது போல் சேர்த்து மூடிக் கொண்டது. ராஜ நடை நடந்து பக்கத்தில் இருந்த மண் மேட்டில் ஏறி, மண்ணை கொத்தி கிளற ஆரம்பித்தது.

சேவலின் கூவலில் முழிப்பு தட்டிய லலிதா, படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். உள்ளங்கைகளை தேய்த்துக் கண்களில் வைத்துக் கொண்டு, கசக்கி கண்களை திறந்தாள்.



அவிழ்ந்திருந்த தலைமுடியை கோடாலி முடிச்சாக கொண்டை போட்டுக் கொண்டு எழுந்தாள். நெகிழ்ந்திருந்த புடவையை சரிசெய்தபோது யதேச்சையாக திரும்ப, கிருஷ்ணமூர்த்தி எப்பொழுதும் படுத்திருக்கும் சாய்வு நாற்காலி காலியாக இருந்தது.

கண்களில் கேள்வியுடன் தப்பித்து வந்த கொட்டாவியை அடக்கிக் கொண்டே ஹாலுக்கு வந்தவளின் பார்வையில் கிருஷ்ணமூர்த்தி தென்பட்டார்.

கிருஷ்ணமூர்த்தி கையில் ஒரு சிறு தோல் பை வைத்திருந்தார். பான்ட், சட்டை, நெற்றியில் அவ்வளவு அதிகாலையிலேயே குளித்து விட்டதன் அடையாள குறிப்பாக திருநீறு ஒரு சின்ன தீற்றலாய் பூசப்பட்டிருந்தது. காலில் செருப்பு மாட்டிக் கொண்டிருந்தார்.

இயல்பாய் நிமிர, பார்வையில் லலிதா, கண்களில் கேள்வியுடன். அவர் புறப்படுவதைப் பார்த்து விட்டு அவள் புருவங்கள் சுருங்கின. லலிதா சட்டென திரும்பி, மாட்டியிருந்த காலண்டரைப் பார்த்தாள். தினத்தாள் காலண்டரில் இன்னும் கிழிக்கப்படாத நேற்றைய தேதியின் கீழ் சனிக்கிழமை என்பது தெரிந்தது.

ஒரு எகத்தாளப் புன்னகையுடன் லலிதா திரும்பினாள்.

"ஓ... இன்னைக்கு ஞாயித்துக் கெழமையா?" என்றாள் குரலில் கேலியுடன் கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்து.

கிருஷ்ணமூர்த்தி ஒரு சின்ன திடுக்கிடலோடு நிமிர்ந்து லலிதாவைப் பார்த்தார்.

"இல்ல லலிதா... நீ நல்லா தூங்கிட்டிருந்தே... அதான்... காப்பிக்குக் கூட தொந்தரவு பண்ணாம கெளம்பிட்டேன்..." என்றார் அசட்டுச் சிரிப்புடன்.

லலிதாவின் முகத்தில் இன்னும் எகத்தாளம் குறையாமல் இருந்தது.

MithraVintha

"எப்பவும் ஞாயித்துக்கெழமைல பத்து மணிக்குத் தானே ஓவர்டைம் டூட்டிக்குப் போவீங்க... இன்னிக்கு என்ன விடியற்காலைலயே கிளம்பியாவுது... ஓவர் டைமுக்கே ஓவர் டைமா..." என்றாள். லலிதாவின் குரலில் ஓவர்டைம் என்று சொல்லும் பொழுது அழுத்தம் கூடியிருந்தது.

கிருஷ்ணமூர்த்தியின் முகத்தில் பரிதாபம் வழிந்தது.

"ஐயோ லலிதா... நீ தப்பா புரிஞ்சிகிட்டே... நான் இப்ப பெரம்பலூர் வரைக்கும் போய்கிட்டிருக்கேன்... பெரம்பலூர்ல ரெண்டு மருந்துக்கடைகளுக்கு அர்ஜன்டா மருந்து சாம்பிளை கொடுத்துட்டு வரச் சொல்லி நேத்து பாலாஜி சொன்னானே, நீ கேக்கலியா... அவனுக்கு இன்னிக்குக் காலைல ஈரோடுல ரெண்டு டாக்டருங்களை பார்த்தாகனுமாமே..."

லலிதாவின் முகத்தில் லேசாக சிரிப்பு வந்தது. அதை வெளிக்காட்டாமல் அடக்கினாள்.

"அப்ப இன்னிக்கு 'ஓவர் டைம்' டூட்டி இல்லையா?"

"பெரம்பலூர் என்ன கடல் தாண்டியா இருக்கு? பக்கத்தில தான? போய்ட்டு இதோ வந்துட மாட்டேன்?"

"அதான பாத்தேன்...." என்றாள் லலிதா மீண்டும் எகத்தாளத்துடன். மோவாயை தோள்பட்டையில் இடித்துக் கொண்டு உள்ளே போனாள்.

கிருஷ்ணமூர்த்தி கையலாகாத்தனத்துடன் அவள் சென்ற திசையை சற்று நேரம் வெறித்து பார்த்து விட்டு பின் வாசலில் இறங்கினார்.



## 26

கிருஷ்ணமூர்த்தி பெரம்பலூர் புறப்பட்டுப் போன அதே ஞாயிறு.

காலை ஏழரை மணி. துளசியின் அறை. நோட்டுப் புத்தகங்கள் திருத்தும் அறை.

அறையின் நடுவே ஓவியர்கள் பயன்படுத்தும் மரத்தால் செய்யப்பட்ட ஸ்டான்ட் நிறுத்தப்பட்டிருந்தது. ஸ்டான்டில் உள்ள பிடிமாணங்களில், சரியான கோணங்களில் டிராயிங் போர்டு பொருத்தப்பட்டிருந்தது.

ஓவியம் வரைவதற்கான கான்வாஸ் விலகி விடாமல் இருக்க, டிராயிங் போர்டின் நான்கு பக்கங்களிலும் போர்டு பின்னோடு பொருத்தப்பட்டிருந்தது.

கான்வாஸில் ஓவியம் ஒன்று மெலிதான ஸ்கெட்ச்சால் வரையப்பட்டிருந்தது. ஓவியத்தின் முகம் வரையப்படாமல் இருந்ததால், ஓவியம் இன்னும் முழுமையாகாமல் இருந்தது.

துளசி போர்டில் இருந்து சற்று தள்ளி நின்றிருந்தாள். அவளுடைய இடது கையில் வண்ணங்களின் கவலைகள் பகுதி பகுதியாக பிரிக்கப்பட்டிருந்த தட்டு. மறு கையில் ஓவியர்களின் தூரிகை. தான் நின்றிருந்த இடத்தில் இருந்து ஓவியத்தைப் பார்த்து ரசித்தாள் துளசி.

அவளுடைய முகத்தில், தளிர் நடை பழகத் தொடங்கியிருக்கும் மழலைச் செல்வத்தை ரசிக்கும் பொழுது தெரியும் தாயின் பெருமிதமும், மகிழ்ச்சியும் போட்டிப் போட்டன.

MithraVintha

கொஞ்ச நேரம் பிரஷ்ஷின் முனையை கடித்துக் கொண்டு யோசித்தாள். அவளின் கற்பனையில் ஓவியம் நந்தினியாக மாறி கலகலவென சிரித்தது. துளசி மறுபடி டிராயிங் போர்டின் அருகில் வந்தாள்.

ரசனை பொங்கி வழியும் முகத்துடன் நந்தினியை நினைத்துப் பார்த்தாள். அவளுடைய கற்பனை ஃப்ரேமில் நந்தினியின் கைகள் தெரிந்தன. கைகளை ஓவியத்தில் வரைந்தாள்.

பின் கால்கள் ஃப்ரேமில் தெரிந்தன. அவற்றை வரைந்தாள்.

அடுத்து நந்தினியின் பட்டுப்புடவை ஃப்ரேமில் தெரிந்தது. வரைந்தாள்.

கொலுசு தெரிந்தது. வரைந்தாள்.

ஜிமிக்கி அதுவும்.

நந்தினியின் முகத்தை நினைவுப் படுத்திப் பார்த்தாள் துளசி.

நந்தினியின் முகம் நிலையில்லாமல் அலைந்தது. நினைவில் வரமாட்டேன் என்று அடம் பிடித்தது. சட்சட் என்று திரும்பிக் கொண்டேயிருந்தது. திரும்பிய நந்தினியின் முகம் ஒன்றரைக் கண்ணுடன் தெரிந்தது.

'ச்சே' என்று சலித்துக் கொண்டு மறுபடி நினைவுப் படுத்திப் பார்த்தாள் துளசி.

நாக்கை வெளியில் நீட்டி கைகள் இரண்டையும் முயல் காதுகள் போல் தலைக்குமேல் நீட்டி. 'லூலூலு' என்று அழகு காட்டிய நந்தினியின் முகம் துளசியின் மனதில் ஃப்ரேமாகத் தெரிந்தது.

'ச்சீச்சி' என்று தலையை உதறினாள் துளசி.

காயத்ரி, அந்த நேரத்தில் அறைக்குள் நுழைந்தாள்.

"என்னம்மா... 'ச்சீ' சொல்றே?" என்று கேட்டுக் கொண்டே அவளருகில் வந்தவள் ஓவியத்தைப் பார்த்தவுடன் அப்படியே



நின்றாள். பின் ஓவியத்தையே பார்த்துக் கொண்டு யோசித்து கொண்டிருந்த துளசியைப் பார்த்தாள்.

"என்னம்மா பண்றே?"

"படம் வரையறேண்டா செல்லம்!"

"யார் படம்?"

"நந்தினிக்காவோட படம்டா குட்டி..."

"நம்ம ஸ்கூல் புக்கு கடைல இருக்காங்களே...?"

"ஆமாண்டா... அவங்களே தான்..."

"ஐய... முஞ்சே வரையலியே... நந்தினிக்கா எங்கே?"

"அவங்க மூஞ்சி தான் என்கிட்ட கண்ணாமூச்சி ஆடிட்டேயிருக்குடா... என் பிரஷ்ல மாட்ட மாட்டேங்குது... நேர்ல போய் பாத்துத்தான் வரையணும் போல இருக்கு..."

சொல்லிக் கொண்டே, துளசி பாதி வரைந்திருந்த ஓவியப் படத்தை எடுத்து சுருட்டினாள்.

காயத்ரி துளசியையும், அவள் படம் சுருட்டுவதையும் பார்த்தாள்.

"நந்தினிக்காவை நேர்ல பாத்து வரையப் போறியாம்மா?"

"ஆமா... வரியா?"

"ம்ஹூம். நான் பாட்டி கூட கண்ணா மூச்சி ஆடப் போறேன்."

காயத்ரி சொல்லிவிட்டு ஓடிப் போனாள். துளசி சிரித்துக் கொண்டே வெளியே புறப்படுவதற்கு ஆயத்தமாக ஒரு புடவையை எடுத்துக் கட்டத் தொடங்கினாள்.

அங்கே நந்தினி, கிருஷ்ணமூர்த்தியின் வரவிற்காக ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தாள்.

MithraVintha

## 27

பிடித்திருந்த மடிப்பு கலையாமல் கொசுவத்தை வயிற்றை சுருக்கி, இடுப்பில் செருகியபோது வீட்டு வாசலில் சைக்கிள் ரிக்ஷா ப்ரேக் பிடித்து நின்ற சப்தம் கேட்டது.

சட்டென்று நந்தினி நிமிர்ந்தாள். தலையை தூக்கி கடிகாரத்தைப் பார்த்தாள்.

அவள் முகம் ஆச்சர்யத்தில் விரிந்தது.

'இன்றைக்கு என்ன வழக்கத்தை விட சீக்கிரம்?'

மனதுக்குள் சின்னதாய் சந்தோஷமும், ஆச்சர்யமும் பொங்கி வழிந்தன. இதயம் தறிகெட்ட குதிரையாய் வேகமாய் ஓடியது.

சுவற்றில் மாட்டப்பட்டிருந்த கண்ணாடியை அவசரமாய் நெருங்கினாள்.

பார்த்தாள்.

கோடு போட்டாற்போல் நேரான வகிடு. தளர தளர பின்னப்பட்ட ஈர கூந்தல். வட்டமான சிவப்பு பொட்டு. நிதானமான நீட்டப்பட்டிருந்த மை. காதில் ஆடிய ஜிமிக்கி. திரும்பும் பொழுதெல்லாம் மின்னலடித்த ஒற்றை மூக்குத்தி. அளவான கழுத்து. அளவெடுத்து கச்சிதமாய் தைத்து மாட்டி விட்டது போல உடம்போடு இழைந்திருந்த பட்டுப் புடவை. பார்த்து பார்த்து செய்து கொண்ட அலங்காரத்தில் ஏதாவது குறை இருக்கிறதா என்ன?

மல்லிகைப்பூ!?

வாசல் கதவை திறந்து, திரும்பிக் கொண்டு தலையை காண்பித்தால், பூவும் தலையில் ஏறிவிடும்.



நந்தினி சிரித்துக் கொண்டாள்.

ஆட்டுக்குட்டியின் துள்ளலோடு குதித்து குதித்து நடந்தாள். வாசல் கதவை நெருங்கினாள்.

திறந்தாள். உறைந்து போனாள்.

தோளில் மாட்டிய கைப்பையும், காலிங்பெல்லை அடிக்க உயர்த்திய கையுமாய் நின்றிருந்தாள் துளசி. நந்தினியைப் பார்த்தவுடன் அகலமாய் புன்னகைத்தாள்.

"இந்த வீடுதானேன்னு தெரிஞ்சுக்க பெல் அடிக்கப் போனேன். நீயே வந்துட்ட. நான் வந்திருக்கேன்னு எப்படி தெரிஞ்சுகிட்ட?"

துளசி பேசியது எதுவும் நந்தினியின் மனதில் பதியவில்லை. துளசியை இந்த நேரத்தில் எதிர்பார்த்திராத அதிர்ச்சியில் சிலையாய் நின்றிருந்தாள் நந்தினி.

துளசி கையை உயர்த்தி நந்தினியின் முகத்திற்கு நேரே பிடித்து மேலும் கீழும் ஆட்டினாள்.

நந்தினி சட்டென இயல்பானாள்.

"என்னாச்சு நந்தினி? நான் என்ன கொள்ளி வாய்ப் பிசாசா? என்னைப் பார்த்துட்டு அப்படியே வாயைப் பொளந்துட்டே..."

"இல்ல... நீ வருவேன்னு நினைக்கவேயில்ல... அதான்..." என்றாள் சமாளிப்பாய்.

"'வீட்டுக்கு வா'ன்னு கூப்டாமலேயே வந்துட்டேன்னு நெனைக்கறியா நந்தினி?"

"*சீச்சீ*.... *சீச்சீ*.... என்ன துளசி நீ...? அப்படியெல்லாம் நினைக்கற ஆளா நானு?"

"பின்ன, வாயை திறந்து 'உள்ள வா'ன்னு கூப்டமாட்டேங்கற?" என்றாள் துளசி சீண்டும் குரலில்.

"ஏய், போக்கிரி...! வீடு வாசல் வரைக்கும் வர தெரிஞ்சுது. உள்ளே வர முடியலையா? வா, உள்ளே வா... வா, வா..."

நந்தினியின் முகம் சிரிப்பால் நிறைந்தது.

MithraVintha

துளசி படி இறங்கி ரிக்ஷாவை நெருங்கினாள். ரிக்ஷாவில் இருந்து சுருட்டி வைக்கப்பட்டிருந்த ஓவிய சார்ட்டை எடுத்துக் கொண்டாள். கைப்பையைத் திறந்து பணத்தை எடுக்க, விரல் விட்டுத் துழாவினாள்.

துளசியை பார்த்துக் கொண்டிருந்த நந்தினி சட்டென்று திரும்பி வீட்டிற்குள் நுழைந்தாள்.

அவசர அவசரமாக கிருஷ்ணமூர்த்தியின் வேட்டியையும், பனியனையும் கொடியிலிருந்து உருவி, பக்கத்தில் இருந்த அலமாரியின் கதவைத் திறந்து அதில் திணித்து மூடினாள். இஸ்திரி போட்டுக் கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தியின் சட்டை மேஜை மேல் இருந்ததைக் கவனிக்கவில்லை. துளசி சார்ட்டோடு உள்ளே நுழைந்தாள். சார்ட்டையும், கைப் பையையும் ஒரு ஓரமாய் வைத்தாள். நின்ற இடத்தில் இருந்து நான்கு பக்கமும் பார்வையை ஓட்டினாள்.

"வீடு சின்னதா, அழகா, கச்சிதமா இருக்கு, நந்தினி. எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு..." என்றாள் துளசி.

"அப்ப இங்கியே தங்கிடேன்..." என்றபடி துளசியின் அருகில் வந்தாள் நந்தினி.

"தங்கிட்டாப் போச்சு..." என்றாள் துளசி சிரித்தபடி.

"என்ன திடீர்னு என் வீட்டுக்கு விசிட்?"

"ஆமா, வரணும் போல இருந்திச்சி... வந்து இந்த அழகு முகத்தை பாக்கணும் போல இருந்திச்சி.... அதான், வந்து குதிச்சிட்டேன். உன்னை என் வீட்டுக்கு 'வா வா'ன்னு கூப்ட்டு கூப்ட்டு வாயே வலிச்சிப் போச்சி. நீ வர்ற வழியாத் தெரியல. ரொம்ப பிகு பண்ணிகிட்டே... எனக்கு அந்த அந்த கௌரவம், கிவுரமெல்லாம் பாக்கத் தோணலம்மா..... அதான் திடீர்னு பொறப்பட்டு ஓடி வந்துட்டேன்..."

நந்தினி துளசியின் கைகளைப் பற்றிக் கொண்டாள். அவளை கனிவாகப் பார்த்தாள். சட்டென்று அவள் கன்னத்தில் முத்தமிட்டாள்.



"ஏய்... என்ன இது?"

துளசி கொஞ்சம் கூச்சத்துடன் நந்தினியிடம் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள்.

"ஒன்னைப் பாத்த சந்தோஷந்தான்.... வராதவ வந்திருக்கேல்ல! எங்க கொழந்தை? கூட்டிட்டு வரல்லியா?"

"பாட்டியோட கண்ணாமூச்சி விளையாடணுமாம் அவளுக்கு... சரின்னு விட்டுட்டு வந்துட்டேன்."

"பாட்டி பேத்தியோட கண்ணாமூச்சி விளையாடுவாங்க. சரி, தாத்தா?" நந்தினி யதார்த்தமாய் கேட்பது போல குரலை மாற்றிக் கொண்டாள்.

"அப்பாவா...? அவர் விடிகாலையிலயே பெரம்பலூர் கிளம்பி போய்ட்டாரு. பாலாஜி ஏதோ சின்ன வேலை சொன்னான்னு போயிருக்காரு..." துளசி பேசியபடி கிச்சனுக்குள் நுழைந்தாள்.

துளசியின் கண்களில் கிச்சன் மேடையில் வைக்கப்பட்டிருந்த இரண்டு தட்டுகளும், ஹாட்பேக்கும் தென்பட்டன.

"ஏய்... என்ன இது? நான் வருவேன்னு தெரியுமா ஒனக்கு? ரெண்டு தட்டு போட்டு ரெடியா வச்சிருக்கே...?"

நந்தினி ஒரு கணம் தடுமாறினாள். சட்டென்று சமாளிக்க வழி தெரியாமல் திணறினாள்.

"அது வந்து துளசி..."

"என்னம்மா மறைக்கிற... ஏய்?"

"ச்சீ... ஒண்ணுமில்ல... விருந்தாளி ஒருத்தர் வர்ரதா சொல்லியிருந்தாரு. அதுக்காகத்தான் ரெண்டு தட்டாப் போட்டு வச்சிருந்தேன். அதனாலென்ன, நீ உக்காரு... நாம ரெண்டு பேரும் சாப்பிடலாம்..."

"அப்ப விருந்தாளிக்கு? ஜில்லுன்னு பானைத் தண்ணியா?"

துளசி கேட்டு விட்டு சிரித்தாள்.

MithraVintha

நந்தினியும் சிரித்தாள்.

"ஏய் வாத்திச்சி... ஒன் கேள்வியை எல்லாம் பசங்க கிட்ட வச்சிக்க... இங்க வேணாம்... தோசையை சாப்பிடச் சொன்னா... தோசையை எண்ணிகிட்டு உக்காந்த கதையால்ல இருக்கு ஒன் பேச்சு..... வரேன்னு சொன்ன விருந்தாளி இன்னிக்கு வரமாட்டாங்கன்னு இப்பத்தான் அவங்க வீட்லேர்ந்து ஒரு பையன் வந்து சேதி சொல்லிட்டுப் போனான். நீ உக்காரு பேசாம... நாம சாப்பிடலாம்."

துளசியின் தோள்களைப் பற்றி அவளை உட்கார வைத்தாள் நந்தினி.

துளசி உட்கார்ந்தாள்.

நந்தினி ஹாட்பேக்கைத் திறந்து துளசியின் தட்டில் இரண்டு ஆப்பங்களை எடுத்துப் போட்டாள்.

ஆப்பங்களைப் பார்த்த துளசியின் கண்கள் விரிந்தன.

"ஹை... ஆப்பம்... தொட்டுக்க என்ன? தேங்காப்பாலா...?"

நந்தினி துளசியை ஒரு முறை நிமிர்ந்து பார்த்து சிரித்தாள். பக்கத்தில் இருந்த பாத்திரத்தின் மூடியைத் திறந்து அதில் இருந்து தேங்காய்ப்பாலை எடுத்து ஆப்பத்தின் மேல் ஊற்றினபடி துளசியிடம் கேட்டாள்.

"அதுக்கென்ன இப்போ?"

துளசியின் கண்கள் தேங்காய்ப்பாலை பார்த்துவிட்டு இன்னும் பெரிதாய் விரிந்தன.

"ஆஹா... தேங்காப்பாலு..."

"ஏன்... ஆப்பத்தையும், தேங்காப்பாலையும் நீ பாத்ததே இல்லியா?"

"அதுக்கில்ல.... எனக்கு ஆப்பமும், தேங்காப்பாலும் ரொம்பப் பிடிக்கும்!"

"உனக்குமா...?" என்றாள் நந்தினி.



"அப்படின்னா...?"

'அப்பாவைப் போலவே பெண்ணும்' என்று சொல்ல வேண்டும் போல இருந்தது நந்தினிக்கு. வாய் வரை வந்து விட்ட வார்த்தைகளை கடிவாளம் போட்டு நிறுத்தினாள். துளசியைப் பார்த்து அகலமாய் புன்னகைத்தாள்.

"இல்ல... எனக்கும் பிடிக்கும்... அதான் நாம ரெண்டு பேருமே ஒரே மாதிரி இருக்கோம்னு சொல்ல வந்தேன்."

"உனக்கு ஒண்ணு தெரியுமா நந்தினி? எங்கப்பாவுக்குக் கூட ஆப்பமும் தேங்காப்பாலும் ரொம்பப் பிடிக்கும்..."

துளசி சொன்னதைக் கேட்டவுடன் கிருஷ்ணமூர்த்தியின் நினைவு நந்தினியை தாக்கியது. சட்டென்று புரைக்கேறி இருமினாள்.

துளசி நந்தினியின் தலையில் மெதுவாக தட்டினாள்.

"நீயும் தட்டு எடுத்து போட்டுக்கயேன்... ரெண்டு பேரும் சாப்பிடலாம்னு சொன்னேல்ல..."

நந்தினி இன்னொரு தட்டில் ஆப்பத்தையும், தேங்காய்ப்பாலையும் போட்டுக் கொண்டாள்.

"நந்தினி, எனக்கு ஒரு சின்ன ஆசை... சொன்னா கோச்சுக்க மாட்டியே...?"

"என்ன, சும்மா சொல்லு ஊட்டி விடணுமா?"

"ச்சீ... அதில்ல. தட்டை எடுத்துகிட்டு ஊஞ்சல்ல உக்காந்து சாப்பட்டுமா?"

கேட்ட மாத்திரத்தில் மறுபடியும் நந்தினிக்கு புரையேறுகிறது. அவள் மனதில் கிருஷ்ணமூர்த்தி திரம்பியிருந்தார்.

"ஏய்.... யாரு ஒன்னை நெனைச்சிக்கறாங்க? இப்படிப் பொறக்கேறுது?"

MithraVintha

நந்தினி பதில் சொல்லமல் கிச்சன் ஜன்னல் வழியாக வாசல் பக்கம் பார்த்தாள். அவள் பார்வையில் பதைப்பு. எங்கே இந்த சமயம் பார்த்து கிருஷ்ணமூர்த்தி வந்து விடப் போகிறாரோ என்னும் பரிதவிப்பு அவள் பார்வையில் இருந்தது.

"என்னை யாரு நெனைச்சிக்கப் போறாங்க..."

"யாரும் இல்ல?" என்று இழுத்தாற் போல கேட்டாள் துளசி.

"ம்ஹூம்."

"ஏய்.... மறைக்காமச் சொல்லு... ஒன்னை நெனைச்சிக்கறதுக்கு யாருமில்ல?"

நந்தினியின் கண்கள் கலவரத்தில் விரிந்தன. துளசிக்கு ஏதாவது தெரிந்திருக்குமோ. அதனால்தான் இங்கு வந்திருக்கிறாளோ என்று தவித்தாள்.

"ம்ஹூம்..." என்றாள் பரிதாபமாய்.

"பொய்ய்யி.... ஒன் துபாய் வீட்டுக்காரர் ஒன்னை நெனைக்காம வேற யாரை நெனைக்கப் போறாராம்?" என்றாள் விஷமமாய் சிரித்தபடி. நந்தினியை அடிப்பார்வை பார்த்துக் கொண்டே தண்ணீர் செம்பை எடுத்து அப்படியே சரித்துக் கொண்டாள் துளசி.

நந்தினி துளசி அறியாமல், மறுபடி வாசல் பக்கம் பார்த்தாள்.

சட்டென்று ஒரு தீர்மானத்திற்கு வந்தாள். போனிலாவது கிருஷ்ணமூர்த்தியைப் பிடித்து துளசி வந்திருப்பதைச் சொல்லி அவரை வரவிடாமல் தடுக்க வேண்டும் என்ற தீர்மானம். ஒரு வேளை அவர் பெரம்பலூரில் இருந்து நேரா இங்கேயே வந்துவிட்டால்?

குப்பென்று வியர்த்து விட்டது நந்தினிக்கு!



28

கிருஷ்ணமூர்த்தி 'விசுக், விசுக்' என்று கால்களை எட்டி வைத்து வேகமாக நடந்தார். பாண்ட் பாக்கெட்டில் இருந்து கைக்குட்டையை எடுத்து முகத்தில் பூத்திருந்த வியர்வையை துடைத்துக் கொண்டார்.

நந்தினி இத்தனை நேரம் தன்னை காணாமல் எதையெதையோ கன்னாபின்னாவென்று கற்பனை பண்ணிக் கொண்டு தவித்துக் கொண்டிருப்பாள் என்ற நினைப்பே அவருள் தவிப்பை உண்டு பண்ணியது.

அவருடைய தவிப்பை புரிந்து கொள்ளாமல், மேலே சூரியனும் தன் பங்குக்கு சுட்டெரித்தான்.

மறுபடி கைக்குட்டையால் முகத்தை அழுந்தத் துடைத்தார்.

பாலாஜி கொடுத்திருந்த வேலை நிமிஷ நேரத்தில் முடிந்துவிட்டது. ஆனால் பெரம்பலூரில் ஏதோ கட்சியின் பேரணி ஒன்று. அதனால் பேருந்துகள் எல்லாம் திசை திருப்பப்பட்டு அங்கு இங்கு என்று மாறி மாறி வந்து சேர்வதற்குள் 'உன் பாடு, என் பாடு' என்றாகிப் போனது கிருஷ்ணமூர்த்திக்கு.

கிருஷ்ணமூர்த்திக்கு அணிந்திருந்த பேன்ட்டை கழற்றிப் போட்டுவிட்டு வேட்டியை கட்டிக் கொண்டால் பரவாயில்லை என்று தோன்றியது.

திருப்பத்தில் திரும்பியவுடன் வீடு தெரிந்தது.

வீட்டைப் பார்த்ததும், அவரின் நடையின் வேகம் அதிகரித்தது.

MithraVintha

வாசல் கதவு தாளிடாமல் சாதாரணமாக மூடியிருந்தது.

கதவை ஓசைப்படாமல் திறந்தார். ஹாலில் யாரும் இல்லை. துளசியை காணவில்லை. உள்ளே சமையலறையில் லலிதா சமைத்துக் கொண்டிருப்பது தெரிந்தது. உள்ளே நுழைந்து உள்ளறைக்கு சென்றார்.

பாண்ட்டை கழற்றி கொடியில் போட்டுவிட்டு வேட்டியை எடுத்துக் கட்டிக் கொண்டார். வெளியே வந்தார்.

வாசல் கதவை நெருங்கி, வெளியேறி முதலில் இருந்ததைப் போலவே மூடி வைத்தாள்.

"ஹை... தாத்தா..."

கிருஷ்ணமூர்த்தி திடுக்கிட்டு திரும்பினார்.

காயத்ரி கையில் ஏதோ ஒரு பொம்மையுடன் நின்றிருந்தாள்.

"எங்கே போயிருந்தே ராஜாத்தி?" என்றார் கிருஷ்ணமூர்த்தி.

"பக்கத்து வீட்லதான் விளையாடிட்டிருந்தேன்..."

"அப்படியா..... சரி, போய் விளையாடிட்டிரு. தாத்தா வெளியே போய்ட்டு வரேன்..." காயத்ரி அவருடைய வேட்டியை கெட்டியாக பிடித்துக் கொண்டாள்.

"ம்ஹூம்... என்னோட கொஞ்ச நேரம் விளையாடிட்டுத் தான் போகணும். ப்ளீஸ் தாத்தா... நானும் நீயும் விளையாடலாம். வா... " காயத்ரி பிடிவாதமாய் வேட்டியை பிடித்துக் கொண்டு கேட்டாள்.

கிருஷ்ணமூர்த்தி குனிந்து காயத்ரி அருகே குத்துக் காலிட்டது போல் உட்கார்ந்தார். அவளுடைய கன்னத்தில் மெதுவாக தட்டிக் கொடுத்தார்.

"தாத்தா காலைல ஒரு வேலையா பெரம்பலூர் வரைக்கும் போய்ட்டு வந்தேம்மா... அதுவே டயர்டா இருக்கு. ஆனா பாரு, மறுபடி தாத்தா ஆபீஸுக்குப் போகணும். அதனால



சாயங்காலம் வந்து உன் கூட விளையாடறேன். என்ன சரியா?" என்றார் மென்மையாக.

"நிஜம்மா...?" என்றாள் காயத்ரி கண்களை அகல விரித்து.

"நிஜம்மா..." என்றார் கிருஷ்ணமூர்த்தி. அவளின் கன்னத்தில் முத்தமிட்டார்.

"பிராமிஸ்?" என்றாள் காயத்ரி உள்ளங்கையை நீட்டி.

"பிராமிஸ்" என்றார் சிரித்தபடி அவளின் உள்ளங்கையில் தன் உள்ளங்கையை பதித்து.

"சரி நான் ஆபீஸுக்கு போறேன். பாட்டிக்கிட்ட சொல்லிடு என்ன?"

வீட்டின் உள்ளே இருந்து வெகு திடீரென பாத்திரம் ஒன்று கீழே உருண்ட சத்தம் கேட்டது. கிருஷ்ணமூர்த்தி பெருமூச்சுடன் எழுந்துக் கொண்டார். அவரது மனக்கண்ணில் லலிதாவின் கோபமான முகம் தோன்றி மறைந்தது.

"பாட்டி கிட்ட சொல்ல வேணாம்மா. பாட்டிக்கே தெரிஞ்சி போச்சி. தாத்தாவுக்கு ஏற்கனவே ரொம்ப லேட் ஆயிரிச்சி. வழியை விடுடா கன்னுக்குட்டி..."

"சரி..." என்று முனகலோடு காயத்ரி அவரது வேஷ்டியை விடுவித்து விட்டு மறுபடி பக்கத்து வீட்டுக்கு ஓடினாள்.

கிருஷ்ணமூர்த்தி செருப்பை மாட்டிக் கொண்டு தெருவில் கால் பதித்தார்.

## 29

**து**ளசியிடம் சொல்லாமல் கொள்ளாமல் திடுதிப்பென்று வீட்டைவிட்டு வெளியே வந்தாள் நந்தினி. அருகிலேயே ஒரு கடை இருந்தது. கடைப்பையன் அவளைப் பார்த்துச் சிரித்தான்.
"வாங்கம்மா... என்ன வேணும்?"



MithraVintha

"ஒரு கலர் குடு... அப்படியே இந்த நம்பருக்கு போன் போட்டு கிருஷ்ணமூர்த்திங்கறவரைக் கூப்பிடு. அவர் லைன்ல வந்ததும் போனை எங்கிட்ட குடு."

கடைப்பையன் நம்பரை வாங்கி டயல் செய்தான். நந்தினி அவன் முகத்தையே ஆவலுடன், பதைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஹலோ கிருஷ்ணமூர்த்தி சார் வீடுதானே? அவர் இருக்காரா... அப்படிங்களா?" என்று ரிசீவரை வைத்தவன், "அவர் ஆபீசுக்குப் புறப்பட்டுப் போய்ட்டாராமேம்மா" என்றான்.

திக்கென்று இருந்தது. குளிர்பான பாட்டிலுடன் வீடு திரும்பினாள். என்ன செய்யலாம்? கடவுளே! நந்தினி உள்ளே நுழைந்தாள். அவளின் கையில் கூல்டிரிங் பாட்டில் ஒன்று உடல் வேர்த்திருந்தது.

அவளைப் பார்த்த துளசி ஒரு முறை கிண்டலாய் சிரித்தாள். அவளின் ஒரு கை அவளுடைய முதுகுக்குப் பின்னே இருந்தது. எதையோ அவள் மறைத்துக் கொண்டிருப்பதாக நந்தினிக்கு தோன்றியது.

"வாங்கம்மா... வாங்க..."

நந்தினி பாட்டிலை உயர்த்தி காண்பித்து எச்சில் விழுங்கினாள். ஒரு முறை கண் இமைத்து முழித்தாள். அவளின் செய்கை தப்பு செய்து மாட்டிக் கொண்ட குழந்தையைப் போல இருந்தது.

"இந்த ஜோடா, கலர்லாம் வேணும்னு இப்ப நான் கேட்டனா? சொல்லாம கொள்ளாம கூப்புடக் கூப்புட ஓடிப் போய்ட்டே... இது எதுக்கு இப்ப?"

நந்தினி தலையை ஒற்றை விரலால் சொறிந்து விட்டுக் கொண்டாள்.



"இல்ல துளசி... மொத மொதல்ல எங்க வீட்டுக்கு வந்திருக்கேல்ல... அதான்... என்னமோ... வாங்கிக் குடுக்கணும் போல ஆசையா இருந்திச்சி... இந்தா..."

துளசி நந்தினியைக் கனிவுடன் பார்த்தாள். பாசத்தில் நெஞ்சம் நெகிழ்ந்தாள். நந்தினியின் கையில் இருந்த பாட்டிலை வாங்கிக் கொண்டாள்.

"நீ பாதி, நான் பாதி... என்ன?"

நந்தினி சம்மதத்திற்கு அறிகுறியாக தலையை அசைத்தாள்.

"அப்ப மொதல்ல நீ குடிச்சிட்டுக் குடு... இந்தா..." என்றாள் துளசி பாட்டிலை நந்தினியிடமே நீட்டி.

நந்தினி தயங்கித் தயங்கி கூல்டிரிங் பாட்டிலை வாங்கிக் கொண்டாள். துளசியைப் பார்த்துக் கொண்டே தலையை அண்ணாந்து பாட்டிலை உயர்த்திப் பிடித்து ஊற்றிக் கொண்டாள்.

துளசி பின்னால் மறைத்திருந்த கையை முன்னால் கொண்டு வந்தாள்.

அந்தக் கையில் நந்தினி எடுத்து மறைத்து வைக்க விட்டுப் போன கிருஷ்ணமூர்த்தியின் சட்டை ஒன்று.

"இது என்னது?"

துளசி சட்டையை மேலும் கீழும் ஆட்டியபடி கேட்டாள்.

சட்டையைப் பார்த்தவுடன் நந்தினியின் விழிகள் பயத்தில் பெரிதாய் விரிந்தன. சட்டையை பார்த்த தடுமாற்றத்தில் கூல்டிரிங்கை மூக்கிலும் வாயிலும் ஊற்றிக் கொண்டாள். மறுபடி அவளுக்குப் புரையேறியது.

"ச... ச... சட்டை..." என்றாள் புரையேறின தொண்டை கமறலுடன்.

"அது எங்களுக்கும் தெரியுது" என்றாள் துளசி கிண்டலாய். அவள் விளையாட்டாய் கிண்டலடிக்கிறாளா இல்லை

MithraVintha

கிருஷ்ணமூர்த்தியின் சட்டை என்று அடையாளம் தெரிந்து பேசுகிறாளா என்று நந்தினிக்கு புரியவில்லை.

"சட்டை... ஆம்பிளைச் சட்டை... இதுக்குப் போய் இப்ப எதுக்கு இஸ்திரி போட்டுக்கிட்டிருக்கே... உன் வீட்டுக்காரர்தான் துபாய்ல இருக்கறதாச் சொன்னே. அப்ப... இது யாருது...?"

நந்தினி சட்டென்று ஆசுவாசமானாள். பெரிதாய் ஒரு பெருமூச்சை வெளிப்படுத்தினாள். சட்டையைத் தொட்டு காண்பித்தாள். வேகமாய் யோசித்தாள்.

"இந்த சட்டை தானே?"

"ஆமாம்மா... ஆமா..."

"நம்ம பள்ளிக்கூடத்தில் மாறுவேஷப் போட்டி வருதில்ல...?"

"ஆமா..."

"அதுல நான் பாராக்காரன் வேஷம் போடப்போறேன்... அதுக்காகத்தான் இந்த சட்டையை பக்கத்து வீட்டு பெரிய தம்பிகிட்டேயிருந்து வாங்கி வச்சிருந்து தேய்ச்சிக்கிட்டு இருந்தேன்."

"ஹை... பாராக்காரன் வேஷம் போடப் போறியா... எங்க போட்டுக் காட்டு... நான் பாக்கணுமே... நந்தினி... நந்தினி... போட்டுக் காட்டேன்... ஏய்... ஏய்..."

அருகில் வந்து கெஞ்சிய துளசியை டிராஃபிக் கான்ஸ்டபிள் போல் உள்ளங்கையை நீட்டித் தடுத்தாள் நந்தினி. கூல்டிரிங்க் பாட்டிலை கொடுத்து விட்டு பக்கத்து அறைக்குள் சென்று கதவை மூடிக் கொண்டாள்.

நந்தினி வைத்து விட்டுச் சென்ற கூல்டிரிங்கை துளசி ஒரு வாய் சரித்துக் கொண்ட பொழுது, தாளிடப்பட்ட கதவு 'டொடக்' என்று தாள் நீக்கப்பட்டு திறந்தது.

நந்தினி நின்றிருந்த இடம் சமையலறை.



ஜன்னலின் வழியாக கீழே இறங்கிய சாயங்கால சூரியனின் கதிர்களின் புகைப் பின்னணியில் நந்தினி நின்றிருந்தாள்.

நந்தினியின் தலையில் ஒரு தலைப்பாகை. கை மடித்து விடப்பட்ட சட்டை. உதட்டில் ஒட்ட வைக்கப்பட்ட மீசை.

முழங்கால் வரை மடித்துக் கட்டப்பட்ட வேட்டி. நுனி வளைந்த செருப்பு. ஒரு கையில் பெரிய கோல். இன்னொரு கையில் ஒரு லாந்தர் விளக்கு.

துளசியைப் பார்த்தவுடன் நந்தினி குரல் கொடுத்தாள்.

"லே... யார்ராது களவாணிப்பய... சோளக்காட்டுக்குள்ள... புடிச்சிக் கட்டுங்கடா அவனை மரத்தில..." என்றாள் உரத்த குரலில்.

விரிந்த விழிகளுடன், ஆச்சர்யம் நிறைந்த முகத்துடன் நந்தினியைப் பார்த்த துளசி தன்னிச்சையாக கூல்டிரிங்கை வாயில் சரித்துக் கொண்டாள். பானம் வாயிலும், மூக்கிலும் நுழைந்து துளசிக்குப் புரையேறியது.

நந்தினி கலகலவென சிரித்தாள்.

## 30

கிருஷ்ணமூர்த்தி வழக்கம் போல் ரிக்ஷாவில் ஏறினார். நந்தினி இருக்கும் வீட்டின் முகவரியைச் சொன்னார். ரிக்ஷா ஓடத்தொடங்கியது.

சற்று தூரம் சென்றதும் சாலை ஓரத்தில் பூக்காரியைப் பார்த்தார். ரிக்ஷாவை நிறுத்தச் சொன்னார். கீழே இறங்கி விலை பேசி ஒரு பந்துப் பூவை வாங்கிக் கொண்டார்.

ரிக்ஷாவில் ஏறினார். விரைவாகப் போகச் சொன்னார்.

MithraVintha

ரிக்ஷா நந்தினியின் வீடு இருந்த தெருவை நோக்கி நகர்ந்தது.

★ ★ ★

துளசி நந்தினியின் வீட்டு ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தாள். அவள் மடியில் டிரான்ஸிஸ்டர். துளசியின் கை சும்மா இராமல், டிரான்ஸிஸ்டரின் குமிழை இடமும், வலமுமாகத் திருப்பிக் கொண்டிருந்தது.

கொஞ்சம் வேகமாக வலப்புறத்தில் குமிழைத் திருப்பியதும் டிரான்ஸிஸ்டர் திடீரென விழித்துக்கொண்டது.

"..த்தடி நீரைச் சேகரிக்கும் வழிகளா..."

துளசி டிரான்ஸிஸ்டரின் சத்தத்தைக் குறைத்தாள். மறுபடி அதிகப்படுத்தித் திருப்பினாள்.

"...டைச் சுற்றி அங்கங்கே பள்ளம் தோண்டி அப்..."

மறுபடி அவள் கை குமிழைத் திருகியது.

"...து மட்டுமன்றி இன்னொரு வழியு..."

அந்த டிரான்ஸிஸ்டருக்கு மட்டும் உயிர் இருந்திருந்தால் துளசியிடம் கை கூப்பிக் கதறித் தன்னைச் சித்திரவதை பண்ண வரைக்கும் போதும் என்று மன்றாடியிருக்கும்.

சட்டென்று சமையலறையின் கதவு திறந்தது.

நந்தினி ஓடிவந்து துளசியின் கையைப் பற்றித் தடுத்து நிறுத்தினாள்.

"போதும் விளையாடினது..."

துளசி நிமிர்ந்து பார்த்தாள்.

நந்தினி மறுபடி பட்டுப் புடவைக்கு மாறியிருந்தாள். காவல்காரன் வேஷத்தையெல்லாம் கலைத்து விட்டு, கட்டியிருந்த பட்டுப்புடவையை மறுபடியும் எடுத்து கட்டிக் கொண்டு தலைப்பை முதுகு வழியாக போர்த்தி முன்னாடி கொண்டு வந்திருந்தாள்.



நந்தினியின் அழகு துளசியை ரசிக்க வைத்தது.

புடவையை, ஜிமிக்கியை, அவளது கண் இமைகளை ஒவ்வொன்றாக பார்த்து பார்த்து ரசித்தாள் துளசி.

"நான் எதுக்கு ஒன்னைத் தேடிக்கிட்டு இவ்வளவு தூரம் வந்தேன்னு நீ கேக்கவே இல்லையே..."

"நீ சொல்லவே இல்லையே..." துளசி கேட்ட மாதிரி இழுத்தாற் போல பதில் சொன்னாள் நந்தினி.

"ஏய் போக்கிரி... இதோ இதுக்குத்தான்..."

துளசி ஊஞ்சலில் இருந்து இறங்கி, ஒரு ஓரமாய் வைத்திருந்த, தான் எடுத்துவந்த நந்தினியின் ஓவியம் அரைகுறையாய் வரையப்பட்ட சுருளை விரித்து பிடித்தாள்.

நந்தினியின் முகம் மட்டும் வரையப்படாமல் மற்றபடி அந்த ஓவியம் முழுமையாய் பூர்த்தி அடைந்திருந்தது.

நந்தினி அந்த சமயம் எந்த நிறத்தில் பட்டுப்புடவை கட்டி இருந்தாளோ, அந்த நிறத்திலேயே, ஓவிய நந்தினியின் பட்டுப்புடவை நிறமும் காட்சி அளித்தது.

"பேப்பர்ல ஓவியப் போட்டி பத்தி ஒரு விளம்பரம் வந்திருந்திச்சி... நான் அதுல கலந்துக்கணும்னு அப்பா ரொம்ப ஆசைப்பட்டாரு..... எனக்கும் அவர் சொன்னதுலர்ந்து போட்டியில கலந்துக்கலாம்னு தோணுச்சி..... போட்டியில கலந்துக்கலாம்னு முடிவெடுத்தவுடனே, ஞாபகத்துக்கு வந்தது நீ தான், நந்தினி. மனசுல வெச்சு நிறுத்தி பார்த்து, பார்த்து மத்ததெல்லாம் வரைஞ்சிட்டேன்..... ஆனா உன் முகம்.... எவ்வளவு ஞாபகப்படுத்தி ஞாபகப்படுத்தி பார்த்தேன்... இந்தக் கொரங்கு மூஞ்சி என் ஞாபகத்துல வருவேனாங்குது... அதான் நேரில பாத்து வரைஞ்சிட்டுப் போலாம்னு வந்தேன்..." துளசி மூச்சுவிடாமல் சொல்லி முடித்தாள்.

"ஏன் ஸ்ரீரங்கம் கோயிலுக்குப் போயிருக்க வேண்டியது தானே... அங்க ஒனக்கு ஏகப்பட்ட குரங்கு மூஞ்சி

MithraVintha

கிடைக்குமில்ல… உர்ர்ருன்னும், ராான்னும் போஸ் கொடுத்துக் கிட்டு…"

நந்தினி பொய்யான கோபத்துடன் குரங்கைப் போல முகத்தைக் குவித்து அழகு காட்டினாள்.

"ஏய்… நான் சும்மா வெளையாட்டுக்குச் சொன்னா அதுக்குப் போய் கோச்சிக்கதியே…"

நந்தினி துளசியின் பக்கத்தில் வந்து மென்மையுடன் சிரித்தாள்.

"நான் சும்மா வெளையாட்டுக்குக் கோவிச்சுக்கிட்டா அதுக்குப் போய் இப்படி வாடிப் போறியே…"

துளசி சிரித்தாள்.

நந்தினி வாசல் பக்கம் ஒரு முறை பார்த்தாள்.

"சரி, அப்படியே கொஞ்ச நேரம் ஆடாம அசையாம நில்லேன்… நான் இந்தப் படத்தை முடிச்சிடறேன்…"

"இப்பவா? இப்பவே வா?" என்றாள் நந்தினி மகா தயக்கத்துடன்.

மறுபடி நந்தினியின் பார்வை வாசல் பககம் போனது.

"ஆமா… ஏன்… விருந்தாளிங்க தான் வரமாட்டாங்கன்னு சொன்னே! அதுக்கப்புறம் எதுக்கு மறுபடி மறுபடி வாசலைப் பார்த்துட்டு இருக்கே…"

"இல்ல… அதில்ல… கொஞ்சம் வீட்ல வேலை இருக்கு… அதுவுமில்லாம சாயங்காலம் ஆச்சுன்னா கொஞ்ச தூரத்தில இருக்கிற கோயிலுக்குப் போவேன்…" நந்தினி தவிப்பும், பரபரப்புமாய் சொன்னாள்.

"என்ன நந்தினி, தெனமும் தான் வீட்ல வேலை இருக்கு… இன்னிக்கு ஒரு நாள் கொஞ்சம் லேட்டாத் தான் செஞ்சுக்கயேன்…"



நந்தினி பதில் சொல்லாமல் யோசித்தாள்.

"என்ன நந்தினி யோசிக்கறே…?"

"இல்ல… கோயிலுக்கு போனும்னு சொன்னேனே…" என்றாள் ஈனஸ்வரத்தில்.

"ப்ளீஸ் நந்தினி… இன்னிக்கு ஒரு நாள் போகாட்டி என்ன? சரி வேண்டாம். பத்து நிமிஷம், பத்தே நிமிஷம் நில்லு… வரைஞ்சி முடிச்சுடுவேன். கொஞ்ச லேட்டா போயேன் கோயிலுக்கு… ப்ளீஸ் நந்தினி… எனக்காக இது கூட செய்ய மாட்டியா?"

துளசியின் முகம் பரிதாபமாய் கெஞ்சியது.

"ஏய் என்ன பெரிய பெரிய வார்த்தையெல்லாம் பேசிகிட்டு… சரி சரி, சீக்கிரம் வரைஞ்சு முடி" என்றாள் நந்தினி தவிப்பை வெளிக்காட்டாமல்.

"தாங்க்ஸ் நந்தினி… இதோ இந்த ஊஞ்சல்ல வந்து உக்காரேன்…" என்றாள் துளசி மிக ஆவலுடன்.

"இல்ல… இங்க வரையவேணாம் துளசி… ஒரே புழுக்கமாய் இருக்கு வா… பின்னால தோட்டத்துக்குப் போய்டலாம். குருவி, கிளில்லாம் கீச், கீச்னு கூப்புடும். அணிப்பிள்ளை மரத்துக்கு மரம் தாவும்… காத்து நல்லா வரும்… ஒனக்கும் நல்லாப் படம் வரைய வரும். என்ன சொல்றே…"

துளசி நந்தினியை ஒரு முறை செல்லமாய் முறைத்தாள்.

"சரி…"

நந்தினி கையில் அந்த டிரான்ஸிஸ்டரை எடுத்துக் கொண்டாள்.

"இது எதுக்கு?"

"பாட்டுக் கேக்கத் தான்…"

நந்தினி கொல்லைப்புறக் கதவைத் திறந்தாள்.

MithraVintha

## 31

தோட்டத்தின் கதவு திறந்ததும் ஒரு பெரிய வேப்ப மரம் காவலுக்கு நிற்கும் வீரன் போல நின்றிருந்தது.

சிலுசிலு வென்ற வேப்பங்காற்று உடலை வருடிச் சென்றது.

தோட்டம் சின்னதாய் இருந்தது. அழகாய் பராமரிக்கப் பட்டிருந்தது. ஒரு வரிசை பூராவும் கனகாம்பரம் ஆரஞ்சு வண்ணத்தில் சிரித்து குலுங்கின. தோட்டத்தின் மத்தியில் மாமரம் ஒன்று பெரியதாய் அகண்டு வளர்ந்திருந்தது. ஒரு ஓரமாய் ஒரு கிணறு. மேலே கம்பி வலை போட்டு மூடப்பட்டிருந்தது.

மாமரக் கிளைகளினூடே நுழைந்தது கசிந்தது மாலைச் சூரியனின் கதிர்கள். குருவிகளின் 'கீச் கீச்'சும், கிளிகளின் 'கீகீகீ'களும், இனம் தெரியாத பறவைகளின் 'க்ரீய்ச்'சுகளும், சூழ்நிலையை ரம்மியமாக்கி இருந்தன.

நந்தினி ஆடாமல் அசையாமல் நின்றிருந்தாள்.

துளசி அவள் முகத்தைப் பார்த்து ரசித்து ரசித்து ஓவியம் வரைந்து கொண்டிருந்தாள்.

நந்தினி திடீரென அசைந்தாள். தன் கழுத்தைத் தடவிப் பார்த்துக் கொண்டாள்.

"அசையாதே... அசையாதே நந்தினி. அசையாதேஏஏஏ... கொஞ்ச நேரம் அப்படியே இரு..."

"இல்ல துளசி... வீட்ல ஒரு செயின் வச்சிருக்கேன்... ஓடிப்போய் அதைப் போட்டுக்கிட்டு வரேன்... படம் ஒனக்கு இன்னும் ஜம்முன்னு வரும்..." நந்தினி நெளிந்தபடி பதிலளித்தாள்.

துளசி பதில் சொல்வதற்குள் நந்தினி வீட்டை நோக்கி ஓடினாள்.



துளசி அவள் போவதையே இடுப்பில் ஒற்றைக்கையை வைத்துப் பார்த்துக் கொண்டிருந்து விட்டுத் திரும்பி டிரான்ஸிஸ்டரை ஆன் செய்தாள்.

"கோழி வளர்ப்புத் திட்டம்... ஒரு லாபகரமான திட்டம். கோழி வளர்ப்பதற்கு முதலில்..."

நந்தினி மறுபடி தோட்டத்திற்குத் திரும்பி வந்தாள்.

"... இப்படி பெறப்படும் கோழி முட்டைகள் குஞ்சு பொரிக்காதவை புரதச்சத்து நிறைந்தவை... அனைவரும் உண்ணலாம். கோழி வளர்ப்புத் திட்டம் ஒரு லாபகரமான..."

நந்தினி டிரான்ஸிஸ்டரை ஆஃப் செய்தாள்.

"கோழியை அப்புறம் வளர்க்கலாம். இப்பப் படம் போடு..."

நந்தினி அந்த செயினுடன் மறுபடி முதலில் நின்றிருந்த இடத்திற்கே வந்து முதலில் நின்றிருந்த மாதிரியே நின்றுக் கொண்டாள்.

நந்தினியின் கழுத்தில் இருந்த செயின் சற்று கோணலாக மட்டப் பட்டிருந்தது.

துளசி நந்தினியை நெருங்கி அந்தச் செயினை சரி செய்தாள்.

"ஏய்... ஏய்... என்ன பண்றே?"

நந்தினி கழுத்தை லேசாகப் பின்னுக்கு இழுத்தாள்.

செயின் பட்டென்று அறுந்து போனது.

கையோடு வந்த செயினைப் பார்த்து துளசி திகைத்துப் போனாள்.

நந்தினி சிரித்தாள்.

"அது ஏற்கனவே தேய்ஞ்சி போய் அறுந்துடற மாதிரி தான் இருந்தது. அதுக்குத்தான் நீ தொட வந்தப்ப கழுத்தைப் பின்னுக்கு இழுத்தேன்.... இப்பப் பாரு படம் வரையறதுக்கு உதவாமப் போயிரிச்சி..."

MithraVintha

"நான் இதை ரிப்பேர் பண்ணித் தந்துடறேன் நந்தினி" என்றாள் துளசி லேசான குற்ற உணர்வுடன்.

"ச்சீ...ச்சீ... எதுக்கு வீணா... அதுவே அறுந்துக்கற மாதிரி தான் இருந்ததுன்னு சொல்றேனே...ஒனக்குப் படம் வரைய உதவ முடியலியேன்னுதான் மனசு அடிச்சிக்குது. நான் அதை அழிச்சி வேற பண்ணிக்கறேன். பரவால்லை... குடு..."

"இல்ல நந்தினி... எனக்கு மனசு கேக்கல. நான் அதைப் பத்த வச்சித் தரேன்... நான் இதை சரி பண்ணித் தரலேன்னா எனக்கு உறுத்திக்கிட்டே இருக்கும்."

நந்தினி தோள்களைக் குலுக்கி சிரிப்புடன் சம்மதித்தாள்.

துளசி தொடர்ந்து நந்தினியின் ஓவியத்தை வரைய ஆரம்பித்தாள். படம் வளர்ந்துக் கொண்டிருக்கும் போது, நந்தினியின் முகம் ஓவியத்தில் ஏறக்குறைய பூர்த்தியான சமயத்தில், திடீரென்று ஞாபகம் வந்தவளாக நந்தினி கையை உதறிக் கொண்டாள்.

"என்ன இப்போ? இன்னும் கொஞ்ச நேரந்தான்... முடிச்சிடுவேன்..."

"துளசி, துளசி.... அந்த டிரான்ஸிஸ்டரை ஆன் பண்ணேன்..."

"எதுக்கு?"

"பண்ணேன்... நேயர் விருப்பம் வரப்போவுது... நான் ஒரு பாட்டைப் போடச் சொல்லி எழுதிப் போட்டிருக்கேன்."

துளசி நந்தினியை ஒரு புன்சிரிப்புடன் பார்த்துக் கொண்டே சென்று, சற்றுத் தள்ளி ஒரு ஓரமாய் வைக்கப்பட்டிருந்த டிரான்ஸிஸ்டரை ஆன் செய்தாள்.

டிரான்ஸிஸ்டர் கேட்டுக் கொண்டிருந்த ஒரு கர்நாடக கச்சேரி நிறைவு பெற்றது. விநாடி இடைவேளையில் அடுத்த அறிவிப்பு கேட்டது.



"ஆகாசவாணி திருச்சி வானொலி நிலையம். நேயர் விருப்பம். முதலில் இடம் பெறப் போகும் பாடலைப் பாடியிருப்பவர் . சுசிலா. விரும்பிக் கேட்டுள்ள நேயர்கள் மலைக்கோட்டை வாசு, பூதலூர் முத்து, குடந்தை சண்முகம், மன்னார் குடி வைத்தியநாதன், அய்யம்பேட்டை சத்தியபாமா, சூரியகுமார், வேதவல்லி, சுந்தரி, அரியலூர் நாகராஜன், திருச்சி நந்தினி கிருஷ்ணமூர்த்தி.

நந்தினி 'கேள், கேள்' என்பது போல் துளசியிடம் சைகை காட்டியதால், உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருந்த துளசி, கண்களில் கேள்விக் குறியுடன் புருவங்களை உயர்த்தி நந்தினியை நோக்கித் திரும்பினாள்.

"மன்னிக்கவும்.... திருச்சி நந்தினி.... நீடாமங்கலம் கிருஷ்ணமூர்த்தி. பட்டுக்கோட்டை அசோகன் - இந்திரா தம்பதியினர்..." என்று டிரான்ஸிஸ்டர் குரல் தொடர்ந்தது.

'திருச்சி நந்தினி கிருஷ்ணமூர்த்தி' என்று டிரான்ஸிஸ்டரில் கேட்டப் பொழுது நந்தினியின் முகம் பேயறைந்த மாதிரி மாறியதை துளசி கவனிக்கவில்லை. மறுபடி அறிவிப்பாளர் குரல்மன்னிப்பு கேட்டுக் கொண்டு மாற்றி சொன்னவுடன் நந்தினி முகத்தில் தெரிந்த நிம்மதி உணர்வை மட்டுமே துளசி பார்க்க நேர்ந்ததால், ஒன்றும் வித்யாசமாக, விவகாரமாக ஆகாமல் சூழல் சகஜமாகியது.

டிரான்ஸிஸ்டரில் உயர்ந்த மனிதன் படத்தின் பாடலான 'நாளை இந்த வேளை பார்த்து ஓடி வா நிலா... இன்று எந்தன் தலைவன் இல்லை சென்று வா நிலா'வின் ஆரம்ப இசை தொடங்கியது.

"என்னம்மா திருச்சி நந்தினி... நீங்கள் விரும்பிக் கேட்ட பாடல் இதுதானா?"

துளசி நாடகப் பாணியில் நந்தினியின் மோவாயைப் பற்றி தன் பக்கம் திருப்பிக் கேட்க, நந்தினி வெட்கப்பட்டாள்.

Mithra Vintha

"ஷ்ஷ்.. பாட்டைக் கேளு, பாட்டைக் கேளு.."

பாடல் ஒலிக்கத் தொடங்கியது.

நந்தினி பாடலால் ஈர்க்கப்பட்டு, பாடலின் வரிக்கேற்ற மாதிரி அபிநயம் பிடிக்க, அதைப் பார்த்து துளசி மெலிதாய் புன்னகைத்தாள். நந்தினி நடனமாடிக் கொண்டே துளசியின் கையைப் பற்றி இழுக்க, அவள் இழுத்த இழுப்பிற்கு வளைந்து கொடுத்தாறே துளசியும் ஆடத் தொடங்கினாள்.

அவர்கள் இருவரின் நடனம், தேர்ந்த நாட்டியக்காரர்கள், காதலர்கள் போல் அபிநயித்து ஆடுவது போல கண்ணிற்கும், மனதிற்கு ரம்மியமாய் இருந்தது.

அதே சமயம் வீட்டிற்கு வெளியே சாலையில் கிருஷ்ணமூர்த்தி ஏறி இருந்த ரிக்ஷா அந்த வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தது.

## 32

தூரத்தில் ரிக்ஷாவில் வந்தபொழுதே, நந்தினியின் வீட்டு கதவு ஒன்று மட்டும் திறந்திருப்பதைப் பார்த்து விட்டார் கிருஷ்ணமூர்த்தி. யோசனையில் புருவங்கள் இணைந்து, நெற்றியில் கோடுகள் தெரிந்தன.

வீட்டை நெருங்கியதும், திறந்திருந்த ஒற்றை கதவில் 'வந்திருக்கிறாள்' என்று சாக்பீஸால் எழுதப்பட்டிருந்தது. கிருஷ்ணமூர்த்தியின் முகத்தில் குழப்பம் முகாமிட்டது. வீட்டுக் கதவில் ஒன்று திறந்திருந்ததும், மற்றொன்றில் ஏதோ எழுதப்பட்டிருந்ததும் புதியதாய் இருந்தது.

குழப்பத்துடன் இறங்கி, ரிக்ஷாவை அனுப்பி விட்டு வீட்டு படியேறியதும் அவர் பார்வையில் வெறிச்சோடியிருந்த



நந்தினியின் வீட்டு ஹால் திறந்திருந்த கதவு வழியே தெரிந்தது. குழப்பத்தின் உச்சியில் வீட்டினுள் நுழைந்தார்.

கூடத்தின் சுவற்றில், அங்கங்கே 'துளசி வந்திருக்கிறாள், துளசி வந்திருக்கிறாள்' என்று எழுதப்பட்டிருந்ததைப் பார்த்ததும் திடுக்கிட்டார், கிருஷ்ணமூர்த்தி.

தோட்டத்து பக்கத்தில் இருந்து மெலிதான பாட்டுச் சத்தமும், சிரிப்புச் சத்தமும் கேட்டது.

கிருஷ்ணமூர்த்தி மெதுவாக ஜன்னல் ஓரம் சென்று ஜன்னல் வழியாகத் தோட்டத்தைப் பார்த்தார்.

துளசியும், நந்தினியும் டிரான்ஸிஸ்டரில் ஒலித்துக் கொண்டிருந்த பாடலுக்கு ஏற்ற மாதிரி ஆடிக் கொண்டிருந்தார்கள்.

கிருஷ்ணமூர்த்தியை அதிர்ச்சி தாக்கியது. சற்று நேரம் செய்வதறியாமல் அப்படியே நின்று கொண்டிருந்தார்.

தோட்டத்துப் பக்கமிருந்து வந்த சிரிப்பொலி அவரை தன்னுணர்வுக்கு கொண்டு வந்தது.

ஓசையெழுப்பாமல் விலகி, ஊஞ்சலின் மீது தான் கொண்டு வந்திருந்த பூப்பொட்டலத்தை அலுங்காமல் வைத்தார்.

ஆவல் உந்த, மறுபடியும் ஜன்னல் ஓரம் வந்து நின்று சிறிது நேரம் துளசியும், நந்தினியும் ஆடுவதை ரசித்தார். அவர் முகத்தில் மெலியதாய் ஒரு புன்முறுவல் தோன்றியது.

பின் மெல்லத் திரும்பி, அவசரமாக சாக்பீஸால் எழுதப்பட்டிருந்த எழுத்துக்களை எல்லாம் அழித்தார். கைகளை தேய்த்து அழித்ததில் உள்ளங்கை லேசாய் எரிந்தது. வீட்டை விட்டு வெளியேறினார். வெளியேறியபோது திறந்து இருந்த இன்னொரு கதவையும் மூடினார்.

மூடிய கதவில் 'துளசி' என எழுதப்பட்டிருந்தது.

MithraVintha

இரண்டு கதவுகளையும் மூடி சேர்த்ததில் 'துளசி வந்திருக்கிறாள்' என்று சாக்பீஸால் எழுதப்பட்ட வாக்கியம் முழுமையாக தெரிந்தது.

இன்னொரு முறை கிருஷ்ணமூர்த்தியின் முகத்தில் புன்னகை தோன்றியது. அதை அழிக்க கை வைத்த நேரம், துளசியின் பேச்சு சத்தம் திடீரென பெரிதாய் கேட்க, அவசரமாக அந்த வீட்டை விட்டு விலகினார்.

★ ★ ★

டிரான்ஸிஸ்டரில் நேயர் விருப்பத்தின் கடைசி பாடல் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது.

துளசி பாட்டு முடியும் தறுவாயில் நந்தினியின் ஓவியத்தை சுருட்டிக் கொண்டாள். நந்தினி டிரான்ஸிஸ்டரைக் கையில் எடுத்து ஆஃப் செய்தாள்.

"நந்தினி... ரொம்ப தாங்க்ஸ்... என் மனசுக்கு பிடிச்ச மாதிரி வந்திருக்கு படம்..." என்றாள் துளசி நந்தினியின் கைகளைப் பிடித்துக் கொண்டு.

"ம்ம்ம்....." என்றாள் நந்தினி. அவள் மனம் நிலைகொள்ளாமல் தவித்தது.

"ரொம்ப ஸாரி நந்தினி... உன் டயத்தை எல்லாம் வேஸ்ட் பண்ணிட்டேனா?" என்றாள் துளசி மறுபடி.

"ச்சீ... அதெல்லாம் ஒண்ணுமில்ல..."

"ரொம்ப ஸாரி நந்தினி... உன் செயினை அறுத்துட்டேன். மனசு உறுத்திக்கிட்டே இருக்குது..."

நந்தினி பதில் பேசாமல் மௌனமாய் நின்றிருந்தாள்.

"என்ன நந்தினி, ஒண்ணும் சொல்ல மாட்டேங்கற..... செயினை அறுத்துட்டேன்னு என் மேல வருத்தமா? ம்ம்...?"



நந்தினி அப்பொழுதும் வாயை திறக்கவில்லை.

"என்ன நந்தினி..?" என்று கொஞ்சம் தயங்கியபடி கேட்டாள் துளசி. அவளுடைய தோள்பட்டையை மெல்ல பற்றி தன் பக்கம் திருப்பினாள்.

"நீங்க என்னம்மா பெரிய மனுஷி..! மூணாவது மனுஷி மாதிரி என்கிட்ட தாங்க்ஸ், ஸாரில்லாம் சொல்றீங்க... எனக்கு அப்படியெல்லாம் பேசத் தெரியாது?" என்றாள் நந்தினி முகத்தை அப்பாவியாய் வைத்துக் கொண்டு.

துளசிக்கு நந்தினி முகத்தைப் பார்த்ததும் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது.

"ச்சீ... இதுக்கு தான் பேசாம இருந்தியா... நான் என்னமோ, ஏதோன்னு பயந்துட்டேன்... சரி, சரி. இனிமே நான் மறந்து போய்கூட தேங்க்ஸ், ஸாரில்லாம் சொல்ல மாட்டேன், ஓ.கே.வா?"

"ஓ. கே. தாங்க்ஸ்" என்று நந்தினி சொன்னதும் இருவரும் சேர்ந்து சிரித்தனர்.

தோட்டத்திலிருந்து வீட்டிற்குள் நுழைந்தனர். நந்தினியின் கண்களில் ஊஞ்சலில் இருந்த பூப்பொட்டலம் தெரிந்தது. சட்டென்று அவள் கண்கள் சுவற்றை நிமிர்ந்து பார்த்தன. சுவற்றில் எழுதப்பட்டிருந்த வாக்கியங்கள் அழிக்கப்பட்டு சுவர் எப்பொழுதும் போல பொறுமையாய் இருந்தது. நந்தினியின் கண்கள் கலங்கின. துளசி அறியாமல் அவசரம் அவசரமாய் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"சரி நான் கிளம்பறேன் நந்தினி... ரொம்ப லேட்டாயிடுச்சி... காயத்ரி நான் வரலியேன்னு நெனைச்சு வாசல்லயே நின்னுகிட்டிருக்கும்... வரட்டுமா?"

துளசி வாசலுக்கு வந்து செருப்பில் காலை நுழைத்தாள்.

நந்தினி வாசல் வரை வந்து துளசியின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.



Mithra Vintha

"அடிக்கடி வா... ஆனா சொல்லிட்டு வா... அப்பத்தான் நான் எல்லா வேலையையும் முடிச்சுகிட்டு ஃப்ரீயா இருக்க முடியும்... சரியா?"

"சரி அக்கா..." என்றாள் துளசி கிண்டலாய் சிரித்தபடி.

வாசல் படி இறங்கி தெருவில் கால் வைத்தவள் ஏதோ நினைவுக்கு வந்தவளாய் திரும்பி பார்த்தாள்.

"என்ன, என்ன?" என்றாள் நந்தினி.

"ஒண்ணுமில்ல, உன்னோட செயினை இன்னும் ரெண்டு மூணு நாள்ல சரி பண்ணி தந்திடுறேன்..."

"நான் அதை சரி பண்ண வேண்டாம்னு சொல்லிட்டேன். நீ தான் பிடிவாதம் பிடிக்கற... சரி மொள்ளமா கொண்டு வந்து குடு... ஒண்ணும் அவசரமில்ல..."

"எனக்கு தெரிஞ்ச ஆசாரி இருக்காரு. நல்லா செய்ஞ்சிக் கொடுத்திடுவாரு போற வழியில தான் இருக்காது..."

"இப்ப நான் ஆசாரி எங்க இருக்காரு, உனக்கு தெரிஞ்சவரா, நல்லா செய்ஞ்சிக் கொடுப்பாரான்னு கேட்டனா?" என்றாள் நந்தினி இடுப்பில் கை வைத்து செல்லமாய் முறைத்தபடி.

துளசி சட்டென்று மலர்ந்து சிரித்தாள். கையசைத்தாள். நந்தினியும் பதிலுக்கு சிரித்தபடி கையசைத்து விடை கொடுத்தாள்.

துளசி கண்ணிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்து விட்டு நந்தினி உள்ளே நுழைந்தாள்.

கதவை மூடி உள்பக்கம் தாழிட்டாள்.

ஹாலை சுற்றி சுற்றி வந்து பார்த்தாள். அவள் 'துளசி வந்திருக்கிறாள்' என்று எழுதியிருந்த இடங்களை நெருங்கி சுவற்றில் முத்தமிட்டாள். ஒவ்வொரு இடமாய் முத்தமிட்டாள்.

பின் திரும்பி ஊஞ்சலில் இருந்த பூப்பந்தைப் பார்த்தாள்.



அவள் கண்கள் கலங்கின. ஒரு விம்மல் வெடித்து புறப்பட்டது. அவள் கன்னங்களில் நீர் வழிந்தது. துடைத்துக் கொண்டாள். அழுகையை நிறுத்தி தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

மெல்ல நடந்து சென்று அந்தப் பூப்பந்தைக் கையில் எடுத்தாள்.

நெஞ்சோடு வைத்து அணைத்துக் கொண்டாள்.

பூவை அப்படியே கண் மூடி முகர்ந்து பார்த்தாள்.

மனதில் துளசி கேட்ட கேள்வியும், அதற்கு நந்தினி சொன்ன பதிலும் அலையடித்து மோதின. துளசியின் கேள்விகளுக்கு பதில் சொல்வதற்குள் நந்தினி திணறித்தான் போனாள்.

"ஏய்... இது என்னது... பூ வந்திருக்கு... யாரு கொண்டு வந்து வச்சது இங்க?"

'பூக்காரி தான் வேற யாராம்....?'

"பூக்காரி தான் வேற யாராம்" என்று நந்தினி பதில் சொன்னது மறுபடி மறுபடி மனதில் ஓடியது.

நந்தினியின் கற்பனையில், கிருஷ்ணமூர்த்தி புடவை கட்டி இடுப்பில் ஒரு பூக்கூடையுடன் வந்து ஊஞ்சல் மேல் பூப்பந்தை வைத்து விட்டுப் போவது போல் காட்சி தோன்றியது.

நந்தினி அடக்கமுடியாமல் 'களுக்' என்று சிரித்தாள்.

அந்தப் பூச்சரத்தைப் பிரித்து தலையில் சூடிக் கொண்டாள்.

MithraVintha

## 33

பக்கூம்... பக்கூம்... பக்கூம்...

கோபுரத்தின் இடைவெளிகளில் புறாக்கள் தெரிந்தன.

ஜோடிகளாய், கூட்டமாய் வெள்ளை, கரும்சாம்பல், வெள்ளையில் ஓடிய சாம்பல் வரிகள் என்று புறாக்கள் கலவையாய் இருந்தன.

நிதானமாய் தத்தி தத்தி காலடி வைத்து ராஜநடை பயின்றன.

காலையின் உற்சாகத்திற்கு தங்களை தயார்படுத்திக் கொண்டன.

வெகு திடீரென சிறகை விரித்து 'சடசட' வென்று சத்தம் ஏற்படுத்தி காலை நேர உணவுத் தேடலுக்காக பறந்து போயின.

கோயில் காலை நேர பூஜைக்காக தன்னை தயார்படுத்திக் கொண்டிருந்தது. சந்தடியில்லாத அந்த காலை வேளை மனதிற்கு மிகவும் இதமாய் அமைதியாய் இருந்தது.

கிருஷ்ணமூர்த்தியும் துளசியும் கர்ப்பக்கிரகத்திற்கு முன்பாக நின்று கை கூப்பியிருந்தார்கள்.

துளசியின் அருகில் தரையில் வெளியூர் புறப்படும் உத்தேசத்துடன் ஒரு பயணப்பெட்டி.

உள்ளேயிருந்து பூசாரி வந்தார்.

துளசியிடம் அவள் வரைந்த ஓவியச் சுருட்டலையும் ஒரு சரம் மல்லிகைப் பூவையும் கொடுத்தார்.

"இந்தாம்மா துளசி. சாமி பாதத்துல வச்சி எடுத்துட்டு வந்திருக்கேன். சாமியே வரம் கொடுத்தா மாதிரி இந்தப் பூச்சரம்



இதும் மேல விழுந்தது. நீ நெனச்சிட்டு போற காரியம் ஓஹோன்னு நடக்கும். உனக்கு நிச்சயம் வெற்றி கெடைக்கும். போய்ட்டு வா."

கிருஷ்ணமூர்த்தி சட்டைப் பையிலிருந்து ரூபாய்த் தாளை எடுத்து பூசாரியின் கையில் இருந்த தட்டில் போட்டார். ஆரத்தியை கண்களில் ஒற்றிக் கொண்டார். துளசியும்.

இருவரும் பூசாரியைக் கும்பிட்டு விட்டு திரும்பினார்கள். கோவிலை விட்டு வெளியே வந்தனர். ரிக்ஷா ஒன்றில் ஏறினார்கள். ரிக்ஷா பஸ் ஸ்டாண்ட் நோக்கி நகர்ந்தது.

"என்னம்மா தனியே போய்ட்டு வந்துடுவியா?" கிருஷ்ணமூர்த்தியின் குரலில் லேசான கவலை.

"என்னப்பா நீங்க..... எத்தனை தடவை கர்நாடகாவுல இருக்கும்போது அங்கே இருந்து தனியா வந்திருக்கேன்? இதோ இங்க பக்கத்துல இருக்கு, மெட்ராஸ்... போய்ட்டு வந்துடுவேன்பா... கவலைப்படாதீங்க..."

"இல்லம்மா. வேலை கொஞ்சம் டைட்டா இருக்கு... இல்லன்னா, நானும் கூட வந்துடுவேன்..."

"தேவையில்லப்பா... நான் தனியா போய்ட்டு வந்துடுவேன். பயப்படாம போய்ட்டு வாங்கப்பா..."

ரிக்ஷா பஸ் - ஸ்டாண்டில் நுழைந்து ப்ரேக் அடித்து நின்றது.

ரிக்ஷாவில் இருந்து இறங்கிக் கொண்டார்கள்.

திருச்சியில் இருந்து சென்னை செல்லும் பேருந்தின் படிகளில் ஏறிக் கொண்டாள் துளசி.

ஸீட் பார்த்து உட்கார்ந்துக் கொண்டாள்.

"பத்திரம்மா..."

"சரிப்பா...பாத்துக்கறேன்..." என்றாள் புன்னகைத்து.

MithraVintha

"எல்லாம் எடுத்துக்கிட்டியாம்மா... பஸ் கிளம்பப் போகுது..." என்றவர் கையாட்டி நகர்ந்து கொள்ள, பஸ் குலுங்கி நகரத் தொடங்கியது. துளசி பதிலுக்கு கையாட்டினாள்.

★ ★ ★

பஸ் சென்னை சாலையில் விரைந்தது.

துளசியின் நினைவுகளில் நந்தினி.

நந்தினியின் நினைவு வந்ததும் துளசியின் முகத்தில் ஒரு மெல்லிய புன்முறுவல்.

எதிராளியிடம் எந்த வித எதிர்பார்ப்பும் இல்லாமல் வெகு சிலரால் மட்டுமே அளவில்லா அன்பையும், பிரியத்தையும், பாசத்தையும் கொட்ட முடியும். அந்த வெகு சிலரில் நந்தினியும் ஒருத்தி.

நந்தினியைப் பற்றி நினைத்தவுடன் துளசியின் நெஞ்சு நெகிழ்ந்தது. கூடவே கண்களில் பளபளத்த கண்ணீர்.

சட்டென்று சுதாரித்து, யாரும் அறியாமல் கண்களைத் துடைத்துக் கொண்டாள் துளசி.

பள்ளிக்கூட விழாவிற்கு வரமுடியாதபடி உடம்பு சரியில்லாமல் போய்விட்டது என்று தகவல் தெரிந்ததும் உடனே போய் நந்தினியை பார்க்க முடியாதபடி இப்படி சென்னை கிளம்ப நேரிட்டதை எண்ணி துளசிக்கு வருத்தம் ஏற்பட்டது.

ஊருக்குத் திரும்பியதும் முதல் காரியமாய் அவளைப் போய் பார்க்க வேண்டும். போகும் போது சரி செய்ய கொடுத்திருந்த அந்த செயினை மறக்காமல் வாங்கிக் கொண்டு போக வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள் துளசி.

சற்று நேரம் வெளியே வேடிக்கை பார்த்தாள். நிமிடத்தில் கடந்து போன காட்சிகளின் வேகம் பார்ப்பதற்கு சிலிர்ப்பூட்டியது. எத்தனை நேரம் பார்த்துக் கொண்டிருந்தாளோ, சட்டென்று பேருந்தின் வேகம் குறைந்து ஓரிடத்தில் நின்றபோது தான் உணர்வுக்கு திரும்பினாள்.



பேருந்து சாப்பாடு இடைவேளைக்காக நிறுத்தப் பட்டிருந்தது.

துளசி எடுத்து வந்திருந்த சாப்பாட்டுப் பொட்டலத்தை பிரித்தாள். சாப்பிட்டு கைகழுவினாள். தண்ணீர் குடித்தாள்.

அவள் முடித்த நேரம் ஒவ்வொருவராய் வந்து நிரம்ப, பேருந்து கிளம்பியது.

காற்றும், சாப்பிட்ட மயக்கமும் தாலாட்ட, கண் மூடினாள். சுகமாய் தூங்கிப் போனாள்.

திடீரென கண்டக்டரின் குரல் காதருகே ஒலித்து அவளை உலுக்கியது.

"அ ம் ம ா..... ம வு ண் ட் ரோ டு வ ந் த ா ச் சி.... எறங்கனும்னீங்களே..."

துளசி பரபரப்புடன் பெட்டியை எடுத்துக் கொண்டாள், இறங்கினாள்.

★ ★ ★

துளசி ஒரு ஆட்டோ பிடித்தாள். இடத்தைச் சொன்னாள். ஏறிக் கொண்டாள்.

கொடி மடக்கி ஆடோ புறப்பட்டது.

துளசி சென்னையின் சுறுசுறுப்பை வியந்துப் போய் பார்த்துக் கொண்டிருந்தாள். எவ்வளவு மனிதர்கள், எவ்வளவு வண்டிகள். எவ்வளவு வேகம். எவ்வளவு சுறுசுறுப்பு. எவ்வளவு பரபரப்பு.

சென்னையின் வேகம் துளசிக்குள் புதிய உற்சாகத்தை வரவழைத்தது. உடல் முழுவதும் புது ரத்தம் பாய்ந்தாற் போல் இருந்தது துளசிக்கு.

ஆட்டோ வேகம் குறைந்து, ப்ரேக் அடித்து நின்றது.

துளசி தலையை நீட்டி வெளியே பார்த்தாள்.

MithraVintha

'அகில இந்திய பெண் ஓவியர்களின் படைப்புகள் - ஒரு கண்காட்சி.'

எழுதப்பட்டிருந்த துணி காற்றில் படபடவென்று அடித்துக் கொண்டது.

துளசி ஆட்டோவில் இருந்து இறங்கிக் கொண்டு, பெட்டியையும், படச்சுருட்டலையும் எடுத்துக் கொண்டாள். கைப்பையை திறந்து பணத்தை எடுத்துக் கொடுத்தாள்.

திரும்பிக் கட்டிடத்தை நோக்கி நடந்தாள்.

வாசலில் மேஜை போட்டு இளைஞன் ஒருவன் உட்கார்ந்திருந்தான். அவன் முன்னால் ஒரு ரெஜிஸ்டர் புத்தகம். இளைஞனை நெருங்கினாள் துளசி.

"என் பெயர் துளசி. ஓவியப் போட்டியில் கலந்துக்கறதுக்காக திருச்சியில் இருந்து வந்திருக்கிறேன்..." என்றாள்.

"வெல்கம் மேடம்.... உங்க பேரு, விலாசம் மத்த குறிப்புகளை இந்த ரெஜிஸ்டரில் எழுதி உங்க கையெழுத்தையும் போடுங்க.... வெளியூர்லேர்ந்து வர லேடீஸூக்காக இங்கே பின்னால நாலூரூம் போட்டிருக்கோம்... ஒன் அவர் டயம் இருக்கு. அதுக்குள்ள ப்ரெஷ்-அப் பண்ணிட்டு ரெடியாய்டுங்க மேடம்..." என்றான் அன்பாய் சிரித்து.

துளசி பதிலுக்கு புன்னகைத்து அவன் சொன்னபடி எழுதி விட்டு, பெட்டியை எடுத்துக் கொண்டாள்.

"தாங்க்ஸ்... பின்னால ரூமுக்கு எப்படி போகணும்?" என்று கேட்டு அவன் சுட்டிக் காட்டிய திசையில் நடந்தாள்.

★ ★ ★

கண்காட்சி நடக்கும் கட்டிடத்தின் பின்பகுதி.

துளசிக்காக ஒரு அறை ஒதுக்கிக் கொடுத்திருந்தார்கள்.

துளசி பயணக்களைப்பு நீங்க, முகம் கழுவி, தலைவாரி, வேறு புடவைக்கு மாறினாள்.



கண்காட்சியில் வைக்க அவள் கொண்டு வந்த ஓவியச் சுருளை மெல்ல விரித்தாள். சற்று நேரம் தான் வரைந்திருந்த நந்தினியின் ஓவியத்தைப் பார்த்து ரசித்தாள்.

பின் எதிரே ஓவியத்தை பொருத்த வசதியாய் கொடுக்கப்பட்டிருந்த டிராயிங் போர்டில் அதை வைத்து டிராயிங் பின்னால் நான்கு பக்கமும் சிறைப்படுத்தினாள்.

அழைப்பு வரக் காத்திருந்தாள்.

★ ★ ★

கண்காட்சிக் கூடம்.

அந்தப் பெரிய கூடம் முழுவதும் வரிசையாய் ஓவியங்கள் மாட்டப்பட்டு இருந்தன. ஒவ்வொரு ஓவியத்தின் மேலேயும் அதற்கென்று தனியாய் விளக்கு பொருத்தி லைட்டிங் வசதி செய்திருந்தது. ஓவியத்தின் தோற்றத்தை எடுப்பாக்கியது.

கூடத்தின் ஒரு ஓரமாய் பெரிய மேஜை போடப்பட்டு, அதன் மேல் தும்பைப் பூ நிறத்தில் விரிப்பு ஒன்று விரிக்கப்பட்டிருந்தது. மேஜைக்கு பின்னால் நாற்காலிகள் போடப்பட்டு அவற்றில் கண்காட்சி அமைப்பாளர்களும், நிர்வாகியும், கண்காட்சியில் உள்ள ஓவியங்களில் சிறந்தவற்றை தேர்ந்தெடுத்து பரிசு அளிக்க ஒரு சிறப்பு விருந்தினராய் அழைக்கப்பட்டு இருந்த பெரிய விளம்பர கம்பெனியின் சேர்மனும் உட்கார்ந்திருந்தனர்.

ஒவ்வொருவரின் முன்பாகவும் ஒரு கண்ணாடி டம்ளர் வைக்கப்பட்டு, அதில் ஆரஞ்சு வண்ண பழரசம்.

மேஜைக்கு சற்றுத் தள்ளி பார்வையாளர் உட்கார வசதியாய் நாற்காலிகள் வரிசையாய் போடப்பட்டிருந்தன. நாற்காலிகள் நிரம்பியிருந்தன. பார்வையாளர்களும், போட்டியாளர்களும் கலந்து உட்கார்ந்திருந்தனர்.

துளசி கடைசி வரிசைக்கு சற்று முன்னாலிருந்த வரிசையில் ஒரு ஓரமாய் உட்கார்ந்திருந்தாள்.

MithraVintha

எத்தனை விதமான ஓவியங்கள்! ஒவ்வொரு ஓவியமும் ஓவியரின் திறமையை மிகச் சிறப்பாக வெளியிட்டிருந்தன. துளசி ஒரு விதமான படபடப்புடன் உட்கார்ந்திருந்தாள்.

சிறப்பு விருந்தினர் எழுந்துக் கொண்டார். தொண்டையை ஒரு முறை செருமினார். கூட்டத்தினரைப் பார்த்துப் பேசத் தொடங்கினார்.

"ஐ'ம் ஹைலி இம்ப்ரஸ்டு... ஒவ்வொரு ஓவியத்திலயும் உயிர் இருக்கு. ஒவ்வொண்ணும் இன்னொன்னை மிஞ்சும் அளவிற்கு பிரமாதமா வந்திருக்கு. பெண் ஓவியர்கள், அவர்களுக்கான கண்காட்சி என்ற அட்டகாசமான ஒரு எண்ணம் யாருக்கு வந்ததுன்னு எனக்கு தெரியாது. ஆனா அப்படி நினைச்சதோட நிக்காம, அதை நடத்திக் காமிக்கணும்னு ஏத்துகிட்டு நடத்தியிருக்காங்களே, இந்த கண்காட்சியோட அமைப்பாளர்கள், நிர்வாகி எல்லோரையும் நான் ரொம்ப பாராட்டறேன்..." என்று சொல்லியபடி பக்கத்தில் இருந்த அமைப்பாளர் மற்றும் நிர்வாகிகளை பார்த்து புன்னகைத்தார்.

கண்காட்சி அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் யாவரும் அவரின் பாராட்டுதலை ஒரு சின்ன புன்னகையுடன் தலையசைத்து ஏற்றுக் கொண்டனர்.

சிறப்பு விருந்தினர் மறுபடி கூட்டத்தினரை பார்த்தார்.

"எல்லா ஓவியத்திலயும் எது ரொம்ப சிறப்பானதுன்னு ஒரு ஓவியத்தை என்னை தேர்ந்தெடுக்கச் சொல்லியிருக்காங்க... எல்லா ஓவியத்தையும் நான் ரொம்ப ரசிச்சேன்... ஒவ்வொருத்தர் கிட்டயும் எவ்வளவு திறமை! எல்லாமே சிறப்பாயிருக்கு... எனக்கு ரொம்பப் பிடிச்சதுன்னா, 'இல்லத்தரசி'ன்னு ஒரு ஓவியம்..... ரொம்ப எளிமையான ஓவியம்.... ஆனா அது உயிரோட்டமா இருந்தது..."

கேட்டுக் கொண்டிருந்த துளசிக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. சற்று நேரம் அவள் காதில் விழுந்ததை அவளால் நம்ப முடியவில்லை. அதற்கு மேல் சிறப்பு விருந்தினர் பேசியது



காதில் விழவில்லை பார்வையாளர்களின் கை தட்டல் அவளை தன்னுணர்வுக்கு கொண்டு வந்தது.

"... வரைந்த திருமதி துளசியை மேடைக்கு அழைக்கிறோம்!" என்று சிறப்பு விருந்தினர் முடித்தபோது கைத்தட்டல் ஒலி அதிகமாகியது.

துளசிக்கு இத்தனை நேரம் அவர் சொன்னது தன்னுடைய ஓவியத்தைத் தான் என்பது நம்ப முடியாமல் இருந்தது. இருக்கையை விட்டு எழுந்து கொண்டாள். காலடி எடுத்து வைக்க முடியாமல் கால்கள் பின்னிக் கொண்டன. அவள் தயங்கி தயங்கி நடக்க நடக்க கரவொலி அதிகமாகியது. கூடமே அதிர்ந்தது.

துளசிக்கு பிரமிப்பு விலகாமல், உடம்பெல்லாம் புல்லரித்துப் போனது.

அவள் எதிர்பாராதது. சந்தோஷத்தில் துளசிக்கு ஒன்றும் புரியவில்லை.

நடந்து மேஜையை நெருங்கினாள்.

கைதட்டல் மெல்ல சிறிதாகி அடங்கியது.

"இவங்க திருச்சியில ஒரு ஸ்கூல் டீச்சரா இருக்காங்க. இந்த கண்காட்சியில 'இல்லத்தரசி'ங்கற ஓவியத்தை வரைஞ்சது இவங்க தான் சார்..."

விழா அமைப்பாளர்களில் ஒருவர் எழுந்து சிறப்பு விருந்தினரிடம் சொல்ல, சிறப்பு விருந்தினர் அகலமாய் புன்னகைத்தார். துளசியைப் பார்த்து கை கூப்பினார்.

"வணக்கம் மிஸஸ். துளசி..." துளசி பேச நா எழும்பாமல், கை கூப்பி வணக்கம் சொன்னாள்.

"மிஸஸ் துளசி.... டீச்சர்னா.... நீங்க ப்ரொஃபஷனல் ஆர்டிஸ்ட் இல்லையா?" என்றார் மிக லேசான ஆச்சர்யத்துடன்.

"ம்ம்???" துளசி பிரமிப்பு விலகாமல் கேட்டாள்.

Mithra Vintha

"இல்ல... ஓவியம் வரையறது உங்க முழு நேரத் தொழில் இல்லியான்னு கேட்டேன்..?"

"இல்ல..." என்றாள். தலையசைத்தாள்.

"அப்பப்ப ஆசைக்கு வரையறதோட சரி சார்..." என்றாள் வெட்கத்துடன்.

"உங்க அருமை உங்களுக்கே தெரியலை! உங்க ஓவியத்தை நான் ரொம்ப ரசிச்சேன்! அற்புதமா இருந்தது!"

"ரொம்ப நன்றி சார்..." என்றாள் துளசி நெகிழ்வுடன்.

"கண்காட்சில கலந்துகிட்ட எல்லா பெண் ஓவியர்களுக்குமே என் கம்பெனி சார்பா ஒரு பரிசு கொடுத்து என்கரேஜ் பண்ணலாம்னு முடிவு செய்ஞ்சிருக்கேன். ஆனா, உங்களுக்கு ஒரு சிறப்புப்பரிசு கொடுக்கலாம்னு நெனைக்கிறேன்...." என்றார் சிறிய இடைவெளி கொடுத்து நிறுத்தினார். கூட்டத்தினர் ஆர்வம் தாங்காமல் அவர் என்ன சொல்லப் போகிறார் என்று ஆவலோடு அவர் முகத்தையே பார்த்தனர்.

"என்னோட கம்பெனியில உங்களை அட்வர்டைஸிங் கோ-ஆர்டினேட்டரா சேத்துக்கலாம்னு முடிவு பண்ணிருக்கேன்..." சொல்லி முடித்தவுடன் கைதட்டலில் மறுபடி அரங்கம் அதிர்ந்தது.

துளசி தன்னையே நம்ப முடியாமல் திகைத்துப் போனாள்.

"சார்..." மேலே பேச்சு வராமல் வாயடைத்துப் போனாள்.

"அம்மா... இவர் சென்னைல நம்பர் ஒன் ஆர்கிடெக்ட் கம் இன்டீரியர் டெகரேட்டர்... கூடவே பெரிய அட்வர்டைஸிங் ஏஜென்சியும் நடத்துறாரு... இது ஒரு நல்ல வாய்ப்பும்மா..." என்றார் விழா அமைப்பாளர் இடையில் புகுந்து.

துளசி ஒரு கணம் மௌனமாய் இருந்தாள்.

"யோசித்துச் சொல்றேன் சார்..." என்றாள்.



"தேவையான நேரம் எடுத்துகிட்டு யோசிம்மா... என்னோட கம்பெனில நிச்சயம் ஒரு இடம் உங்களுக்கு உண்டு மிஸ். துளசி..." என்றார் சிறப்பு விருந்தினர். அவளைப் பார்த்து மறுபடி கைகூப்பினார்.

துளசியும் மறுபடி கைகூப்பினாள்.

மறுபடியும் கூட்டத்தில் பலத்த கரவொலி எழுந்தது.

இந்த ஓவியப்போட்டியில் பரிசு வாங்குவதற்கு அப்பாதான் முழுக்காரணம். போட்டியில் கலந்து கொள்ள ஊக்குவித்ததே அவர்தான். பரிசு கிடைத்த விவரம் தெரிந்தால் ரொம்ப சந்தோஷப்படுவார். கூடவே இப்படி ஒரு வேலை வாய்ப்பு அவள் மடியில் பலாச்சுளை போல் வந்து விழுந்திருக்கிறது என்று தெரிந்தால் என்ன சொல்வார்?

சந்தோஷப்படுவாரா?

படமாட்டார். தான் வருந்தி வருந்தி அழைத்துத் தன் அருகில் வைத்துக் கொண்ட துளசி மறுபடி அவரை விட்டுப் பிரிந்து விலகிப் போவதை அவர் விரும்ப மாட்டார்.

துளசி அந்த வேலையை ஏற்றுக் கொள்வதில்லை என்று தீர்மானித்தாள்.

"ஊருக்குப் போய் அப்பாவிடம் கலந்து பேசிவிட்டுச் சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டு திருச்சி செல்லும் பேருந்தில் ஏறி அமர்ந்தாள்.

## 34

பரபரப்புடன் இயங்கிக் கொண்டிருந்தது கடைவீதி.

மனிதர்கள் தினம் தினம் எங்கு தான் போவார்களோ, எங்கு தான் வருவார்களோ, தினம் தினம் அப்படி என்னதான்

MithraVintha

வாங்குவார்களோ. இல்லை என்ன தான் விற்பார்களோ. அப்படி ஒரு நெரிசல் கடை வீதியில்.

துளசி யார் மேலும் இடித்துக் கொள்ளாமல் நடப்பதற்கே மிகவும் சிரமப்பட்டாள்.

இந்த நெரிசலான கடைவீதியில் தான் அவள், நந்தினியின் செயினை சரி செய்ய கொடுத்திருந்த ஆசாரியின் கடை இருந்தது. கூட்டத்தினூடே நடந்து மெல்ல கடையை நெருங்கினாள். கடையினுள் நுழைந்தாள்.

தணலை குழல் மூலம் ஊதிக் கொண்டிருந்த ஆசாரி நிமிர்ந்து பார்த்தார்.

"வாம்மா துளசி... அப்பால்லாம் சௌக்கியமா?"

"எல்லாரும் சௌக்கியம் ஆசாரி... நான் கொடுத்துட்டு போனேனே ஒரு செயின்... அத சரி பண்ணீட்டிங்களா...?"

"சரி பண்ணிட்டேம்மா..."

ஆசாரி திரும்பி தன் பின்புறமிருந்த சின்ன மேஜையின் இழுப்பறையை திறந்து அந்த செயினை எடுத்தார். துளசியிடம் நீட்டினார்.

"நல்ல வேளைம்மா..." என்றார் துளசியிட்ம்.

"என்ன ஆசாரி?"

"ஒண்ணுமில்லம்மா... செயின் மெல்லிசா இருக்கிறதா பொடி வச்சி ஊதணும். ரெண்டு மூணு நாள்ல தந்துடறேன்னு சொல்லி வாங்கி வச்சிட்டு மறந்து போயிட்டேம்மா... நீங்க நான் சொன்ன தேதிக்கு வந்து 'வேலையாயிடுச்சா'ன்னு கேட்டிருந்தீங்கன்னா. தலைய சொறிஞ்சிருப்பேன்.. நல்லவேளை ரெண்டு நாள் கழிச்சே வந்திருக்கீங்க."

ஆசாரி சிரித்தபோது அவருடைய காவிப் பற்கள் தெரிந்தன.



"இல்ல... எனக்கு வேலை சரியாயிருந்து... அதான் வரமுடியலை... ஸ்கூல்ல ஒரு சின்ன பங்ஷன்... மெட்ராஸ் பயணம்.." என்றாள்.

செயினை திருப்பி திருப்பி பார்த்து விட்டு திருப்தியாய் புன்னகைத்தாள். கைப்பையை திறந்தாள்.

"எவ்ளோ குடுக்கணும்னு சொல்லுங்க ஆசாரி..."

"சின்ன வேலைம்மா..... ஆனா கவனிச்சு செய்யணும்... ஏதோ பாத்து போட்டு குடுங்க..... தெரிஞ்சவங்க நீங்க..... உங்ககிட்ட புதுசா சொல்லணுமா என்ன?" என்றார் ஆசாரி அசடு வழிய. பின்னந்தலையை சொறிந்து கொண்டார்.

துளசி கைப்பையிலிருந்து நூறு ருபாயை எடுத்து நீட்டினாள். ஆசாரி கைநீட்டி வாங்கிக் கொண்டு அதை கண்களில் ஒற்றிக் கொண்டார்.

துளசி செயினை கைப்பையில் போட்டுக் கொண்டாள்.

"என்ன, சரிதானே ஆசாரி...?" என்றாள் கேள்விக் குறியாய்.

"சரிதாம்மா... நீங்க கொடுத்தா சரியாத்தான் இருக்கும்..." என்றார். மறுபடி காவிப் பற்களைக் காட்டி சிரித்தார்.

துளசி அவருக்குக் கை கூப்பி விட்டு கடையை விட்டு வெளியேறினாள். கடை வீதியில் நடந்து ஒரு ரிக்ஷா பிடித்தாள். ஏறிக் கொண்டாள். இடத்தைச் சொன்னாள்.

அவள் எண்ணம் முழுவதும் ஸ்கூலில் நடந்த விழாவில் கலந்து கொள்ள முடியாமல் உடம்பு சரியில்லாமல் போய் விட்டது என்று நந்தினி யார் மூலமோ தகவல் சொல்லியனுப்பியதும், அவளுக்கு உடம்பு சரியில்லை என்று தெரிந்த பின்னாலும், தான் போய் பார்க்க முடியாமல் சென்னைக்கு ஓவியப் போட்டி விஷயமாகச் சென்று விட்டதன் வருத்தம் மேலோங்கியிருந்தது.

ரிக்ஷா 'க்ரீய்ச்' என்று ப்ரேக் அடித்தபோது துளசி தன் நிலைக்குத் திரும்பினாள்.

MithraVintha

வழியில் இடறிவிட்ட நாயைத் தவிர்ப்பதற்காக ரிக்ஷா ப்ரேக் பிடித்து நிறுத்தப்பட்டிருந்தது. துளசி நிமிர்ந்தாள். சற்று தூரத்தில் நந்தினியின் வீடு தெரிந்தது.

அங்கேயே இறங்கிக் கொண்டாள். ரிக்ஷாக்காரனுக்குப் பணத்தைக் கொடுத்தாள். நந்தினியின் வீட்டை நோக்கி நடந்தாள்.

வாசல் கதவுகள் மூடியிருந்தன. இரண்டு கதவுகளிலும் சேர்ந்து 'துளசி வந்திருக்கிறாள்' என்ற எழுத்துக்கள் தெரிந்தன.

துளசி அந்த எழுத்துக்களைப் பார்த்தாள். நந்தினியை ஓவியமாகத் தீட்டிக் கொண்டு புறப்பட்டு வாசலுக்கு வந்து செருப்பை மாட்டிக் கொள்ளும் வேளையில் கதவில் தெரிந்த அந்த எழுத்துக்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டது நினைவிற்கு வந்தது. அது பற்றி நந்தினியிடம் கேட்டது ஞாபகத்திற்கு வந்து. அதற்கு நந்தினி சொன்ன பதிலும் நினைவிற்கு வந்தது.

"ஏய்... என்னதிது?"

"எது?"

"துளசி வந்திருக்கிறாள் - என்ன அர்த்தம் இதுக்கு?"

"அதுவா. நீ மொத மொதல்ல எங்க வீட்டுக்கு வந்திருக்கே இல்ல. அதனால எனக்கு ரொம்ப சந்தோஷம். ஆனா சந்தோஷத்தை மத்தவங்களுக்கு எப்படி சொல்றது? வாசல்ல எழுதி வச்சா போற வர்ரவங்கல்லாம் பாப்பாங்கல்ல? படிப்பாங்கல்ல? அவங்க 'ஏதோ ஒரு கிறுக்கு இப்படி கிறுக்கி வச்சிருக்கு'ன்னு நெனைச்சாக்கூடப் பரவாயில்ல. ஆனா ஒரு தடவையாவது படிச்சிட்டுப் போவாங்கல்ல... என் சந்தோஷத்தை அவங்ககிட்ட சொல்லிட்ட மாதிரி எனக்கொரு சந்தோஷம்... நெனைப்பு... அதான்... ஏய்... என்ன அப்படிப் பாக்கறே? நான் கிறுக்குன்னு உனக்கும் தோணுதா?"

"தீச்சீ... என் மேல இவ்வளவு பாசமா நந்தினி? உனக்கு நான் என்ன செய்ஞ்சிட்டேன்னு இவ்வளவு பிரியமா இருக்கே? நான் இதுக்கெல்லாம் என்ன திருப்பிச் செய்யப் போறேன்னு



தெரியல..." என்று தானும் நந்தினியும் மாறி, மாறி நெகிழ்ந்து பேசியது எல்லாம் நினைவிற்கு வந்து துளசிக்கு மறுபடி நெஞ்சு நெகிழ்ந்தது. கண்கள் கலங்கின. துடைத்துக் கொண்டு கதவில் கை வைத்தாள்.

கதவு மெதுவாய் திறந்துக் கொண்டது.

துளசி அடி உதட்டைப் பற்றி, கள்ளத்தனத்துடன் அடி மேல் அடி வைத்து வீட்டினுள் நுழைந்தாள்.

ஊஞ்சல் மிக லேசாக 'கிய்ங்க், கிய்ங்க்' என்ற முனகலுடன் ஆடிக் கொண்டிருந்தது. கூடத்தில் நந்தினி இல்லை. துளசி மெல்ல சமையலறையில் எட்டி பார்த்தாள். நந்தினியை 'பே' என்று பயமுறுத்தும் நோக்கத்துடன் எட்டிப் பார்த்தவளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. சமையலறையில் அடுப்பு மெலிய தீயுடன் எரிந்துக் கொண்டிருந்தது. அடுப்பின் மீது வைக்கப் பட்டிருந்த பாத்திரத்தில் இருந்து வெகு மெல்லியதாய் புகை மெலெழும்பிக் கொண்டிருந்தது. சமையல் அறையிலும் நந்தினி இல்லை.

துளசி மறுபடியும் கூடத்திற்கு வந்தாள்.

தோட்டத்துப் பக்கம் இருந்து ஜன்னலைக் கடந்த போது தற்செயலாகப் பார்வையைத் தோட்டத்தின் பக்கம் திருப்பினாள்.

அங்கு கண்ட காட்சியில் அவள் இதயம் அதிர்ந்து போய் ஆடியது. உடல் 'தடதட'வென நடுங்கியது. விழுந்துவிடாமல் இருக்க ஜன்னல் கம்பியை இறுகப் பற்றிக் கொண்டாள்.

தோட்டத்தில் நிலவின் ஒளியில் நந்தினி தலையில் கிருஷ்ணமூர்த்தி மல்லிகைச் சரத்தை சூட்டிக் கொண்டிருந்தார்.

துளசி அப்படியே திரும்பி சுவரில் சாய்ந்து கொண்டாள். 'படபட'வென்று அடித்துக் கொண்ட மார்பை கையால் அழுத்திப் பிடித்துக் கொண்டாள்.

தோட்டத்தில் நந்தினியிடம் கிருஷ்ணமூர்த்தி பேசும் பேச்சுக்குரல் மிக தெளிவாக துளசிக்குக் கேட்டது.



MithraVintha

"...நான் அன்னிக்கு ரொம்பத் தவிச்சிப் போயிட்டேன் நந்தினி... நான் மொதல்ல ஸ்கூல் டிராமாவுக்கு வரலைன்னு தான் சொன்னேன்... கொழந்தை ரொம்ப பிடிவாதம் பிடிச்சா... அதனால ஸ்கூலுக்கு வர வேண்டியதாப் போயிடுச்சி... துளசியோ, ஒன்னைக் கூட்டிட்டு வந்து காட்றேன், காட்றேன்னு இந்தப் பக்கமும், அந்தப் பக்கமுமா ஓடி, ஓடி ஒன்னைத் தேடிக்கிட்டிருந்தா... நீ மட்டும் ஸ்கூலுக்கு வந்திருந்தே... எம் பாடு ரொம்ப ரொம்ப சிக்கலாப் போயிருக்கும்..."

கிருஷ்ணமூர்த்தி பேசிக்கொண்டேயிருக்க, துளசிக்கு அன்று நந்தினி வீட்டிற்கு அவள் வந்த போது நடந்த விஷயங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக நினைவில் வந்து மோதின.

ஆண் சட்டையைக் காட்டிக் கேட்டதும், அதற்கு நந்தினி காவல்காரன் வேஷம் ஒன்றைப் போட்டுக் காட்டியது. மாறுவேஷப் போட்டியில் கலந்து கொள்வதாக சொன்னது. சமையலறையில் இரண்டு தட்டுகளைப் பார்த்து, 'ஹை... ஆப்பம் தேங்காப்பாலா. அப்பாவுக்கு ரொம்பப் பிடிக்கும்' என்று தான் சொன்னவுடன் நந்தினிக்கு புரையேறினது. ஊஞ்சலில் பூப்பந்து. பூக்காரி வைத்து விட்டு போயிருப்பாள் என்று நந்தினி சொன்னது. கடைசியாக வாசல் கதவு. அதில் எழுதியிருந்த 'துளசி வந்திருக்கிறாள்' என்ற வாக்கியம். அதற்கு நந்தினி சொன்னது எல்லாம் ஃப்ரேம், ஃப்ரேமாக மனதில் ஊர்வலம் வந்தன.

ஒவ்வொன்றாய் கட்டத்துக்குள் 'கிளிக்டக், கிளிக்டக்' என்று பொருந்திக் கொண்டாற் போல தோன்றியது துளசிக்கு.

துளசி நம்பிக்கையின்றி மறுபடியும் ஜன்னல் வழியாக இருவரையும் பார்த்தாள். அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது.

நந்தினியும், கிருஷ்ணமூர்த்தியும் அருகருகே அமர்ந்திருந்தார்கள்.



"எனக்கு உங்க திண்டாட்டம் என்னன்னு தெரியாதா? நம்ம விஷயம் துளசிக்குத் தெரியக்கூடாதுன்னு தான் நான் பள்ளிக்கூடத்துப் பக்கமே எட்டிப் பாக்கல..."

நந்தினி கிருஷ்ணமூர்த்தியின் சட்டைப் பொத்தானை பற்றி திருகியபடி மேலே தொடர்ந்தாள்.

"நான் வராமப் போயிட்டா துளசிக்கு கோபம் வரும்னு தெரியும். அதனால தான் கடைசி நேரத்தில் ஒரு பையனை விட்டு உடம்பு சரியில்லன்னு சொல்லி விட்டு சமாளிக்கும்படியா ஆய்டுச்சி..."

பேசிக் கொண்டே இருவரும் எழுந்துக் கொண்டனர்.

"நீ வரப் போறதில்லன்னு துளசி வந்து என்கிட்ட சொன்னப்ப அப்பாடான்னு இருந்தது. இருந்தாலும் நிஜமாவே ஒனக்கு ஒடம்பு, கிடம்பு, சரியில்லாமத்தான் வராம இருந்துட்டியோன்னு நெஞ்சுல ஒரு சின்ன தவிப்பு, குறுகுறுப்பு. அதான் பார்த்துட்டு போகலாம்னு வழக்கத்துக்கு மாறா முன்னாடியே வந்துட்டேன். அப்ப சரி, நான் கிளம்பட்டா...?"

துளசி அதிர்ச்சியும், வெறுப்பும் ஒரு சேர தாக்க, ஜன்னலில் இருந்து முகம் விலக்கி சுவரில் சாய்ந்தாள்.

"சாப்ட்டுட்டுப் போங்களேன்..... காரக் கொழம்பு வச்சிருக்கேன். கொஞ்சம் வத்தல் பொறிக்கறேன்..."

"அப்புறம் லலிதாவுக்கு யார் பதில் சொல்றதாம்?"

பேசிக் கொண்டே உள்ளே வந்த கிருஷ்ணமூர்த்தியும், நந்தினியும் அங்கே துளசி வந்து நிற்பதைப் பார்த்தவுடன் அதிர்ச்சியில் உறைந்து போனார்கள்.

MithraVintha

# 35

கிருஷ்ணமூர்த்தியின் வீடு.

சோஃபாவில் தலை குனிந்து உட்கார்ந்திருந்தார் கிருஷ்ணமூர்த்தி.

பாலாஜி தினசரியை விரித்துப் பிடித்திருந்தானே தவிர அவனது கவனம் அதில் இல்லை.

லலிதா சுவரோரமாய் உட்கார்ந்திருந்தாள். சூழ்நிலையின் இறுக்கம் புரிந்தும் புரியாமல் அவள் மடியில் காயத்ரி.

துளசி கோபமாய் நின்றிருந்தாள்.

அவள் கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்த பார்வையில் நரகலை மிதித்து விட்டது போன்ற இழிவு தெரிந்தது.

“கன்னிப் பொண்ணோட கர்ப்பத்தை எத்தனை நாளைக்கு தான் மூடி. மூடி வைக்க முடியும்...? ஒங்கப்பா லட்சணம் ஒங்கிட்டயே சிரிப்பா சிரிச்சிடக் கூடாதேன்னுதான் இது வரைக்கும் இந்த வீட்ல இதைப் பத்தி யாரும் வாயைத் தொறக்கலே... அந்த வரைக்கும் தானாத் தெரிஞ்சுதே... சந்தோஷம்...”

லலிதா குரலை உயர்த்தாமல். அழுத்தமாய் பேசினாள்.

“எப்படிம்மா? எப்படிம்மா ஒன்னால பொறுத்துக்க முடிஞ்சது? அவளை எப்படி ஒத்துக்கிட்டே? குடித்தனமே நடக்குது அங்கே...” துளசியின் குரலில் கோபம் தெறித்தது.

“உங்கப்பாவுக்கு சபலம்... ஆம்பளைங்கற திமிரு... இவ இல்லைன்னா இன்னொருத்தி... உங்கப்பா பண்ண தப்புக்கு அவ என்ன பண்ணுவா? அவ என்ன இவரை மயக்கி எங்கிட்டேர்ந்து



பிரிச்சி முந்தானைல முடிஞ்சி வச்சிக்கிட்டாளா? இல்லையே... நம்ம வீட்ல இடத்தைக் கொடுன்னு வந்து நின்னாளா? இல்லியே! அவ பண்ணினது எல்லாம் முட்டாள்தனம் தான்... இவரையே நம்பிப் புறப்பட்டு வந்தாளே. அதுதான் அவ பண்ணின தப்பு ஆனா. அவ பாவம் போக்கத்து வந்தவ! என்னை மாதிரி அவளும் ஒரு பொம்பளை... உங்கப்பா பண்ணின தப்புக்கு அவளை எதுக்கு தண்டிக்கணும்? இல்ல, தண்டிக்கத் தான் என்ன புண்ணியம்? அதனால தான் நான் பெரிசு படுத்தலை...”

லலிதா கிருஷ்ணமூர்த்தியை அடிக்கண்ணால் பார்த்தபடி குற்றம் சாட்டும் குரலில் பேசினாள்.

“இப்படிப்பட்ட மனுஷரை நான் எடுத்தெறிஞ்சு பேசறேன்னு வேற உனக்கு பெரிய குறை! ஏதோ, நாலு பேரு நாக்கு மேல பல்லு போட்டு பேசாதபடி என் பேருக்கு முன்னாடி கௌரவமா ஒரு அடையாளம் கொடுத்த மனுஷனாச்சேன்னு தான் நானும் அம்மாவும் வீட்டை விட்டு போகாம இந்த நிமிஷம் வரைக்கும் இவரை பொறுத்திட்டு இருக்கோம்!”

பாலாஜியும் தன் பங்குக்கு கிருஷ்ணமூர்த்தியை கேவலமான புழுவை பார்ப்பது போல பார்த்துக் கொண்டே சொன்னான்.

துளசிக்கு கிருஷ்ணமூர்த்தியின் மேல் இன்னும் வெறுப்பு கூடிக் கொண்டே போனது.

கிருஷ்ணமூர்த்தி குனிந்த தலை நிமிரவில்லை.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த காயத்ரிக்கு எல்லாரும் சேர்ந்துக் கொண்டு தாத்தாவை திட்டுகிறார்களே என்று பரிதாபம் தோன்றியதோ என்னவோ. லலிதாவின் மடியில் இருந்து எழுந்து கிருஷ்ணமூர்த்தியிடம் போனாள்.

கிருஷ்ணமூர்த்தி தன் அருகில் வந்த காயத்ரியை அணைத்து மடியில் உட்கார வைத்துக் கொண்டார்.

“இந்தாடி. இங்க வா...” என்றாள் துளசி காயத்ரியைப் பார்த்து.

MithraVintha

அவள் குரலில் இருந்த கடுமையை நம்ப முடியாமல் எழுந்து வராமல் உட்கார்ந்திருந்தாள் காயத்ரி.

"வாடின்னா..."

துளசியின் கோபத்தைப் பார்த்து பயந்து காயத்ரி தாத்தாவிடம் இருந்து விலகி வாசலை நோக்கி ஓடிப் போனாள்.

கிருஷ்ணமூர்த்தி துண்டால் முகத்தை மூடிக் கொண்டு குலுங்கினார்.

மனைவி இருக்கும் போதே அடுத்தவளை அடைய ஆசைப்படுகிற ஆண்கள் மீது தான் வளர்த்துக் கொண்ட வெறுப்பு எவ்வளவு என்று துளசிக்குத் தோன்றியது.

அந்த மாதிரி ஆண்களை எல்லாம் கழுவில் ஏற்றவேண்டும் என்றும், நிற்கவைத்துச் சுடவேண்டும் என்றும் தண்டனை மேல் தண்டனையாக வழங்கியபோது, அப்படிப்பட்ட ஆண்கள் பட்டியலில் அப்பாவும் இடம் பெறக்கூடும் என்று துளசி ஒரு கண நேரம் கூட எண்ணிப்பார்த்ததில்லை. அப்பாவா இப்படி? அப்பா கூடவா இப்படி?

குலுங்கி அழும் அப்பாவைப் பார்த்தாள்.

பரிதாபத்திற்குப் பதில் வெறுப்புதான் கூடியது.

இரவு.

உள் அறையில் மேஜை விளக்கு மட்டும் எரிந்துக் கொண்டிருந்தது.

இரவின் அமைதி எல்லாரும் தூங்கிப் போய்விட்டதால் உண்டானது போல் இல்லாமல், வலுக்கட்டாயமாய் திணித்தாற் போல் இருந்தது. சுவர்க்கோழியின் ரீங்காரம் கூட கேட்கவில்லை.

துளசி நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள். கையில் பேனா பிடித்திருந்தாள்.



அவளுக்கு முன்பாக மேஜை மேல் ஒரு நோட்டு திறந்திருந்தது. மற்ற நோட்டுகள் மேஜை முழுவதும் பரப்பி வைக்கப்பட்டிருந்தன.

துளசியின் கவனம் திருத்துவதில் இல்லை. நோட்டுகள் சீந்தப்படாமல் அனாதையாக இறைந்துக் கிடந்தன.

கதவு லேசாகத் திறக்கப்படும் சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள் துளசி.

கிருஷ்ணமூர்த்தி கையில் டீ கோப்பையுடன் உள்ளே நுழைந்தார். அவர் முகத்தில் ஒரு தர்மசங்கடம், அவர் நடையில் ஒரு தயக்கம், அவரின் மொத்த உடலும் கூச்சத்தால் கூனிக் குறுகி போய் இருந்தது.

டீக் கோப்பையை மேஜை மீது வைத்தார்.

துளசி அவரைப் பார்க்காமல் முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

"எனக்கு டீ வேணாம்!" என்றாள் பட்டும் படாமல்.

கிருஷ்ணமூர்த்தி நகராமல் அங்கேயே நின்றிருந்தார். தப்பு செய்துவிட்ட குழந்தையின் மனநிலையில் இருப்பது போல் இருந்தது அவரது தோற்றம். டீக் கோப்பையை துளசியின் பக்கம் ஓரங்குலம் நகர்த்தி வைத்தார்.

"உனக்குப் பிடிக்குமேன்னு ஏலக்கால்லாம் போட்டிருக்கேம்மா..."

"எனக்கு டீ வேணாம்!" என்றாள் துளசி திரும்பாமலேயே அழுத்தம் திருத்தமாய்.

"இன்னும் எம்மேல இருக்கற கோபம் தீரலையாம்மா?"

பேனாவை விசிறியடித்து விட்டு நிமிர்ந்தாள் துளசி. அவள் முகத்தில் கோபத்தில் அனல் பறந்தது.

MithraVintha

"எப்படி தீரும்? எப்படி தீரும்ப்பா? அப்படிப்பட்ட காரியமா நீங்க பண்ணியிருக்கீங்க?"

கிருஷ்ணமூர்த்தி குனிந்து அந்த பேனாவை எடுத்து மேஜை மேல் வைத்தார்.

"அரியலூர்ல தனியா இருந்தப்ப, சூழ்நிலை காரணமா இப்படி ஒரு விஷயம் நடந்துடுச்சும்மா... ஆனா..."

"என்னப்பா பெரிய சூழ்நிலை... நடந்து முடிஞ்ச விஷயத்துக்கெல்லாம் என்கிட்ட எந்த சால்ஜாப்பும் சொல்லவேண்டாம்ப்பா... அது எப்படி ஆச்சு, ஏன் ஆச்சு, எப்போ ஆச்சு... எதுவும் நான் கேக்க தயாராயில்ல... உங்க வயசுக்கேத்த மாதிரியாப்பா நீங்க நடந்துக்கிட்டிருக்கீங்க? உங்களுக்கு கல்யாணமான இரண்டு பொண்ணுங்க இருக்காங்க. பேத்தி இருக்கா... வீட்ல கல்யாணம் பண்ண வேண்டிய வயசுல பையன் இருக்கான். அவனுக்கு ஒரு நல்ல முன் மாதிரியா இருக்க வேண்டிய நீங்களே இப்படி அவன் காறி துப்பற மாதிரி காரியத்தை எப்படிப்பா செய்ய துணிஞ்சீங்க ... ச்சே..."

"இல்லம்மா... நந்தினிக்குன்னு நான் தனியா வீடு பாத்து குடி வச்சிருக்கேனே தவிர, நீ நினைக்கற மாதிரி..."

"போதும்ப்பா..... நீங்க எதுவும் சொல்ல வேண்டாம்..... நினைக்க நினைக்க பத்திக்கிட்டு எரியுதப்பா... ஒரு வேளை நீங்க வேலைல இருந்திருந்தா, இந்த நந்தினியோட நிறுத்தியிருக்க மாட்டீங்களோ என்னவோன்னு என்னன்னவோ நினைக்கத் தோணுது..."

"துளசி.... நான் என்ன சொல்றேங்கிறத காது கொடுத்து கேக்க..."

"பேசாதீங்கப்பா!" என்று இடைமறித்தாள் வெடுக்கென்று. நிமிர்ந்து அவரை சுட்டெரிப்பது போல் பார்த்தாள்.

"என் தாவணியைப் பிடிச்சு இழுத்தானே - அந்த ஜான்சன் மாஸ்டர் - அவனுக்கும் உங்களுக்கும் என்னப்பா வித்தியாசம்?



என்கிட்ட பல்லிளிச்சு அறை வாங்கினானே கர்நாடகா ஃபாக்டரி மானேஜர், அவனுக்கும் உங்களுக்கும் என்னப்பா வித்தியாசம்?"

"துளசி...!" கிருஷ்ணமூர்த்தி அதிர்ந்து போய் நடுங்கும் குரலில் இடை மறித்தார்.

"ச்சே... என் வயசு இருக்குமோ நந்தினிக்கு- ஒடம்பெல்லாம் கூசுதுப்பா."

துளசி கிருஷ்ணமூர்த்தியை பார்க்கப் பிடிக்காதவளாய், நாற்காலியை 'விருட்' என்று பின்னுக்கு தள்ளி எழுந்தாள். ஜன்னலுக்கு அருகே சென்று வெளியே இருட்டை வெறித்தாள்.

கிருஷ்ணமூர்த்தி துளசி பேசியதில் மிகவும் அவமானப்பட்டு கூனிப் போனார். அவர் கண்கள் கலங்கின. அப்படியே குறுகிப் போய் அந்த அறையை விட்டு வெளியேறினார்.

நள்ளிரவு.

எல்லோரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர்.

கிருஷ்ணமூர்த்தி மட்டும் எழுந்து கொண்டார். பூனைப்பாதம் வைத்து துளசியின் அறைக்குள் நுழைந்தார்.

அறை இருட்டாக இருந்தது.

கிருஷ்ணமூர்த்தி உள்ளே நுழைந்து கதவை மூடிக் கொண்டு விளக்கைப் போட்டார்.

மேஜையில் நோட்டுப் புத்தகம் திறந்த நிலையில் இருந்தது.

தேநீர்க் கோப்பையில், தேநீர், ஆடை படிந்து சீந்தப்படாமல் இருந்தது. அதில் ஒரு கொசு செத்து மிதந்து கொண்டிருந்தது.

அதைப் பார்த்த கிருஷ்ணமூர்த்தியின் கண்கள் கலங்கின.

கிருஷ்ணமூர்த்தி கண்களைத் துடைத்துக் கொண்டு ஒரு தீர்மானத்திற்கு வந்தார்.

MithraVintha

மேஜையை நெருங்கினார். இழுப்பறையை இழுத்துத் திறந்தார்.

சில வெற்றுத்தாள்களை உருவி எடுத்தார். பேனாவை எடுத்துக் கொண்டு நாற்காலியில் உட்கார்ந்து மேஜை விளக்கைப் போட்டுக் கொண்டு எழுதத் தொடங்கினார்.

எழுத, எழுத அவர் முகத்தில் சோகம், வருத்தம், கவலை, வேதனை என்ற பல்வேறு உணர்ச்சிகள் வந்து மறைந்தன.

எழுதி முடித்ததும், எழுதியதை ஒரு முறை படித்துப் பார்த்தார்.

படித்தவுடன் அவர் நெஞ்சில் நிம்மதி பரவியது. முகத்தில் ஒரு விடுதலை உணர்வு தோன்றியது.

எழுதியதை மடித்துக் கையில் எடுத்துக் கொண்டு விளக்கணைத்து விட்டு அறையிலிருந்து வெளியேறினார்.

## 36

**து**ளசியின் உள்ளம் குமுறிக் கொண்டிருந்தது.

அப்பாவின் நடத்தையை நினைத்து அவள் மனம் ஆறவே இல்லை. அப்பாவைத்தான் தன் வாழ்க்கையின் ஆதர்ச ஆண்மகனாய் நினைத்திருந்தாள் அவள்.

அந்த பிம்பத்தில் விரிசல் விழுந்து விட்டது. அவரும் எல்லா சராசரி ஆண்களைப் போல் சபல புத்தி கொண்ட ஓர் ஆண். அவ்வளவே.

இப்படிப்பட்ட ஒரு சராசரி மனிதரைப் போய் ஓங்கி உலகளந்த உத்தமன் என்றெல்லாம் எண்ணி பிரமித்து மரியாதையுடன் அவரை அண்ணாந்தே பார்த்துக்



கொண்டிருந்தது எவ்வளவு பெரிய மடத்தனம் என்று இப்போதுதான் புரிகிறது.

கண்ணாடிக் கல்லை, வைரம் என்று நம்பி ஏமாந்தது யார் தப்பு?

கண்ணாடிக்கல்லின் தப்பா? இல்லையே. அதைப் பார்த்து அப்படி நினைத்தவர் தப்பு தானே அது?

ஞாயிற்றுக் கிழமை, ஞாயிற்றுக்கிழமை அலுவலகத்தில் வேலை என்று பொய் சொல்லிவிட்டு இன்னொரு வீட்டிற்குப் போய் பூச்சூடி, பட்டுப்புடவை உடுத்தச் சொல்லி அழகு பார்த்து, ஊஞ்சலில் உட்கார்ந்து ஆடி—

சே.

அன்றைக்குப் பள்ளிக்குப் போன போது நந்தினியின் கடை இருந்த பக்கம் எட்டிக் கூடப் பார்க்காமல் வேறு வழியாக உள்ளே சென்று விட்டாள்.

இதே பள்ளியில் வேலைக்குச் சேரக்கூடாதென்று அப்பா அன்றைக்கு அவ்வளவு பிடிவாதம் பிடித்தது ஏன் என்று இப்போது தானே தெரிகிறது!

துளசியின் மனம் பழைய நினைவுகளால் அலைக்கழிக்கப்பட்டு அனலில் இட்ட புழுவாய் துடிக்கக் கூடாது என்ற அக்கறையினால் அல்ல. அங்கே நந்தினியுடன் தனக்கிருக்கும் உறவு வெளிப்பட்டு விடப்போகிறதே என்ற பயத்தினால்தான். தன் குட்டு உடைந்து விடுமோ என்ற அச்சத்தினால் தான்!

**அ**ன்று மாலை அவள் வீட்டிற்குத் திரும்பவில்லை. உடன் வேலை செய்யும் ஒரு டீச்சரிடம் 'ஏதாவது ஒரு சிறு வீடு வாடகைக்குக் கிடைக்குமா?' என்று கேட்டு, அந்த டீச்சர் நல்ல வேளையாக ஒரு முகவரியைக் கொடுத்துவிட்டாள். முதல்நாள் தான் அந்த டீச்சர் அந்தத் தெரு[illegible] வீடு

Mithra Vintha

பார்த்ததாகவும். சிறிதாக இருந்ததால் வேண்டாமென விட்டு விட்டதாகவும் சொன்னாள்.

அது எப்பேர்ப்பட்ட எலிப் பொந்தாக இருந்தாலும் பரவாயில்லை. அதில் நுழைந்து விடுவது என்ற தீர்மானத்துடன் துளசி அந்த வீட்டைத் தேடிக்கொண்டு புறப்பட்டாள்.

பஞ்சவர்ணசாமி கோவில் தெருவில் கோயிலுக்கு நேர் எதிரே இருந்தது அவள் தேடி வந்த வீடு. வாசலில் 'வீடு வாடகைக்கு விடப்படும்' போர்டு தொங்கியது.

உள்ளே நுழைந்தாள். வீட்டின் சொந்தக்காரர் நல்ல வேளையாக அந்த நேரம் வீட்டில் இருந்தார். வெள்ளையடிப்பவர்களை விரட்டி வேலை வாங்கிக் கொண்டிருந்தார். வேலை அனேகமாக முடிந்திருந்தது.

துளசி வாடகைக்கு எடுத்துக் கொள்ள வந்திருப்பதைத் தெரிவித்ததும், அவர் வீட்டைச் சுற்றிக் காண்பித்தார். அவளைப் பற்றி விசாரித்தார். பள்ளி ஆசிரியை கணவன் இல்லை. ஒரே ஒரு கைக்குழந்தை. அம்மா, அப்பா இதே ஊரில்தான் இருக்கிறார்கள். கல்யாணமானபின் மறுபடி பிறந்த வீட்டிற்கே சென்று பெற்றோர்களுக்குப் பாரமாக இருக்க விருப்பம் இல்லை.

துளசியின் பதில்கள் அவருக்குப் பரிதாபத்தையும், திருப்தியையும் அளித்தன. துளசிக்கும் வீடு பிடித்திருந்தது. பிடித்திருப்பதைச் சொன்னாள். அவருக்கும் சந்தோஷமாக இருந்தது.

துளசி உடனே கைப்பையில் இருந்த பணத்தை எடுத்து எண்ணிக் கொடுத்தாள். முன் பணம். அவரிடம் விடை பெற்றுக் கொண்டாள். மறுநாளே வருவதாகச் சொல்லி விட்டாள்.

வீட்டுச் சொந்தக்காரர் போர்டை அகற்றினார்.

கிருஷ்ணமூர்த்தியின் வீடு.

துளசி தன் பொருட்களை எல்லாம் ஒவ்வொன்றாக எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள்.



காயத்ரி ஓடி ஓடி ஒவ்வொரு பொருளாக கொண்டு வந்து கொடுக்க கொடுக்க, துளசி அதை வாங்கி வாங்கி ஒவ்வொன்றாக அடுக்க ஆரம்பித்தாள்.

அப்படி காயத்ரி எடுத்து வந்த பொருள்களில் ஒன்று நந்தினியின் படமும் இருந்தது. துளசி பார்த்து பார்த்து வரைந்த நந்தினியின் ஓவியம். சென்னை வரை சென்று போட்டியில் பங்கேற்று அவளுக்கு பரிசையும், புகழையும், பெருமையையும் தேடித் தந்த ஓவியம்- நந்தினியின் ஓவியம். துளசி அதை. அந்த ஓவியத்தை ஃப்ரேம் போட்டு படமாக மாற்றி இருந்தாள்.

துளசி அதை கொஞ்ச நேரம் உற்றுப் பார்த்து விட்டு தூக்கி எறிய இருந்தாள். கடைசி விநாடியில் மனதை மாற்றிக் கொண்டு அதையும் எடுத்து வைத்துக் கொண்டாள்.

கிருஷ்ணமூர்த்தி உள்ளே நுழைந்தார்.

பொருட்களை அடுக்கி வைத்துக் கொண்டிருந்த துளசியைப் பார்த்தார்.

"துளசி... நான் சொன்னா கேக்க மாட்டியாம்மா?"

துளசி நிமிர்ந்து அவரைப் பார்த்தாள்.

"வேணாம்மா... தயவு செய்ஞ்சு மனசை மாத்திக்கம்மா..."

துளசி பதில் எதுவும் சொல்லாமல் திரும்பவும் பொருட்களை அடுக்குவதில் முனைப்பு காட்டினாள்.

'சொய்ங்க்' என்று சத்தம் கேட்டது சமையலறையிலிருந்து. லலிதா எதையோ வாணலியில் போட்டு சமைத்துக் கொண்டிருந்தாள்.

கிருஷ்ணமூர்த்தி சட்டென்று சமையலறைக்கு அருகே சென்றார்.

"ஏன் லலிதா... தனியாப் போக வேண்டாம்னு துளசி கிட்ட நீயாவது எடுத்துச் சொல்லக் கூடாதா?" அவர் குரல் பரிதாபமாய் இறைஞ்சியது.

Mithra Vintha

லலிதா கையில் இருந்த பாத்திரத்தை 'ணங்' என்று சமையல் மேடையில் வைத்தாள். திரும்பி கிருஷ்ணமூர்த்தியை முறைத்தாள்.

"எல்லாம் உங்களாலதான்... நீங்க பண்ண கூத்து தான்... ஏதோ அவளுக்காவது இந்த தைரியம் இருக்கேன்னு நான் சந்தோஷப்படறேன்..."

லலிதா 'விருட்'டென்று சமையலறையை விட்டு வெளியேறினாள்.

கிருஷ்ணமூர்த்தி மறுபடி துளசியின் அருகில் வந்தார்.

"அப்படி தனியாப் போறது தான் ஒன் முடிவுன்னா... நானும் உன் கூட வந்துடறேன்மா..."

துளசி சலிப்புடன் நிமிர்ந்து பார்த்தாள்.

"யாரும் வேணாம்!"

"எனக்காக இந்த ஒரு தடவை விட்டுக் கொடும்மா..."

துளசி அவரைப் பார்த்த பார்வையில் கோபமும், ஆற்றாமையும் கலந்து இருந்தன.

"எத்தனை தடவைப்பா விட்டுக் கொடுக்கறது? கல்பனாவோட கரு கலையறதுக்கு நான் தான் காரணம்னு அவ கையை நீட்டிக் குத்திக் காட்டனப்பவே, நான் தனியாப் போறேன்னு தான சொன்னேன்? நீங்க தடுத்தீங்க. அப்ப உங்களுக்காகத்தான் பொறுத்துக்கிட்டேன்... பாலோஜியோட அஜாக்கிரதையால என்ன ஆச்சின்னு உங்களுக்கே தெரியும்... அவன் கிட்ட அதை எடுத்துச் சொன்னப்ப அவன் என்னை எவ்வளவு எடுத்தெறிஞ்சு பேசினான்னும் உங்களுக்குத் தெரியும். அப்ப, இந்த வீட்ல பாரமா இருக்க வேணாம்னு நினைச்சி நான் தனியாப் போகணும்னு ஆசைப்பட்டேன். அப்பவும் நீங்க தடுத்தீங்க. நான் மறுபடியும் அடங்கிப் போனேன்.



அப்பல்லாம், இந்த வீட்ல நீங்க எனக்குப் பக்க பலமா இருக்கீங்க என்கிற தைரியத்துல நான் தனியா போகாம இருந்தேன். இப்ப அந்த தைரியம் எனக்கு இல்லப்பா... இனிமே அந்த தைரியம் வராதுப்பா! வேணாம், எனக்கு உங்க துணை வேணாம்... என்னை விட்ருங்க..."

துளசி குரல் கம்ம, கையெடுத்து அவரைக் கும்பிட்டு, முகத்தைப் பொத்திக் கொள்ள, அவளது முதுகு குலுங்கியது.

கிருஷ்ணமூர்த்தி எதுவும் சொல்ல இயலாமல் திகைத்துப் போய் நின்றார்.

★ ★ ★

துளசியின் வீடு. துளசியின் தனி வீடு.

ஒற்றை நாளுக்குள் எத்தனை பெரிய மாற்றம்?

ஒற்றை விநாடியில் உலகமே தலைகீழாய் புறப்படுகிற வாய்ப்பு இருக்கும் பொழுது ஒரு முழு நாள் என்பது பெரிய விஷயமில்லை தான்.

வாழ்க்கையில் நமக்கு பிடிக்காத சில விஷயங்கள், நிகழ்வுகள், நாட்கள், மனிதர்கள் எல்லாம் கனவு போல காணாமல் கலைந்து போய் புதிதாக தோன்றினால் எவ்வளவு நன்றாக இருக்கும்? ஆனால் காலச் சக்கரம் எல்லாவற்றையும் மிகச் சரியாக, தெளிவாக கணக்குப் போட்டுப் பார்த்துத்தான் சுற்றுகிறது.

இந்த க்ஷணம், இந்த நொடி போனால் திரும்பி வராது. இந்த நொடியை புரிந்து கொண்டோமானால் எத்தனை மகிழ்ச்சி, எத்தனை இன்பம், எத்தனை அற்புதம்!

முற்றும் துறந்த மகான்கள், தன் நிலை அறிந்த ஜாம்பவான்கள் சொன்னது, சொல்லிக் கொண்டிருப்பது இதைத் தானே!

Mithra Vintha

இந்த நொடியை அப்படியே ஏற்றுக் கொண்டு விட்டால், அடுத்த நொடி நம் கையில். அடுத்த நொடியை எப்படி பயன்படுத்தலாம் என்பதற்கான தீர்மானம் நம் கையில். ஆனால் அற்ப மனிதன் என்றைக்கு அப்படி நடந்துக் கொண்டிருக்கிறான்?

அவன் ஒன்று கடந்த காலத்தின் துக்கங்களில் சஞ்சரித்துக் கொண்டிருப்பான், இல்லையெனில் எதிர்கால கனவுகளில் ஊர்வலம் போய்க் கொண்டிருப்பான். நிகழ்காலத்தை எவனாவது அனுபவித்து வாழ்ந்ததுண்டா? அதை அப்படியே ஏற்றுக் கொண்டது உண்டா? இல்லை இல்லவே இல்லை.

மகான் ஒருவர் எழுதியிருந்த புத்தகத்தின் வரிகள் ஞாபகத்தில் வந்த துளசிக்கு. அவளுக்கு அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதே புதியவில்லை துளசிக்கு. அன்றும் இன்றும். எதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கிறார்?

தான் நந்தினியின் வீட்டில் கண்ட காட்சியையா? நந்தினி கிருஷ்ணமூர்த்தியாகிய தன்னுடைய அப்பாவுக்கு ஏதோ ஒரு வகையில் உறவானவள் என்பதையா?

குழப்பம் மேலும் மேலும் அழுத்தி, தாங்காமல் கண்களை மூடிக் கொண்டாள் துளசி. மனதை மேலும் மேலும் சிந்திக்க விடாமல் வேறு வேலைகளில் கவனம் செலுத்த தீர்மானித்தாள் துளசி.

கண்களை திறந்தாள். தான் அடுக்கி கட்டி எடுத்து வந்த பொருட்களை எல்லாம் ஒவ்வொன்றாக பிரித்தாள். ஒரு முறை வீட்டைச் சுற்றி பார்வையை படரவிட்டாள்.

சொந்த பந்தங்கள் இருந்தும் இல்லாதது போல. அவள் அநாதையாய் நின்றிருப்பது போல அந்த வீடும் வெறுமையாய் இருந்தது.

ஒவ்வொரு பொருட்களாய் எடுத்து இடம் பார்த்து பார்த்து அடுக்கினாள், வைத்தாள், திருப்தி அடைந்தாள். நந்தினியின் ஓவியப் படத்தை சுவர்பக்கமாய் திருப்பி வைத்தாள்.



சின்ன சின்ன எளிய அலங்காரங்களை அவள் செய்ததன் மூலம். அந்த வீடு லட்சணம் பொருந்திய அம்சமான வீடாக மாறியது.

அந்த வீட்டில் துணி உலர்த்தும் கயிற்றைக் கட்ட அண்ணாந்து பார்த்து இடம் தேடிய போது. அவளின் புடவை இழுக்கப் பட்டது.

துளசி குனிந்து கீழே பார்த்தாள்.

அவளின் புடவையை பற்றியபடி அவளை ஏக்கத்துடன் பார்த்தாள் காயத்ரி.

"என்னடி செல்லம்? பசிக்குதா?"

காயத்ரி 'இல்லை' என்பதாய் தலையாட்டினாள்.

"வேற என்ன வேணும் குட்டிக்கு?"

"இனிமே நாம இந்த வீட்ல தான் இருக்கப் போறோமாம்மா? இந்த வீட்ல தாத்தா, பாட்டி, மாமா, யாருமே இருக்க மாட்டாங்களாம்மா...?"

துளசி சட்டென்று குழந்தையின் அருகில் மண்டியிட்டு உட்கார்ந்தாள். குழந்தையை கட்டி அணைத்து அழுதாள்.

"அழாதம்மா... அம்மா... அழாதம்மா... இனிமே நான் அவங்களைக் கேக்க மாட்டேன்..."

துளசி குழந்தையை இன்னும் இறுகக் கட்டியணைத்துக் கொண்டு அவளுக்குத் தெரியாமல் அழுதாள்.

## 37

கிருஷ்ணமூர்த்தி வீட்டில் நுழைந்தார்.

அவர் கையில் கறிகாய்ப் பை.



Mithra Vintha

அவர் நுழைந்த வேகத்தில் அவர் கால் பட்டு குரங்கு பொம்மை ஒன்று சற்று தள்ளிப் போய் விழுந்தது.

குரங்கு பொம்மையின் சாவி ரிலீசாகி அதன் கையில் இருக்கும் சின்ன ஜால்ரா போன்ற தட்டு, ஜல் ஜல் என்று தட்டப்பட்டது.

கிருஷ்ணமூர்த்தி குனிந்து அதை கையில் எடுத்தார்.

குரங்கு பொம்மை அவருக்கு எதிராக ஜால்ரா தட்டியது.

கிருஷ்ணமூர்த்தியின் கண்கள் கலங்கின.

அந்த பொம்மையை மிக ஜாக்கிரதையாக எடுத்து ஷெல்ஃப்பில் வைத்தார்.

அங்கு யதேச்சையாக வந்த லலிதா அதைப் பார்த்து விட்டாள்.

"ம்க்கும்... பத்திரமாக எடுத்து வச்சிக்கங்க. பேத்தி வருவா. எடுத்து வெளையாடக் குடுக்கலாம். துளசி, துளசின்னு தலைல தூக்கி வச்சிகிட்டு ஆடிட்டு இருந்தீங்களே... இப்ப என்ன ஆச்சி? நம்ம வீட்டு வெவகாரம் வெளிய தெரிஞ்சா அசிங்கமாச்சேன்னு அடக்கி அடக்கி வெச்சிட்டு அடுப்படியிலேயே நான் மொடங்கிக் கெடக்கறேன்... நீங்க தூக்கி வச்ச ஆடி, சீராட்ன உங்க செல்ல பொண்ணு...? மூஞ்சில காறித் துப்பாதது ஒண்ணுதான் பாக்கி... மகராசி... யாரு இருந்தா என்ன, போனா என்ன அப்டீன்னு அவ பாட்டுக்கு தட்டிட்டுப் போயிட்டா... ம்ஹூம்..."

கறிகாய்ப் பையைப் பிடுங்கிக் கொண்டு சமையலறையில் நுழைந்தாள்.

பாலாஜி கொல்லைப்புறத்தில் இருந்து தலை துவட்டியபடி ஹாலுக்கு வந்தான்.

"மூச்சுக்கு மூச்சு துளசி, துளசின்னு கொஞ்சுனாரே. அவளாலேயே அவர் பண்ணின அசிங்கத்தைத் தாங்க



முடியலை... பிய்ச்சுக்கிட்டுப் போயிட்டா... தனியாப் போகாத, கூட வரேன், கூட வரேன்னு கெஞ்சுனாரே. சேத்துக்கிட்டாளா? போற இடத்திலயாவது அவ கௌரவமா, நிம்மதியா இருக்கணும்னு இவரை தூக்கியெறிஞ்சிட்டுப் போயிட்டா... கொழந்தை பொம்மையை எடுத்துக் கொஞ்சிட்டிருக்காரே வெக்கம் கெட்டுப் போயி... நானா இருந்தா இந்நேரம் நாக்கைப் புடுங்கிக்கிட்டு இருப்பேன்..."

கிருஷ்ணமூர்த்தி தலையைக் குனிந்து கொண்டு வீட்டை விட்டு வெளியேறினார்.

அவருக்கு ஒரே ஒரு போக்கிடம்தான் இருந்தது.

அங்கேதான் அவருடைய புண் பட்ட நெஞ்சுக்கு ஒத்தடம் கிடைக்கும்.

அங்கே தான் அவர் தன் உள்ளக்கிடக்கையை ஒளி மறைவில்லாமல் வெளிப்படுத்த முடியும்.

* * *

நந்தினியின் வீடு.

கூடம். ஊஞ்சல்.

வீடு முழுவதும் இருட்டாய் இருந்தது.

ஊஞ்சலுக்கு சற்று தூரம் தள்ளி ஒரு சின்ன சிம்னி விளக்கு தரையில் வைக்கப்பட்டிருந்தது. சிம்னி விளக்கிலிருந்து மிக மிதமான வெளிச்சம் தப்பித்து வந்து அந்த ஊஞ்சலுக்கு மட்டும் விழுகிறாற் போல பிரகாசம் தந்துக் கொண்டிருந்தது. சிம்னி விளக்கின் சுடர் ஆடாமல் அசையாமல் மோனத் தவம் செய்யும் முனிவரை ஞாபகப்படுத்தியது.

ஊஞ்சலின் ஒரு ஓரத்தில் அதன் சங்கிலியை பற்றிக் கொண்டு, கிருஷ்ணமூர்த்தி உட்கார்ந்திருந்தார். ஊஞ்சலின் மறுமுனையில் சங்கிலியைப் பற்றியபடி நந்தினி உட்கார்ந்திருந்தாள்.

Mithra Vintha

ஊஞ்சல் மிக மெல்ல ஆடிக் கொண்டிருந்தது.

அதன் கியீங்க், கியீங்க் ஒலி மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது.

"இன்னும் எத்தனை நேரம் இப்படி உக்காந்திருப்பீங்க... காலைல வந்தது ஒரு வாய் பச்சத் தண்ணி கூட குடிக்கல..."

நந்தினியின் குரல் அவளுக்கே கேட்காத அளவு மெலிந்திருந்தது.

"துளசியை நான் பிரிஞ்சி இருந்திருக்கேன்... டிரான்ஸ்ஃபர் ஆகி நான் அரியலூருக்குப் போனப்ப ஒரு மாசம் ரெண்டு மாசம்னு வீட்டுக்குப் போகாமயே இருந்திருக்கேன்... அவ மொகத்தைக் கூடப் பாக்காம இருந்திருக்கேன். அப்புறம் அவ கல்யாணம் ஆயிப் போனாளே... கர்நாடகாவுல அவ புருஷன் கூட அல்லாடிட்டிருந்தாளே, எத்தனை வருஷம்! நடுவுல ஒரு தடவையோ ரெண்டு தடவையோ பாத்திருப்பேன்... அப்பல்லாம் எனக்கு வலிக்கல நந்தினி... ஆனா..."

கிருஷ்ணமூர்த்தி குலுங்கினார். நந்தினி மௌனமாய் அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"இப்ப அவ என்னை விட்டுட்டுப் போனதைத் தான் என்னால தாங்க முடியல.... பாத்துடுவோம்ங்கற நம்பிக்கைல ஒருத்தரை எவ்வளவு நாள் வேணா பாக்காம இருந்திடலாம்... ஆனா... இனிமேப் பாக்கவே முடியாதுங்கற நெலமைல ஒரு நிமிஷங் கூட பாக்காம இருக்க முடியாதுன்னு சொல்லுவாங்களே.... அந்த மாதிரி நெலமைல என்னை விட்டுட்டு துளசி போய்ட்டா நந்தினி... போய்ட்டா..."

கிருஷ்ணமூர்த்தி துக்கம் தாங்காமல் அரற்றினார். நந்தினி, ஊஞ்சல் பலகையில் நீண்டிருந்த அவருடைய கையை மெல்லப் பற்றினாள்.

"துளசியோட கோபம் உங்க மேல மட்டும் இல்லைங்க... உங்களை விட எம்மேலத்தான் அவளுக்குக் கோபம் அதிகமா



வந்திருக்கும்... சிரிச்சு சிரிச்சே நான் ஏமாத்திட்டேன்னு அவ நெனைச்சிட்டிருப்பா..." என்றாள் நந்தினி வேதனை நிரம்பிய குரலில்.

"தாத்தா, தாத்தான்னு என்கிட்ட எவ்வளவு ஆசையா இருக்கும் தெரியுமா, ரெண்டு நிமிஷம் சேர்ந்தாப்புல உக்கார விடாது. 'தாத்தா, வெளையாட வா, வெளையாட வா'ன்னு கூட்டுக்கிட்டே இருக்கும் காயத்ரி. சின்னக் குழந்தை - அதையும் இழுத்துக்கிட்டுப் போயிட்டா..."

கிருஷ்ணமூர்த்தி கண்கள் கலங்கி பேச பேச, நந்தினிக்கும் கண்கள் கலங்கின.

சிறிது நேரம் மௌனமாய் கழிந்தது.

சற்றுப் பொறுத்து நந்தினி மெல்லிய குரலில் பேசினாள்.

"எல்லாம் என்னால தானா? ம்? நான் எங்கயாவது கண் காணாத இடத்துக்குப் போய்டவா?"

நந்தினி பேசி முடிக்கும் முன்பே, அவளிடம் இருந்து விம்மல் ஒன்று எழுந்தது.

"நந்தினி..."

நந்தினி நிமிர்ந்து பார்க்காமல் தலை குனிந்திருந்தாள்.

"என்னை நிமுந்து பாரேன்."

நந்தினி தலை நிமிர்ந்தாள். கிருஷ்ணமூர்த்தியின் முகம் தெளிவாகி இருந்தது.

"கண்ணைத் தொட.... மொதல்ல கண்ணைத் தொட... தொடன்னா தொடைக்கணும்..."

நந்தினி புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"என்ன பேச்சு பேசறே நீ? ம்? நீயும் என்னை விட்டுட்டுப் போகறேங்கறியா? எங்க போவே? துளசிக்காவது காயத்ரி

MithraVintha

இருக்கா... லலிதாவைப் பாத்துக்க பாலாஜி, கல்பனான்னு ரெண்டு பேர் இருக்காங்க... ஒனக்கு என்னை விட்டா வேற யார் இருக்காங்க? நான் தான் இருக்கேன் நந்தினி... கடைசி வரைக்கும் நான் தான் இருப்பேன்... இந்த வெவகாரமெல்லாம் கோடை மழை மாதிரி... கொஞ்ச நாள்ல சரியாய்டும்... துளசி என்னைப் புரிஞ்சுப்பா... அவகிட்ட நேரடியா சொல்ல முடியாதத, லெட்டர்ல எழுதியிருக்கேன். அந்த லெட்டரை படிச்சிட்டு, என் துளசி என்னை புரிஞ்சுப்பா, உன்னையும் புரிஞ்சுப்பா.... கவலைப்படாதே... என்ன?"

நந்தினி மெல்ல தலையசைத்தாள்.

மனுஷனுக்குக் கவலைன்னு வந்தா சொல்லி ஆத்திக்கறதுக்கு கோயிலுக்குப் போய் சாமி முன்னால நிக்கறதில்லையா? அது மாதிரி நான் இங்க வந்தேன்.... பெறப்படட்டுமா... நேரம் ஆச்சி..."

நந்தினி புன்சிரிப்புடன் தலையசைத்தாள்.

கிருஷ்ணமூர்த்தி ஊஞ்சலில் இருந்து இறங்கி வாசலை நெருங்கினாள்.

## 38

கிருஷ்ணமூர்த்தி சாலையில் நடந்துக் கொண்டிருந்தார்.

சாலையிலும், அவர் மனதிலும் இருள் படிந்திருந்தது.

'கவலைப்படாதே' என்று நந்தினியிடம் சொல்லிவிட்டு வந்திருந்தாலும் அவர் மனம் இன்னும் நடந்தவைகளை எல்லாம் காட்சிகளாக அசைப் போட்டுக் கொண்டு இருந்தது.

அடித்துத் துரத்தினாலும் வலிய வலிய வந்து வலுக்கட்டாயமாய் அவர் மனதில் ஒட்டிக் கொண்ட காட்சிகள்.



நந்தினியின் தலையில் அவர் பூச்சூடியது.

நந்தினி அவர் சட்டைப் பொத்தானை திருகியது.

நந்தினியும் அவருமாக துளசியைப் பார்க்க நேர்ந்தது.

துளசி கையெடுத்து கும்பிட்டது.

துளசியின் அறையில் டீ ஏடு படிந்து ஆறிப்போய் இருந்தது.

துளசி பொருட்களை அடுக்கிக் கட்டிக் கொண்டது.

லலிதா பாத்திரத்தை ணங்கென்று வைத்து விட்டு பேசியது.

குரங்கு பொம்மை அவர் முகத்திற்கு எதிரே ஜால்ரா தட்டியது.

தலை துவட்டியபடி வந்த பாலாஜி பேசியது.

இன்னும் என்னன்னவோ காட்சிகள் ஒன்றுக்கொன்று கோர்வையில்லாமல் வந்து வந்து போயின. ப்ரொஜக்டரில் மாறிக் கொண்டே இருக்கும் ஸ்லைடுகளாய் மாறி மாறி தோன்றி மறைந்தன.

ஒரு திருப்பத்தில் இரண்டு பவர்ஃபுல் ஹெட்லைட்டுகளையும் போட்டுக் கொண்டு ராட்சஸ லாரி ஒன்று திரும்பியது. தூக்கக் கலக்கமாய் இருந்த லாரி டிரைவர் சட்டென்று சாலையில் எதிர்ப்பட்ட கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்தான்.

அவன் விழிகள் விரிந்தன.

ஏர்-ஹார்னை பலங்கொண்ட மட்டும் அழுத்தினான்.

கிருஷ்ணமூர்த்தி மிகக் கடைசி விநாடியில் உணர்வுக்கு வந்து தலை நிமிர்ந்து லாரியைப் பார்த்தார். கண்கள் விரிய 'ஆ' என்று வாயைப் பிளந்தார்.

அடுத்த நிமிடம் -

கிருஷ்ணமூர்த்தியின் 'துளசீசீசீ...' என்ற மரண ஓலம் பிரதேசம் முழுவதும் இருட்டில் கனமாய் கேட்டது.

MithraVintha

# 39

கிருஷ்ணமூர்த்தியின் வீட்டு வாசலில் ஜோடி, ஜோடியாய் செருப்புகள். அவசரமாய் உதறப்பட்டு அங்கொன்றும் இங்கொன்றுமாய் ஜோடி பிரிந்த செருப்புகள். பார்த்து பார்த்து தொலைந்து விடக் கூடாதே என்ற நினைப்பில் ஓரமாய் தனிமையில் இருந்த சில புத்தம் புது ஜோடிகள். தோல் செருப்புகள், சாதாரண ஸ்லிப்பர்கள். எந்த விதமான வித்யாசமோ, வேறுபாடோ இன்றி, மனிதர்கள் போல் அல்லாமல் ஒன்றோடொன்றாய் கலந்திருந்த ஜோடிகள்.

வாசல்பக்கம் இருந்த சின்ன திண்ணையில் ஐந்தாறு பேர் நெருக்கியடித்தது போல் உட்கார்ந்திருந்தார்கள்.

யாரோ ஒரு தட்டில் காப்பி டம்ளர்களை வைத்துக் கொண்டு ஒவ்வொருவரிடமும் நீட்டிக் கொண்டு வர, சோக முகத்துடன் ஒவ்வொருவரும் காப்பி டம்ளரை எடுத்துக் கொண்டனர்.

வீட்டிற்குள் அடர்ந்த ஊதுவத்திப் புகை.

புகையினூடே தெரிந்த கிருஷ்ணமூர்த்தியின் புகைப்படம்.

கருப்பு ஃப்ரேம் போடப்பட்டு நாற்காலியில் சாய்த்து நிறுத்தப்பட்டிருந்தது. படத்திற்கு குங்குமம் வைத்து மாலை அணிவிக்கப்பட்டிருந்தது.

நெற்றியில் கலைந்த பொட்டு. தலையில் நிறைய பூ. முகத்தில் நிறைய மஞ்சள். கைகளில் நிறைய கண்ணாடி வளையல்கள் அடுக்கப்பட்ட லலிதா சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள். பக்கத்தில் கல்பனா, அவ்வப்போது மூக்கைச் சிந்திக் கொண்டிருந்தாள்.

லலிதாவைச் சுற்றி நடுத்தர வயதான பெண்கள் நான்கைந்து பேர் உட்கார்ந்திருந்தார்கள்.



வீட்டிற்குள் தயங்கி தயங்கி ஹெட்மாஸ்டர் தமிழரசன் நுழைந்தார்.

கிருஷ்ணமூர்த்தியின் படத்தின் முன்பாக சற்று நேரம் மவுனமாக நின்றார். பார்த்தபடி நின்றவரின் கண்கள் கலங்கின.

கண்ணாடியைக் கழற்றிவிட்டு இரு விரல்களால் கண்களைத் துடைத்துக் கொண்டார். மறுபடி கண்ணாடியை அணிந்து கொண்டு கிருஷ்ணமூர்த்தியின் படத்தை ஒரு முறை வணங்கினார்.

லலிதாவை நோக்கி தன் பார்வையை திருப்பினார். லலிதா ஹெட்மாஸ்டர் தமிழரசனைப் பார்த்தாள். ஆனால் அவள் கண்களிலோ, முகத்திலோ எந்த உணர்ச்சியுமில்லை.

ஹெட்மாஸ்டர் தமிழரசன் மெல்லச் சுற்றிலும் ஒரு முறை பார்த்தார். வீட்டை விட்டு வெளியே வந்தார்.

மெல்லச் சுற்றிலும் பார்த்தார். அவர் சட்டைப் பையில் ஒரு தபால் உறை நீட்டிக் கொண்டிருந்தது.

ஹெட்மாஸ்டரின் பார்வையில் பாலாஜி தென்பட்டான். மீசையின்றி, சட்டையின்றி, மேலே ஒரு துண்டை போர்த்திக் கொண்டு வேட்டியை கட்டிக் கொண்டு அவன் ஒரு மடக்கு நாற்காலியில் உட்கார்ந்திருந்தான்.

ஹெட் மாஸ்டர் தமிழரசனை அவன் பார்த்தான். பார்த்ததும் நாற்காலியில் இருந்து எழுந்து கொண்டான்.

ஹெட்மாஸ்டர் தமிழரசனின் கை வெகு இயல்பாக துண்டை இழுத்து சட்டைப் பாக்கெட்டின் மேல் நீட்டிக் கொண்டிருந்த கடித உறையை மறைத்தது.

ஹெட்மாஸ்டர் தமிழரசனை நோக்கி பாலாஜி வந்தான். அவன் அருகில் வந்ததும் அவன் தோளை ஆறுதலாகத் தட்டினார்.

"பாலாஜி..."

MithraVintha

பாலாஜி உடைந்தான். கண்களில் இருந்து கண்ணீர் அருவியாய் இறங்கின.

"நான் என்ன சொன்னாலும் துக்கம் ஆறாதுப்பா... கொஞ்ச நாள் போனா எல்லாம் தானா சரியாய்டும்... இனிமே இந்தக் குடும்பத்துக்கு நீதான் எல்லாம்.... அம்மாவை நல்லபடியா கவனிச்சிக்க..."

பாலாஜி கண்களை துடைத்தபடி தலையை அசைத்தான்.

ஹெட்மாஸ்டர் தமிழரசன் அவனிடம் இருந்து மெல்ல விலகி நடந்தார். சுற்று முற்றும் பார்த்தார்.

துளசி தனியாக ஓரிடத்தில் உட்கார்ந்திருந்தாள். அவள் முகத்தில் துக்கம் வேதனையில் நிழல் படிந்திருந்தது. அவள் மடியில் குழந்தை காயத்ரி உட்கார்ந்திருந்தாள். இன்னொரு குழந்தை. காயத்ரியை அணுகி அவளை விளையாட கூப்பிட்டு கொண்டிருந்தது. குழந்தை காயத்ரி துக்கமாக முகத்தை வைத்துக் கொண்டு தலையை இடதும் வலதுமாக அசைத்தது.

ஹெட்மாஸ்டர் தமிழரசனை அந்தக் காட்சியைப் பார்த்தபடி துளசியை நெருங்கினார்.

"துளசி."

துளசி நிமிர்ந்து பார்த்தாள். அழைத்தது ஹெட்மாஸ்டர் தமிழரசன் என்று தெரிந்ததும் அழுகையுடன் தலையைக் குனிந்து கொண்டாள். அவள் உடம்பு குலுங்கியது. ஹெட்மாஸ்டர் தமிழரசன் அவள் தலையைத் தொட்டு வருடினார்.

"உங்கப்பா உன் பேருக்கு ஒரு லெட்டர் அனுப்பியிருக்காரும்மா... ஸ்கூல் அட்ரஸுக்கு..."

துளசி நிமிர்ந்தாள்.

ஹெட்மாஸ்டர் தமிழரசன் பாக்கெட்டில் நீட்டிக் கொண்டிருந்த கடித உறையை எடுத்து துளசியிடம் நீட்டினார்.



துளசி அதை வாங்கிக் கொண்டாள்.

"இந்த வீட்ல கடைசி வரைக்கு ஒம் மேல உசிரையே வச்சிருந்த ஒரே ஜீவன்...ம்ஹ்ம்..." சொல்லிக் கொண்டே ஹெட்மாஸ்டர் தமிழரசன் திரும்பிப் போனார்.

துளசி அடக்கமுடியாமல் வெடித்து அழுதாள்.

"அப்பா ஆ ஆ ஆ—".

## 40

அன்புள்ள மகள் துளசிக்கு,

உன் அப்பா எழுதிக் கொள்வது.

என்மேல் எவ்வளவுக்கெவ்வளவு பாசம் வைத்திருந்தாயோ, அவ்வளவுக்கவ்வளவு வெறுப்பு வைத்திருக்கிறாய் என்பதும் எனக்குத் தெரியும்.

தயவு செய்து இந்தக் கடிதத்தைப் படி. என் மேல் இருக்கும் வெறுப்பினால் இக்கடிதத்தைப் படிக்காமல் விட்டு விடாதே. படிப்பாய் என்று நம்புகிறேன்.

வாழ்க்கையில் யாரிடமும் சொல்லாத உண்மையை நான் உன்னிடத்தில் சொல்லப் போகிறேன்.

நந்தினியிடம் உறவு வைத்திருக்கிறேன் என்பதுதான் உனது மாறாத கோபத்திற்கும், வெறுப்பிற்கும் காரணம் என்று எனக்குத் தெரியும்.

"என் வயசு இருக்குமாப்பா நந்தினிக்கு?" என்று கேட்டாயே. உன் வயதுதான் அவளுக்கும்.

இந்த வயதிற்கு நீ நிறைய மோசமான ஆண்களைச் சந்தித்து விட்டாய். நீ படித்த பள்ளிக் கூடத்தில் ஒரு மோசமான

MithraVintha

ஆண். உனக்கு வாய்த்த கணவன் ஒரு மோசமான ஆண். நீ வேலை செய்த ஃபாக்டரியில் சில மோசமான ஆண்கள். இப்படி மோசமானவர்களைச் சந்தித்து சந்தித்து ஆண்கள் என்றாலே ஒரு வெறுப்பு ஏற்பட்டு விட்டது உனக்கு.

நந்தினியின் நிலை உன்னை விட மோசமானது.

உன்னிடம் அன்பு காட்ட, உன்னை அரவணைத்துக் கொள்ள ஒரு அப்பாவாவது இருக்கிறேன்.

ஆனால் நந்தினிக்கு என்று யாருமே கிடையாது.

நந்தினியை எப்போது, எந்தச் சூழ்நிலையில் சந்தித்தேன், எப்படி எனக்கும் அவளுக்கும் இடையே உறவு உண்டானது என்று உன்னிடம் சொல்ல எவ்வளவோ முயற்சி செய்தேன். ஆனால் காது கொடுத்துக் கேட்கும் சூழ்நிலையில் நீ இல்லை.

இப்போது சொல்கிறேன்.

லலிதாவிடமும், பாலாஜியிடமும் கூடச் சொல்லாத உண்மை இது. கல்பனாவிற்குத் தெரிவிக்காத உண்மை இது. இந்த உண்மையை அவர்களிடம் சொன்னால் அவர்களுடைய பார்வையில் நான் ஒன்றும் பழுதில்லாதவனாக, கறை படியாதவனாகத் தோன்றிவிட மாட்டேன். உண்மையைச் சொல்வதற்கு முன் என்னை எப்படி கிள்ளுக் கீரையாக வைத்து நடத்தினார்களோ, அதே போல்தான் உண்மை தெரிந்த பின்பும் என்னை நடத்துவார்கள்.

அவர்கள் இயல்பு அது. மாறாது. அதற்காக நான் வருத்தப்படவும் மாட்டேன்.

ஆனால் நீ அப்படி இல்லை. அதனால்தான் உன்னிடம் உண்மையைச் சொல்லத் துடிக்கிறேன்.

**நா**ன் அரசாங்கத்தில் விற்பனை வரி அதிகாரியாக வேலை செய்து கொண்டிருந்த போது ஒரு முறை அரியலூருக்கு இன்ஸ்பெக்‌ஷனுக்காகப் போகவேண்டி இருந்தது.



போனேன். அங்கே ஒரு லாட்ஜில் அறை எடுத்துத் தங்கினேன்.

அரியலூரில் இருந்த ஒரு பெரிய வியாபாரி வரியே கட்டாமல் அரசாங்கத்தை ஏமாற்றிக் கொண்டிருந்தான். அவனைச் சோதிக்கச் சொல்லி உத்தரவு.

மறுநாள் காலையில் நான் சோதனைக்குப் போக வேண்டும். அந்த லாட்ஜில் நான் தங்கியிருந்தது யாருக்குமே தெரியாது - என்றுதான் எண்ணியிருந்தேன்.

அன்றைய இரவு வெளியே போய் சாப்பிட்டு விட்டு அறைக்குத் திரும்பி விளக்கு சுவிட்சைத் தட்டினேன். வெளிச்சம் வந்ததும் அதிர்ந்து போனேன்.

காரணம், கட்டிலில் ஒரு பெண். இன்றைக்கெல்லாம் பார்த்தால் என் மகள் துளசியின் வயதுதான் இருக்கும் என்று தோன்றியது. அவள் யார்? எப்படி இந்த அறைக்குள் வந்தாள்?

விசாரித்தேன்.

என்னை சந்தோஷப்படுத்த வந்திருப்பதாகச் சொன்னாள். நான் கோபத்துடன் அவளை வெளியே போகச் சொன்னேன்.

அழ ஆரம்பித்து விட்டாள். அவளுடைய அழுகை எனக்கு தர்மசங்கடத்தை அளித்தது. திடீரென்று அவள் என் காலில் விழுந்தாள். தன்னைக் காப்பாற்றும்படி கதறினாள்.

"என்ன ஆச்சி? ஏன் இப்படி அழறே?" என்று கேட்டேன்.

"நீங்க யாரோ, எவரோ, எனக்குத் தெரியாது. ஆனா ரொம்ப நல்லவர்னு மட்டும் தெரியுது. எனக்கு ஒரே ஒரு அண்ணன். மூத்த தாரத்துக்குப் பொறந்தவன். எங்க அம்மா என்னோட அப்பாவுக்கு ரெண்டாந்தாரம். அப்பா, அம்மா ரெண்டு பேருமே இப்ப இல்ல. எங்க அண்ணன்தான் இப்ப எல்லாமே. அவனுக்கு என்னைக் கண்டா ஆகாது. எம் மூலமாக நெறைய பணம் சம்பாதிக்கணும்னு அவனுக்கு ஒரு வெறி. அதனால என்னை

Mithra Vintha

இந்த வேலையைச் செய்யச் சொன்னான். நீங்க ஏதோ ஒரு கடைக்காரரை செக் பண்ண வந்திருக்கீங்களாமே. அந்த கடைக்காரர் தான் எங்கண்ணனுக்கு ஐஞ்சாயிரத்தைக் கொடுத்து என்னை உங்க ரூமுக்கு அனுப்பச் சொல்லியிருக்காரு. எங்கண்ணன் பணம் வாங்கிட்டு இந்த வேலையைச் செய்றான்..." என்றாள்.

"போலீசுக்குப் போகலாம் வா" என்றேன்.

அவள் கும்பிட்டாள். காவல் துறை ஆட்கள் எல்லாம் கடைக்காரரிடம் கை நீட்டிக் காசு வாங்குபவர்கள் என்பதால் அவளுக்கு ஒரு போதும் உதவமாட்டார்கள் என்றாள்.

என்னைச் சமாதானப்படுத்துவதற்காக அவளது அண்ணனை மடக்கி ஜெயிலில் போட்டு விடுவார்கள்; ஆனால் அந்த ஊரை விட்டு நான் புறப்பட்டு வந்த அடுத்த கணமே அவனை விடுதலை செய்து விடுவார்கள் என்றாள். இன்றைக்கு இல்லாவிட்டால் நாளையே அவள் அண்ணன் அவளை நாசமாக்கி விடுவான் என்று கதறினாள்.

காலில் விழுந்திருந்தவள் என் கால்களைப் பற்றிக் கொண்டு தன்னைக் காப்பாற்றும்படி கெஞ்சினாள். முடியாவிட்டால் தன்னைக் கொன்று விடும்படி கதறினாள்.

"சார்... என்னை இந்த நரகத்திலேர்ந்து எங்கயாவது கூட்டிட்டுப் போய்டுங்க. நான் உங்க வீட்டுக் கொல்லைல ஒரு வேலைக்காரியா கிடக்கேன். என் வயித்துக்கு ரெண்டு வேளை சோறு போடுங்க.... வேறு எதுவும் வேணாம்..." என்று கெஞ்சினாள்.

அவள் பேசியது அத்தனையும் உண்மை என்று தெரிந்தது.

அந்த அறையில் இன்னும் சற்று நேரம் இருந்தால் போலீஸ்காரர்கள் வந்து என்னறையைச் சோதித்து என்னையும் கைது செய்து விடுவார்கள் என்று தோன்றியது.



இரவோடு இரவாக அவளுடன் ஊருக்குப் புறப்பட்டு வந்தால் ஒரு பெண்ணைக் கடத்திய குற்றத்தை என் மேல் சுமத்தி என்னைக் கைது செய்வார்கள் என்று தோன்றியது.

யோசித்தேன். எனக்கு ஒரே வழிதான் தோன்றியது.

அரியலூர்க் கோயில் ஒன்றின் குருக்கள் எனக்குத் தெரிந்தவர். அவளை அழைத்துக் கொண்டு அவர் இருந்த கோவிலுக்குப் போனேன். கோவில் கதவை அவர் பூட்டிக் கொண்டிருந்த சமயம் அவரைத் தடுத்து நிறுத்தினேன்.

அந்தக் கோயில் சன்னிதியில் நான் சொன்னபடி நந்தினி தனக்குத்தானே ஒரு தாலியைக் கட்டிக் கொண்டாள். குருக்கள் சாட்சியாக இருந்தார்.

அன்று இரவு அவள் குருக்கள் வீட்டிலேயே தங்கி இருந்தாள்.

மறுநாள் அந்த கடைக்குப் போய் ரெஜிஸ்டர்களை எல்லாம் சோதித்து நான்கு லட்ச ரூபாய் அபராதம் கட்டச் சொல்லி உத்தரவிட்டு வந்தேன்.

நந்தினியின் அண்ணனை அழைத்து நான் அவளைத் திருமணம் செய்து கொண்டு விட்டதாகச் சொன்னேன். நந்தினி அதை ஆமோதித்தாள். போலீஸ் உடன் இருந்தது. அவர்களால் ஒன்றும் செய்ய இயலாத சூழ்நிலை.

திருச்சிக்கு அவளோடு வந்தேன். ஒரு வீடு எடுத்து தங்க வைத்தேன்.

லலிதாவிற்கு முழு உண்மையும் தெரியாது. ஆனால் நந்தினி என்னிடம் அடைக்கலமாய் வந்தவள் என்பது தெரியும். அவள் சம்மதிக்காவிட்டால் நான் குடும்பத்தை விட்டுப் போய் விடுவேனோ என்று பயந்து லலிதா ஒன்றும் எதிர்க்கவில்லை.

அந்த அரியலூர்க் கடைக்காரன் பின்னால் ஒரு நாளில் என்னை லஞ்சம் வாங்கியதாக புகார் கொடுத்தான். நான் தெரியாமல் அவன் விரித்த வலையில் மாட்டியிருந்தேன். வேறு

Mithra Vintha

ஒரு காரணத்திற்காக நான் வாங்கியிருந்த பணத்தை லஞ்சப் பணமாகச் சித்தரித்து அந்தக் கடைக்காரன் என்னை ஜெயித்து விட்டான்.

என் வேலை போய் விட்டது.

நான் லஞ்சம் வாங்கியவன் என்று யார் வேண்டுமானாலும் சொல்லட்டும். கவலை இல்லை. நான் சின்னப்பெண் ஒருத்தியுடன் குடும்பம் நடத்துவதாக யார் வேண்டுமானாலும் சொல்லட்டும். அதுவும் எனக்குக் கவலை இல்லை.

ஆனால் உண்மை எனக்குத் தெரியும்.

நந்தினியின் மீது பாசமாக இருந்தேன். அவ்வளவுதானே ஒழிய அவளுடன் ஒரு நாளும் நான் கணவனாக சேர்ந்து இருந்ததில்லை.

அவளுக்கு என்னிடமிருந்து கணவன் என்ற அங்கீகாரம் மட்டுமே தேவைப்பட்டது. இந்த சமூகத்தின் பார்வையில் இருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள. அதை நான் கொடுத்தேன் அவ்வளவுதான்.

என் பெண வயதில் இருக்கும் இன்னொரு பெண்ணுக்கு இந்தச் சமூகம் எந்த அநீதியும் இழைத்து விடக் கூடாது என்று நினைத்தேன்.

தப்பா துளசிம்மா?

உன் மேல் என்றும் மாறாப்பிரியம் கொண்ட

கிருஷ்ணமூர்த்தி.

**யா**ருக்கும் தெரியாமல் அந்தக் கடிதத்தைப் படித்து முடித்த துளசியின் கண்களில் இருந்து கரகரவென கண்ணீர் வழிந்தது.

தன்னுடைய பாராமுகத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாமல்தான் இப்படி ஒரு முடிவை தனக்குத்தானே தேடிக் கொண்டாரா அப்பா?



தான் அவரை விட்டுப் பிரிந்து வந்ததைத் தாங்க முடியாமல் தவித்த உள்ளம் தான் இப்படி ஒரு முடிவை அவருக்குத் தேடிக் கொடுத்ததா?

ஐயோ. துளசி! எப்படிப்பட்ட கிராதகிடி நீ?'

## 41

**த**ப்பு... பெரிய தப்பு.

எவ்வளவு பெரிய தப்பை செய்து விட்டோம் என்று நினைக்க நினைக்க துளசிக்கு ஆற்றாமை பொங்கிப் பொங்கி வழிந்தது.

இத்தனை நாள் தன்னை மகளாய், தோழியாய், அன்னையாய் பாவித்து தன் மேல் அன்பாய், பாசமாய், உயிராய் இருந்த தந்தையை தன்னால் சரியாக புரிந்து கொள்ள முடியாமல் போய் விட்டது என்ற எண்ணமே அவளை கொஞ்சம் கொஞ்சமாய் கூறு போட்டு அறுத்து சித்ரவதை செய்துக் கொண்டிருந்தது.

தன்னைப் பற்றி, தன் செயலைப் பற்றி தன்னிலை விளக்கம் அளிக்க முயற்சி செய்தவருக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்க மறுத்துவிட்ட தன்னுடைய காட்டுமிராண்டித் தனமான செய்கையால் துளசிக்கு தன் மீதே சொல்லவொண்ணா வெறுப்பு மண்டியது.

துளசியின் மனம் அவள் கட்டுக்கு அடங்காமல் மீண்டும் மீண்டும் கிருஷ்ணமூர்த்தியின் கடித வாக்கியங்களை வரி வரியாய் நினைத்துப் பார்த்துக் கொண்டு இருந்தது.

அப்பா... அப்பா... ஐயோ அப்பாப்பா...

Mithra Vintha

அப்பா செத்துப் போனது தன்னால் தானா? இல்லை. உண்மையிலேயே அது ஒரு விபத்தா? விபத்துத்தான். விபத்துத்தான் அது. அப்படித்தான் இருக்கவேண்டும்.

வெகு திடீரென கேட்ட மெல்லிய விசும்பலில் கலைந்தாள் துளசி.

நெற்றியில் குங்குமம் இன்றி, சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்த லலிதாவிடம் இருந்து மெல்லிய விசும்பல் ஒலி கேட்டது.

அதைத் தாளமுடியாதவளாய் துளசி, தன் மடியில் படுத்திருந்த காயத்ரியை ஒரு ஆதரவிற்காக இறுக்கமாகப் பிடித்துக் கொண்டாள்.

லலிதாவின் விசும்பலை தவிர வேறு எந்த சந்தடியும் இல்லாமல் வீடு நிசப்தமாய் இருந்தது.

கிருஷ்ணமூர்த்தியின் காரியங்கள் யாவும் முடிந்து, வந்திருந்தவர்கள் எல்லாம் புறப்பட்டுப் போயிருந்தனர்.

புகைப்படத்தில் புன்னகைத்துக் கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தியின் நெற்றியில் குங்குமம் வைக்கப் பட்டிருந்தது. சுவற்றில் தோதான இடம் தேடி ஆணி அடித்து மாட்டப் பட்டிருந்த படத்திற்கு போட்டிருந்த மாலை காய்ந்து, பூக்கள் உதிர்ந்து அங்கங்கே நார் தெரிய தொங்கிக் கொண்டிருந்தது.

கிருஷ்ணமூர்த்தியின் படத்திற்குக் கீழே வைத்திருந்த தீபத்தின் சுடரைத் தூண்டி விட்டு, எண்ணெய் விட்டுத் திரும்பினாள் கல்பனா.

விறுவிறுவென துளசியின் எதிரே போய் நின்றாள். அவள் முகத்தில் கோபம் தாண்டவமாடியது.

“திருப்தி தானே... இப்ப உனக்கு திருப்தி தானே? இனிமே இந்த ஊர்ல நீ கௌரவமா தலை நிமிர்ந்து நடக்கலாம்!”



துளசி திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

“என்ன பேச்சு பேசற கல்பனா? அவர் எனக்கும் அப்பா தான்...” துளசியின் குரல் வேதனையுடன் இருந்தது.

பாலாஜி தன் அறையிலிருந்து வெளியே வந்தான். எதுவுமே நடக்காதது போல சட்டென்று இயல்புக்கு திரும்பியிருந்தான். வெளியே புறப்பட தயாராய், முழுமையாய் உடுத்தி, டையை கழுத்தருகே முடிச்சிட்டுக் கொண்டே வந்தவன் துளசியை நெருங்கினான்.

“அப்பா! நான் தான் பார்த்தேனே... அப்பா மேலே நீ என்ன மரியாதை வெச்சிருந்தேன்னு... ஆம்பிளைத் துணையில்லாம நீ தனியா இருக்க வேண்டாமேன்னு அன்னிக்கு எவ்வளவு கெஞ்சினாரு கூட வரேன்னுட்டு? குப்பைல தூக்கி எறியற மாதிரில்ல எறிஞ்சிட்டுப் போனே?” பாலாஜியின் வார்த்தைகள் துளசியை குத்திக் கிழித்தன.

“என்ன பாடுபட்டிருக்கும் எங்கப்பா மனசு! எங்க துளசி, எங்க துளசின்னு தலை மேல தூக்கி வச்சிட்டு கொண்டாடினதுக்கு கை மேல பலன் கெடைச்சிருக்க...”

பாலாஜியும் கல்பனாவும் மாற்றி மாற்றி பேசுவதை கேட்க முடியாமல் இரு காதுகளையும் தன் கைகளால் இறுக்கமாய் பொத்திக் கொண்டாள் துளசி.

“ஹூம்... மண்ணுல வந்து விழுந்தப்பவே பெத்த அம்மாவ முழுங்கினவ தானே நீ? இப்ப அப்பாவையும்...”

காதில் திராவகத்தை காய்ச்சி ஊற்றியது போல் இருந்தது துளசிக்கு. இறுகி மூடியிருந்த கைகளை மீறி காதில் விழுந்த வார்த்தைகளால் நெருப்பில் இட்ட புழுவாய் துடித்தாள்.

“என்ன சொல்றே கல்பனா? அப்பா செத்துப் போனது தற்செயலான ஒரு விபத்துல...” துளசியின் குரல் நடுங்கியது.

தன் அறைக்குள் போக யத்தனித்த பாலாஜி, சட்டென திரும்பி துளசியை பார்த்த பார்வையில் எள்ளல் இருந்தது.

Mithra Vintha

"அப்படின்னு சொல்லி ஒன்னை நீ ஏமாத்திக்கறியா? இல்லை எங்களை ஏமாத்தப் பாக்கறியா?"

துளசிக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி.

கிருஷ்ணமூர்த்தியின் இறப்பிற்கு அவள் தான் காரணம் என்பது போல அவர்கள் இருவரும் பேசியதை அவளால் ஜீரணிக்க முடியவில்லை... அவள் முகம் தாங்க முடியாத வேதனையில் துவண்டு போனது. குற்ற உணர்வு நெஞ்சம் வெட்டுப் பட்டப் புழுவாய் துடித்தது.

"பாலாஜி..." என்றாள் பரிதாபமாய்.

"பின்னே என்னவாம்? ரசித்துக் கறிவேப்பிலையை வீசி எறியற மாதிரில்ல எடுத்தெறிஞ்சுப் பேசிட்டு வீட்டை விட்டுப் போனே? நீ போனதால மனசொடிஞ்சு போனவரு, போனவரு தான்..."

நம்பிக்கை இல்லாமல் கல்பனாவையும் பாலாஜியையும் மாறி மாறி பார்த்தபடி எழுந்து லலிதாவை நெருங்கினாள்.

"அம்மா... பாரும்மா, பாலாஜியும், கல்பனாவும் பேசறதை... உனக்கு அப்பா துரோகம் பண்ணினதை என்னால தாங்க முடியலை.... அது தப்பாம்மா?" துளசி கண்ணீருடன் கல்பனாவையும், பாலாஜியையும் சுட்டிக்காட்டியபடி கதறினாள்.

லலிதா வேதனை கலந்த பார்வையுடன் துளசியை ஏறிட்டாள்.

"கட்டின பெண்டாட்டி எனக்கு வராத கோபம், உனக்கு ஏன் வந்தது துளசி? நீ வந்த போதெல்லாம் இந்த வீடு உன்னை ஏத்துக்கலையா? வாசல்ல நின்னு உங்கப்பா உன்னைக் கூப்புட்டுக்கலையா? எல்லாத்தையும் மறந்துட்டு, அவரைத் தூக்கி எறிஞ்சி பேசினியே... அப்படி அவர் என்னத்தான் தப்பு பண்ணிட்டாரு, எதுக்கு அவர் மேல அப்படி வார்த்தையைத் திராவகமாகக் கொட்டினே..."

துளசி விக்கித்துப் போனாள்.



வாஸ்தவம் தான்! அவர் அப்படி ஒன்றும் யாரும் செய்யாத தப்பை செய்து விடவில்லை! சொல்லப் போனால், யாராலும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத பெரிய தியாகத்தைத் தான் செய்திருக்கிறார்.

அவரை குத்திக் குத்திக் காயப்படுத்தியதை நினைக்க நினைக்க துளசிக்கு இதயத்தில் ரத்தம் வழிந்தது. எப்படிப்பட்ட கடைந்தெடுத்த முட்டாள்தனம்? தனக்கும் மற்றவர்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்று துளசிக்கு தெளிவாகப் புரிந்தது.

விசாலமான மனதோடு அணுகாமல் விஷயத்தை மற்றவர்களின் பார்வையிலேயே பார்த்தது தான் அவள் செய்த பெரிய தப்பு. குதிரைக்கு கண் திரை போட்டாற் போல் ஒரே பாறையில் அவளும் பயணம் செய்து விட்டாள்.

"எனக்கு தெரியும்மா... அவ அப்பாவை ஏன் வேண்டாம்னு சொன்னான்னு..." என்று நிறுத்தினாள் கல்பனா.

துளசி மௌனமாய் இருந்தாள்.

"ஒண்ணும் இல்லாத போது ஒண்டிக்க அப்பா வீடு தேவைப்பட்டது... இப்ப வேலை கெடைச்சி கைல நாலு காசு பார்த்தவுடனே அப்பாவாவது, ஆட்டுக்குட்டியாவது..." கல்பனாவின் குரலில் கிண்டலா, எகத்தாளமா, நக்கலா, புரியவில்லை.

துளசி சட்டென்று திரும்பி கல்பனாவை முறைத்தாள். கோபத்துடன்.

"கல்பனா....." என்று அவளை அடக்கும் குரலில் கத்தினாள்.

கல்பனா வாயடைத்துப் போய் துளசியைப் பார்த்தாள்.

துளசி சட்டென எழுந்து அவர்கள் மூவருக்கும் முதுகு காட்டி, கிருஷ்ணமூர்த்தியின் புகைப்படத்தை சற்று நேரம் வெறித்தாள்.

Mithra Vintha

பின், சடாரென்று திரும்பினாள்.

"ஆமா, ஆமா, ஆமா... அப்பா செத்துப் போனதுக்கு நான்தான் காரணம்." என்றவள் திரும்பி கல்பனாவைப் பார்த்தாள்.

"அப்பா என் கூட வரேன்னு சொன்னபோது சரின்னு நான் சொல்லியிருந்தா என்ன ஆகியிருக்கும்? இதே வாயால 'எங்கப்பாவையும் அம்மாவையும் பிரிக்கறதுக்கு எத்தனை நாளா சதித்திட்டம் போட்டே?'ன்னு நீயே கேப்பே..."

கல்பனா அதிர்ந்து போய் நின்றிருந்தாள்.

"அப்ப அம்மாவையும் சேர்த்து அழைச்சிட்டுப் போயிட்டேன்னு வையி... 'என்னை விட உங்களுக்கு துளசி தான முக்கியமாப் போச்சு'னு இதோ நிக்காறானே பாலாஜி, இவன் குத்திக் காட்டுவான்...

"வேண்டாம்.... என்னால உங்க யார் வாழ்க்கையும் குழப்பம் வேண்டாம்னு தான் நான் தனியாப் போறேன்னு சொன்னேன்..."

ஆவேசமாய் பேசிவிட்டு மறுபடியும் கிருஷ்ணமூர்த்தியின் புகைப்படத்தை உற்று நோக்கினாள் துளசி. சற்று நேரம் மௌனமாய் கண்ணீர் விட்டாள்.

"அப்பா... யாரு என்ன சொன்னாலும், எம் மனசுல என்ன இருக்குன்னு உங்களுக்குத் தெரியும்ப்பா... உங்க மனசுல என்ன இருந்ததுன்னு எனக்கு தெரிஞ்சிடுச்சு... அப்பா.... அது போதும்ப்பா.... அது போதும்..." துளசியின் குரல் உடைந்து கம்மிப் போனது.

படத்திற்கு முன் தரையில் விழுந்து தலை பதிய நமஸ்கரித்தாள். நமஸ்கரித்தவள் தரையில் தலையை ஒன்றிரண்டு தடவை மோதிக் கொண்டாள்.

"என்னை மன்னிச்சிருங்கப்பா...!"



"மானஸ்தன்... உயிரோட வீடு திரும்பல..." லலிதாவின் குரல் துளசியின் மேல் கவிழ்ந்தது.

துளசி விருட்டென்று எழுந்து எதுவும் சொல்லாமல் காயத்ரியை இழுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினாள்.

கல்பனாவும் பாலாஜியும் அவள் சென்ற திக்கை பார்த்துக் கொண்டு நின்றிருந்தார்கள்.

## 42

ஹெட்மாஸ்டர் தமிழரசனின் அறை.

ஹெட்மாஸ்டர் தமிழரசன் உட்கார்ந்திருந்தார்.

எதிரே துளசி உட்கார்ந்திருந்தாள்.

"என்னென்னவோ நடந்து போச்சிம்மா... ப்ச்... ஐ'ம் ஸாரி, வெரி வெரி ஸாரி..."

துளசி ஒரு கணம் மௌனமாய் இருந்தாள்.

நிமிர்ந்தாள்.

"என்னால இனிமே இந்த ஊர்ல நிம்மதியா இருக்க முடியாது சார்... இந்த ஸ்கூலை விட்டுட்டுப் போறது எனக்கு ரொம்ப வேதனையாத் தான் இருக்கு... ஆனா வேற வழியில்ல சார்..."

"நீ எங்கம்மா போவே?"

"சென்னைக்கு சார்..."

"சென்னைக்கா...?"

MithraVintha

"ஆமாம் சார். சென்னைல அந்த விளம்பர கம்பெனியில எனக்குன்னு ஒரு இடம் எப்பவும் தயாரா இருக்கும்னு அந்த கம்பெனியோட எம்.டியே சொல்லி இருக்காரு..."

"எது...? நீ சென்னைக்குப் போய் கலந்துகிட்டு ஓவியப் போட்டியில பரிசு வாங்கின உடனே உனக்குவேலை தரேன்னு சொன்னாங்கன்னு சொன்னியே. அந்த விளம்பர கம்பெனியா?"

"ஆமா சார். அதே தான்..."

"ஆனா... புது ஊர்... புது இடம்... அங்கயே போய் இருக்கப் போறேன்னு சொல்றியே? தெரிஞ்சவங்க யாரும் இல்லியேம்மா... எப்படிம்மா சமாளிப்பே?"

ஹெட்மாஸ்டர் தமிழரசனின் குரலில் நிஜமான கவலை தெரிந்தது.

"விவரம் புரியாத பச்ச மண்ணா நாம இந்த உலகத்துல காலடி எடுத்து வச்சப்போ, இந்த உலகம் நமக்கெல்லாம் புதுசாத்தானே இருந்தது? அம்மாவோட கருவறைல பாதுகாப்பா இருந்துட்டு திடீர்னு வெளில வந்தப்போ கொஞ்சம் பயம்தான் குழந்தைக்கு. ஆனா, எல்லாத்தையும் ஏத்துக்கிட்டு அனுசரித்து வாழ அது கத்துக்கலையா சார்? பச்ச மண்ணா இல்லாம, சுட்ட மண்ணாத்தான் சென்னைக்குப் போறேன் சார்.... சமாளிச்சுப்பேன்... எனக்கு அந்த தைரியமும், நம்பிக்கையும் இருக்கு சார்... சென்னையில இருக்கிறவங்களும் நம்மள மாதிரி மனுஷங்கத்தானே சார்...?"

துளசி தெளிவான குரலில் உறுதியாக பேசினாள்.

ஹெட்மாஸ்டர் தமிழரசன் அவளைக் கூர்ந்து பார்த்தார். ஒரு பெருமூச்சு விட்டார்.

"நல்லதும்மா... உன்னோட நல்ல மனசுக்கு ஆண்டவன் துணையிருப்பான், எல்லாம் நல்லதாகவே நடக்கும்... என்னோட மனப்பூர்வமான வாழ்த்துக்களும், ஆசீர்வாதமும் எப்பவும்



உனக்கு உண்டு. எப்பவாவது இந்த ஹெட்மாஸ்டரோட உதவி தேவைப்பட்டா தயங்காம வா... உனக்கு துணையா இருப்பேன்..."

கண்களில் கண்ணீர் தளும்ப துளசி அவரை நோக்கி கை கூப்பினாள். எழுந்து அறையை விட்டு வெளியேறினாள்.

## 43

துளசியின் தனி வீடு.

துளசி தனது பொருட்களை எல்லாம் எடுத்து ஒவ்வொன்றாக பாக்கிங் செய்து கொண்டிருந்தாள்.

ஊரை விட்டே புறப்படுவதால், அவள் மிகவும் மும்முரமாக, ஆனால் நிதானமாக ஒவ்வொன்றாக பார்த்து பார்த்து எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள்.

இன்னொரு பக்கம் குழந்தை காயத்ரி தனது பொருட்களை எல்லாம் ஓரிடத்தில் சேர்த்துக் கொண்டிருந்தாள். சேர்த்த பொருட்களில் ஒரு சிறிய டப்பா ஒன்று இருந்தது. அதைக் கையில் எடுத்தாள் காயத்ரி. அதன் மூடியைத் திறந்தாள். அப்படியே டப்பாவைத் தலைகீழாய்க் கவிழ்த்தாள். டப்பாவின் உள்ளே இருக்கும் பொருட்களைப் பற்றிய ஒரு மகிழ்ச்சி, எதிர்பார்ப்பு அவளின் முகத்தில் தெரிந்தது. துண்டு துண்டாக நிறைய கலர் க்ரையான்ஸ். பொடிப் பொடி கலர் சாக்பீஸ்கள். அவற்றை காயத்ரி ஆர்வமுடன் பார்த்தாள். பின் திரும்பி அம்மாவை ஒரு முறை திருட்டுத்தனமாய் பார்த்தாள்.

துளசியைப் பார்த்து விட்டு பின் எல்லாச் சாக்பீஸ் துண்டங்களையும் கலர் க்ரையான்ஸுகளையும் பழையபடி டப்பில் எடுத்துப் போட்டு, துளசியை ஓரக்கண்ணால் பார்த்துக்

Mithra Vintha

கொண்டே, அந்த டப்பியை தனது பள்ளிக் கூட பையின் உள்ளே ஒளித்து வைத்தாள்.

காயத்ரி அந்த மாதிரி சாக்பீஸ் துண்டங்களையும், சின்ன சின்ன கலர் க்ரையான்ஸுகளையும் கொட்டிக் கவிழ்த்ததை துளசியும், காயத்ரி அறியாமல் பார்த்தாள்.

சோகமான அவள் முகத்தில், குழந்தையின் செய்கை ஒரு மெல்லிய புன்னகையை வரவழைத்தது.

காயத்ரி அந்த டப்பாவை பத்திரப்படுத்தியதை ஒரு சிறு புன்னகையோடு பார்த்து, பொருட்படுத்தாமல் விட்டு விட்டாள் துளசி.

மேலும் முனைப்பாய் பொருட்களை பாக்கிங் செய்வதில் ஈடுபட்டிருந்த துளசியை நந்தினியின் குரல் கலைத்தது.

"நான் உள்ள வரலாமா?"

திடுக்கிட்டுப் போய் துளசி நிமிர்ந்து பார்த்தாள்.

வீட்டு வாசலில் நந்தினி நின்றிருந்தாள்.

வெள்ளைப் புடவை, எந்த வித அலங்காரமும் இன்றி, நெற்றியில் பொட்டும், தலையில் பூவும் இல்லாத நந்தினியின் தோற்றம் துளசியின் தலையில் இடி போல இறங்கியது.

துளசி செயலற்றுப் போய் அப்படியே இருந்ததைப் பார்த்துவிட்டு நந்தினி ஒரு முறை புன்னகை செய்தாள்.

"'எங்க வீட்டுக்கு வா, எங்க வீட்டுக்கு வா'ன்னு சொல்லிட்டே இருப்பியே துளசி.... ஒன் வீடு தேடி வந்திருக்கேனே... என்னை 'வா'ன்னு கூட கூப்டமாட்டியா?"

துளசி குமுறிக் குமுறி அழத் தொடங்கினாள்.

நந்தினி ஓடிவந்து துளசியை நெருங்கி அவள் தோளைப் பற்றினாள்.

துளசி அவள் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதாள்.



"ஏண்டா...ம்? என்னம்மா...? துளசி... இங்க பாரு... என்னைப் பாரேன்..."

துளசி அழுகையினூடே நந்தினியை ஏறிட்டுப் பார்த்தாள்.

"ஏன் அழறே துளசி?"

"என்னால தான... என்னால தான...?"

சின்னக் குழந்தையைப் போல தேம்பினாள் துளசி.

"எது உன்னால?"

"அப்பா தற்கொலை பண்ணிக்கிட்டது? ஒனக்கு இந்த நெலமை வந்தது?"

நந்தினி சிரித்தாள். திருவிழாவில் தொலைந்து போன குழந்தையைப் போல 'திருதிரு'வென விழித்தாள் துளசி.

"அவர் தற்கொலை பண்ணிக்கிட்டாரா? என்ன உளர்றே? ஏன் இப்படி பைத்தியக்காரத்தனமால்லாம் பேசறே?

"நான் ஒளறலை. என்னாலத்தான்.... அப்பாவை விட்டுட்டு நான் தனியா வந்ததால அவர் மனசு ஒடைஞ்சிப் போயிட்டாரு... தனியாப் போகாதே, தனியாப் போகாதேன்னு கெஞ்சினாரு... நான் தான் ராட்சஸி மாதிரி தனியா வந்துட்டேன்... அதனால தான்... அப்பாவை சரியா புரிஞ்சுக்காத முட்டாளாயிட்டேன்... என்னாலத்தான்..."

நந்தினி துளசியை அணைத்துக் கொண்டாள்.

"ச்சீ..... பைத்தியம், பைத்தியம்...! யாரு, பாலாஜியும் கல்பனாவும் அப்பா செத்தது ஒன்னாலதான்ங்கற மாதிரி ஏதாவது சொன்னாங்களா?"

துளசி நிமிர்ந்து நந்தினியைப் பார்த்தாள். அவளின் அழுத கண்கள் மிக லேசாய் ஆச்சர்யத்தை வெளிப்படுத்தின.

நந்தினி அவளைப் பார்த்து மெல்லப் புன்னகைத்தாள்.

MithraVintha

"அவங்களைப் பத்தி எனக்குத் தெரியாதா? அவங்க ஏதோ வாய்க்கு வந்தத சொல்ல, அதையே நெனைச்சுகிட்டு நீயும் துடிக்கற. நீதான் காரணமோன்னு... அப்படில்லாம் இல்ல துளசி...

செத்துப் போன அன்னிக்கு அவரு என்னைப் பாக்க வந்திருந்தாரு... நீ தனியாப் போய்ட்டேன்னு வேதனைப்பட்டாரு.... இல்லேங்கல.... ஆனா, அவரோட வேதனையை தாங்க முடியாம நான், 'இது எல்லாத்துக்கும் நாந்தானே காரணம். நான் எங்கயாவது போயிடறேன்'னு சொன்னேன்... அதுக்கு அப்பா என்ன சொன்னாரு தெரியுமா? 'துளசிக்காவது கொழந்தை இருக்கு. ஒனக்கு என்னை விட்டா யாரு இருக்காங்க... கடைசி வரைக்கும் நான் இருக்கேன். ஒன்னைப் பாத்துக்கறேன்'னு சொன்னாரு... அப்படி பேசிட்டுப் போனவரா லாரி முன்னால தலையைக் கொடுக்கப் போறாரு? அது தற்கொலை இல்ல துளசி... ஆக்ஸிடென்ட் தான்... அது ஆக்ஸிடென்ட்டு கூட இல்ல... என் விதி... இதுக்குப் போயா இவ்வளவு அல்லாடற? ச்சீ... ச்சீ... கண்ணைத் தொடச்சிக்கடி பைத்தியம்..."

துளசி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

நந்தினி சற்று நேரம் ஒன்றும் பேசாமல் துளசியைப் பார்த்தபடி இருந்தாள். துளசி தன் இதயத்து பாரத்தை எல்லாம் காலி செய்யட்டும் என்று காத்திருந்தாள்.

துளசியின் மனதில் இருந்த குற்ற உணர்ச்சி மறைந்தது. அப்பா மறைவிற்குத் தானே காரணம் என்ற எண்ணம் அகன்றது. அவள் மனம் லேசானது. நிமிர்ந்தாள். நந்தினியைப் பார்த்து மெல்லப் புன்னகை செய்தாள்.

நந்தினியும் புன்னகைத்தாள்.

"நந்தினி" என்றாள் துளசி.

"ம்?"

"நான் ஒன்னு சொல்லட்டுமா?"



"ம்!"

"நீ இப்படி இருக்கறது என் நெஞ்சைப் போட்டு அறுக்கிற மாதிரி இருக்கு நந்தினி. நீ எப்பவும் பூவும், பொட்டுமா பளிச்சினு இருக்கிறதுதான் அப்பாவுக்குப் பிடிக்கும். பட்டுப் புடவையோட நீ இருக்கிற கோலத்துக்குத்தான் அங்கீகாரம் கெடைச்சது. தயவு செய்ஞ்சி நீ பழையபடி மாறு நந்தினி..."

"இல்ல துளசி. இது நான் ரொம்ப விரும்பி ஏத்துக்கிட்டிருக்கிற கோலம். என் வாழ்க்கை கேவலமாப் போயிருக்க வேண்டியது. அதுதான் என் தலையெழுத்தோன்னு நான் நெனைச்சிக்கிட்டிருந்தப்ப உங்கப்பா வந்தாரு. திரௌபதியை கண்ணன் காப்பாத்துன மாதிரி காப்பாத்தினாரு. உங்கப்பா எனக்குக் கொடுத்தது ரொம்பப் பெரிய எடம். அவரோட மனைவிங்கற அங்கீகாரம்.

"உங்கம்மாவுக்கும் பெரிய மனசுதான். என்ன இருந்தாலும் ஒரு பொண்ணு தனியா தவிக்கறதை அவங்களால ஒத்துக்க முடியல. வீட்ல சேத்துக்கலையே தவிர நம்பி வந்தவளை அனாதரவா விடக் கூடாதுன்னு இந்த ஊர்லயே இருக்கிறதுக்கு ஒத்துக்கிட்டாங்க...

"அவர் மனைவியா என்னை நானே நெனைச்சிட்டு இருந்தப்பா ஒரு அந்தஸ்து கெடைச்சது. ஒரு பாதுகாப்பு கெடைச்சது. யாரும் என்னைக் கையைப் பிடிச்சி இழுக்கல. வாடின்னு கூப்பிடலை. அது எவ்வளவு பெரிய பாதுகாப்பு! இப்ப அவரோட விதவையா இப்படி வெள்ளை சேலைல இருக்கிறது வேறு விதமான அந்தஸ்து. வேற விதமான பாதுகாப்பு.

"நீ மெட்ராஸுக்குப் போ... போகணும்... ஒனக்காகவும், குழந்தைக்காகவும் நீ போகணும். இந்த ஊர்லயே குண்டுச் சட்டில குதிரை ஓட்டற மாதிரி நீ இருக்கறது எனக்குப் புடிக்கல. இங்கயே இருந்தா நீ வாடிப் போய்டுவே. நீ எப்படியெப்படியோ முன்னுக்கு வர வேண்டியவ. சந்தோஷமாப் போய்ட்டுவா. நான் சாகற வரைக்கும் என் நெஞ்சல நீ இருந்துக்கிட்டுத்தான்

MithraVintha

இருப்பே... என்னை வச்சி நீ வரைஞ்ச படத்தை என்கிட்ட கொடுத்திட்டுப் போ... உன் ஞாபகமா நான் வெச்சிக்கறேன்..."

துளசி கலங்கிய கண்களுடன் இடதும் வலதுமாகத் தலையை அசைத்தாள்.

"வேண்டாம் நந்தினி. வேண்டாம். எங்கப்பா கடைசி வரைக்கும் ஒன்னைப் பாக்க ஆசைப்பட்டது இந்தக் கோலத்துலதான். அப்பா போனப்பறமும் உன்னை இப்படித்தான் பாக்கணும்னு ஆசைப்படறேன். இது எங்கிட்டயே இருக்கட்டும்..."

துளசி குழந்தையைப் போல அந்த ஓவியத்தை நெஞ்சோடு இறுக அணைத்துக் கொண்டாள்.

நந்தினி அவளைப் பார்த்து புன்னகை புரிந்தாள். பின் ஷெல்ப்பில் இருந்த டிரான்ஸிஸ்டரை நெருங்கி அதன் குமிழைத் திருகினாள்.

நேயர் விருப்பம் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. அதில் ஒலித்துக் கொண்டிருந்த பாடல் முடிந்து அடுத்த பாடலுக்கான அறிவிப்பு கேட்டது.

'அடுத்த பாடல் இடம் பெறும் படம் நெஞ்சம் மறப்பதில்லை.'

அந்த அறிவிப்பைக் கேட்டதும் நந்தினியிடம் ஒரு சின்ன பரபரப்பு தொற்றிக் கொண்டது. துளசியின் தோளைத் தொட்டு 'கேள்' என்பது போல் சைகை செய்தாள்.

அறிவிப்பாளரின் குரல் தொடர்ந்தது:

'விரும்பிக் கேட்ட நேயர்கள்: லால்குடி கணேசன் - மங்களம் தம்பதியினர், கிராப்பட்டி லதா, விஜி, உஷா, வசந்தி... திருச்சி நந்தினி கிருஷ்ணமூர்த்தி...'



'திருச்சி நந்தினி கிருஷ்ணமூர்த்தி' என்று அறிவிப்பாளர் அறிவித்தவுடன் துளசி ஆச்சரியத்துடன் புருவங்களை உயர்த்தினாள்.

நந்தினியைப் பார்த்து 'நீயா?' என்று கேட்டாள்.

நந்தினி இரு கண்களையும் மூடி 'ஆமாம்' என்று ஆமோதிக்கும் பாவம் காட்டினாள்.

டிரான்ஸிஸ்டரில் 'நெஞ்சம் மறப்பதில்லை' பாடல் ஒலிக்கத் தொடங்கியது.

அந்தப் பாடலின் வரிகளைக் கேட்கக் கேட்க துளசியின் கண்களில் நீர் பெருகியது. நந்தினியின் கண்களும் கலங்கின.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். சட்டென்று நெருங்கி இறுக்கமாக அணைத்துக் கொண்டார்கள்.

குழந்தை காயத்ரி இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள். அவர்களை நெருங்கினாள். காயத்ரி நெருங்கியதைப் பார்த்த நந்தினி சட்டென்று குனிந்து அவளைத் தூக்கிக் கொண்டு முத்த மழை பொழிந்தாள்.

துளசி அந்தக் காட்சியைப் பார்த்தாள்.

இவ்வளவு அன்பு வைத்திருக்கும் நந்தினியை விட்டு ஏன் பிரிய வேண்டும்?

"நந்தினி..." என்று மென்மையான குரலில் அழைத்தாள்.

"என்ன?"

"அப்பா ஒங்கிட்ட என்ன சொன்னார்னு சொன்னே?"

"என்ன சொன்னேன்?"

"லலிதாவுக்குப் பாலாஜி இருக்கான்... துளசிக்கு காயத்ரி இருக்கா... ஒனக்குக் கடைசி வரைக்கும் நான் இருக்கேன்னு சொன்னதாச் சொல்லலை..?"

MithraVintha

"ஆமா..."

"கடைசி வரைக்கும் இருக்கேன்னு சொன்ன அப்பாதான் இப்ப இல்லையே. அவர் விட்டுப் போன கடமையை அவரோட மகளான நான் ஏத்துக்கறதுதானே நியாயம்?"

"என்ன சொல்றே துளசி?" என்று வியப்புடன் கேட்டாள் நந்தினி.

"நீ மட்டும் இந்த குண்டுச்சட்டியில எதுக்காக குதிரை ஒட்டணும்...? யாருக்காக நீ இங்க இருக்கப் போறே? எங்கூட வந்துடு நந்தினி. இனிமே ஒன் சந்தோஷத்துக்கு நான் இருக்கேன். காயத்ரி இருக்கா... நாம மூணு பேரும் ஒண்ணா சந்தோஷமா இருக்கலாம்... முடியாதுன்னு சொல்லிடாதே... நீ வரத்தான் போறே..." துளசி உற்சாகமாக சொல்லிக் கொண்டே போனாள்.

நந்தினிக்கு அந்தத் திடீர் முடிவு ஆனந்தத்திகைப்பாக இருந்தது.

"ஏ... குட்டி... நானும் உங்கூட மெட்ராஸ் வர்ரேன்னு சொன்னா நீ என்ன சொல்லுவே... ஒத்துக்குவியா மாட்டியா?" என்று காயத்ரியிடம் கேட்டாள் நந்தினி.

"சந்தோஷத்துல நான் விடாம முத்தம் குடுப்பேன்" என்று சொல்லிவிட்டு நந்தினியின் இரண்டு கன்னங்களிலும் மாறி, மாறி முத்தமிடத் தொங்கினாள் காயத்ரி.

ஒரு புதிய பாதை பிறந்தது.

ஒரு புது வசந்தம் பூத்தது.

ஒரு புதிதான ஆரம்பம் தொடங்கியது.



MithraVintha